மகாகவி ஸ்ரீஸ்ரீ

பூதராஜு ராதாகிருஷ்ணா



இந்திய
இலக்கியச்
சிற்பிகள்

மகாகவி ஸ்ரீ ஸ்ரீ

உள் அட்டையில் காணும் சிற்பக் காட்சியில், பகவான் புத்தரின் அன்னை மாயாதேவி கண்ட கனவின் பலனை, மன்னர் சுத்தோதனருக்கு நிமித்திகர் மூவர் விளக்குகின்றனர். அவர்களுக்குக் கீழே அமர்ந்து அந்த விளக்கத்தை எழுதுகிறார் ஓர் எழுத்தர். எழுதும் கலையைச் சித்திரிக்கும் முதல் இந்தியச் சிற்பம் இதுவாகவே இருக்கலாம்.

(நாகார்ஜுன மலைச்சிற்பம் கி.பி. இரண்டாம் நூற்றாண்டு;
பட உதவி: நேஷனல் மியூசியம், புதுதில்லி)

இந்திய இலக்கியச் சிற்பிகள்

மகாகவி ஸ்ரீ ஸ்ரீ

(ஸ்ரீ ரங்கம் ஸ்ரீநிவாசராவின்
வாழ்க்கையும் படைப்புக்களும்)

ஆசிரியர்:
பூதராஜு ராதாகிருஷ்ணா

தமிழாக்கம்:
மு. பழனி இராகுலதாசன்

சாகித்திய அக்காதெமி

Mahakavi Sri Sri - Tamil translation by M. Palani Raghuladasan of Budaraju Radhakrishna, Sahitya Akademi, New Delhi. 2000 Rs. 25

முதல் பதிப்பு 2000
ISBN 81-260-0897-0

சாகித்திய அக்காதெமி

தலைமை அலுவலகம்
ரவீந்திர பவன், 35, பெரோஸ்ஷா சாலை,
புதுதில்லி - 110 001.

விற்பனை

'ஸ்வாதி' மந்திர் சாலை, புதுதில்லி - 110 001.

மத்தியக் கல்லூரி வளாகம், பல்கலைக்கழக நூலகக் கட்டடம்,
டாக்டர் அம்பேத்கார் வீதி, பெங்களூர் - 560 001.

சி.ஐ.டி. வளாகம்,
தரமணி, சென்னை - 600 113.

ஜீவன்தாரா பில்டிங், 4ஆவது மாடி,
டைமண்ட் ஹார்பர் சாலை, கல்கத்தா - 700 053.

172, சாரதா சினிமா பில்டிங்,
தாதர், மும்பய் - 400 014.

விலை **ரூ. 25**

Laser Typesetting : Mani Offset, Chennai 600 005

Printed by .
Gee Bee Graphics
40/3, Mint Subbarayulu Naidu St.,
Madras - 600 021. Ph : 595 09 14

பொருளடக்கம்

பூரிபந்த அப்பல சுவாமி
அவர்களுக்கு
[1904 - 1982]

முன்னுரை

'ஸ்ரீஸ்ரீ' - என்னும் பெயர், ஸ்ரீரங்கம் ஸ்ரீநிவாசராவ் (1910-1983) என்பதன் சுருக்கவடிவம் ஆகும். விஸ்வநாதா, தேவுல பள்ளி முதலியோரின் பாதிப்புக்கு ஆட்பட்ட இவருடைய இலக்கியப்பயணம், தொடக்க காலத்தில், தன்னுணர்ச்சிக் கவிஞராக - காதல் கற்பனாவாதக் கவிஞராகவே ஆரம்பித்தது. ஒரு பத்தாண்டுக்கால அனுபவத்திற்கும் பயிற்சிக்கும் பிறகு, 'தனது தனிப்பட்ட தன்மை' என்ன என்பதைக் கண்டுணர்ந்தார். பின்னர் தனது இலக்கியப்பெரும் படைப்பாகிய 'மகாப்பிரஸ்தானா கேயாலு'வை வெளியிட்டார். அதன்பிறகு அவரது பார்வை பின்னோக்கிச் சென்று விடவில்லை; அவர், தான் ஒரு 'மகாகவி' என்பதை நிறுவிக்காட்டினார்.

ஸ்ரீ ஸ்ரீ யாப்பிலும் இலக்கணத்திலும் இருந்த பழைய மரபுகளை உடைத்தெறிந்தார்; ஆனால், அதே வேளையில், தனக்கென்று ஒரு புதிய மரபை உருவாக்கினார். ஒவ்வொரு புதுமைக் கருத்துக்கும் ஊக்கம் கொடுத்தார்; நவீனத்துவத்தை வரவேற்றார். தான் வாழ்ந்த காலத்திலேயே, அவர் ஒரு புராண கால அதிசய மனிதராகவே கருதப்பட்டார். இலக்கியச் சொல் நேர்த்தித் திறனுக்காகவும், மொழியின்மீதும், யாப்பின் மீதும் அவருக்கு இருந்த புத்தார்வம் மிக்க, புரட்சிகர ஆளுமைக்காகவும், அதேபோல, ஒளிவு மறைவில்லாத, வெளிப்படையான பண்பு நலனுக்காகவும், ஸ்ரீ ஸ்ரீ அன்பு பாராட்டப்பெற்றார்; வழிபடப்பட்டார்; வியந்து போற்றப்பட்டார்.

ஸ்ரீஸ்ரீ கருத்தாழம் மிக்க கவிதைகளுக்காகவும் மிக நுண்மையான சமூதாய, அரசியல் அங்கதத்திற்காகவும், புகழ் பெற்றவர். அவரது ஆரம்ப காலங்களில், சொல் விளையாட்டுக்களில் அவர்

பெருவிருப்பம் கொண்டவராக இருந்தார். மொழியில் 'வித்தை' காட்டும் பலவீனமும் அவரிடம் இருந்தது. காலம் செல்லச்செல்ல அவருடைய மொழியிலும் நடையிலும் மிகுந்த கனிவும் முதிர்ச்சியும் அமையலாயின; எனினும், உணர்ச்சி வெளிப்பாடு எப்போதும் போலவே, கவர்ச்சி மிக்கதாகவே இருந்தது. எல்லாவற்றுக்கும் மேலாக, ஓர் எழுத்தாளர் என்ற அளவில், புகழ் பெற்றிருந்தது போலவே, திரைப்படத்துறையிலும் அவர் புகழ் பெற்றிருந்தார். தெலுங்கு இலக்கியத்தில் சிறப்பாகத் தெலுங்குக் கவிதை இலக்கியத்தில், ஸ்ரீ ஸ்ரீ அழிக்க முடியாத முத்திரையைப் பதித்தவர் ஆவார். மக்கள் சக்தியின் தனிப்பற்றுக்கும், வியப்புக்கும் உரியவராகவே அவர் வாழ்ந்திருந்தார்.

இந்த வாழ்க்கை வரலாற்று நூலின் ஆசிரியர் பூதராஜு ராதாகிருஷ்ணா (பி. 1932), 1953-இல் ஆந்திரப் பல்கலைக் கழகத்தில் பி.ஏ. (ஆனர்சு) பட்டம் பெற்றவர். அதே பல்கலைக்கழகத்தின் வழியே, 1965-இல், 'தொடக்க காலக் கல்வெட்டுக்களில் தெலுங்கு இலக்கண வரலாறு' என்னும் தலைப்பில், முனைவர் பட்டமும் வழங்கப் பெற்றார். சிராளா வி.ஆர்.எஸ். & ஒய். ஆர். என். கல்லூரியில் தெலுங்கு மொழி விரிவுரையாளராகப் (1953-68) பணியாற்றியவர்; ஹைதராபாத் தெலுங்கு அகாடமியில் ஆராய்ச்சி அலுவலராகவும் (1968-73), துணை இயக்குநராகவும் (1973-88) பணியாற்றியவர்; ஹைதராபாத் பல்கலைக்கழகத்தின் ஒப்பியல் இலக்கியத்துறைக்கு 'வருகைப் பேராசிரியர்' ஆகவும் (1989-90) பணியாற்றியவர்; ஹைதராபாத் 'ஈநாடு' பத்திரிகை இயல் பள்ளியின் முதல்வராகவும் பணியாற்றி வருகிறார். தெலுங்குக் கிளைமொழிகள் தொடர்பான, தெலுங்கு, ஆங்கில மொழிகள் வழியே பல தனி நூல்களையும், சிறு வெளியீடுகளையும் பதிப்பித்துள்ளார். தெலுங்கு மொழி வழியே, கோந்தி, கோயா மொழியின் தொடக்கப் பள்ளிகளுக்கான பாடப்புத்தகங்களையும் வெளியிட்டுள்ளார்.

அவருடைய ஆய்வேடுகளைத்தவிர, அவருடைய சில முக்கியமான வெளியிடுகளாவன: வாஸ்துபடகோசம் (1968); ஆரம்பகாலத் தெலுங்குமொழிக் கல்வெட்டுக்கள் (1971); வ்யாவகாரிக பாஷா விகாசம் (1972, 1981 & 1992); ஈநாடு பாஷா ஸ்வருபம் (1981); ஈநாடு வ்யாவகாரகோசம் (1970); சாகித்திய வியாசாலுவும் பாஷா சாஸ்திர வியாசாலுவும் (1990, 1995); சாகித்திய அகாதெமிக்காக எழுதப்பட்ட சின்னைய்ய சூரி பற்றிய வாழ்க்கை வரலாற்றுத் தனிநூல்.

1. வாழ்க்கைச் சுருக்கம்

இந்த நூற்றாண்டின் முதல் பத்தாண்டின் கடைசி வருடக் காலக்கட்டம். சில முக்கியமான நிகழ்ச்சிகள் அப்போது நிகழ்ந்தன. பெர்ஹாம்பூரில் பலரும் பங்கேற்கும் ஒரு பொதுவான மதிய விருந்திற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இவ்விருந்தில் பல்வேறு சாதியினரும் ஒன்றாய் அமர்ந்து விருந்து உண்டனர். ஆந்திர மாநிலத்தின் எல்லாருக்கும் தெரிந்த வரலாற்றில், இது இரண்டாவது நிகழ்ச்சி; முதலாவது பொது விருந்து நிகழ்ச்சி, கடந்த 12ஆம் நூற்றாண்டில் நிகழ்ந்தது. இதன் காரணமாக, மத்திய ஆந்திராவில், மிகப்பெரிய ரத்தக்களரியே விளைந்து விட்டது, அதுவும் ஏழு ஆண்டுகள் காலத்திற்கு. ஹேலே வால்நட்சத்திரமும் வானத்தில் பிரகாசித்தது. தெருவில் திரிந்த மனிதர்கள் ஏதோ ஒரு பெரிய துயரம் நிகழப்போகிறது எனக் கலங்கினர். நவீனத் தெலுங்கு இலக்கியத்தின் தந்தை எனப் போற்றப்படும் குரஜாடா, சமகாலமொழியில், ஒரு புதிய யாப்பு வடிவத்திலான 'முத்யால சராலு' என்னும் கவிதைப் படைப்பில், இந்த நிகழ்ச்சியை 'சமுதாய சீர்திருத்தப் பதாகை அணிவகுப்பு' என்று வருணித்தார். பழைய பத்தாம் பசலி மரபு முறிக்கப்பட்டது. ஒரு புதிய நவீன மரபு அப்போதிருந்து உருவாக்கப்பட்டது. அந்தக் காலக் கட்டத்தின்போது, இந்த மண்ணுலகில், மத்தியதர பிராமணர் குடும்பத்துப் பள்ளி ஆசிரியர் வீட்டில், ஒரு விசித்திரமான குழந்தை பிறந்தது. ஆந்திராவின் சமுதாய இலக்கிய வரலாற்றின் போக்கை, இந்தச் சிறிய நிகழ்ச்சிகள் மாற்றியமைக்கப் போகின்றன என்று அந்த நேரத்தில் யாரும் கற்பனை கூடச் செய்திருக்க முடியாது. ஏதுமறியாத அந்தக் குழந்தை வளர்ந்து எழுபத்து மூன்று வருடங்கள் முழுவாழ்வு வாழ்ந்தது. அதற்குச் சொல்லப் பட்ட பிறந்ததேதி தவறான தேதி என்பது அந்தக் குழந்தைக்குத் தெரியாது. 15.4.1910 அல்லது 30.4.1910 என்பதுதான் அவருடைய பிறந்ததேதி; ஆனால், மாறாக, 2.1.1910 -

என்பதுதான் தனது பிறந்ததேதி என்று அவர் நம்பியிருந்தார். இந்தக் குழந்தைதான் பின்னாளில், ''ஸ்ரீஸ்ரீ'' என்று அறியப்பட்டும், நினைக்கப்பட்டும் வரும் 'ஸ்ரீரங்கம் ஸ்ரீநிவாசராவ்' ஆவார்.

ஸ்ரீ ராம நவமிக்கு மூன்று நாட்கள் முன்னால், அதாவது 1910, எப்ரல் 15ஆம் நாள், சூரிய உதயத்திற்கு முன்பு, விடிகாலை நேரத்தில் ஆருத்ரா நட்சத்திரத்தில் (சாதாரண சைத்ர சுத்த சஷ்டி) ஸ்ரீநிவாசராவ் பிறந்தார் என்று அறிஞர் ஒருவர் குறிப்பிடுகின்றார். ஆனால் 'விரசம்' அமைப்பினர் ஸ்ரீஸ்ரீயின் பிறந்த தேதி 30.4.1910 என்று கூறுகின்றனர். விசாகப்பட்டினம் நகராட்சி மன்றக் குறிப்பும் இதையே உறுதி செய்கிறது. ஆக, ஸ்ரீஸ்ரீ 1910ஆம் ஆண்டில் பிறந்தார் என்ற செய்தி உறுதியாகிறது. தந்தைபெயர் பூடிபெட்டி வேங்கட்ட ரமணய்யா; தாயார் பெயர் அப்பல கொண்ட. குழந்தையை ஸ்ரீரங்கம் சூரிய நாராயணாவுக்குத் தத்துப் பிள்ளையாகக் கொடுத்து விட்டதால் குடும்பப்பெயர் மாறிவிட்டது. குழந்தைக்கு ஒன்றரை வயதுகூட நிரம்பாத பருவத்தில் தாயார் இறந்து விட்டார். தந்தை சுபத்ரம்மா என்பவரைத் தனக்கு இரண்டாம் மனைவியாகத் திருமணம் செய்துகொண்டார். சிற்றன்னை - ஸ்ரீநிவாச ராவ் இருவரின் உறவு வாழ்வு முழுவதிலும் இணக்கமாகவே இருந்தது. 'பிரபவா' என்னும் கவிதையை ஸ்ரீஸ்ரீ சிற்றன்னைக்குத் தான் 'சமர்ப்பணம்' செய்திருக்கிறார். நகராட்சி, மற்றும் வேறு பிற சான்றுகளைக் கொண்டு பெருமுயற்சி செய்து ஆராய்ந்த பிறகே அனந்தம் என்பவரால் சரியான பிறந்த தேதி இது என்று ஒரு கருத்துக்கு வரமுடிந்தது. ஸ்ரீநிவாசராவ் குழந்தைப் பருவத்தில் ஆரோக்கியமானவராக இல்லை; அடிக்கடி வாதநோய் ஏற்பட்டது. ஒரு வயதுக் குழந்தையாக இருந்தபோதே, நோயால் உணர்விழந்து கிடக்கும் அவருக்கு, உணர்வூட்டுவதற்காகச் சுருட்டு நெருப்பால் உடம்பில் சூடுவைப்பார்கள். உணர்வூட்டுவதற்கு அந்தக் காலத்தில் செய்யப்பட்ட மருத்துவமுறை இதுதான்! சிவப் பிரசாதராவ் என்பவர்தான் 'சூடு'போடும் மருத்துவத்தை அளித்தவர்.

தந்தை வேங்கட்ட ரமணய்யா, விசாகப்பட்டினத்தில் இருந்த திருமதி. ஏ.வி.என். கல்லூரியில் (உயர்நிலைப்பள்ளி) கணித ஆசிரியராகப் பணிபுரிந்தார். அவர் தன் மகனை 1915இல் பள்ளிக்கு அனுப்பினார். மகனுக்கு, திருப்பதியில், உபநயனச் சடங்கை, மத ஆசார விதிகளுக்கு ஏற்ப நடத்தினார். ஸ்ரீநிவாசராவ் பின்னாளில் இப்படிச் சொல்லிப் பெருமைப்பட்டுக் கொள்வதுண்டு: ''நவீனத் தெலுங்கு இலக்கியத்தின் பிதாமகர் குரஜாடா இறக்கும்போது நான் என் கல்வியைத் தொடங்கியிருந்தேன்; புகழ்பெற்ற ஆங்கிலக்கவிஞர் ஏ.சி.ஸ்வின்பர்ன் இறந்தபோது பிறந்தேன்.'' இவ்வாறு கூறிக்

கொள்வதன்மூலம், ஸ்ரீநிவாசராவ், தான், கவிஞர் ஸ்வின்பர்னின் மறுஅவதாரம் என்றும், குரஜாடாவுக்குப் பிறகு அவரது இடத்தை நிரப்புவதற்காக பிறந்தவர் என்றும் நம்பினார். 1915-1920 ஆகிய ஆண்டுகளுக்கிடையில், சிவராமய்யாவின் தனியார் பள்ளியில் ஸ்ரீநிவாசராவ் கல்வி கற்றார். எட்டுவயதுகூட நிரம்பியிராத இளம் பிராயத்திலேயே ஸ்ரீநிவாசராவ், 'சுலக்ஷணசாரம்' என்னும் புகழ் பெற்ற யாப்பிலக்கண நூலைக் கற்றறிந்தார்; கவிதைகள் எழுதவும் தொடங்கிவிட்டார். ஆறாம் வகுப்பில் படித்துக் கொண்டிருந்த போதே 'வீரசிம்ம-விஜயசிம்மலு'- என்ற முழுநீள நாவல் எழுதி விட்டார். ஆனால் அந்தக் கையெழுத்துப் பிரதி கிடைக்கவில்லை; காணாமல் போய்விட்டது. அந்த ஆண்டிலேயே கிருஷ்ணலீலா என்ற நாடகத்தில், 'அசரீரவாணி' - என்ற பெண் பாத்திரத்தை ஏற்று நடித்தார். தாயார் இறந்துவிட்ட நிலையில், ஸ்ரீஸ்ரீயின் தந்தை, அவரை மிகவும் அன்புடன் வளர்த்துவந்தார். ஸ்ரீஸ்ரீயின் குழந்தைப் பருவம் முழு மகிழ்ச்சியுடன்தான் கழிந்தது. சிறு வயதில் அவர் வீட்டுச் சுவர்களில் எல்லாம் படங்கள் வரைவார். தந்தை ஒருபோதும் அதற்காகக் கடிந்து கொண்டதேயில்லை. கேதவரபு வெங்கட சாஸ்திரியின் வீட்டுக்குத் தனிப்பயிற்சி மூலம் சமஸ்கிருதம் கற்றுக் கொள்வதற்காக ஸ்ரீஸ்ரீ அனுப்பப்பட்டார். ஆனால், சமஸ்கிருதப் பயிற்சி ''சப்தமஞ்சரி''யை உருப்போட்டுக் கொண்டதோடு நின்றுவிட்டது. காந்தியடிகள் கைது செய்யப்பட்டதை எதிர்த்து மாணவர்கள் செய்த வேலை நிறுத்தத்தில் ஸ்ரீநிவாசராவும் கலந்து கொண்டார். வேலை நிறுத்தத்தில் பங்கேற்க அனுமதி கொடுத்த தந்தை, பிற்பகலில் தடுத்து விட்டார். ஸ்ரீநிவாசராவ் ஐந்தாம் ஜார்ஜ் மன்னர் உருவம் பொறித்த காசுகள் பரிசாகப் பெற்றார். அவருடைய சிற்றன்னை 1924ஆம் ஆண்டு காலமானார். அதன்பிறகு, ஸ்ரீநிவாசராவுக்கு அவருடைய தந்தைதான் எல்லாம் என்ற நிலை ஆகிவிட்டது.

1925ஆம் ஆண்டு மார்ச் மாதம் ஸ்ரீநிவாசராவுக்குப் பள்ளிக் கல்வி முடிவுபெற்றது. அந்த ஆண்டிலேயே திருமணமும் நிகழ்ந்தது. ஸ்ரீநிவாசராவ் ''பரிணாய ரகஸ்யமு'' என்ற குறுநாவலை எழுதி வெளியிட்டார். அந்தப் படைப்பும் நீண்ட காலத்திற்குப் பிறகு இப்போதுதான் கிடைக்கிறது. நாவல் வெளியிட்ட அந்தக் காலக் கட்டத்தில் ஸ்ரீநிவாசராவுக்கு மூலநோய் கண்டது. அப்போதிருந்து தொடர்ந்து நாற்பதாண்டுக் காலம் அந்த நோயினால் அவர் அவதிப்பட்டார். பூரிபந்த அப்பல சுவாமிகளுடன் (1904-1982) ஸ்ரீநிவாசராவுக்குத் தொடர்பு கிடைத்தது. அவர்தான் ஸ்ரீநிவாசராவின் இலக்கியத்திறனை மிகவும் பாராட்டி ஊக்கம் கொடுத்தவர்; ஸ்ரீநிவாசராவுக்கு உற்ற நண்பராய், தத்துவ ஆசானாய், வழி

காட்டியாய் பாராட்டு வழங்குபவராய் இறுதிவரை விளங்கினார். 'விஸ்வரூப சந்தர் சனமு' என்னும் படைப்புத்தான் ஸ்ரீநிவாசராவின் முதல் கவிதை முயற்சியாக அமைந்தது. பூரிபந்த அப்பல சுவாமிகள், இந்த முதலாவது கவிதைப் படைப்பை, ''ஸ்வசக்தி'' என்ற தமது பத்திரிகையில், 'திவ்ய லோகனமுலு' என்று தலைப்பை மாற்றியமைத்துப் பிரசுரித்தார். பூரிபந்த அப்பல சுவாமிகளுடைய செல்வாக்கின் காரணமாக, ஸ்ரீநிவாசராவ் 1926ஆம் ஆண்டில், 'கவிதா சமிதி'யில் ஓர் உறுப்பினர் ஆனார். ஸ்ரீநிவாசராவ் 'இண்டர்மீடியட்' மாணவராக இருந்தபோது, மரபு வழியாப்பில், மூன்று பகுதியாக 'பிரபவா' என்ற கவிதைப் படைப்பை உருவாக்கியிருந்தார். அந்தக் காலக்கட்டத்தில் ஸ்ரீநிவாசராவ், விஸ்வநாத சத்திய நாராயண (1895-1976), தேவுலபள்ளி கிருஷ்ணசாஸ்திரி (1897-1980), கவிகொண்டல வேங்கடராவ் (1892-1969) ஆகிய மூவரின் செல்வாக்கிற்குள் ஆட்பட்டிருந்தார். அந்தக் காலக்கட்டத்தில் 'தன்னுணர்ச்சிப்பாடல்' வகைதான் மிகவும் உச்சத்தில் இருந்தது. குரஜாடாவின் புகழ் உணரப்படாத காலம் அது. ஸ்ரீநிவாசராவின் 'பிரபவா' கவிதைப்படைப்பு 1928இல் விசாகப்பட்டினம் 'கவிதா சமிதி'யில் பிரசுரம் ஆனது. ''ஒரு நல்ல படைப்பாளி'' என்ற அங்கீகாரத்தை அந்தப்படைப்பு அவருக்கு ஈட்டித்தந்தது. இந்தச் சந்தர்ப்பத்தின்போது, ஸ்ரீநிவாசராவ் ஆங்கிலக் கவிஞர் டென்னிசனுடைய சில கவிதைகளையும் மொழியாக்கம் செய்தார்.

ஸ்ரீநிவாசராவ் சென்னை கிறித்தவக் கல்லூரியில் 1928ஆம் ஆண்டு பி.ஏ. வகுப்பில் சேர்ந்தார். மிகவும் புகழ் பெற்ற இலக்கியப் பத்திரிகையான 'பாரதி'யில் கொம்பெல்ல ஜனார்த்தனராவ் (1907-1937) ஸ்ரீநிவாசராவின் 'பிரபவா' கவிதைப் படைப்பை, விமர்சனம் செய்து எழுதியிருந்தார். சென்னைக் கல்லூரியில் மாணவராகச் சேர்ந்த நேரத்தில்தான் அவரை ஸ்ரீநிவாசராவ் நேரில் சந்திக்கும் வாய்ப்புக் கிடைத்தது. இந்தத் தொடர்பு, நட்பு கொம்பெல்ல ஜனார்த்தனராவ் காலமாகும் வரை நீடித்தது. ஸ்ரீநிவாசராவ் 'மாக்னம் ஓபஸ்', 'மகாபிரஸ்தானம்' ஆகிய தனது படைப்புக்களை, பின்னாளில், கொம்பெல்ல ஜனார்த்தனராவின் நினைவுக்குச் சமர்ப்பணம் செய்தார். சென்னையில் இருந்தபோது, ஸ்ரீநிவாசராவ், தனது இலக்கியப்படைப்பு முயற்சிகளைத் தொடர்ந்து செய்து வந்தார். அத்தோடு தெலுங்கு இலக்கிய உலகில் சக்தி வாய்ந்தவர்கள் எனக் கருதப்பட்ட கன்னவரபு சுப்ப ராமைய்யா, மல்லம்பள்ளி சோமசேகர சர்மா (1891-1963) போன்ற பலருடன் இடையறாத நட்பையும் விருத்தி செய்து கொண்டார். பள்ளிக்கூட நாட்களிலிருந்தே ஸ்ரீநிவாசராவ் 'கிட்டப்பார்வை' உடையவராக இருந்தார். அதனால் திரையரங்குகளில் படம் பார்க்கும்போது திரைக்கு

அருகில் கிட்டத்தில் உட்கார்ந்து கொள்வார். 1929ஆம் ஆண்டிலிருந்தே அவர் கண்ணாடி அணிந்து கொள்ள வேண்டியிருந்தது.

1930ஆம் ஆண்டு, ஸ்ரீநிவாசராவ் தனது பட்டப்படிப்பை முடித்துக் கொண்டு விசாகப்பட்டினம் திரும்பினார். அந்த நேரம் அவருக்கு 'டைபாய்டு' காய்ச்சல் கண்டு, அறுபது நாட்கள்வரை நீடித்தது. டாக்டர் சி. மல்லிகார்ஜுனராவ் என்ற 'மல்லிக்', ஸ்ரீநிவாச ராவுக்குச்சிகிச்சை அளித்தார். இந்த நிகழ்ச்சியைப் பற்றி ஸ்ரீநிவாசராவ் தனது சுயசரிதைக் குறிப்புக்களில் அடிக்கடி குறிப்பிடுகின்றார். அதற்கு ஒரு காரணம் இருந்தது. அந்த வேளையில், அவருக்கு 'டைபாய்டு' காய்ச்சலுக்கும் சிகிச்சை கிடைத்தது; அத்துடன் 'தன்னுணர்ச்சிக்கவிதை' மீது அவருக்கிருந்த காதலுக்கும் கூடச் சிகிச்சை கிடைத்தது. அந்தக் காலக்கட்டம் உலக அளவிலேயே ஓர் இறுக்கம், நிலவிய நேரம்; ''வாடிக்கிடந்த முப்பதுகள்'' என்றே சொல்லலாம். அப்போது ஸ்ரீநிவாசராவ் உள்ளத்தாலும், உடலாலும், நிதி நிலைமையாலும் மிகவும் பாதிக்கப்பட்டுத் துன்பம் மிக அடைந்திருந்தார். ஏதேனும் ஒரு வேலை வேண்டுமே என்று அவர் காரக்பூர்-கல்கத்தா ரயில்பாதை நெடுகிலும் இருபது மைல் தொலைவு நடந்தே அலைந்தார். 'மகா பிரஸ்தானம்' என்னும் இவரது பெரிய படைப்பின் பல பகுதிகளை அவர் இந்த நாட்களின்போதுதான் எழுதினார். பிழைப்பு நடக்க வேண்டுமே என்பதற்காக, விசாகையில் இருந்த தனது சொந்த வீட்டையும் விற்றுவிட்டார். விசாகப் பட்டினம் துறைமுகத்தில், 1931-ஆம் ஆண்டில் சிறிதுகாலம் சாமான்கள் நிறுத்துப்போடும் குமாஸ்தாவாகவும் வேலை செய்தார். பின்னர் திருமதி ஏ.வி.என். கல்லூரியில் விலங்கியல் துறையில் விளக்குநராகச் சேர்ந்தார். அங்கே அவருக்கு, ''கப்பல மாஸ்டர்'' (தவளை வாத்தியார்) என்ற பரிகாசமான பட்டம் கிடைத்தது. இந்த நேரத்தில், அவர், ஹரீந்திரநாத் சட்டோபாத்யாயாவின் கவிதைகளை மொழி பெயர்க்கத் தொடங்கினார். 'கன்யாசுல்கம்' படைப்பின் பெண் பாத்திரங்கள் பற்றி இவர் எழுதிய முதலாவது கட்டுரை 'சமதர்ஸனி' இதழில், 1932இல் பிரசுரமானது. 1933 மார்ச் மாதம் பெர்ஹாம்பூரில் நடைபெற்ற அனைத்து ஆந்திர கவி பண்டித சபாவில், ஸ்ரீ நிவாசராவ் பங்கேற்றார். இந்தப் பங்கேற்பு அவருடைய நட்பு வட்டத்தை விரிவு படுத்தியது; அவருடைய இலக்கிய நுண்ணுணர்ச்சியை மேலும் வளர்த்துவிட்டது. அவருடைய மிக முக்கியமான படைப்பாகிய 'மகாபிரஸ்தானம்' நூலில் உள்ள பெரும்பாலான கவிதைகள் 1934 - காலக்கட்டத்தின்போது பல இலக்கிய சஞ்சிகைகளில் பிரசுரம் ஆனவையே. அதைத்தொடர்ந்து, மண்டபாக பார்வதீஸ்வர சாஸ்திரி போன்ற தெலுங்கு இலக்கியப் பிதாமகர்களின் கவனத்தைப்

பெற்றார். காக்கிநாடாவில் நடந்த இளைஞர் மாநாடு ஒன்றில் அவர் தமது சில கவிதைகளை மனப்பாடமாகவே எடுத்துரைத்தார். விசாகையில், பயணிகள் விடுதியில், அடவிபாபிராஜூவிடம் கவிதைகளை நேரில் வாசித்தும் காட்டினார். அந்தக் கவிதைகள், 1935இல் 'ஜ்வாலை' இதழில் பிரசுரமாயின. பேச்சுமொழித் தெலுங்கில், அவர், முதன்முதலில் படைத்த 'ஆகாச தீபம்' என்னும் வசன கவிதைப் படைப்பு, 1935இல் 'பாரதி' இதழில் பிரசுரமானது. இதைப் பிரசுரம் செய்தது வேறு யாருமல்ல, ஸ்ரீநிவாசராவின் 'மகாபிரஸ்தானம்' கவிதையைப் பிரசுரிக்க மறுத்து, அடுத்த தபாலில் உடனே திருப்பிவிட்ட அதே 'பாரதி' இதழின் ஆசிரியர்தான். அதே ஆண்டில், விஸ்வநாத சத்ய நாராயணாவின், 'கின்னெரசானி பதலு', 'கோகிலம்மாபெள்ளி' ஆகிய இரண்டு படைப்புகளுக்கு ஸ்ரீநிவாச ராவ் எழுதிய மதிப்புரைகளும் பத்திரிகைகளில் பிரசுரம் ஆயின. குரஜாடாவின் 'முத்யால சராலு' பற்றி ஸ்ரீநிவாசராவ் எழுதிய நுட்பமான கட்டுரை ஒன்று கொம்பெல்ல ஜனார்தனராவ் நடத்திய 'உதயிணி' என்னும் சஞ்சிகையில் பிரசுரமானது. 'ப்ரபுத்தாஙந்ரா' என்னும் இன்னொரு இலக்கிய இதழில், இவர் எழுதி வெளிவந்த கட்டுரையில், இந்திய, மற்றும் வெளிநாட்டுச் சிறந்த எழுத்தாளர்கள் பலரும், பல்வேறு வழிகளில் எவ்வாறெல்லாம் ஸ்ரீஸ்ரீயைப் பாதித்திருந்தார்கள் என்ற விவரங்களை விவாதித்திருந்தார். 1935ஆம் ஆண்டின்போது, ஸ்ரீநிவாசராவ் 'பெயர்பெற்ற கவிஞர்' என்ற புகழ் மேன்மேலும் வளர்ந்து உச்சத்திற்கு வந்துவிட்டது.

1936ஆம் ஆண்டில் காக்கிநாடாவில் நிகழ்ந்த 'நவ்ய சாகித்திய பரிஷத்' மாநாட்டில் பங்கேற்ற காலத்தில், ஸ்ரீநிவாசராவின் இலக்கியப் பணிகளும் பெருமைகளும் ஒரே சீராக மேன்மேலும் வளர்ச்சி பெற்றிருந்தன. பின்னர் மசூலிப்பட்டினம், பெஜவாடா ஆகிய இடங்களில் நடைபெற்ற 'நவ்ய சாகித்ய பரிஷத்' இலக்கிய மாநாடு களிலும் ஸ்ரீநிவாசராவ் பங்கேற்று "இளைய கவிஞர்களுள் ஒருவர்" என்று அங்கீகரிக்கப்பெற்றார். விஜய நகரத்து அறிஞரும், ஆந்திர ஆராய்ச்சிப் பல்கலைக் கழகத்தின் நிறுவுநருமான புற்ற சேஷகிரி ராவ் (1884-1941) அவர்களிடமிருந்து, 'கவித்றணா வார்த்த' என்னும் பட்டத்தை ஸ்ரீநிவாசராவ் பெற்றார். கடுமையான உழைப்பின் காரணமாக, கொம்பெல்ல ஜனார்தனராவ் 1937 ஜூன் மாதம் காலமாகிவிட்டார். ஸ்ரீநிவாசராவ் தனது தலைசிறந்த படைப்பை (மகாபிரஸ்தானம்) தன்னுடைய அன்பின் நினைவாக அவருக்குச் 'சமர்ப்பணம்' செய்துள்ளார். அதே ஆண்டுக்காலத்தில் ஸ்ரீநிவாசராவ் இன்னுமொரு புகழ் பெற்ற படைப்பாளருடன் தொடர்பு பெற்றார். அவர்தான் சுருக்கமாக 'சலம்' என்று அழைக்கப்பட்ட குடிபாடி வெங்கடாசலம் ஆவார். ஸ்ரீநிவாசராவைப் பாராட்டிப் புகழ் பவராகவே அவர் ஆகிவிட்டார்.

'ஆந்திரப் பிரபா' பத்திரிகையில் துணை ஆசிரியராகச் சேருவதற்காக ஸ்ரீநிவாசராவ் சென்னைக்கு வந்தார். ஏற்கனவே நர்ல வேங்கடேசுவரராவ், மல்லவரபு விஸ்வேஸ்வரராவ், கப்பகண்டுல சத்திய நாராயணா ஆகியோர் என்று முதல்வரிசைத் துணை ஆசிரியர் குழாம் அங்கே இருந்தது. அவர்களுள் ஒருவராகவே ஸ்ரீநிவாசராவ் சேர்ந்தார். அங்கே ஆசிரியராக இருந்தவர் நியாபதி நாராயணமூர்த்தி. (நியாபதி நாராயண மூர்த்தியைச் சட்டப்படி ஆசிரியர் என்று ஸ்ரீநிவாசராவ் குறிப்பிட்டாலும், உண்மையாகவே ஆசிரியராக இருந்தவர் 'நர்ல'தான்). ஸ்ரீநிவாசராவின் முக்கியமான பணி, 'ராய்ட்டர்' செய்தி நிறுவனத்திலிருந்து வரும் செய்திகளைத் தெலுங்கில் மொழியாக்கம் செய்வதுதான். அவருடைய பணியில் திருப்தியடையாத நிறுவனம், அவரை வேலையிலிருந்து நீக்கி விட்டது. ஸ்ரீநிவாசராவின் 'மகாபிரஸ்தானம்' ஒரு கவிதைத் தொகுதியாக 1950இல் வெளியிடப்பட்டதும் இவருடைய இலக்கிய இடம் - அந்தஸ்து - கோபுர உச்சியென உயர்ந்துவிட்டது. 'சலம்' என்றழைக்கப்படும் குடிபாடி வெங்கடாசலம் இந்தத் தொகுப்பிற்கு ஓர் அறிமுக உரை வழங்கியிருந்தார். (அந்த அறிமுக உரையை ஒரு பாராட்டுச் சான்றிதழ் அல்லது ஒரு யோக்ய தாம்சப்பத்திரம் என்றே குறிப்பிடலாம்). 'அதற்குப் பிறகுதான் ஸ்ரீநிவாசராவ் ''ஸ்ரீஸ்ரீ'' என்ற பெயரில் குறிப்பிடப்பட்டார். 'கிருஷ்ண பத்ரிகா' என்ற மிதவாதப் போக்குடைய பத்திரிகையும் கூட ஸ்ரீநிவாசராவின் திறமையைப் பாராட்டி அங்கீகரித்தது. ஒரு பத்திரிகை நிருவாகத்தால் விலக்கப்பட்டு வேலை இன்றி இருந்த ஸ்ரீநிவாசராவுக்கு இந்த மாதிரியான இலக்கியப் புகழ் நிலையான ஒரு வேலை வாங்கித்தர உதவுவதாக இல்லை. திருமணம் ஆகி, பதினாறு ஆண்டுகள் கடந்த பிறகும் ஸ்ரீநிவாசராவுக்குக் குழந்தைப்பேறு கிட்டவில்லை. எனவே, அவர் தனது உறவினர் மகளைத் தனக்கு மகளாகச் சுவீகாரம் எடுத்துக்கொண்டார். அந்த மகளுக்கு முதலில் 'அனாமிக்கா' என்று பெயரிட்டார். பின்னர் ''லெனினா'' என்று பெயரை மாற்றி இட்டுக்கொண்டார்.

1942ஆம் ஆண்டில் ஸ்ரீஸ்ரீ எப்படியோ சென்னை அகில இந்திய வானொலி நிலையத்தில் ஒரு வேலை வாய்ப்பைப் பெற்றார்; ஆனால் மிக விரைவிலேயே டெல்லி நிலையத்திற்கு மாற்றப்பட்டார். அங்கேயும் அவர் வெறும் நான்கு மாதங்களுக்கு செய்தி வாசிப்பாளராக மட்டுமே பணியாற்றினார். 'ஸ்டாலின் கிராடு போர்க் களத்தை'' வருணிக்கும்போது ஸ்ரீநிவாசராவ் ''அது எனது கடமைகளில் ஒரு பகுதி'' என்று வருணித்தார். என்றாலும், ''அவர் ஒரு காந்தியவாதியாக இருக்கிறார்'' என்று காரணம் காட்டப்பட்டுப் பணியிலிருந்து விலக்கப்பட்டார். மறுபடியும் ஸ்ரீநிவாசராவ் வேலை

ஏதுமில்லாதவராய் வேலைதேடித் தெருக்களில் அலைய வேண்டிய தாயிற்று. அலகாபாத், கல்கத்தா, விஜயநகரம், விசாகப்பட்டினம் ஆகிய இடங்களுக்கெல்லாம் சென்று வேலை தேடி அலைந்தபிறகு, கடைசியாக லக்னோவில் ராணுவ கன்டோன்மென்ட்டில் சோதனைக் கூடத்து உதவியாளர் பதவியில் அமர்ந்தார். அங்கே, அவர் மிகக் கடுமையான மலேரியா காய்ச்சல் கண்டு துன்பப்பட்டார். உடன் பணியாற்றும் ஒருவர் சாராயம் குடிக்குமாறு யோசனை சொன்னார். அதைக் கேட்டு ஸ்ரீநிவாசராவ் 'குடிகாரர்' ஆகிவிட்டார். அதுபற்றி, அவர், தனது வாய்மொழி மூலமாகவே கூறும்போது, ''சாராயம் மலேரியாவைத் தடுப்பதற்கு உதவியது'' என்று குறிப்பிட்டார். ஸ்ரீநிவாசராவ் ஒரு 'கம்யூனிஸ்ட்' என்று இராணுவ அதிகாரிகள் வெகுவிரைவிலேயே கண்டுபிடித்து அவரை வேலையிலிருந்து நீக்கி விட்டார்கள். ஸ்ரீநிவாசராவ் வீட்டுக்குத் திரும்பிவிட்டார். அதன்பிறகு 'முற்போக்கு எழுத்தாளர் சங்க'த்தின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பட்டார். (அப்யுதய ரசயிதல சங்கம் - 'அரசம்') 1944இல் விசாகைக்கு வந்து சேர்ந்த ஸ்ரீநிவாசராவ், அபூரி ராமகிருஷ்ணராவ் தனது சொந்த முயற்சியால் நாடகத்தை வளர்ப்பதற்காக உருவாக்கியிருந்த 'நடலி' என்ற அமைப்பில் வசனம் எழுதுபவராக அமர்ந்தார். கடற்கரைப் பிரதேசம் முழுவதும் ஸ்ரீநிவாசராவ் நாடகக் குழுவினரோடு சுற்றினார்; சில சமயங்களில் அவசியம் ஏற்பட்டபோது, நாடகத்தில் சில வேடங்கள் ஏற்று நடிக்கவும் செய்தார். தந்தையார் இறந்த வேளையில் ஸ்ரீநிவாசராவ் சென்னைக்குத் திரும்பினார். அவருக்கு வாழ்க்கை மேலும் துன்பம் மிகுந்ததாய் அமைந்தது. அவரைச் சுற்றியிருந்த அனைத்தும் வெற்றிடமாய் வெறித்தது. அந்த நேரத்தில் ராஜமுந்திரியில் 'அரசம்' அமைப்பின் மூன்றாவது மாநாடு நடந்தது. ஸ்ரீநிவாசராவின் போற்றுதலுக்கு உரியவராக விளங்கிய தேவுலபள்ளி கிருஷ்ண சாஸ்திரிதான் மாநாட்டின் தலைவர். வாழ்க்கையில் துன்பங்கள் சூழ்ந்திருந்த வேளையிலும் ஸ்ரீநிவாசராவ் ராஜமுந்திரி சென்றார்; மாநாட்டில் பங்கேற்றுத் தொடக்க உரையும் ஆற்றினார். 'அனந்தம்' என்ற தலைப்பிலான தனது சுயசரிதத்தை இப்போது ஸ்ரீஸ்ரீ எழுத ஆரம்பித்திருந்தார். வாழ்க்கைப் பிரச்னைகள் கருதி ஸ்ரீஸ்ரீ 1945இல் திரைப்படத்துறையிலும் நுழைந்தார். அங்கே காலப் போக்கில் அவருக்கு ''வீரப்பிரதாப ராஜா'' என்ற பட்டமே கிடைத்து விட்டது. நிலைத்து ஓரிடத்தில் காலூன்றி நின்றுகொள்ளுமாறு ஒருவேலையைத் தேடிக்கொள்ள ஸ்ரீஸ்ரீ விரும்பினார். எழுத்தாளர் காசிம்கான் செய்த பரிந்துரையினாலும், பால்யகால நண்பர் அபூரி வரதராஜேஸ்வரராவின் (1923-1993) தூண்டுதலினாலும், ஹைதராபாத் நிஜாம் அரசுத் தலைமைச் செயலகத்தில் மக்கள் தொடர்புப் பொறுப்பாளராக ஸ்ரீஸ்ரீ சேர்ந்தார். அங்கேயும் அவரால் தொடர்ந்து

இருக்க முடியவில்லை. அவரிடம் அரசுக்கல்விச் சான்றிதழ் இல்லை என்று காரணம் காட்டி 1946இல் வேலையிலிருந்து நீக்கப்பட்டார். இப்படியாக, ஸ்ரீஸ்ரீ வெவ்வேறுபட்ட நான்கு நிறுவனங்களிலிருந்து, வெவ்வேறுபட்ட நான்கு காரணங்களுக்காக, பணி நீக்கம் செய்யப் பட்டார். வேலையின்றித் தனது இருப்பிடம் திரும்பிய ஸ்ரீஸ்ரீ, சென்னையில் திரைப்படத்துறையில் சேர்ந்து காலம் தள்ளுவதற்குத் தன்னைத் தயார்படுத்திக்கொண்டார். அங்கிருந்து கொண்டே வேறு ஏதாவது வழிபிறக்குமா என்று எதிர்பார்த்திருந்தார்.

1946-1949ஆம் ஆண்டுகளின் போது ஸ்ரீஸ்ரீ 'ஆனந்தவாணி' என்னும் இலக்கியப் பத்திரிகையில் ஆசிரியராகப் பணிபுரிந்தார். இடதுசாரி அரசியல் இயக்கங்களுடன் ஸ்ரீஸ்ரீ கொண்டிருந்த தொடர்பும் பற்றும் ரகசியமல்ல; ஊரறிந்த விஷயம்தான், 1947இல் ஸ்ரீஸ்ரீ அவருடைய கவிதைக் கொள்கையை விவரிக்கும் இரண்டு கட்டுரைகளை வெளியிட்டார். இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் செயலாளர் சந்திர ராஜேஸ்வரராவுடன் சேர்ந்து ஸ்ரீஸ்ரீ தேர்தல் கூட்டங்களுக்கெல்லாம் சென்றார். நந்தியாலா அரசியல் கூட்டம் ஒன்றில்தான் சந்திர ராஜேஸ்வரராவ் ஸ்ரீஸ்ரீயை ''மகாகவி'' என்று போற்றி அழைத்தார். அன்றைய தினத்திலிருந்து ஸ்ரீஸ்ரீயை எல்லோரும் 'மகாகவி' என்றே குறிப்பிட்டனர்; அழைத்தனர்; அவரது எதிர்த்தரப்பினரும் கூட அவ்வாறே அழைக்கலாயினர். இலக்கிய உலகில் எல்லாருடைய கவனத்தையும் ஈர்த்துவிட்ட ஒரு தலைவராக ஸ்ரீஸ்ரீ வளர்ந்துவிட்ட போதிலும், பொருளாதாரத்தில் அவர் மிகவும் சிரமப்படத்தான் வேண்டியிருந்தது. குதிரைப் பந்தயத்திலும் ஈடுபட்டு, ''ஸ்ரீஸ்ரீ'' என்ற பெயருடைய ஒரு குதிரைமீது பந்தயம் கட்டித் தோற்றுப்போனார். எப்படியாவது என்றாவது ஒருநாள் பணம் சம்பாதித்துவிடவேண்டும் என்று கருதிய ஸ்ரீஸ்ரீ குதிரைப் பந்தயத்தில் தொடர்ந்து பந்தயம் கட்டுவதற்காகவே ராயப்பேட்டையில் ஒரு வீட்டையும் ஏற்பாடு செய்து கொண்டார். திரைப்படத்துறையிலும் தனது முயற்சிகளை விட்டுவிடாமல் தொடர்ந்து வந்தார். 1949இல் நட்டாவும் நந்தாவும் (நவீனா) என்னும் இந்திப்படத்தை 'ஆகுதி' என்ற பெயரில் தெலுங்கில் மொழிமாற்றம் (டப்பிங்) செய்தார். 'நிர்தோஷி' என்ற தெலுங்குப்படத் தயாரிப்பிலும், 'நிரபராதி' என்ற தமிழ்ப்படத் தயாரிப்பிலும் எச்.எம்.ரெட்டி, ஸ்ரீஸ்ரீயைப் பணிபுரிய அமர்த்திக் கொண்டார். காவல்துறையின் 'லாக்-அப்'பில் இருக்க வேண்டிய முதல் அனுபவமும் ஸ்ரீஸ்ரீக்கு வந்து சேர்ந்தது. குடிபோதையில் இருந்தார் என்று குற்றம்சாட்டி காவல்துறை இவரை 'லாக்-அப்'பில் தள்ளி ரூ.500/- அபராதமும் விதித்தது. 'காலச்சக்கரம்' என்னும் தெலுங்குப் படத்தில் இவருடைய ''மாரோ பிரபஞ்சம்'' என்னும் பாடலைப் பதிவு

செய்து கொள்ளுவதற்கு ஸ்ரீஸ்ரீ இணக்கம் தெரிவித்தார். அந்தப் பாடலுக்கு மிகுந்த வரவேற்பு இருக்கும் என்று ஸ்ரீஸ்ரீ மிகவும் எதிர்பார்த்தார். ஆனால் அவர் எதிர்பார்த்தபடி நடக்க வில்லை. பந்தா கனக லிங்கேஸ்வரராவ் என்ற புகழ்பெற்ற கதாநாயக நடிகர் அந்தப்பாடலை உரிய முறையில் படத்தில் கையாளவில்லை என்பதே அதற்குக் காரணம். இத்தகைய தோல்விகள், திரைப்படத் துறையில் தொடர்ந்து பணியாற்றுவதிலிருந்து அவரைத் தடுத்தவிட வில்லை. 1950ஆம் ஆண்டிலிருந்து அவர் தன்னை திரை எழுத்தாளராக நிலைநிறுத்திக்கொண்டு மிக விரைவிலேயே பெயரும் புகழும் பெற்றுவிட்டார். 1951ஆம் ஆண்டில், பம்பாய் திரைப்பட விழாவில் நடுவராக நியமிக்கப்பெற்றார். 1952இல் முதன் முதலாக, 'பிரபஞ்சம்' என்னும் படத்தில் நடிக்கவும் செய்தார். பின்னர் 1968இல் ஜி.ஆர். வரலெட்சுமி இயக்கிய ''மூக ஜீவிலு'' என்ற படத்தில் பிற கவிஞர்களுடன் ஸ்ரீஸ்ரீ காட்சிதந்தார்.

இந்த நூற்றாண்டின் நடுப்பகுதியில் ஸ்ரீஸ்ரீ மிகப்பெருங்கவிஞர் என்றும், அறிவுஜீவி என்றும் அங்கீகாரம் பெற்றுவிட்டார். இளைய தலைமுறையினருக்கு அவர் கவர்ச்சிமிக்க முன்மாதிரியாகத் திகழ்ந்தார். அவருடைய உரைத்திறம், உடனுக்குடன் சூடாகப் பதில் கூறும் ஆற்றல், எதற்கும் அலட்டிக்கொள்ளாத தன்மைகள், எல்லாவற்றுக்கும் மேலாக அவருடைய ஒளிவுமறைவு இல்லாத வெளிப்படைப்பண்பு - இவை அனைத்துமாகச் சேர்ந்து எல்லாத் திசைகளிலிருந்தும் இவருக்கு ஆதரவாளர்களையும் போற்றிப் பின்பற்றுபவர்களையும் உருவாக்கித்தந்தன. பழைய கூட்டுச் சென்னை ராஜதானியில், மேல்சபை உறுப்பினராகவும் இருந்தார். இவருடைய இடதுசாரிச் சிந்தனைச் செயல்பாடுகள் பிறநாடுகளின் கவனத்தையும் கவர்ந்தன. தங்கள் நாட்டுக்கு வருமாறு பொது வுடைமைச் சீனா ஸ்ரீஸ்ரீக்கு அழைப்பு விடுத்தது. அப்போதைய சென்னை ராஜதானியின் முதல்வராக இருந்த சி.இராஜகோபாலாச்சாரி ஸ்ரீஸ்ரீ சீனாவுக்குச் செல்லாதவாறு தடுத்துவிட்டார். அந்தக் காலகட்டத்தில், ஸ்ரீஸ்ரீ அரசியல் அங்கதம் நிறைந்த ''கார்ட்டூன் கவிதைகள்'' எழுதத் தொடங்கினார். 1954இல் 'ஸ்டாக்ஹோம்' நகரில் நடந்த உலக சமாதான மாநாட்டில் பேராளராகக் கலந்து கொள்வதற்கு அழைக்கப்பட்டார். கெய்ரோ வழியாக வெளிநாடு சென்ற ஸ்ரீஸ்ரீ 13.11.1954ஆம் நாளிலிருந்து 21.12.1954ஆம் நாள் வரை வெளிநாட்டில் தங்கியிருந்தார். இதுதான் அவருடைய முதல் வெளிநாட்டு அனுபவம் ஆகும். 1955ஆம் ஆண்டுக் காலக் கட்டத்தில், ஸ்ரீஸ்ரீ பொருளாதாரத்தில் வளம் பெற்றுவிட்டார். சென்னையில் சொந்த வீடு; சொந்தக்கார் என வசதி வந்தது. கை நிறையச் சம்பாதித்த ஸ்ரீஸ்ரீ முற்போக்கு எழுத்தாளர் சங்கத்திற்காக

அதிகம் செலவு செய்தார். விஜயவாடாவில் நிகழ்ந்த முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் 5ஆவது வருடாந்திர மாநாட்டில் தலைமை தாங்கினார். இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியை ஆதரித்துத் தேர்தல் பிரச்சாரக் கூட்டங்களில் ஸ்ரீஸ்ரீ மிகவும் தீவிரமாகப் பங்கேற்றார். தேர்தல் காலங்களில் முன்னாள் முற்போக்கு எழுத்தாளர்கள் பலரும் கூட்டாகச் சேர்ந்து கொண்டு ஸ்ரீஸ்ரீயைத் தாக்கினார்கள். இந்தத் தாக்குதல் அவரை மிகவும் நிலைகுலையச் செய்துவிட்டது. அப்போதிருந்து ஸ்ரீஸ்ரீ அரசியல் அங்கீகாரம் பெற்ற ஒரு சமுதாயப் புள்ளியாக ஆகிவிட்டார். குண்டூரில் நிகழ்ந்த ஓர் அரசியல் பொதுக் கூட்டத்தின்போது, அரசியல் இயக்கத்தொண்டர்களில் ஒருவரின் தலையை உடைத்துவிட்டார்கள். உடைந்துபோன தலையுடன் தொண்டரைப் பார்த்தவுடன் ஸ்ரீஸ்ரீக்கு மனநிலையே தடுமாறி விட்டது. இதே போன்றதொரு நிகழ்ச்சியை ஹனுமான் ஜங்ஷனில் பார்க்க நேர்ந்தபோது, ஸ்ரீஸ்ரீயின் மனநிலை மேலும் பாதிப்படைந்து அதிர்ச்சியடைந்துவிட்டார். அனிசெட்டி சுப்பாராவ், ஆருத்ரா (இவர் ஸ்ரீஸ்ரீயின் மருமகன்; பாகவதலு சங்கர சாஸ்திரி என்பது இயற் பெயர்) ஆகிய இரண்டுபேரும் உடன்இருக்க, ஸ்ரீஸ்ரீ சிறிதுகாலம் சென்னை மனநோய் மருத்துவமனையில் தங்கியிருக்க வேண்டிய தாயிற்று. இச்செய்தியை ஸ்ரீஸ்ரீயே தெரிவித்திருக்கிறார்.

1956ஆம் ஆண்டில் ஸ்ரீஸ்ரீ 'மரோபிரபஞ்சம்' என்னும் வானொலி நாடகங்களின் தொகுப்பு நூலை வெளியிட்டார்; அடுத்த ஆண்டில் 'கரமராத்ரி' என்னும் சிறுகதைத் தொகுப்பையும் வெளியிட்டார். தெலுங்கு உரைநடை இலக்கியங்களில் "நனவோடை உத்தி" என்னும் உத்தியை அறிமுகப்படுத்திய முதல் தெலுங்குப் படைப்பாளர் ஸ்ரீஸ்ரீயே ஆவார். 1958ஆம் ஆண்டிலிருந்து ஸ்ரீஸ்ரீயின் மொழிபெயர்ப்புப் பணி ஆரம்பமாயிற்று. "உஷா ஸ்ரீ பிக்சர்ஸ்" என்னும் பெயரில் 'செவிலோ ரகஸ்யம்' என்ற சொந்தப் படம் தயாரித்துத் திரையிட்டார்; இந்தச் சொந்தப்பட முயற்சி அவருக்குப் பெரிய நஷ்டத்தில்தான் முடிந்தது. 1959ஆம் ஆண்டுக் காலக்கட்டத்தில் ஸ்ரீஸ்ரீக்கு வாழ்க்கை இவ்வாறு மேடும் பள்ளமு மாகவே அமைந்திருந்தது. அவரைக் காட்டிலும் முப்பது ஆண்டுகள் வயதில் இளையவராய் இருந்த 'உபத்ரஸ்த சரோஜா' என்ற பெண்ணை ஸ்ரீஸ்ரீ திருமணம் செய்துகொண்டார். இல்லற வாழ்க்கை யில் இவர்கள் இருவருக்கும் மூன்று பெண் குழந்தைகளும் ஒரு ஆண் குழந்தையும் பிறந்தார்கள். 1959இல் மூத்த மகள் பிறந்தாள். 5.5.1959 - 14.5.1959க்கு இடையிலான நாட்களில் வெளிநாட்டில் உலக சமாதான மாநாடு ஒன்று கூடியது. அதில் கலந்து கொள்ள ஸ்ரீஸ்ரீ சென்றார். இது அவரது இரண்டாவது வெளிநாட்டுப் பயணம் ஆகும். ஸ்ரீஸ்ரீ தனது சொந்த மோட்டார் காரை 'அடகு' வைத்து விட்டுத்தான்

இந்த வெளிநாட்டுப் பயணத்தை மேற்கொண்டார். பயணம் முடித்துத் திரும்பியபோது ஸ்ரீஸ்ரீ ஒரு 'முழுமையான கம்யூனிஸ்ட்' என அறியப்பட்டார். காக்கிநாடாவில் வழக்கறிஞர் எம்.வி. சாஸ்திரியுடன் இருந்த நேரத்தில் ஸ்ரீஸ்ரீ வெளிப்படையாகவே தாக்குதலுக்கு உள்ளானார். அவருடைய கைக்கடிகாரம் திருடப்பட்டது. ரஷ்யக் காமிரா பறிமுதல் செய்யப்பட்டது; பிறகு அந்தக் காமிரா பிரயோஜனமில்லாத நிலையில் திருப்பித்தரப்பட்டது. 1962இல் அருணாசலப் பிரதேசத்திற்கு விஜயம் செய்யுமாறு 'சலம்' ஸ்ரீஸ்ரீயை அழைத்தார். ஆனால் ஸ்ரீஸ்ரீ மறுத்துவிட்டார். 1963இல் மகன் பிறந்தான். 1966இல் 'கட்க சிருஷ்டி' என்னும் கவிதைத் தொகுதியை வெளியிட்டார். இதில் அடங்கிய கவிதைகள் அனைத்தும் 'சர்ரியலிஸ்டிக்' தன்மை கொண்டவை. இத்தொகுதிக் காக ஸ்ரீஸ்ரீ ''சோவியத்நாடு'' பரிசு பெற்றார். பரிசை நேரில் பெற்றுக் கொள்ள ஸ்ரீஸ்ரீ சோவியத் ரஷ்யாவுக்குச் சென்று வந்தார். அதே ஆண்டில் ஹைதராபாத் இந்தி பிரச்சாரசபை தனது வருடாந்திரப் பட்டமளிப்பு விழாவின்போது, ஸ்ரீஸ்ரீக்கு, ''சாகித்யாச்சார்யா'' என்னும் உயர்ந்த பட்டத்தை வழங்கிச் சிறப்பித்தது. இந்த அரிய பட்டம் இதற்கு முன்னால் நீதிபதி பி.வி. ராஜ மன்னார், பேராசிரியர் வி.கே. கோகக் ஆகிய இரண்டு பெருமக்களுக்கு மட்டுமே வழங்கப் பட்டிருந்த மிக உயரிய பட்டமாகும்.

பிற்பகுதி ஆண்டுகள்

பல்குண முரண்பாடுகள், தீவிரத்தன்மை, புரட்சிப்பாங்கு ஆகியவை எங்கே இருந்தாலும் அவற்றின்மீது ஸ்ரீஸ்ரீ தனக்குள் ஓர் ஈர்ப்பு ஆர்வத்தன்மையை வளர்த்துக் கொள்பவராக இருந்தார். தெலுங்கு இலக்கிய உலகில் அப்போது ஒரு புதிய சவால் எதிர் கொள்ள வேண்டியதாக இருந்தது. ''திகம்பர கவிகள்'' என்று அழைக்கப்பட்டவர்கள் தங்கள் வசன கவிதைகளின் வழியே ஆபாசங்களை அள்ளி வீசியவாறு, சமுதாயத்தின்மீது குற்றச்சாட்டுக் களைச் சுமத்திக் கொண்டிருந்தார்கள்; மிகக் குறிப்பாக அரசியல் வாதிகளை, ''போலிகள்'' என்றும் ''மக்களுக்கு எதிரானவர்கள்'' என்றும் குற்றம் சுமத்திக் கொண்டிருந்தார்கள். திகம்பர கவிகளின் படைப்புக்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துத் தருவதாக வாக்குறுதி தெரிவித்து அவர்களுக்கு 1968இல் ஸ்ரீஸ்ரீ ஒரு கடிதம் எழுதினார்; கடிதத்தில் தெரிவித்திருந்தவாறே வாக்குறுதியை நிறைவேற்றவும் செய்தார். 1970 பிப்ரவரி 2ஆம் தேதியன்று விசாகையில் ஸ்ரீஸ்ரீக்கு ''சஷ்டியப்த பூர்த்தி'' நாள் மிக விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. புகழ்பெற்ற அரசியல் தலைவர் தென்னட்டி

விஸ்வநாதன் அரசியல் வேறுபாடுகளையும் கடந்து, ஸ்ரீஸ்ரீயின் ''சஷ்டியப்த பூர்த்தி'' விழாவுக்கு வரவேற்புக் குழுவின் தலைவராகப் பொறுப்பேற்றார். விழாவிற்கு இலக்கியப் படைப்பாளர்களும் பிறருமாகக் கூட்டம் பெருந்திரளாகக் கூடிவிட்டதால், முதலில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த குரஜாடா மந்திரிலிருந்து, சஷ்டியப்த பூர்த்தி விழாவை, நகராட்சிக் கலையரங்கத்திற்கு மாற்றிக்கொள்ள வேண்டியதாயிற்று. அந்த அளவிற்கு அப்போது ஸ்ரீஸ்ரீயின் புகழ் மிகவும் உச்சத்தில் இருந்தது. ஸ்ரீஸ்ரீயின் ஆர்வலர்கள் சுமார் 2000 பேர்கள் தெருவில் திரண்டு விசாகப்பட்டினத்தின் எல்லம்மா தோட்டத்திலிருந்து (இன்று ஜெகதாம்பா மையம்) புறப்பட்டு, புதிய இடமாகிய நகராட்சிக் கலையரங்கம் வரை அணிவகுத்து வந்தார்கள். இது மாதிரியான அரிய மரியாதை ஆந்திராவில் எந்த இலக்கியவாதிக்கும் கிடைத்ததே இல்லை. 1970ஆம் ஆண்டில் ஆந்திரப்பிரதேச சாகித்திய அகாதமியின் 'விசிஷ்ட சப்யா' (ஆட்சி உறுப்பினர்) ஆக ஸ்ரீஸ்ரீ ஆனார்.

பல்வேறு கருத்து வேறுபாடுகளுக்கும் அமளிகளுக்கும் இடையில், ''அரசம்'' என்னும் அமைப்பிலிருந்து தனது தொடர்புகளைத் துண்டித்துக் கொண்ட ஸ்ரீஸ்ரீ 4.7.1970இல் 'விரசம்' (விப்லவ ரசயித சங்கம் அல்லது புரட்சிகர எழுத்தாளர் சங்கம் என்பதன் சுருக்கம்) என்னும் அமைப்பிற்குத் தலைவராக இருப்பதற்கு ஒப்புக் கொண்டார். ஆந்திரப்பிரதேச சாகித்திய அகாதமியின் சிறப்பு உறுப்பினர் பொறுப்பிலிருந்து ஸ்ரீஸ்ரீ ராஜினாமா செய்தார்; அது மட்டுமல்ல, சிறு வயதுப் பருவத்திலிருந்தே ஸ்ரீஸ்ரீ தொடர்பு கொண்டிருந்த விசாகை ''கவிதா சமிதி'' என்னும் அமைப்பின் அடிப்படை உறுப்பினர் பதவியிலிருந்தும் அவர் ராஜினாமா செய்துவிட்டார். 'விரசம்' அமைப்பின் நிறுவுநர் தலைவராகப் பொறுப்பு ஏற்றுக் கொண்ட உடனேயே ஸ்ரீஸ்ரீ, பிற இலக்கிய அமைப்புக்களுடன் தனக்கு இருந்த அனைத்துத் தொடர்புகளையும் நீக்கிக் கொண்டுவிட்டார். 'விரசம்' அமைப்பின் கொள்கைகளின் அடிப்படையில், அகில இந்திய அளவில், ஓர் இலக்கிய அமைப்பைக் கட்டலாம் என்ற ஆசையுடன், டெல்லியில் நடந்த ஆப்பிரிக்க - ஆசிய எழுத்தாளர்களின் நான்காவது மாநாட்டில் ஸ்ரீஸ்ரீ கலந்து கொண்டார். தன்னையும் ஹன்ஸ்ராஜ் ராபரையும் துணைக் கூட்டுநர்களாக அமைத்துக்கொண்டு, ஸ்ரீஸ்ரீ 18.10.1970ஆம் தேதியில், ''அகில இந்தியப் புரட்சிகர எழுத்தாளர் சங்கத்தின் ஒருங்கிணைப்புக்குழு'' என்ற ஒரு குழுவை உருவாக்கினார். (1970 டிசம்பரில், அரசுக்கு எதிராகக் கிளர்ச்சி செய்தார் என்று ஹன்ஸ்ராஜ் மீது அரசு குற்றம் சாட்டி வழக்கு தொடரப்பட்டது). பஞ்சாப், பீகார்,

மேற்கு வங்காளம் ஆகிய மாநிலங்களிலிருந்து, இளம் எழுத்தாளர்கள் பலரை ஸ்ரீஸ்ரீ தனது சங்கக் குழுவுக்குள் கொண்டுவர முடிந்தது.

1970ஆம் ஆண்டின்போது, ஸ்ரீஸ்ரீ இவ்வாறு புரட்சிக்காரராய் மாறியது திடீரென்று ஏற்பட்ட வளர்ச்சிதான் எனலாம். 'நவதா' பத்திரிகையின் ஆசிரியராக ஸ்ரீஸ்ரீ இருந்தபோது, ''ஏழு நட்சத்திர சிண்டிகேட்டின்'' பத்தாவது ஆண்டு நிறைவு விழாவில் கலந்து கொள்வதற்காக 1970 ஜூலை 4ஆம் தேதி ஹைதரபாத் சென்றார். வித்வான் விஸ்வம் விடுதி அறை ஒன்றில் 'அரசம்' செயற்குழுக் கூட்டத்திற்கு ஸ்ரீஸ்ரீ தலைமை தாங்கினார். அதன் பிறகு, பத்ருகா கல்லூரியில் மாணவர்கள் கூட்டத்தில் ஆருத்ராவுடன் சேர்ந்து உரையாற்றினார். இவ்வாறெல்லாம் இயங்கிய ஸ்ரீஸ்ரீ பொது நிகழ்ச்சி களைத் தவிர்த்தார். கே.வி. ரமணரெட்டியுடன் இம்ப்பீரியல் விடுதிக்குச் சென்ற ஸ்ரீஸ்ரீ அங்கே இரவு 1.10மணி அளவில் 'விரசம்' அமைப்பை நிறுவினார். விசாகப்பட்டினத்தில் ஸ்ரீஸ்ரீக்கு நடைபெற்ற 'சஷ்டியப்த பூர்த்தி'யின்போது, ஏற்றுக் கொள்ள முடியாத சில சம்பவங்கள் நிகழ்ந்து விட்டன. இதன் விளைவாகத்தான் ஹைதராபாத்தில் விரசம் அமைப்பு தோன்றியது எனலாம். இருந்த போதிலும் இந்த மாற்றங்கள் பற்றியெல்லாம் ஸ்ரீஸ்ரீ தம் வாழ்நாளில் திரும்பவும் எண்ணிப் பார்த்ததில்லை. காலப்போக்கில் 'விரசம்' அமைப்பு மிகப்பெரிய அளவில் அவர்மீது ஆளுமை செலுத்தலாயிற்று. விசாகையில் நடந்த கொண்டாட்டங்களின்போது, 'விரசம்' அமைப்பாளர்களால் ஸ்ரீஸ்ரீயின் படைப்புக்களின் ஐந்து தொகுதிகள் வெளியிடப்பட்டன. 1971ஆம் ஆண்டில், 'விரசம்' அமைப்பு தேர்தல்களைப் புறக்கணிக்க விரும்பியது. ஆனால், ஸ்ரீஸ்ரீ தேர்தலில் நிற்க விரும்பி, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் தேர்தலில் நிற்க வாய்ப்புக் கேட்டார் என்றும் ஆனால் வாய்ப்பு மறுக்கப்பட்டது என்றும் தெரிகிறது. ஹைதராபாத்தில் நடைபெற்ற 'விரசம்' இரண்டாவது மாநாட்டிற்கு ஸ்ரீஸ்ரீ தலைமை தாங்கினார். ஸ்ரீஸ்ரீயின் 'சத் அசத் சம்சயம்' என்னும் படைப்புக்கு புதுடெல்லி சாகித்ய அகாதெமி விருது அறிவித்தது. சாகித்திய அகாதெமி அளிக்கும் இந்த விருதை ஏற்றுக் கொள்வது என்றும், அதன் மூலம் கிடைக்கும் பரிசுத் தொகை முழுவதையும் ஓர் அச்சகம் நிறுவுவதற்காக நன்கொடையாக வழங்கிவிடுவது என்றும், அந்த அச்சகம் 'விரசம்' அமைப்புக்கு மட்டுமே உரியதாக இருக்கும் என்றும் ஸ்ரீஸ்ரீ எண்ணினார். ஆனால், 'விரசம்' அமைப்பு அகாதெமியின் விருதை மறுத்து விடுமாறு ஸ்ரீஸ்ரீயை வலியுறுத்தியது. இந்த நிலையில், தனது சொந்தச் செலவில் புதுடில்லிக்கு ஸ்ரீஸ்ரீ சென்றார்; அங்கே தங்கியிருந்தார்; ஆனால்,

*16.3.1973*ஆம் நாளன்று அங்கே நிகழ்ந்த விருது அளிப்பு விழாவில் அவர் பங்கேற்கவில்லை. பதினைந்து நாட்களுக்குப் பிறகு, அஞ்சல் வழியே அனுப்பப்பட்ட விருதின் பரிசுத்தொகைக்கான காசோலையை ஸ்ரீஸ்ரீ பெற்றுக் கொண்டார். தெனாலியில் கூட்டப்பட்ட ஒரு விசேடக் கூட்டத்தில், ஸ்ரீஸ்ரீயின் இந்தச் செயலை 'விரசம்' கண்டனம் செய்தது. 'விரசம்' அமைப்பின் சார்பில் 'தனித்தெலுங்கானா மாநாடு' ஏற்பாடு செய்யப்பட்டது. இந்த ஏற்பாட்டுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில், இரண்டு மாதங்களுக்கு முன்னதாகவே, ஸ்ரீஸ்ரீ 'விரசம்' அமைப்பின் தலைவர் பதவியிலிருந்து ராஜினாமா செய்துவிட்டார்.

முன்பு முடிக்கப்படாமல் விடப்பட்டிருந்த 'அனந்தம்' என்னும் தனது சுயசரிதையை 'பிரஜாதந்திர', 'ஸ்வாதி' ஆகிய பத்திரிகைகள் வழியே, ஸ்ரீஸ்ரீ *1975*இலிருந்து மீண்டும் வெளியிடத்தொடங்கினார். ஆந்திரப்பிரதேச அரசாங்கம், ''முதலாம் அகில உலகத் தெலுங்கு மகாநாட்டை'' ஹைதராபாத்தில் நடத்த விரும்பியது. 'விரசம்' அமைப்பு இதை எதிர்த்தது. ஸ்ரீஸ்ரீயும் அரசாங்கத்தின் விருப்பத்தை எதிர்த்து ஒரு வழக்கும்கூடத் தொடர்ந்தார். ஞானபீட விருதுபெற்ற விஸ்வநாத சத்யநாராயணாவுடன் (*1895-1976*) விஜயவாடாவில் ஸ்ரீஸ்ரீ கலந்து ஆலோசித்த பிறகு, அரசாங்கம் இவ்வாறு ஒரு தெலுங்கு மாநாட்டை நடத்துவது தேவையற்றது எனக்குற்றம் சாட்டி ஒரு கூட்டறிக்கையையும் வெளியிட்டார். ஸ்ரீஸ்ரீ இளமைக்காலத்தின் போது விஸ்வநாதருக்கு ஆர்வமுள்ள, தீவிரமான ஆதரவாளராகவே இருந்தார். ஆனால், பிறகு தற்காலக் கவிதையின் உருவம் - உள்ளடக்கம் ஆகியவை பற்றிய கருத்தில் அவரிடமிருந்து வேறு பட்டுவிட்டார். இருவருக்கும் இடையில் நிலவிய உறவு காய்தல் - உவத்தல் ஆகிய இருவேறு கோணங்களிலேயே அமைந்திருந்தது. எனவே, தற்காலக் கவிதையின் உருவம் - உள்ளடக்கம் என்று வருகிறபோதெல்லாம் இருவரும் மறுப்பு - மறுப்புக்கு மறுப்பு என்றே அறிக்கை வெளியிட்டுக் கொண்டனர். ஒருமுறை இருவருக்கும் இடையில் ஒரு முரண்பாடு கிளம்பிவிட்டது. யார் பேசுவது முழுதும் உண்மை என்று யாருக்கும் புலப்படவில்லை. ஸ்ரீஸ்ரீ 'விரசம்' அமைப்பின் வழியைப் பின்பற்றி, உலகத்தெலுங்கு மாநாட்டுக்கு எதிர்ப்பாக, *1975*, ஏப்ரல், *12*-ஆம் தேதி, துண்டுப் பிரசுரங்களை விநியோகம் செய்தார். 'மஃப்டி' உடையில் இருந்த போலீஸ் ஸ்ரீஸ்ரீயைக் கைதுசெய்து போலாராம் சிறையில் இரவுவரை அடைத்து வைத்தது. தனது வாதங்களை நியாயப்படுத்தி ஸ்ரீஸ்ரீ போலீஸ் நிலையத்திலிருந்தபடியே ஓர் அறிக்கை வெளியிட்டார். அடுத்த நாள் விடுதலை செய்யப்பட்டுவிட்டார். போராட்டத்தில் ஈடுபட்ட 'விரசம்' அமைப்பின் உறுப்பினர்கள் அனைவரும் 'மிசா'

சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டனர். ஆனால் ஸ்ரீஸ்ரீ மட்டும் கைது செய்யப்படவில்லை.

1975, ஜூன் 26ஆம் தேதி ''அவசரநிலை'' பிரகடனம் செய்யப் பட்ட பிறகு, இந்திய அரசு ''20-அம்சத்திட்டம்'' என்னும் திட்டத்தை அறிவித்தது. ஸ்ரீஸ்ரீ அந்தத் திட்டத்தைப் புகழ்ந்து ஒரு கவிதை எழுதினார்; அந்தக் கவிதை அகில இந்திய வானொலியில் ஒலிபரப்பும் ஆகியது. 1975, ஆகஸ்டு, 3-தேதியிட்ட அவருடைய 'பிரஜாதந்திர' இதழில் ஸ்ரீஸ்ரீ தனது எதிர்கால விருப்பங்களையெல்லாம் வெளியிட்டிருந்தார். 1976, நவம்பர் 11ஆம் தேதி, டாக்டர் டி.எஸ். காட்னிஸ் நினைவுக்குழுவின் செயலாளரான டேனியல் லத்தீப்பிட மிருந்து ஸ்ரீஸ்ரீக்கு ஒரு கடிதம் வந்தது. சீனாவுக்குப்போய் வருவதற்கான அழைப்பு அது. 6.12.1976ஆம் தேதியிலிருந்து 27.12.1976ஆம் தேதி வரைக்குமான 21 நாட்கள் ஸ்ரீஸ்ரீ சீனாவில் சுற்றுப்பயணம் செய்தார். ஆனால் திடீரெனத் தாய்நாடு திரும்ப வேண்டியதாயிற்று. ''என்னுடைய சீனா'' என்று அவர் எழுதியிருந்த கவிதையை ஸ்ரீஸ்ரீ 24.1.1976இல் பீகிங் வானொலியில் வாசித்தார். அந்தக் கவிதையில் ''அன்னை சீனமும், அன்னை இந்தியாவும் ஒட்டிப் பிறந்த இரட்டைச் சகோதரிகள்'' என்று வருணித்தார். அவரது சீன விஜயத்துக்கு முன்பாக, அவருடைய 'பிரஜாதந்திர' இதழில், ஆந்திரப்பிரதேச முன்னாள் முதல்வர் வெங்கல்ராவை (இவர் உலகத் தெலுங்கு மாநாட்டுக்கு ஒரு வாரம் முன்னதாகவே கைது செய்யப் பட்டிருந்தார்) ஸ்ரீஸ்ரீ பாராட்டி ஒரு க்ட்டுரை எழுதியிருந்தார். கட்டுரையில், டி.வி. நரசராஜூ, திரைப்பட நட்சத்திரமாகிய பானுமதி ராமகிருஷ்ணா ஆகியோரையும் ''பாசாங்கு இல்லாதவர்கள்'' என்று பாராட்டியிருந்தார். அதே 'பிரஜாதந்திர' இதழில், திருமதி. இந்திரா காந்தியின் 20அம்சத் திட்டத்தைப் பாராட்டியும் இரண்டு கட்டுரை களை ஸ்ரீஸ்ரீ எழுதியிருந்தார். இவையெல்லாம் அவரது சீனப் பயணத்துக்கு முன்னர் நிகழ்ந்திருந்தன. சீனாவிலிருந்து ஸ்ரீஸ்ரீ திரும்பிய பிறகு, 'விரசம்' அமைப்பு, ஸ்ரீஸ்ரீ மீது, 'புரட்சிகரத்தன்மை இல்லாதவர்', 'அரசியல் சந்தர்ப்பவாதி' என்று குற்றம் சாட்டியது. சில திரைப்பட வாய்ப்புக்களைக் கைப்பற்றிக் கொள்ளும் நோக்கத்தில் தான் இவ்வளவு சீக்கிரமாய் சீனாவிலிருந்து ஸ்ரீஸ்ரீ திரும்பினார் போலும் என்றும் அவர்மீது குற்றம் சாட்டப்பட்டது. அவரது தவறுதலான நடவடிக்கைகளுக்கு அவர் விளக்கம் தரவேண்டும் என்றும் ஸ்ரீஸ்ரீ கேட்டுக் கொள்ளப்பட்டார். அந்த நேரத்தில் ஸ்ரீஸ்ரீ 'விரசம்' அமைப்பின் தலைவ்ராகவும் இருந்தார்; சிவில் உரிமைக் கழகத்தின் தலைவராகவும் இருந்தார். நாட்டில் பிரகடனப்படுத்தப் பட்டிருந்த 'அவசர நிலையை' வாபஸ் பெற்றுக் கொள்ள வேண்டும் என்று விடுக்கப்பட்டிருந்த வேண்டுகோளில் ஸ்ரீஸ்ரீ கையொப்பமிட

வில்லையே, ஏன்? என்றும் அவரைக் கேட்டார்கள். 1977, ஜுன் மாதம் 11, 12 தேதிகளில் விஜயவாடாவில் நடந்த 'விரசம்' அமைப்பின் பொதுக்குழுக் கூட்டத்தில் நேரில் கலந்து கொண்ட ஸ்ரீஸ்ரீ, அவரது நடவடிக்கைகள் அனைத்தும் 'சீரியஸ்' ஆனவை அல்ல, 'வேடிக்கையாகச் செய்யப்பட்டவையே' - என்று விளக்கம் தந்து, 'விரசம்' அமைப்பின் தலைமைப் பொறுப்பிலிருந்து தான் நீக்கப்படுவதையே விரும்புவதாகவும் தெரிவித்தார். ஸ்ரீஸ்ரீயின் விளக்கத்திற்குப் பிறகு 'விரசம்' அமைப்பு அவரைப் பொறுத்துக் கொண்டது; ஆனாலும் அவர் விருப்பப்படியே தலைமைப் பொறுப்பி லிருந்து அவரை விடுவித்தது (அதன் பிறகு அந்தப்பதவி இன்றுவரை நிரப்பப்படவில்லை). 'விரசம்' அமைப்பின் சாதாரண உறுப்பினராக நீடிக்க அனுமதித்தது. 1977 தேர்தலில் இந்திராகாந்தி மறுபடியும் ஜெயிக்க வேண்டும் என்றும் ஸ்ரீஸ்ரீ பிரச்சாரம் செய்தார். அப்போது, உலகத் தெலுங்கு மாநாட்டைப் புறக்கணித்தது தனது சொந்த விருப்பத்தால் அல்ல என்றும், 'விரசம்' அமைப்பின் பெரும்பான்மை முடிவுக்குக் கட்டுப்பட வேண்டியிருந்தது என்றும் விளக்கங்கள் சொன்னார்.

1979, நவம்பர், 19ஆம் நாள் சென்னையில், முதலாவது ராஜ்யலெட்சுமி விருதாகிய ரூ.10,000/-ஐ ஸ்ரீஸ்ரீ பெற்றார். "ஆந்திர ஜோதி" வாசகர்களால், "தெலுங்கின் மிகமுக்கியமான மனிதர்" என்று ஸ்ரீஸ்ரீ தேர்வு செய்யப்பட்டார். "ருக்மிணி கல்யாணம்" என்ற தலைப்பில் ஒரு திரைப்படம் தயாரிக்கலாம் என்றும் ஸ்ரீஸ்ரீ திட்ட மிட்டார்; ஆனால் தொடர்ந்து அதில் ஈடுபடவில்லை. 1980இல் லண்டனுக்கு வருமாறு குடல கிருஷ்ணமூர்த்தியின்மூலம் அழைப்பு வந்தது. பூரிபந்த அப்பல சுவாமியுடன் லண்டனுக்குச் சென்ற ஸ்ரீஸ்ரீ அங்கே நான்கு மாதங்கள் தங்கியிருந்தார்; அங்கே ஜார்ஜ் பார்க்கர் (1913) போன்ற புகழ்பெற்ற பிரிட்டானிய எழுத்தாளர் பலரைச் சந்தித்தார். 1980, மார்ச் 2ஆம் நாள் காக்கிநாடாவில் ஸ்ரீஸ்ரீயின் 'சப்ததி பூர்த்தி' (எழுபதாம் வயது நிறைவு நாள்) மிகுந்த கோலாகலத்துடன் கொண்டாடப்பெற்றது. மிரியால ராமகிருஷ்ணா எழுதிய 'ஸ்ரீஸ்ரீ கவிதம்' (வஸ்துவு மற்றும் சம்விதானம்) என்ற டாக்டர் பட்ட ஆய்வேடு ஒன்றும் அந்த நிகழ்ச்சியின்போது வெளியிடப்பட்டது. இந்த நிகழ்ச்சி முடிந்த உடனேயே ஸ்ரீஸ்ரீ மறுபடியும் லண்டனுக்குப் பயணம் ஆனார். இந்த முறை அவர் லண்டனிலிருந்து திரும்பி வந்தவுடன், ஹைதராபாத்தில், ஸ்ரீஸ்ரீயைச் சுற்றிச் சூழ்ந்து 'கெரோ' செய்தார்கள். ஸ்ரீஸ்ரீ தனது ராஜினாமாவை 'விரசம்' அமைப்புக்கு அனுப்பிவைத்தார். ஆனால் ஒரு மாதத்திற்கு முந்தியே அவர் அமைப்பிலிருந்து நீக்கப்பட்டிருந்தார். 1980 டிசம்பர் மாதம், டாக்டர் டி.ஏ.ஏ.எஸ். நாராயணராவின் அழைப்பிற்கிணங்க, ஸ்ரீஸ்ரீ

அமெரிக்காவுக்குச் சென்றார். அங்கே நண்பர்களிடையே ஜூன் மாதம் வரை இருந்தார். 1981 ஏப்ரல் மாதம் மலேசியாவின் கோலாலம்பூரில் இரண்டாவது உலகத் தெலுங்கு மாநாடு நடைபெற்றது. அரசாங்கம் ஸ்ரீஸ்ரீயை மாநாட்டுக்கு அழைக்காத காரணத்தால் அவர், அதில், பங்கேற்கவில்லை. ஆனால், ஜூன் மாதம் நிகழ்ந்த சிகாக்கோ தெலுங்கு மாநாட்டில் ஸ்ரீஸ்ரீ கலந்து கொண்டார். காரணம், இந்த அமைப்பு அரசு சாராத அமைப்பு; மேலும், ஸ்ரீஸ்ரீ முறைப்படி மாநாட்டுக்கு அழைக்கப்பட்டிருந்தார். ஸ்ரீஸ்ரீ லண்டனில் இருந்தபோது அவருடைய 'மகாபிரஸ்தானம்' அவரது கையால் எழுதப்பட்டிருந்த கையெழுத்துப் பிரதியும், அவரது பேச்சுக் குரலில் பதிவு செய்யப்பட்ட ஒலி நாடாவும் சேர்ந்து குடல கிருஷ்ணமூர்த்தியால் வெளியிடப்பட்டன. ஸ்ரீஸ்ரீ அமெரிக்காவில் இருந்தபோது, 1981-இல், அவருடைய 'சிப்ராலி' யின் புகைப்பட நகல் வெளியிடப்பட்டது.

ஆந்திரப்பிரதேசத்தில், 1982இல் நடந்த பொதுத்தேர்தலின் போது, ஸ்ரீஸ்ரீ என்.டி. ராமாராவை ஆதரித்தார். ''என்.டி.ராமாராவ் என்ற மனிதரை நான் ஆதரிக்கவில்லை; அவருடைய கட்சியையும் ஆதரிக்கவில்லை; ஆனால் அவரிடம் உள்ள, அவருக்கே உரிய 'நிறுவன எதிர்ப்பு' என்னும் உணர்வை நான் ஆதரிக்கிறேன்'' என்று ஸ்ரீஸ்ரீ விளக்கம் சொன்னார். 1982இல் ஸ்ரீஸ்ரீ சில நீதிமன்ற வழக்குகளில் சம்பந்தப்பட்டிருந்தபோது, அவருடைய அபிமானிகளிடமிருந்து நிதி உதவியும் பெற்றார். அவருடைய உடல் நலம் குறையத் தொடங்கியது; அத்தோடு பொருளாதார நிலையும் சரிந்து விட்டது. இந்த நிலையிலும் ஸ்ரீஸ்ரீ 1983 ஏப்ரல் மாதம் நடந்த நலகொண்டா மாவட்டத்து எழுத்தாளர்களின் மூன்றாவது மாநாட்டில் பங்கேற்று உரை நிகழ்த்தினார். இந்த நிகழ்ச்சிதான் அவர் கலந்துகொண்ட கடைசிப் பொது நிகழ்ச்சியாகவும் அமைந்துவிட்டது. ''ஆந்திர ஜோதி'' இதழில் அவர் தொடர்ந்து எழுதிவந்த கட்டுரைத் தொடரை அவரால் எழுத இயலவில்லை. 'இன்றைய பாரதம்' என்ற படத்திற்கு 1983, ஜூன் 4ஆம் தேதி ஒரு கவிதை எழுதியிருந்தார். அதுதான் ஸ்ரீஸ்ரீ எழுதிய கடைசிக் கவிதையாகும். அவர் குடியிருந்த வீடு ஏலத்துக்கு வந்துவிட்டது. ஆனால், நண்பர்களின் உதவியால் அந்தச் சிக்கலிலிருந்து அவர் காப்பாற்றப்பட்டார். புற்றுநோயினால் பாதிக்கப்பட்டிருந்த ஸ்ரீஸ்ரீ அதிலிருந்து சிறிது நலம் பெற்றிருந்தார்; என்றாலும், உயர் ரத்த அழுத்த நோயின் காரணமாக ஜூன் 6ஆம் தேதி மறுபடியும் மருத்தவமனையில் சேர்க்கப்பட்டார். 1983, ஜூன் 15ஆம் தேதி, சரியாகப் பிற்பகல் 5.30 மணிக்கு ஸ்ரீஸ்ரீ காலமாகி விட்டார். அடுத்த நாளன்று இறுதிச் சடங்குகள் ஏற்பாடு செய்யப் பட்டன. அவரது விருப்பத்துக்கு மாறாகவே இறுதிச் சடங்குகள்

நிகழ்த்தப்பட்டன. மரணத்துக்குப் பிறகு தனது பூத உடல் மருத்துவ மனைக்குக் கொடையாக அளிக்கப்படவேண்டும் என்றும், ஸ்ரீஸ்ரீ விரும்பியிருந்தார். ஆனால் அவருடைய மனைவி இதற்கு உடன்பட வில்லை. மனைவியின் விருப்பத்திற்கேற்ப ஸ்ரீஸ்ரீயின் உடல் எரியூட்டப்பட்டது. இவ்வாறாக, அவரது இறுதி விருப்பமும்கூட சர்ச்சைக்கு உரியதாக அமைந்துவிட்டது. ஸ்ரீஸ்ரீ, வாழ்க்கையின் பல கோணங்களில் பல்லாயிரக்கணக்கான மக்களைத் தன்பக்கம் கவர்ந்து வசீகரப்படுத்தியிருந்தார். இலக்கியம், அரசியல், சமுதாயம் என்ற அடிப்படைகளில் ஸ்ரீஸ்ரீ அனைத்து வகை முரண்பாடுகளுக்கும் இடையிலேதான் வாழ்ந்திருந்தார். மேலும், சில தனிப்பட்ட தோல்வி களுக்கும் அப்பாற்பட்ட நிலையில், ஸ்ரீஸ்ரீயின் வசீகரம் அனைவரா லும் பாராட்டப்பட்டுத்தான் வந்தது. ஒளிவு மறைவு இல்லாத வெளிப்படைப் பண்பு, உடன் இருந்த பெரியவர்கள் சிறியவர்கள் யாரானாலும் அவர்களிடம் காட்டிய மகிழ்ச்சி, அறிவுக் கூர்மை, உடன் பதிலுரைக்கும் பேச்சுத்திறன், இவை அனைத்துக்கும் மேலாக, அவருடைய பளிச்சிடும் இலக்கிய மேதைமை இவைதான் மக்களிடையே அவருக்குப் பேரன்பை ஈட்டித்தந்திருந்தன. இது மட்டுமல்ல, எதிர்முகாம் சிந்தனையாளர்களிடையிலேயும் அவருக்குப் பேரன்பை ஈட்டித்தந்திருந்தன. இதன் காரணமாகவே, திரைப்பட நடிகர் கிருஷ்ணராஜு, 1985, செப்டம்பர் 10ஆம் தேதி, அல்லூரி சீதாராமராஜு கலாச்சாரக் கழகத்தின் சார்பில், ஆந்திரப் பல்கலைக் கழகத்திற்கு ரூ.50,000/- நன்கொடை அளித்து, ஸ்ரீஸ்ரீ நினைவாக ஆண்டுதோறும் அறக்கட்டளைச் சொற்பொழிவு நிகழ்த்த வேண்டும் என்று ஏற்பாடு செய்தார். 1986, ஜுன் 3ஆம் தேதி, ஹைதராபாத் அணைகரையில் மக்தும் முஹையதீன் சிலைக்கு அருகில், ஸ்ரீஸ்ரீக்கு உருவச் சிலையும் நிறுவப்பட்டது. இவை, தெலுங்குக் கவிஞர் ஸ்ரீஸ்ரீ சமுதாயத்திலிருந்து பெற்ற அபூர்வமான மரியாதைகளுள் சில ஆகும். ஸ்ரீஸ்ரீயுடன் எவ்வளவோ மாறுபாடுகளைக் கொண்டிருந்தது 'விரசம்' அமைப்பு. இருந்த போதிலும், ஸ்ரீஸ்ரீயின் படைப்புக்கள் அனைத்தையும் ஒரு முழுத்தொகுதியாக 'விரசம்' அமைப்பு வெளியிட்டு வருகிறது. அவருடைய அரசியல் அடிப்படைச் சார்பு களையும் தாண்டி, அவர் உயிரோடு வாழ்ந்திருந்த போதும் சரி, மறைந்த பிறகும் சரி, அவரை அறிந்தவர்கள் அனைவரும், ஸ்ரீஸ்ரீ மீது மிகுந்த மரியாதையும், மிகுந்த அன்பும், மிகுந்த பரிவும் கொண்டிருந்தார்கள்.

2. தொடக்ககாலப் பாதிப்புகள்

ஸ்ரீஸ்ரீக்கு இரண்டுவயதுகூட நிரம்பாத நிலையில் அவருடைய தாயார் காலமாகிவிட்டார். இந்த ஒரு நிகழ்ச்சியைத் தவிர வேறு எதுவும் சொல்லமுடியாத அளவில், அவரது குழந்தைப் பருவம் மிகவும் அமைதியாகவே சென்று கழிந்தது. அவர் பிறந்த குடும்பம் படிப்பறிவு உடைய குடும்பம்; அவருடைய தந்தை கணித ஆசிரியராக இருந்தார். வலிப்பு நோயிலிருந்து இவரைக் காப்பாற்ற சூடெல்லாம் போட்டவராகிய மாமா சிவப்பிரசாதராவ் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் ஸ்ராஸ்தராகப் பணியாற்றினார். ஸ்ரீஸ்ரீயின் வளர்ப்புத்தந்தையின் சகோதரர் விஜயநகரம் சுந்தரநாராயணா ஆவார். அவருக்கு இரண்டு மகன்கள் இருந்தனர். ஒருவர் அப்படு பந்துலு; இன்னொருவர் நாராயணபாபு; இவர் இருவரில் நாராயண பாபு பிற்காலத்தில் நல்ல கவிஞராகவும் இசைவாணராகவும் உருவானார். ஸ்ரீஸ்ரீக்கு இவர் குழந்தைப் பருவத்தில் இருந்தே நண்பராகவும் இருந்தார்; பின்னர் பிரிந்துவிட்டார். தந்தையார் ஸ்ரீஸ்ரீ செய்யும் குழந்தைப் பருவத்துக் குறும்புகளையெல்லாம் பொறுத்துக் கொள்பவராக இருந்தார். ஸ்ரீஸ்ரீ குழந்தைப் பருவத்தின் போது வீட்டுச் சுவர்களிலெல்லாம் படங்கள் வரைந்து சுவர்களைக் கெடுத்து விடுவது உண்டு. இப்படி ஸ்ரீஸ்ரீ செய்யாமல் இருப்பதற்காக தந்தை, ஸ்ரீஸ்ரீக்கு ஒரு கரும்பலகையும் ஒரு 'டஸ்டரும்' ஏற்பாடு செய்து கொடுத்தார். விளையாட்டுக் குணங்கள் நிறைந்த ஸ்ரீஸ்ரீக்குக் குடும்பத்தில் இவ்வாறெல்லாம் ஊக்கமும் ஆதரவும் கொடுக்கப் பட்டன. பத்து வயதுப் பையனாக இருக்கும்போது, 'கிருஷ்ண லீலா' நாடகத்தில் ஸ்ரீஸ்ரீ 'அசரீரவாணி' வேடம் ஏற்று நடித்தார்; ஏற்று நடித்த அந்தப் பெண் பாத்திரத்தின் மீது அவருக்கே காதல் வந்துவிட்டதாம்! அந்த அளவுக்கு ஈடுபாடுடைய நடிப்பு! தந்தையார் அப்பாவுக்கு அப்பாவாகவும் ஆசிரியருக்கு ஆசிரியராகவும் இருந்து ஸ்ரீஸ்ரீயைப் பேணிவந்தார். ஸ்ரீஸ்ரீ வடமொழி கற்றுக் கொள்ளவேண்டும் என்றும்

குடும்பத்தில் ஆர்வம் ஊட்டினார்கள். தேசியவாதியும் கவிஞருமான பூரி பந்த அப்பல சுவாமிகளுடன் ஸ்ரீஸ்ரீக்கு சிறிய பருவத்திலிருந்தே தொடர்பு அமைந்தது. ஸ்ரீஸ்ரீயின் தொடக்ககாலக் கவிதைகளை அப்பல சுவாமிகள் வெளியிட்டார்; 'கவிதா சமிதி' என்னும் இலக்கிய அமைப்பில் ஸ்ரீஸ்ரீயை மிகச்சிறிய வயதிலேயே சேர்த்துக் கொண்டார். உரைநடை நூல்கள் படிப்பது, மர்ம நாவல்கள் படிப்பது, 'ஜகன் மித்ர சமாஜம்' என்ற உள்ளூர் நாடகக் கம்பெனியில் சின்னச் சின்னப் பாத்திரங்கள் ஏற்று நடிப்பது, இவ்வாறாக ஸ்ரீஸ்ரீயின் பள்ளிப் பருவ நாட்கள் கழிந்தன.

விசாகை திருமதி. ஏ.வி.என். கல்லூரியின் முன்னாள் துணை முதல்வர் வட்டிகேசவராவ் ஸ்ரீஸ்ரீக்கு யாப்பிலக்கணம் கற்றுக் கொடுத்தார். திவாரம் ஜகன்னாதராவுடன் கேரம், கால்பந்து ஆகிய விளையாட்டுக்கள் ஸ்ரீஸ்ரீ ஆடுவதும் உண்டு. விசாகை காலூரி நரசிங்கராவ், விஜயநகரம் ஸ்ரீரங்கம் நாராணயபாபு ஆகியோருடன் இலக்கிய விவாதம் நடத்துவதும் உண்டு. பூரிபந்தா தன்னுடைய 'ஸ்வசக்தி' இதழில் இளைஞர் ஸ்ரீஸ்ரீயின் 'திவ்யலோச்சனமுலு' கவிதையை வெளியிட்டபோது, ஸ்ரீஸ்ரீ 'ஒரு மலரும் கவிஞராக' உள்ளூர் வட்டாரத்திற்குள் அங்கீகாரம் பெற்றுவிட்டார். எட்டு வயதுப் பருவத்தின்போதே, கவிதை எழுதத் தொடங்கிவிட்ட ஸ்ரீஸ்ரீ, உயர்நிலைப் படிப்பை முடிப்பதற்கு முன்னதாகவே, தான் படித்து முடித்த நூல்களின் மாதிரியில், 'இமிடேட்' செய்து புத்தகங்கள் எழுதத் தொடங்கிவிட்டார். 'காலூறே' நூலைப் படித்துவிட்டு, 'கோகுலே' என்ற துப்பறியும் நாவல் ஒன்றை ஸ்ரீஸ்ரீ எழுதினார். அவருடைய 'வீரசிம்ம விஜயசிம்ஹலு' நாவல் தேசபக்தியை முக்கியமான கருவாக வைத்து எழுதப்பட்டதாகும். 'சாவித்திரி சத்தியவந்தம்' என்ற கவிதை நாடகம் ஒன்றையும் ஸ்ரீஸ்ரீ எழுதினார். அந்த நாடகத்தில் தன்னை வெளிப்படுத்திக் கொள்ளுவதற்கு, பழக்கத்தில் இல்லாத ஒரு யாப்பு வகையை ஸ்ரீஸ்ரீ பயன்படுத்தினார். பள்ளி நாட்களிலேயே 'பரிணாய ரகஸ்யம்' என்ற குறுநாவலையும் ஸ்ரீஸ்ரீ எழுதினார். இந்தக் குறுநாவலைத் தவிர பிறபடைப்புக்கள் எல்லாம் நீண்ட நாட்களுக்கு முன்பே கிடைக்காமல் போய்விட்டன. இந்தக் குறுநாவலும் கூட அண்மைக் காலத்தில்தான் கிடைத்தது. அவர் காலத்திய கவிதை இலக்கியத்தை ஸ்ரீஸ்ரீ வாசித்துக் கொண்டே தான், பிற இலக்கியப் பயிற்சியிலும் தன்னை ஈடுபடுத்திக்கொண்டு வந்தார். விஸ்வநாத சத்திய நாராயணாவின், 'மேக நினாதம்' தேவுலபள்ளி கிருஷ்ண சாஸ்திரியின் 'மோகினி காந்தர்வ கானம்' ஆகிய படைப்புக்கள் ஸ்ரீஸ்ரீயை மிகவும் ஆழமாகவே பாதித்தன. கவிதையாக்கத்தில் ஸ்ரீஸ்ரீ விஸ்வநாதாவை அப்படியே 'இமிடேட்' செய்ய முயன்றார். அதே நேரத்தில், நவீனத்துவ சிந்தனையும்,

செயல்பாடும் உடைய விசாகை செட்டிலெட்சுமி நரசிம்மம் (செட்டி மாஸ்டரு) அவர்களுடன் மிக நெருங்கிய தொடர்பும் வைத்திருந்தார். தமது படைப்புக்களால், 'நவீனத் தெலுங்கு இலக்கியத்தின் தந்தை' என்று போற்றப்படும் குரஜாடா வேங்கட்ட அப்பாராவின் (1861-1915) ஆளுமைக்குள் ஸ்ரீஸ்ரீ வருவதற்கு முன்னதாகவே, பசவராஜு அப்பாராவ் (1854-1933), கவிகொண்ட வேங்கட்டராவ் (1892-1965) சிந்தாதீட்ஷிதலு (1891-1960) போன்றவர்களுடைய கவிதைப் படைப்புகளின் மீது ஸ்ரீஸ்ரீ தனது பார்வையை - சுவையை விரிவு செய்து கொண்டிருந்தார். குரஜாடா அவர்களின் பாதிப்பு ஆளுகைக்குள் தான் வருவதற்கு முன்னதாகவே, இந்தக் கவிஞர்களைத் தன்னுடைய ஆரம்ப காலக் குருமார்கள் என்று ஸ்ரீஸ்ரீ அழைத்துக் கொண்டார். எனினும், பிந்தைய நாட்களில், ஸ்ரீஸ்ரீ வேறு இரண்டுபேர்களைத் தனது ''உண்மையான குருமார்கள்'' என்று ஒப்புக்கொண்டு சுட்டிக் காட்டினார். அவர்களுள் முதலாமவர், ஸ்ரீஸ்ரீயின் தந்தையார் ஆவார்; அடுத்தவர் அபூரி ராமகிருஷ்ணா (1896-1979) ஆவார். அபூரி ராமகிருஷ்ணா பல்துறை அறிஞர்; புகழ்பெற்ற கவிஞர்; அரசியல் விற்பன்னர்; ஆந்திரப் பல்கலைக்கழகத்தில் நூலகராகப் பணியாற்றியவர். இத்தகைய சிறப்புக்குரிய அபூரி மூலமாகத்தான், ஸ்ரீஸ்ரீ, புகழும் விருதுகளும் பெற்ற கவிஞரான செல்லப்பில்லா வேங்கட சாஸ்திரி (1870-1950) அவர்களுடைய அபிமானியாக உருவாக்கம் பெற்றார்.

1920இன்போது, ஆந்திர ரத்னா துக்கிராலா கோபால கிருஷ்ணய்யா (1898-1928)வின் சீடராக இருந்தவர் அபூரி. இவர், 1936இல் லக்னோவில் நடைபெற்ற முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் முதலாவது மாநாட்டில் கலந்து கொண்டார். ஆந்திரப் பல்கலைக் கழகத்தின் நிறுவுநரும் துணைவேந்தருமான சர். சி.ஆர். ரெட்டி அவர்களுக்கும் அபூரி நெருங்கிய நண்பராகவும் இருந்தார். ரெட்டி அவர்கள் வற்புறுத்திய காரணத்தால் அபூரி பல்கலைக்கழக ஆசிரியராக முதலில் சேர்ந்தார்; பின்னர் அங்கே நூலகராகச் சேர்ந்தார். (நூலகராக அவர் அங்கே முப்பதாண்டுகளுக்கும் மேலே பணியாற்றினார்) பின்னர், மைசூர் மகாராஜா கல்லூரியிலும், நவாத் விபாவிலும் அபூரி வடமொழி கற்றுக்கொண்டார்; சில ஆண்டுகள் சாந்தி நிகேதனில் இருந்தார். இந்தியப் பொதுவுடைமைக் கட்சியின் கிளையை விசாகையில் உருவாக்குவதற்கு அபூரி முயற்சிகள் எடுத்துக் கொண்டார். அடுத்து, எம்.என்.ராய் அவர்களுடைய நெருக்கமான தொண்டர் ஆனார். ஆந்திரப் பிரதேசத்தின் கடற்கரைப் பகுதிகளில் 'தீவிரமான மனிதாபிமானம்' என்னும் கொள்கையைப் பிரச்சாரம் செய்தார்; தெலுங்கு தன்னுணர்ச்சிக் கவிதையில் முதல் இடம் பெறுபவராகத் திகழ்ந்தார்; தெலுங்கு நாடகத் துறையிலும்

அதன் முன்னேற்றத்திற்குப் பங்களிப்புச் செய்து தனக்கென ஓர் இடத்தை உருவாக்கிக் கொண்டார்; மேலும் அவர் ஒரு நடிகராகவும் இருந்தார்; லண்டன் முற்போக்கு எழுத்தாளர்கள் வெளியிட்டிருந்த ''கொள்கை அறிக்கை''யை அங்கிருந்து கடத்திக் கொண்டு வந்த வரும் அவரே! அவ்வாறு 'கடத்திக்' கொண்டு வந்த அறிக்கையை அபூரி ஸ்ரீஸ்ரீயிடம் சேர்த்தார்! அந்த அறிக்கையை ஈடு, இணை சொல்ல முடியாத சிறந்த கவிதையாகத் தெலுங்கில் ஸ்ரீஸ்ரீ படைத்தளித்தார். அபூரி சுவைமிகுந்த சம்பாஷணைக்காரர்; மேலும் அவர் ஒரு நடமாடும் கலைக்களஞ்சியமாகவே மதிக்கப்பட்டார். அபூரி அவர்களுக்கு ஸ்ரீஸ்ரீ மீது மயக்கமும் ஆழ்ந்த அன்பும் இருந்தது. 1956ஆம் ஆண்டுக் காலக் கட்டத்தின்போது, ஸ்ரீஸ்ரீயின் 'கவிதா, ஓ கவிதா' என்னும் படைப்பை அபூரி பரிகாசம் செய்து, ஸ்ரீஸ்ரீயின் அரசியல் நம்பிக்கைகளை மறைமுகமாக விமர்சனம் செய்திருந்தார். இருந்த போதிலும், ஸ்ரீஸ்ரீ அறுபதாம் வயது அடைந்த போது, அவருக்கு, அபூரி அவரைப் புகழ்ந்து கவிதையிலேயே வாழ்த்து அனுப்பினார். ''அபூரிதான் எனக்குக் 'குரு'; இலக்கியத்தை நோக்கியும் சிறப்பாக உலக இலக்கியங்களின் போக்கு நோக்கியும், எனது பார்வையைத் திறந்து வைத்தவர் அவரே; எனது தொலை நோக்குப் பார்வையை விரிவாக்கியவரும் அவரே'' என்றுரைத்து ஸ்ரீஸ்ரீ தம் வாழ்நாள் முழுதும் அபூரி அவர்களுக்கு நன்றிக் கடன்பட்ட வராகவே இருந்தார். அபூரி அவர்களைத் தனது ''துரோணாச்சாரியார்'' என்று குறிப்பிடும் ஸ்ரீஸ்ரீ, அடிக்கடி 'அவரே என்னுடைய வழிகாட்டி' என்றும் சொல்வார்.

சிறுவயதுப் பருவத்திலிருந்தே ஸ்ரீஸ்ரீ பெரிய வாசகராக ஆகிவிட்டார். பணியால ரெங்கநாத ராவ் (1919-87), மல்ல வரப்பு விஸ்வேஸ்வரராவ் (1906-86) ஆகிய ஸ்ரீஸ்ரீயின் குழந்தைப் பருவ நண்பர்கள் அவருடைய பெரும் வாசிப்புப் பழக்கத்தை உறுதிப் படுத்துகிறார்கள். மாப்பசான் (1850-93) தொடக்க காலத்திலும், செக்காவ் (1860-1904) அதன் பிறகும் குழந்தைப் பருவத்தில், தான் படித்த இரண்டு எழுத்தாளர்கள் என்றும், அவர்கள் தன்னை ஊக்கப் படுத்தியவர்கள் என்றும் ஸ்ரீஸ்ரீ குறிப்பிட்டுச் சொல்கிறார். அடுத்து, ஜேம்ஸ் ஜாய்ஸ் (1882-1941) எழுதிய 'யூலிஸிஸ்', மயாகாவ்ஸ்கி (1899-1930) எழுதிய லெனின், குரஜாடாவின் அனைத்துப் படைப்புக்களும் ஆகிய எல்லாம் சேர்ந்து ஸ்ரீஸ்ரீயின் இளமைப் பருவத்தில் ஒரு 'நிலையான பாதிப்பை' ஏற்படுத்தியிருந்தன. நஸ்ருல் இஸ்லாம் (1899-1976) படைத்த 'வித்ரோகிகவி' என்றழைக்கப்பட்ட படைப்புக்களை ஸ்ரீஸ்ரீக்கு பூரிபந்தா அறிமுகப்படுத்திவைத்தார். ஹரீந்திரநாத் சட்டோபாத்யாயாவின் (1898-1990) சில கவிதை களாலும் ஸ்ரீஸ்ரீ கவரப்பட்டிருந்தார். அவ்வாறு கவர்ந்த கவிதைகளை

ஸ்ரீஸ்ரீ உடனுக்குடன் மொழியாக்கமும் செய்தளித்தார். தான் படிக்க நேர்ந்தவற்றுள், தன்னை வெகுவாகப் பாதித்த இலக்கியப் படைப்புக் களையெல்லாம் மொழிபெயர்த்துத்தரும் ''பழக்கம்'' ஸ்ரீஸ்ரீயிடம் இருந்தது. அவ்வாறு அவரைப் பாதித்த இலக்கியங்கள் அவரது வாழ்நாள் முழுதும் அவரைவிட்டு அகலாதிருந்தன. பல்கலைக் கழகத்தின் நூலகத்தையே அபூரி ஸ்ரீஸ்ரீக்காகத் திறந்து விட்டிருந்தார். அந்தக் காலகட்டத்தில் ஸ்ரீஸ்ரீ பழைய மொழி நடையிலேயே எழுதி வந்தார்; கவிதைகளும் கூட மரபு சார்ந்த யாப்பில்தான் அமைந்தி ருந்தன. விஸ்வநாதா, தேவுலபல்லி ஆகியோருடைய பாதிப்பி லிருந்து தன்னை விடுவித்துக்கொண்டு, விலகி நின்று எழுதுவதற்கும், தன்னுடைய 'சொந்தக்குரலை' தான் கண்டு கொள்வதற்கும் பத்து ஆண்டுகள் ஆகிவிட்டன என்று அவரே ஒப்புக்கொண்டார். பிறருடைய பாதிப்புக்களிலிருந்து மீட்சி பெற்று, அவருக்கென்று ஒரு தனி வழியை அவர் அமைத்துக் கொண்ட செயல்தான் நவீனத் தெலுங்கு இலக்கிய வரலாற்றில் அவருக்கு நிலையான ஓரிடத்தைப் பெற்றுத் தந்தது. அவரது முதலாவது நல்ல கவிதைகளாகிய 'பிரபவ' (1927), 'சுப்தாஸ்திகலு' (1929) ஆகிய இரண்டும், விஸ்வநாதா, தேவுலபல்லி இருவரின் பாதிப்பின் காரணமாக, ஆடம்பரமான மொழி நடையில்தான் அமைந்திருந்தன. இருபதிலிருந்து முப்பது பக்கங்கள் கொண்ட ''தாதா புரட்சியும் சர்ரியலிச சோதனையும்'' என்னும் தலைப்பிலான சிறு வெளியீடு ஒன்றை அபூரி, ஸ்ரீஸ்ரீக்குக் கொடுத்தார். அந்த வெளியீடு ஸ்ரீஸ்ரீயை மிகவும் கவர்ந்தது; ஒருவருடைய சொந்த உணர்வுகளை வெளிப்படுத்துவதற்குப் பல்வேறு வகையான வழிகள் உள்ளன என்பதையும் அந்த வெளியீடு ஸ்ரீஸ்ரீக்கு உணர்த்திக் காட்டியது. சிஷ்ட்லா உமா மகேசுவரராவ்(1909-1953) அந்த நேரத்தில் 'வசன கவிதை'யைப் பரிசோதனை முயற்சியாக வெளியிட்டுக் கொண்டிருந்தார். அவரது இந்தப் புதிய முயற்சி ஸ்ரீஸ்ரீயின் கவனத்திலும் பட்டது; 'நாமும் முயற்சி செய்து பார்க்கலாமே' என்ற தூண்டுதலை ஸ்ரீஸ்ரீக்குத் தந்தது. குரஜாடாவின் பாதிப்பும் புதிய புதிய யாப்பு வடிவங்களில் பரிசோதனை முயற்சி செய்து பார்ப்பதற்கு ஸ்ரீஸ்ரீக்கு ஊக்கம் தந்தது. 'இண்டர்மீடியட்' வகுப்பை ஸ்ரீஸ்ரீ முடித்திருந்த காலத்தில் ஸ்ரீஸ்ரீ அபூரியின் ஆளுகைக்குள் வந்துவிட்டார்; வந்து, ''தீவிரமான மனிதாபிமானம்'' என்ற நிலைபாட்டை அடையவில்லை என்றாலும் ''தீவிரமான போக்கு'' என்ற நிலைபாட்டை ஸ்ரீஸ்ரீ அடைந்துவிட்டார்.

1928ஆம் ஆண்டில் ஸ்ரீஸ்ரீ பட்டப்படிப்புக்காகச் சென்னை வந்து சேர்ந்தார். அப்போது அவருக்குச் சென்னையில் மிகச்சிறந்த அறிஞர்களுடைய, கவிஞர்களுடைய தொடர்பு கிடைத்தது.

இலக்கியப் பத்திரிகையான 'பாரதி' இதழின் அலுவலகம் இருந்த அதேவீதியில்தான் ஸ்ரீஸ்ரீயும் தங்கியிருந்தார். அப்போது, அறிஞரும் கவிஞருமான வேட்டூரி பிரபாகர சாஸ்திரி (1888-1963), தெலுங்கு மொழியின் வரலாற்று ஆசிரியர்களுள் மூத்தவரான மல்லம்பள்ளி சோமசேகர சர்மா (1851-1963), நாட்டுப்புறக் கவிஞர் நந்தூரி சுப்பாராவ் (1895-1958) ஆகிய மிக முக்கியமான, மிகவும் அமைதியாய் சலனமின்றிக் கிடந்த தெலுங்கு மொழிப்பரப்பில் எளிய மக்கள் மொழியில் - நடையில்- எழுதி புத்தம் புதிய அலைகளை உருவாக்கியவர்களுமான, படைப்பாளர்களோடு சந்தித்துக் கொள்ளும் வாய்ப்பு ஸ்ரீஸ்ரீக்குக் கிட்டியது. இங்கேதான், கொம்பள்ளி ஜனார்த்தனராவ் (1907-1938) அவர்களை ஸ்ரீஸ்ரீ முதன் முதலில் சந்தித்தார். இவர்தான் ஸ்ரீஸ்ரீயின் 'பிரபவ' படைப்புக்கு மிகக் கடுமையான விமர்சனம் எழுதியவர்; அவரோடும் ஸ்ரீஸ்ரீக்கு மிகவும் நெருக்கம் ஏற்பட்டது. பின் நாளில், 'மகாப்பிரஸ்தானம்' என்றும் தனது சிறப்புமிக்க படைப்பை அவருக்குச் 'சமர்ப்பணம்' செய்து வைக்கும் அளவுக்கு நெருக்கம் ஏற்பட்டது. தன்னுணர்ச்சிக் கவிஞரான மல்லவரப்பு விஸ்வேஸ்வரராவ் (1906-1986), தெலுங்கு அங்கத இலக்கியத்தில் இணையற்றவரும், "ஜருக்" "மிணிசாஸ்திரி" "ருக்கு" போன்ற இன்னும பல சுருக்கப் புனைபெயர்கள் கொண்டவருமான ஜலசூத்ரம் ருக்மிணி நாதசாஸ்திரி (1914-1968), "ஜ்வாலா" இலக்கிய இதழின் ஆசிரியர் சாமினேனி முத்துக் கிருஷ்ணா (1882-1968) ஆகியோர் ஸ்ரீஸ்ரீக்கு நண்பர்களாயினர். 'பாரதி' பத்திரிகையின் ஆசிரியரும், முன்பு ஒரு முறை 'சுப்தாஸ்திகலு' என்ற ஸ்ரீஸ்ரீ எழுதிய கவிதையைப் பிரசுரிக்க மறுத்து, மறுதபாலிலேயே திருப்பி அனுப்பியவருமான கன்னவரபு சுப்பராமையா (1890-1963)வும் ஸ்ரீக்கு நண்பராகவும் அபிமானியாகவும் ஆனார். இந்த நண்பர்கள் தங்களுக்கிடையில், தெலுங்கு இலக்கிய உலகில் குறுக்கும் நெடுக்குமாய் எழுந்த சிந்தனை அலைகளைப் பற்றி விவாதித்தார்கள். அந்த இலக்கிய விவாதங்கள் ஸ்ரீஸ்ரீயின் தொலை நோக்குப் பார்வையை மேம்படுத்தின; அவருடைய விமர்சனப் பார்வையைக் கூர்மைப்படுத்தின.

இரண்டு ஆண்டுகள், சென்னை கிறித்தவக் கல்லூரியில், இளங் கலைப்பட்ட வகுப்பு மாணவராக இருந்த பருவத்திலேயே ஸ்ரீஸ்ரீ, சென்னை நகரத்து அடையாறு நூலகத்தையும் கன்னிமாரா பொது நூலகத்தையும் "அப்படியே கொள்ளை கொண்டுவிட்டார்" என்று சொல்லத்தக்க அளவில் பயன்படுத்திக்கொண்டார். எட்கர் ஆலன்போ (1809-1849), மாப்பசான் (1850-1893), சார்லஸ் பாடலேர் (1821-1867) ஆகியோருடைய கவிதைகளை மொழி பெயர்ப்பின் வழியே படித்து அவற்றால் ஈர்க்கப்பட்டார்.

அமெரிக்காவின் சூடுமிகுந்த தலைமுறையினரின் கவிதைகளையும், இங்கிலாந்து நாட்டின் கோபம்மிகுந்த இளையவர்களின் கவிதைகளையும் ஸ்ரீஸ்ரீ படித்தார். மகாத்மா காந்தியடிகளை மிகவும் பாதித்த ஆப்பிரிக்க நாட்டு இளங்கவிஞர்களின் படைப்புக்களையும், ஜீன் பால் சார்ட்ரே (1905-1980)யின் படைப்புக்களையும் ஸ்ரீஸ்ரீ தேடி ஆராய்ந்தார். பிரெஞ்சுக் கவிதைகள் பலவற்றை மொழியாக்கம் வழியே தன்னகத்தே மேற்கோளாகக் கொண்டிருந்த ''சீரழிவு'' என்னும் படைப்பை அளித்த ஜெர்மானிய அறிஞராலும் ஸ்ரீஸ்ரீ கவரப்பட்டார். சர்.ஆர்தர் கானன்டோயில் படைத்த 'ஷெர்லாக் ஹோம்ஸ்' படைப்பை ஸ்ரீஸ்ரீ நுணுக்கமாகப் பயின்றார். பி.ஜி. உட்ஹவுஸ் படைத்த புதினங்களாலும் ஸ்ரீஸ்ரீ ஈர்க்கப்பட்டார்; அனடோல்ஃபிரான்ஸ் (1844-1924) சிறுகதைகள், புதினங்களாலும் கவரப்பட்டார்; ஃபிரான்ஸ் தனது 75ஆம் வயதிலும் செங்கொடியைத் தோள்களில் ஏந்தும் விடாப்பிடித்தன்மை உடையவர்; இவரிடம் இருந்த இந்த விடாப்பிடித்தன்மையாலும் ஸ்ரீஸ்ரீ கவரப்பட்டார். அமெரிக்கா எழுத்தாளர் சின்க்லேர் லீவிஸ் (1885-1951) எழுதிய புதினங்களையும், அமெரிக்க நாட்டு முதலாளித்துவத்திற்கு லீவிஸ் காட்டிய எதிர்ப்பையும் ஸ்ரீஸ்ரீ பாராட்டினார். நேஷனல் ஹெரால்டு பத்திரிகையின் ஆசிரியர் எம்.வி. சலபதிராவ் (1909-1983) ''திரிவேணி'' இதழில் எழுதிய ஒரு கட்டுரை மூலம், பிரிட்டிஷ் பெண் கவிஞரும் புதுமை ஓவியருமான எடித் செட்வெல் (1887-1964) என்பவரைப் பற்றி ஸ்ரீஸ்ரீ அறிந்து கொண்டு, தெலுங்கு இலக்கியத்தில் தாமும் அவரைப் போலவே ''இமிடேட்'' செய்து படைக்க வேண்டும் என்று ஆசைப்பட்டார்; அவ்வாறே செய்தும் காட்டினார். ''இளைஞர்களுக்கு ஒரு விண்ணப்பம்'' என்று குரோபோஃப்கின் படைப்பைப் படித்த ஸ்ரீஸ்ரீ அவருடைய பாதிப்பினால், தெலுங்கில் ஒரு கவிதையும் படைத்தார். ஏ.சி. ஸ்வின்பர்ன், அல்ஜர்னன் சார்லஸ் ஆகியோருடைய கவிதைகளால் கவரப்பட்டிருந்த ஸ்ரீஸ்ரீ அவற்றைத் தமது தெலுங்குக் கவிதைகளில் 'தழுவி'க் கொள்ளவும் செய்தார். கவிதையை வாசிக்கும்போது, கவிதையின் 'ஓசை'க்காக ஒருமுறையும், அதன் கருத்துக்காக மறுமுறையும் வாசிக்கும் ஒரு ''பலவீனமான வாசிப்புப் பழக்கம்'' இரவீந்திரநாத் தாகூருக்கு உண்டு. இந்த வாசிப்புப் பழக்கம் ஸ்ரீஸ்ரீக்கும் வந்துவிட்டது. இந்தப் பழக்கத்தின் காரணமாக, அவரது படைப்பின் பல இடங்களில் சொல்லாட்சித் திறமானது மிகவும் பொருட்செறிவோடு அமையலாயிற்று என்று ஸ்ரீஸ்ரீ பின்னாளில் ஒப்புக் கொண்டார். இடையில் சிறிது காலம் ஜேம்ஸ்ஜாய்ஸ் (1882-1941), டைலன் தாமஸ் (1914-1953), ஆகியோரின் பாதிப்புக்கும் ஸ்ரீஸ்ரீ ஆளாகியிருந்தார். அதன் பிறகு பி. வில்லியன் பாதிப்பும் இருந்தது. ஜான் எட்வர்டு மாஸ்

பீல்டின் (1878-1967) 'ஏ கான்ஸ்கிரெஷன்' என்னும் படைப்பும், சால்ட்வாட்டரின் கதைப்பாடல்களில் (1902இல் வெளியானவை) காணப்படும் கப்பலோட்டிகளின் பேச்சு மொழியும் தனக்குள் பாதிப்பை ஏற்படுத்தின என்று ஸ்ரீஸ்ரீ ஒப்புக் கொண்டிருக்கிறார். வில்லியம் சரோயன், ஃபிரான்ஸ்காப்கா, சல்வாதர்டட்ஸ், மார்ட்டி நேட்டி, அந்தோணி பிரிடோன், ஆன்டன் செக்காவ், ரஸ்ஸல் பேகர், கிரேக்கக் கவிஞர் ஒடினுஸ் எலிலிஸ், ரஷ்யக் கவிஞர் விளதிமிர் மயகாவ்ஸ்கி (1899-1930) ஆகியோரின் படைப்புக்களையெல்லாம் ஸ்ரீஸ்ரீ மொழியாக்கம் செய்தார். எந்தத் திசையிலிருந்து வந்ததாக இருந்தாலும், அந்தக் கவிதைப் படைப்பின்மீது ஸ்ரீஸ்ரீ 'தீராத பசி'யே கொண்டிருந்தார். எதுவெல்லாம் அவரை மிகவும் கவர்ந்து பாதித்ததோ அதையெல்லாம் ஸ்ரீஸ்ரீ 'தனக்குக் கிடைத்த ஒரு பயிற்சி' எனக்கருதி மொழியாக்கம் செய்தார்; அவ்வாறு மொழியாக்கம் செய்யும்போது 'தனக்குரிய வெளிப்பாட்டு நடை'யையும் அவர் கண்டறிந்து கொண்டார்.

சென்னையில் பட்டப்படிப்பை முடித்துவிட்டு விசாகைக்குத் திரும்பிய பிறகு, ஸ்ரீஸ்ரீ மறுபடியும் அபூரியின் ஆழ்ந்த ஆளுகையின் கீழ் வந்தார். ஸ்ரீஸ்ரீயின் வழிகாட்டியாகிய அபூரி, அகில உலக முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் ஒரு கிளை அமைப்பாக, உருவாக்கியிருந்த 'வர்த்தமான லேஹக சங்க'த்தில் ஸ்ரீஸ்ரீ சேர்ந்து கொண்டார். வெர்லெய்ன் (1844 -1896), ரிம்பாண்டு, மலார்மே (1842-1898) ஆகியோருடைய குறீயீட்டு இயலுடன் ஸ்ரீஸ்ரீ தன்னைத் தொடர்பு படுத்திக் கொண்டார். இசையும் கவிதையும் ஊடும் பாவுமாகக் கலந்து நிற்கும் பாடலேய்ரின் (1821-1867) கடித எழுத்துக்களோடும் தன்னைத் தொடர்பு படுத்திக் கொண்டார். ஃப்ராய்டினுடைய 'சர்ரியலிஸம்', ட்ரிஸ்டான் சாரா, ஆன்ட்ரே பிரிடோன் ஆகியோருடைய தாதாயிஸம், லூயிஸ் ஆரகோனின் ''இன்ஃபான்டிலிஸம்'' மற்றும் 'தானியங்கி எழுத்துக்கலை' ஆகியவற்றோடும் ஸ்ரீஸ்ரீ தொடர்பு வைத்துக கொண்டிருந்தார். ''தூய்மையான கவிதை'' ''தூய்மையான கலை'' - என்று சொல்லப் படுபவையோடு பல சோதனை முயற்சிகளையும் ஸ்ரீஸ்ரீ செய்தார். உரைநடையில் விமர்சனக் கட்டுரைகள் எழுதுவதிலும் ஈடுபட்டார். அவ்வாறு ஸ்ரீஸ்ரீ எழுதிய முதல் விமர்சனக் கட்டுரை குரஜாடாவின் 'கன்யாசுல்கம்' படைப்பில் வரும் பெண்பாத்திரங்கள் பற்றியது ஆகும். இது 1932ஆம் ஆண்டில் 'சமதர்சனி'யில் வெளிவந்தது.

1938 மார்ச்சு மாதத்தில் பெர்ஹாம்பூரில் நிகழ்ந்த அகில ஆந்திர கவிபண்டித சபாவிற்கு ஸ்ரீஸ்ரீ போயிருந்தார். அப்போது, புகழ்பெற்ற சிறுகதையாசிரியரும் நாவலாசிரியருமான சிந்த தீஷிதிலு

அவர்களுடன் ஸ்ரீஸ்ரீக்குத் தொடர்பு கிடைத்தது. அந்த நேரத்தில்தான் ஸ்ரீஸ்ரீயின் சில கவிதைகள் புகழ்பெற்ற அறிஞர் சிலருடைய கவனத்தை ஈர்த்திருந்தன. 1934ஆம் ஆண்டில் மண்டபக பார்வதீஸ்வர சாஸ்திரிகள் (1833-1897) ஸ்ரீஸ்ரீயை மிகவும் பாராட்டியிருந்தார். அறிஞர் உலகம் என்னும் திசையிலிருந்து ஸ்ரீஸ்ரீ பெற்ற முதலாவது அங்கீகாரம் இந்தப் பாராட்டுத்தான் எனலாம். மண்டபக பார்வதீஸ்வர சாஸ்திரிகள் ஸ்ரீஸ்ரீயின் பல கவிதைகளை - இவை பின்னாளில் 'மகா பிரஸ்தானம்' நூலில் இடம் பெற்றன - பொது இடங்களிலும், தனி இடங்களிலும் ஒப்புவித்து உடனுக்குடன் பாராட்டும் பெறலானார்; 1934, ஏப்ரல் 12ஆம் நாளில் காக்கிநாடாவில் நிகழ்ந்த இளைஞர் மாநாடு ஒன்றில் ஸ்ரீஸ்ரீயுடைய "மரோ பிரபஞ்சம்" கவிதையை எடுத்துச் சொல்லி பெருத்த ஆராவாரத்தோடு கூடிய பாராட்டையும் பெற்றார்; அதுமட்டுமின்றி, இந்தக் கவிதையை, சிறந்த நாவலாசிரியரும், கலைஞரும், இசைவாணருமான அடவி பாப்பி ராஜு (1895-1952) முன்னிலையில், விசாகை பயணிகள் விடுதியில் ஒப்புவித்தார். அந்தக் கவிதை முத்துக் கிருஷ்ணா (1899-1973) நடத்திய 'ஜ்வாலா', 1935, ஜனவரி, 16 இதழில் பிரசுரமும் ஆகியது. ஸ்ரீஸ்ரீயின் 'சேது பாதா' கதையை ஜலசூத்ரம் ருக்மிணிநாத சாஸ்திரி சொல்லக் கேட்டு, குடிபாடி வேங்கடாசலம் (1894-1979) மிகவும் மனம் நெகிழ்ந்து கண்ணீரும் உகுத்துவிட்டார். தேவுலபள்ளி கிருஷ்ணசாமி சாஸ்திரிமீது ஸ்ரீஸ்ரீக்கு மிகுந்த அபிமானம் உண்டு; அவரைப் போலவே தானும் செய்ய வேண்டும் என ஸ்ரீஸ்ரீ 'இமிடேட்' செய்ததும் உண்டு. அப்படிப் பட்ட கிருஷ்ணசாமி சாஸ்திரியும் ஸ்ரீஸ்ரீயின் கவிதைகளைப் பொதுக் கூட்டங்களில் மனப்பாடமாகச் சொல்லத் தொடங்கினார். ஸ்ரீஸ்ரீயுடைய 'சுப்தாஸ்திகலு' 'மகாப்பிரஸ்தானம்' போன்ற கவிதைகளை 1934 ஏப்ரல் காலக்கட்டத்தில் பிரசுரிக்க மறுத்து, உடனுக்குடன் திருப்பி அனுப்பி வைத்த 'பாரதி' இதழ், அவர் பேச்சு வழக்குத் தெலுங்கில் எழுதிய வசன கவிதையை பிரசுரத்துக்கு ஏற்று ஒருமாதம் முன்பு வெளியிட்டிருந்தது. யார்யாரெல்லாம் முன்பு ஸ்ரீஸ்ரீயைப் பாதித்தார்களோ, அவர்களையெல்லாம் ஸ்ரீஸ்ரீ பாதிக்கத் தொடங்கினார். தேவுல பள்ளியின் சில நூல்களுக்கு ஸ்ரீஸ்ரீ முன்னுரை களும் கூட வழங்கினார். காக்கிநாடா, மசூலிப்பட்டினம், விஜயவாடா ஆகிய இடங்களில் நடந்த நவ்ய சாகித்திய பரிஷத் மாநாடுகளில் இளங்கவிஞர்களுக்குள் முதலிடம் பெற்றவராக ஸ்ரீஸ்ரீ திகழ்ந்தார். இந்த நிகழ்ச்சிகள் அனைத்தும் ஒட்டுமொத்தமாய் ஸ்ரீஸ்ரீக்குள் மிகுந்த தன்னம்பிக்கையைத் தோற்றுவித்திருந்தன. பூரிபந்தா நினைவூட்டு கிறபடி, ஸ்ரீஸ்ரீ, "இப்போதிருந்து நான்தான் எதிர்காலத் தெலுங்குக் கவிதையை வழிநடத்தப்போகிறேன், எதிர்காலத் தெலுங்கு கவிதைக்கு ஆணையிடவும் போகிறேன்" என்று கர்வத்துடன்

அறிவிக்கவும் செய்தார். 1940இல் மிதவாதப் பத்திரிகையான ''கிருஷ்ண பத்ரிகா'' இதழும் கூட ஸ்ரீஸ்ரீயை அந்தக் காலக்கட்டத்தினுடைய பெரும் கவிஞர் என்று அங்கீகாரம் செய்தது. 1940இன் போது புகழ்பெற்ற இலக்கியப் பத்திரிகையான ''பிரதிபா'' வின் ஆசிரியர் குழுவில் ஓர் உறுப்பினராக ஸ்ரீஸ்ரீ சேர்ந்தார். இந்த நேரத்தில் தான், ஸ்ரீநிவாசராவ் என்ற பெயருக்குப் பதிலாக இலக்கிய உலகத்தில் ''ஸ்ரீஸ்ரீ'' என்ற பெயர் அவருக்கு வழங்கலாயிற்று.

1938-1944ஆம் ஆண்டுகளுக்கு இடையில், சென்னையிலும் வேறு பிற இடங்களிலும் வேறுவேறு வேலைகளில ஸ்ரீஸ்ரீ அமர்ந்தார். அந்தக் காலக கட்டத்தில் ''கவிஞர்'' என்று அவர் அடைந்திருந்த அங்கீகாரமோ, அல்லது அவா அனுபவித்த வறுமை நிலைமையோ, மிகவிரிந்த அளவில் படிப்பதிலிருந்து ஸ்ரீஸ்ரீயைத் தடுத்து விடவில்லை; அவர் வழக்கம்போலவே நிறையப் படித்தார். 1944இல் விசாகைக்குத் திரும்பியவுடன், தெலுங்கு நாடக வளர்ச்சிக்காக, அபூரி, தன்னாட்சி அமைப்பாக உருவாககியிருந்த 'நடலி' என்னும் நாடக அமைப்பில் கதை வசனம் எழுதும் எழுத்தாளராக ஸ்ரீஸ்ரீ சேர்ந்தார். ஏறத்தாழ ஓராண்டுக காலம் ஸ்ரீஸ்ரீ நாடகக் குழுவினரோடு ஊா ஊராகச் சுற்றித் திரிநதார்; சில நேரங்களில் சின்னப் பாத்திரங்களையும் ஏற்று நடித்தார். ஒன்றுவிட்ட சகோதரர் உறவுக்காரரான நாராயணபாபு, அபூரியின் மகனாகிய வரத ராஜேஸ்வராவ் ஆகிய இருவருடனும் ஸ்ரீஸ்ரீ சேர்ந்து, மூவருமாக, செக்காவின், 'செர்ரிப் பழத்தோட்டம்' நாடகத்தை மொழிபெயர்த்து அல்லது தழுவி எழுதித் தரலாமே என்று ஸ்ரீஸ்ரீ கேட்டுக் கொள்ளப் பட்டார். (ஸ்ரீஸ்ரீ 'சம்பங்கித் தோட்டம்' என்ற பெயரில் மொழி பெயர்த்தார்). மூவரும் சேர்ந்து செய்த கூட்டு முயற்சி, முரண்பாடு களை உண்டாக்கிவிட்டது. நாராயணபாபுவின் மொழிபெயர்ப்பை அபூரி நிராகரித்துவிட்டார். நாராயணபாபுவுக்கும் ஸ்ரீஸ்ரீக்கும் இடையே ஏற்பட்ட மனக்கசப்பு வாழ்நாள் இறுதிவரை நீங்கவே இல்லை. இதன் பிறகு, 1945ஆம் ஆண்டில், ஸ்ரீஸ்ரீ மறுபடியும் சென்னைக்கு வந்து திரைப்படத்துறையில நுழைநதார். அந்த நிலையிலும் அவர் தொடர்ந்து உலக இலக்கியங்களைப் படித்தார்; தன்னைக் கவர்ந்த இலக்கியங்களைத் 'தழுவல்' செய்தார். 1946-1949ஆம் காலத்திய மூன்று ஆண்டுகளில் ஸ்ரீஸ்ரீ, 'ஆனந்தவாணி' என்னும் இலக்கியப் பததிரிகையின் ஆசிரியராகப் பணியாற்றினார். 1947ஆம் ஆண்டிலிருந்து, ஸ்ரீஸ்ரீ பொதுவுடைமை இயக்கத்தில் தீவிரமாகப் பங்கேற்கத் தொடங்கினார்; பொதுக் கூட்டங்களில் சொற்பொழிவுகளும் ஆற்றலானார். அவருடைய மொழியாக்கப்பணி ஆங்கிலத்திலிருந்து தெலுங்கிற்கு; தெலுங்கி லிருந்து ஆங்கிலத்திற்கு என இருவழிகளிலும அமைந்தது.

பூரிபந்தாவின் கவிதைகளை ஸ்ரீஸ்ரீ ஆங்கிலத்திற்கு மொழிமாற்றம் செய்தார். தமது சமகாலத்தலைமுறையினராகிய பட்டாபி (பிறப்பு: 1919), ஆருத்ரா (பிறப்பு: 1925), கலோஜி நாராயணராவ் (பிறப்பு: 1914), கே.வி. ரமண ரெட்டி (பிறப்பு: 1928) - ஆகியோருடைய கவிதை நூல்களுக்கெல்லாம் ஸ்ரீஸ்ரீ 'அறிமுகம்' எழுதினார். இது மட்டுமல்ல, தனக்கு அடுத்து உருவாகி வந்த இளைய தலைமுறை யினராகிய ரவிசாஸ்திரி (ராஸகொண்ட விசுவநாத சாஸ்திரி (1922-93) என்று பரவலாக அறியப்பட்டவர்), சேஷேந்திர சர்மா (பிறப்பு: 1927), கேஜேலமல்ல ரெட்டி (பிறப்பு: 1922) ஆகியோர், இன்னும் இவர்களைப் போன்ற பலருடைய படைப்புக்களுக்கும் ஸ்ரீஸ்ரீ அறிமுக உரை எழுதினார்.

ஸ்ரீஸ்ரீயின் பாதிப்பு இளைய தலைமுறையின்மீது குறிப்பிடத் தக்க விளைவை ஏற்படுத்தியது. ரஜாக்கர்களும் ஹைதராபாத் நிஜாமின் படைகளும் மாநிலத்து மக்கள்மீது தங்கள் கைவரிசையைக் காட்டி அட்டூழியம் செய்தபோது ஸ்ரீஸ்ரீ நேரடியாக எதுவும் சொல்ல வில்லை; மௌனமாகவே இருந்தார். மக்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமைகளின் விளைவாக பொதுவுடைமை இயக்கமும், ஆந்திர மகாசபையும் தலைமை ஏற்ற ஓர் ஆயுதப் புரட்சி கிளம்பியது. இந்த நிலையில், மக்களுக்கு அனுதாபம் காட்டி, யாரெல்லாம் தமது படைப்பு வடிவங்கள் மூலம் அட்டூழியங்களைக் கண்டனம் செய்தார்களோ அவர்களுக்கு ஸ்ரீஸ்ரீ தன் ஆதரவையும் தெரிவித்தார். ஏற்கனவே சொல்லப்பட்டதுபோல, ஸ்ரீஸ்ரீ 1946இல் நிஜாம் அரசாங்கத்தில், செயலகப் பணியாளராக அமர்ந்திருந்தார். அப்போதும்கூட அவர் கவிதைகள் எழுதிக் கொண்டுதான் இருந்தார். ஆனால் அந்தக் கவிதைகள் கருத்தூன்றிய படைப்புக்களாக இல்லை; மாறாக 'சிரிசிரி மூவ்வா' போன்றவையாகவே இருந்தன. கம்யூனிஸ்டு களுடன் வெளிப்படையாகவே இணக்கம் கொண்டவராகவும், 'மகாப் பிரஸ்தானம்' போன்ற கவிதைகள் மூலம் மார்க்சியக் கொள்கையைப் பிரச்சாரம் செய்பவராகவும் ஸ்ரீஸ்ரீ இருந்த போதிலும், அவர், சாமானிய எளிய மனிதனின் துன்ப-துயரங்கள் பற்றி விருப்பு வெறுப்பு காட்டாமல் மௌனமாகவே இருந்தார். இவ்வாறு இருந்து விட்ட செயலுக்காக "துரோக ஆட்சியுடன் கைகுலுக்கிக் கொண்டவர்" என்று பின்னாளில் இடது சாரிகள் ஸ்ரீஸ்ரீ மீது குற்றம் சாட்டினார்கள். தான் ஏன் அவ்வாறு சலனமின்றி இருக்க நேர்ந்தது என்றோ, ஏன் எதிர் உணர்ச்சி காட்டவில்லை என்றோ, அவரை அவ்வாறு மௌனமாக இருக்குமாறு செய்தது எது என்றோ ஸ்ரீஸ்ரீ எந்த விளக்கமும் தரவில்லை. ஆனால் திரிபுனனேனி மகாரதி போன்ற பலர், ஸ்ரீஸ்ரீ தனது உணர்வுகளையெல்லாம் அடக்கி வைத்துக் கொண்டிருந்தார் என்றும் மக்கள் நலனுக்கு எதிராக இருந்த

நிஜாமையும் ரஜாக்கர் இயக்கத்தையும் எதிர்த்து இயங்கியவர்களை ஸ்ரீஸ்ரீ எதிர்த்து ஒரு வரி கூட எழுதவில்லையே என்றும் உறுதிப் படுத்துபவர்களும் இருக்கிறார்கள். நிஜாம் ஆட்சியில் செயலகப் பணியாளராக ஸ்ரீஸ்ரீ இருந்தது, உள்ளபடியே அவர் தன் வாழ்க்கைப் பிரச்னை கருதிச் செய்து கொண்ட ஒரு தற்காலிக ஏற்பாடு தான் எனலாம்; 'ஆனாலும், ஏழை எளியவர்களின் துயரங்களைக் கண்ட பிறகும் அவர் மனம் நெகிழாமல் மௌனமாக இருந்துவிட்ட செயலானது, "ஏதோ ஒரு செயல் திட்டத்தோடுதான் மௌனமாக இருந்தார்" என்று சொல்வது விளக்கத்திற்கு அப்பாற்பட்ட விஷயமே. தன்னுடைய மருமகன் பாகவதுலு சங்கர சாஸ்திரி (அல்லது ஆருத்ரா) தெலுங்கானா புரட்சியை மூதன்மைக் கருவாகக் கொண்டு எழுதிய குறியீட்டுக் கவிதையாகிய 'த்வமேவாகம்' என்னும் படைப்புக்கு ஸ்ரீஸ்ரீ முன்னுரை எழுதும்போது, தன் மருமகனை மிகவும் அளவுக்கு மீறிப் புகழ்ந்து எழுதினார். இவ்வாறு புகழ்ந்து எழுதியதற்குக் காரணம், இலக்கிய வட்டாரங்களில் தன்னைப் பற்றி நிலவிய ஓர் அக்கறையின்மையைப் போக்க வேண்டும் என்பதற்காகக் கூட இருக்கலாம். 1949ஆம் ஆண்டில் தெலுங்கு 'ஸ்வதந்திரா' (பத்திரிகையில்)வில் மருமகனின் கவிதையை மிகவும் உயர்த்திப் புகழ்ந்து விரிவான ஒரு கட்டுரையே ஸ்ரீஸ்ரீ எழுதினார். தான் முழுமையாகத் திருப்தி கொள்ளும் வகையில் ஆருத்ரா தெலுங்கானா புரட்சி என்னும் கருபற்றி ஒரு படைப்பு படைத்துவிட்ட பிறகு, தானும் எழுதவேண்டிய ஓர் அவசியம் எழவில்லை என்றும் ஸ்ரீஸ்ரீ சொன்னார்; அப்படியே தான் படைத்திருந்தாலும், தனது படைப்பை விட, ஆருத்ராவின் படைப்பே சிறந்ததாக இருந்திருக்கும் என்றும் சொல்லிக் கொண்டார்.

நீண்ட இடைவெளிக்குப் பிறகு 1950இல் மசூலிப்பட்டனம் நளினிகுமார், (உண்ட வல்லி சூரிய நாராயணாவின் புனை பெயர்) செய்த உதவியால், ஸ்ரீஸ்ரீயின் 'மகாப்பிரஸ்தானம்' கவிதைகளின் தொகுப்பு நூலாக வெளியிடப்பட்டது. விஸ்வநாதா வெளியிடுவதாக வாக்களித்திருந்தாலும் அவர் வெளியிடவில்லை. ஆனால் 'சலம்' நூலுக்கு ஒரு முன்னுரை அளிக்கும் வாயிலாக "நற்சாட்சிப் பத்திரம்" வழங்கி, தனது வாக்குறுதியை நிறைவேற்றினார். அதன்பிறகு ஸ்ரீஸ்ரீக்குத் திரைப்பட உலகின் தொடர்பு கிடைத்து, அதன் மூலம் பணமும் சம்பாதிக்கத் தொடங்கினார். சென்னை ஐக்கிய மாகாணத்தின் மேல்சபை உறுப்பினராகவும் ஸ்ரீஸ்ரீ ஆனார். பரந்த உலகத்தின் மூலை முடுக்குகளிலிருந்தெல்லாம் வரும் இலக்கியங் களைப் படித்தல், அவற்றுள் எவையெல்லாம் தன்னை வசீகரிக் கின்றனவோ அவற்றைத் தெலுங்கில் மொழிபெயர்த்தல் ஆகிய ஸ்ரீஸ்ரீயிடம் இருந்த 'இரட்டைப்பழக்க'ங்களை, வேறு பிற எந்தச்

செயல்பாடுகளும் தடுத்து விடவில்லை. காரல் சபெக் எழுதிய 'மதர்' என்னும் நாடகத்தை ஸ்ரீஸ்ரீ 1952இல் 'அம்மா' என்ற பெயரில் தெலுங்கு மொழியில் மொழிபெயர்த்தார். 1953இலிருந்து அப்போதைய சமுதாய - அரசியல் சூழ்நிலைகளை உணர்த்திக் காட்டும் வகையில் ஸ்ரீஸ்ரீ 'கார்ட்டூன் கவிதைகள்' படைக்கத் தொடங்கினார். சில நேரங்களில், அபூரிவரதராஜேஸ்வரராவ், ஆருத்ரா போன்றவர்களுடன் சேர்ந்து, இணைப்படைப்பாளராக இருந்து ஸ்ரீஸ்ரீ கவிதைகள் படைத்தார்; ஆனால் அந்தக் கவிதைகள் கருத்தூன்றிப் படைக்கப்பட்டவையாக இல்லை. தனது கவிதைப் படைப்புகளைத் தானே ஆங்கிலத்தில் மொழிமாற்றம் செய்யும் பணியையும் ஸ்ரீஸ்ரீ மேற்கொண்டார். வானொலிக்கு நாடகங்களும் சிறுகதைகளும் படைத்தளித்தார். அவற்றில் 'நனவோடை' என்னும் உத்தியை ஸ்ரீஸ்ரீ கையாண்டார். தெலுங்கு மொழியில் 'நனவோடை' உத்தி கையாளப்படுவது இதுவே முதல் முறையாகும். ஐரோப்பியக் கவிதையின் பாதிப்பின் காரணத்தால், ஒரு பத்தாண்டுக் காலத்திற்கும் மேலாகவே ஸ்ரீஸ்ரீக்கு 'சர்ரியலிஸ'த்தின் மீது நாட்டம் மிகுந்திருந்தது. திகம்பர கவிதைகளை ஆங்கிலத்தில் மொழிபெயர்க்க ஸ்ரீஸ்ரீ விருப்பம் கொண்டிருந்தார். ''மரபு வழிப்பட்ட பொதுவுடைமை'' என்னும் பாதையிலிருந்து 'நக்சல்பாரி' என்னும் பாதையை நோக்கி ஸ்ரீஸ்ரீ மெதுவாக ஈர்க்கப்பட்டார். புரட்சிகர எழுத்தாளர் சங்கத்தை நிறுவி, அதன் தலைவராகவும் ஆனார். இந்த நிலையிலும், அவர், 1971இல் மயகாவ்ஸ்கி எழுதிய 'லெனின்' கவிதையை மொழி பெயர்த்தார். ஏஞ்சலோ குவாட்ரோவிச் எழுதிய வசனகவிதையாகிய ''முடிவின் தொடக்கம்'' என்னும் படைப்பை, இதே ஆண்டில் ஸ்ரீஸ்ரீ 'ரேக்கவிப்பின ர்ரெவல்யூஷன்' (பறந்து வரும் புரட்சி என்று பொருள்படும் தலைப்பு) என்ற தலைப்பில் மொழி பெயர்த்தார். இலண்டனில் வசித்தபோது, தனது சொந்தக்கவிதைகள் சிலவற்றையும் மொழிபெயர்ப்புச் செய்தார்.

ஸ்ரீஸ்ரீ, இலக்கிய உலகில் என்ன நடந்து கொண்டிருந்தது என்பதைத் தெரிந்து கொள்ள முயன்றார்; உலகத்தின் எந்தத் திசையிலிருந்து வந்ததாக இருந்தாலும், ஏறத்தாழ, அந்த இலக்கிய வடிவங்கள் ஒவ்வொன்றையும் உணர்ந்து, அவைகளுக்கேற்றவாறு செயல்பட்டார்; தன்னை வசீகரித்த, பாதித்த இலக்கியங்கள் எவையாக இருந்தாலும் அவற்றை மொழிபெயர்த்துவிட வேண்டும், அல்லது எழுத்துப்பெயர்ப்பு செய்ய வேண்டும் அல்லது தழுவல் செய்ய வேண்டும் என்று சிந்தித்தார். இவ்வாறு செயல்பட்ட பெரும் புகழ் பெற்ற ஒரே ஒரு தெலுங்குக் கவிஞர் ஸ்ரீஸ்ரீயாகத்தான் இருக்க முடியும்! ஆங்கிலம் அறிந்த இலக்கியப் படைப்பாளர்களுக்கு தெலுங்கு இலக்கியம் முழுமையும் கிடைக்கின்ற நிலைமை உருவாக

வேண்டும் என்று ஸ்ரீஸ்ரீ விரும்பினார். முதன்முதலாக மரபுக் கவிதை களால்தான் ஸ்ரீஸ்ரீ பாதிக்கப்பட்டார்; அதன்பிறகு நவீன இலக்கிய வடிவங்களால் பாதிக்கப்பட்டார். அதன்பிறகு இலக்கியக் குறியீடு, இலக்கியச் சோதனை வடிவங்கள் ஆகியவற்றால் பாதிக்கப்பட்டார். பின்னர் அவருக்குரிய இலக்கிய வழித்தடம் எது என்று அவரே கண்டுணர்ந்து கொண்டார். ஸ்ரீஸ்ரீ புகழின் உச்சிக்கு வந்த வேளை யில், அவரது இலக்கியப் பாணியும், வெளிப்படுத்தும் உத்தியும், இளைய தலைமுறையின் எழுத்தாளர்கள் பின்பற்றிக் கொள்ளத் தக்க முன்மாதிரிகளாகவே அமைந்துவிட்டன. இவர்களுக்கு மட்டு மல்லாமல், சில நேரங்களில், ஸ்ரீஸ்ரீயின் முன்னாள் பகையாளர் களுக்குக்கும் கூட அவை முன்மாதிரிகளாக விளங்கின. ஸ்ரீஸ்ரீ இலக்கிய வடிவத்தில் பலவடிவங்களையும் சோதனைப்படுத்திப் பார்த்தவர். அவர் எந்த வடிவத்தைக் கையாண்டிருந்த போதிலும், ஒட்டு மொத்தமாக அவர் ''கவிதையின் உருவமாகவே'' விளங்கினார்.

3. பின்னணியும் முன்னணியும்

ஸ்ரீஸ்ரீ மீது எவையெல்லாம் பாதிப்புக்களைச் செலுத்தின? எவையெல்லாம் அவரை, அவர் எதிர்காலத்தை உருவாக்கின? இந்த நூற்றாண்டின் மிகச்சிறந்த எழுத்தாளராக எவ்வாறு அவர் உருவானார்? என்ற வினாக்களுக்கான விடைகளை, மிகச் சரியான நோக்குடன் புரிந்து கொள்ள வேண்டுமானால், ஸ்ரீஸ்ரீ பிறந்த காலத்திலும் அவரது இளமைப்பருவத்தின்போதும், ஆந்திரப் பிரதேசத்தின் இலக்கிய, சமூக, பொருளாதாரச் சூழ்நிலைகள் எவ்வாறு இருந்தன என்பதைக் கணக்கிட்டுப் பார்ப்பது உரிய தேவையே ஆகும். பெரும்பாலான கவிஞர்களும் எழுத்தாளர்களும் தங்கள் செயல்பாடுகளைப் பழைய மரபு என்னும் வட்டத்திற்குள்ளேயே சுருக்கிக் கொண்டிருந்த வேளையில், ஸ்ரீஸ்ரீ மட்டும் வித்தியாசமாக இருந்தார்; இலக்கிய உலகத்திலிருந்து தனக்கு வேண்டிய அனைத்தை யும் உறிஞ்சி வாங்கிக் கொள்வதில் முனைப்பாக இருந்தார். அறிவுக்குப் பொருந்துபவை அனைத்தையும் ஸ்ரீஸ்ரீ தேடித் தன்னோடு இணைத்துக் கொண்டார். இளைய தலைமுறை எழுத்தாளர் பலர், ''நல்ல இலக்கியத்தைச் சிருஷ்டிப்பதற்கு ஸ்ரீஸ்ரீ காட்டிய வழியன்றி வேறு உன்னதமான வழிகள் இல்லை'' - என்று நம்புகிற அளவுக்கு ஸ்ரீஸ்ரீ தனது உணர்வுகளையும் அனுபவங் களையும் உத்வேகமாகவும், உயிர்ப்பாகவும் படைத்துக் காட்டி யிருந்தார். ஸ்ரீஸ்ரீ இன்று தெலுங்கு இலக்கிய உலகத்தில் பெற்றுள்ள உயர்ந்த இடத்தை அடைவதற்கு, அவருடைய குடும்பப் பின்னணி, அவரைச் சுற்றியிருந்த இலக்கியக் கர்த்தாக்கள், அவருக்கு இருந்த இலக்கிய வேட்கை, அவர் மேற்கொண்டிருந்த பயிற்சி ஆகிய இவை எல்லாம் உதவிகரமாக அமைந்தன.

தெலுங்கு இலக்கியத் துறையிலும் சமுதாயத்திலும் ஒரு சீர்திருத்தவாதியாகத் தோன்றியவர் கந்துகூரி வீரேசலிங்கம் (*1847 -*

1919). இருபதாம் நூற்றாண்டு புலர்ந்திருந்த காலக்கட்டத்தில், தெலுங்கு இலக்கிய உலகில், வீரேசலிங்கத்தின் வருகையால் மிகப் பெரிய ரசாயனமாற்றமே நிகழ்ந்திருந்தது. மேலைநாட்டுச்சிந்தனைப் போக்கு, இலக்கிய, விஞ்ஞான முன்னேற்றங்கள் ஆகிய வற்றின் பாதிப்புகள் அகில இந்தியா முழுவதிலும் உணரப்பட்டிருந்தன; தெலுங்கு மொழி மட்டும் விதிவிலக்காக இருக்குமா? தெலுங்கிலும் இத்தகைய பாதிப்புக்கள் உணரப்பட்டிருந்தன. பிஷப் ராபர்ட் கால்டுவெல் எழுதிய திராவிட அல்லது தென்னிந்திய மொழிக் குடும்பங்களின் இலக்கணம் (1855 - 56), சார்லஸ் பிலிப் பிரவுன் எழுதிய தெலுங்கு-ஆங்கில அகராதி (1852), 1857ஆம் ஆண்டு நிறுவப்பட்ட சென்னைப் பல்கலைக்கழகம் வெளியிட்ட சொல்ல கராதி, பாடத்திட்டம் ஆகியன, மொழிஇயல், இலக்கியத்துறை ஆகிய தளங்களில், அன்றைய இளைய தலைமுறையினராகிய மாணவர் களின் உள்ளங்களில் புதிய சிந்தனைகளை மிகவும் அழுத்தமாகப் பதிக்கத் தொடங்கியிருந்தன. கந்துகூரி வீரேசலிங்கம் தெலுங்கு இலக்கியத்தில் புதிய தடங்கள் பலவற்றைப் பதித்தார்; பல புதிய இலக்கிய வடிவங்களை உருவாக்கினார்; புதிய படைப்பிலக்கியங் களையும் படைத்தளித்தார்; மொழியாக்கமும் செய்தார்; சமுதாய சீர்திருத்தம் கருதி, மிக முக்கியமாக, பெண்களின் கல்வி கருதி, அதைப் பிரச்சாரம் செய்வதற்காக, பல புதிய உருவங்களில் உரைநடை இலக்கியங்கள் படைத்தார். தன்னுடைய பணிகளுக்கு ஏற்றவாறு, கந்து கூரி வீரேசலிங்கம் மொழிநடையையும், சொல்லாட்சியையும் எளிமைப்படுத்திக் கொள்ள வேண்டியிருந்தது. இந்த நூற்றாண்டின் தொடக்கத்திற்கு முன்னதாகவே இலக்கிய, சமுதாய, அரசியல் அளவில் பல்வேறு கூறுகள் சீற்றம் பெற்றிருந்தன. இவை கந்துகூரி வீரேசலிங்கத்தின் பணிகளிலும், மாறுபட்ட சிந்தனைகளிலும் காணப் பட்டபோது, மரபுவழிச் சிந்தனையாளர்கள், எதிர்த்துச் செயல்பட லாயினர். வேறுபாடுகளையெல்லாம் கடந்து ஏராளமான இளைஞர் கள் வீரேசலிங்கத்தைப் பின்பற்றினார்கள்; ஆனால் இது அரசியல் சார்பு எனச் சொல்ல முடியாது.

1875இல் வேதம் வேங்கடராய சாஸ்திரி (1853-1929) ஹர்ஷருடைய 'நாகானந்தம்' படைப்பைத் தெலுங்கு மொழியில் பெயர்த்தார். தமது மொழிபெயர்ப்பில் சாஸ்திரி, அடிமட்டத்தில் வாழும் சாதாரணமான பாத்திரங்கள் பேசும் பேச்சுக்கு கொச்சைத் தெலுங்கு மொழியைப் பயன்படுத்தினார். சமஸ்கிருத நாடகங்களில் வரும் ''நீச பாத்திரங்கள்'' பிராகிருத மொழியில் பேசுவதாக அமைக்கப்பட்டுள்ளதைச் சுட்டிக்காட்டி, அதுபோலவே தானும் அமைத்திருப்பதாகச் சொன்னார். இலக்கிய வட்டாரத்திலிருந்து இதற்குப் பெரும் எதிர்ப்புக்குரல் எழுந்தது. பெரும்பாலான மரபு

வாதிகள் இதனைத் தவறான பிரயோகம் என்றும் இழிவான செயல் என்றும் கருதினார்கள். ஆனால், இதற்கு முன்னதாகவே, கந்துகூரி வீரேசலிங்கம் தனது கேலிச்சுவை நாடகங்களில் (ப்ரஹசனாஸ்) இது போலவே, கொச்சை மொழியைப் பயன்படுத்தியபோது, இதே மரபு வாதிகள் இவ்வளவு பெரிதாகச் சத்தம் போடவில்லை. ஒரு காலத்தில் மரபுவாதிகளுக்குத் தலைவராக விளங்கிய வேதம், இப்போது, இவ்வாறு, 'கிராமியச்' (இழிவான) சுவை எழுத்தாளர்களோடு சேர்ந்துவிட்ட செயலானது மன்னிக்கமுடியாத பெரிய குற்றம் எனக் கருதப்பட்டது. ஏறத்தாழ பன்னிரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு, 1897இல், குரஜாடா வேங்கட்ட அப்பா ராவ் (1861-1915) தனது 'கன்யா சுல்கம்' நாடகத்தில், நாடகம் முழுவதும், கொச்சைத் தெலுங்கை வட்டார வழக்கு வடிவத்தில் உரையாடலாக அமைத்து எழுதியிருந்தார். இதுவும் மிகப்பரவலாகக் கோபத்தைக் கிளப்பியது. இந்த நாடகம் 'குழந்தை மணம்' போன்ற சமுதாயத் தீமைகளை எடுத்துரைக்கும் படைப்பாகும்; மேலும் இந்த நாடகம் முழுமையாய், பாத்திரப் பேச்சு, கரு, அமைப்பு, உணர்த்தும் முறை, பாத்திரப் படைப்பு, விளக்கிக் காட்டுதல் ஆகிய பல அம்சங்களில் மரபுக்கு மாறுபட்டதாகவே அமைந்திருந்தது. இந்த நாடகத்தின் மறுபதிப்பு 1909இல் வெளியாகியது; அப்போது அந்த நாடகம் தெலுங்கு இலக்கிய உலகத்தையே பெரும் புரட்சிகரமயப் படுத்திவிட்டது. இந்த ஆண்டு, தெலுங்கு இலக்கிய வரலாற்றில், குறிப்பாகக் கவிதை வரலாற்றில் மிக முக்கியமான ஆண்டு ஆகும். குரஜாடா ''நீலகிரிப் பதலு'', ''முத்யாலசரலு'' என்ற இரண்டு கவிதைப் படைப்புகளை எழுதினார். 'முத்து மாலைகள்' என்ற பெயரில் ஒரே தொகுப்பாக வெளியான இவை ஒரு புதிய யாப்பில் அமைந்திருந்தன. இந்த இரண்டு கவிதைப்படைப்புக்களும் மொழி, யாப்பு, கருத்து ஆகிய அம்சங்களில், மரபுக் கவிதைகளோடு எந்த வகையிலும் சம்பந்தப் படவில்லை; முற்றிலும் மாறுபட்டே அமைந்திருந்தன. முன்னதாக 1900ஆம் ஆண்டின்போது, சி. இராமலிங்க ரெட்டியின் (1880-1951) 'முசலம்மா மரணமு' என்னும் கவிதை நூல் வெளியாகியது; இது பழைய மரபு யாப்பில் அமைந்திருந்தது; நாட்டுப்புறப் பின்னணி யைக் கொண்டது; ஆனால் உருவகங்கள் அந்நியமானவையாக இருந்தன. இந்த நூலின் கதையில் அமைந்துள்ள ''சோக முடிவு'' என்னும் கதையம்சம், தெலுங்கு இலக்கியத்தில், அந்தக் காலக்கட்டம் வரை யாரும் சொல்லாத புதிய அம்சம் ஆகும். இதே ஆண்டில், ராயப்புரோலு சுப்பாராவ் (1892-1984) படைத்த லலிதா என்னும் கவிதை மரபு வழியாப்பில் அமைந்திருந்தது; ஆனால், பெண்கள் - காதல் கிளர்ச்சி என்ற கருத்தாக்கம் 'மரபு - மரபில்லாதது' என இரண்டும் கலந்ததாக அமைந்திருந்தது. வெளியிடப்பட்ட உடனேயே இது தனது முத்திரையைப் பதித்துக்கொண்டு விட்டது.

ஒரு கணிசமான காலம் வரைக்கும் புதுத்தெலுங்குக் கவிதைக்குப் 'பிதாமகர்' யார் என்பதில், குரஜாடாவுடன் ராயப்புரோலு போட்டியாளராகவே இலங்கினார். அந்தக் காலக்கட்டம் ராயப்புரோலுக்கு உரியதாக இருந்ததோ, இல்லையோ, அதுவேறு விஷயம்; ஆனால், தன்னுணர்ச்சிக் கவிதைக்கு அவர்தான் தந்தை எனக் கருதப்பட்டார். அதே ஆண்டில், அபூரி வெளியிட்ட 'ஜலாஞ்சலி' பலராலும் நன்கு அறியப்பட்டிருந்த போதிலும் இலக்கிய உலகத்தை ஈர்க்கவில்லை. ராயப்புரோலு மேற்கொண்ட கவிதைவடிவம் அல்லது வகைமை ''பாவ கவிதா'' என்று அழைக்கப்பட்டது. மரபுமீது குறிப்பிட்ட அளவுக்கு மதிப்பும் மரியாதையும் உடைய பெரும்பாலான இளைஞர்களும்கூட ராயப்புரோலுவைப் பின்பற்றினர். முப்பதுகளின் மத்தியகாலம் வரைக்கும் இந்த நிலையே முதன்மை பெற்று ஆட்சியும் செய்தது; இந்தச் சிந்தனைக்குழுவைச் சார்ந்தவர்கள் எனக் கருதப்படும் விஸ்வநாத சத்யநாராயணா (1895-1976), தேவுலபள்ளி கிருஷ்ண சாஸ்திரி (1897-1980) போன்ற நேர்த்தி மிகுந்த எழுத்தாளர்களை உருவாக்கவும் செய்தது. இவ்விரு எழுத்தாளர்களுடைய பாதிப்பு இளைஞரான ஸ்ரீஸ்ரீ மீது மிகவும் குறிப்பிடத்தக்க அளவு படிந்திருந்தது; இந்தப் பாதிப்பின் செல்வாக்கிலிருந்து தன்னை விடுவித்துக்கொண்டு, வெளியில் வந்து, தனக்கென ஒரு வழியை வகுத்துக்கொள்வதற்கு ஸ்ரீஸ்ரீக்குப் பத்தாண்டுகள் பிடித்தன.

ஸ்ரீஸ்ரீ பிறந்த காலக்கட்டத்திலிருந்தே, ஆந்திரப்பிரதேசம் மொழியியல் துறையில் பெருங்குழப்பத்தைத்தான் கண்டு வந்துள்ளது. குரஜாடாவின் படைப்புக்களில் கிளைமொழி வித்தியாசங்களுடன் கூடிய பேச்சு மொழி நடையே அமைந்திருந்தது. குரஜாடாவின் சமகாலத்து எழுத்தாளர் பலர் இம்மொழி நடையைப் பின்பற்றிக் கொண்டனர். ஆனால் சின்னையா சூரி (1809-1862) வகுத்துக் கொண்டிருந்த விதிமுறைகளுடன் இது ஒத்துப்போகவில்லை. மரபுவாதிகள் குரஜாடாவின் மொழிநடையை 'இழிவானது' (கிராமியம்) என்று கண்டனம் செய்தனர். குரஜாடாவின் நண்பரும், இந்த நூற்றாண்டின் தலைசிறந்த மொழியியலாளருமான கிடுகு வேங்கட்ட ராமமூர்த்தி (1862-1940) குரஜாடாவின் மொழிநடையை ''நவீனமானது'' அல்லது 'வழக்குத் தெலுங்கு' என்று அழைத்தார்; தெலுங்கு இலக்கிய முயற்சிகள், நடவடிக்கைகள், அனைத்திலும் இந்த மொழிநடை ஓரிடத்தைக் கட்டாயம் பெறவேண்டும் என்றும் கருதினார். சமகாலத் தெலுங்குப் படைப்பாளர்களின் படைப்புக்கள் உள்ளபடியே எவ்வாறு சூரியின் விதிமுறைகளில் இருந்து விலகியிருக்கின்றன, அல்லது மாறியமைந்துள்ளன என்று கிடுகு எடுத்துக் காட்டினார்; அவர் 'வழக்குத் தெலுங்கு'க்குச் சார்பாகவே வாதாடினார்; புராதனத் தெலுங்கைப் பயன்படுத்துவதை எதிர்த்தார்.

'கிடுகு'வை பிரிட்டிஷ் அரசாங்கத்துக் கல்வித்துறை அதிகாரிகள் ஆதரித்தனர். ஸ்ரீஸ்ரீ பயின்ற விசாகப்பட்டினம் திருமதி ஏ.வி.என். கல்லூரியின் முன்னாள் முதல்வர் பி.டி.ஸ்ரீனிவாச ஐயங்கார் போன்ற ஆசிரியர்களும் ஆதரித்தனர். ஆனால் கந்துகூரி வீரேசலிங்கம், வேதம் வேங்கட்டராய சாஸ்திரி மற்றும் இவர்களைப் போன்ற பிற மரபு வாதிகள் எதிர்த்தனர். 'கிடுகு'வின் சிந்தனை வட்டமானது வங்காளத்தின் 'கலிட்பாஷா' இயக்கத்துடனும், நார்வே நாட்டின் 'ரிகஸ்மல், லாண்ட்ஸ்மல்' முரண்பாடுகளுடனும் நெருங்கிய உறவு கொண்டதாக இருந்தது. குறிப்புக்களும், தேர்வுகளும் வழக்குத் தெலுங்கு நடையில்தான் இருக்க வேண்டும் என்று *1911*இல் அரசாங்கம் ஏற்றுக்கொள்ளுமாறு 'கிடுகு' செய்துவிட்டார். அரசாங்கத்தின் இந்த முடிவு பரவலான எதிர்க்கிளர்ச்சிகளை விளைவித்துவிட்டது. அதன் காரணமாக *1914*இல் அரசு தனது நிலையிலிருந்து பின்வாங்கிவிட்டது. இந்த எதிர்க்கிளர்ச்சி ஓர் இயக்கமா கவே உருவாகிவிட்டது. இயக்கத்தில் ஆயிரக்கணக்கான இலக்கிய வாதிகள் பங்கேற்றனர்; விவாதித்தனர்; எதிரும் புதிருமாக ஒருவரை ஒருவர் பகிரங்கமாகவே பழிதூற்றிக் கொண்டனர். இவ்வாறு போராடும் குழுவினர்களால் செய்தி ஏடுகளில் ஏராளமான கட்டுரைகள் வெளியிடப்பட்டன; ஆயிரக்கணக்கான சிறுபிரசுரங்கள், வெளியிடப்பட்டன; பல இலக்கியப் படைப்புக்களும் உருவாக்கப் பட்டன. இந்த முரண்பாடு தோன்றியிருந்த காலக்கட்டத்தில்தான் ஸ்ரீஸ்ரீ பிறந்தார். இவ்வாறு, அவரைச் சுற்றிலும் மொழியியல், இலக்கிய, அரசியல் குழப்பங்கள் பெருமளவில் நிகழ்ந்து கொண்டிருந்தபோதுதான் ஸ்ரீஸ்ரீ வளர்ந்தார்; இந்தச் சூழலில்தான் தனது குழந்தைப் பருவத்தையும் பள்ளி நாட்களையும் கழித்தார். பூரிபந்த அப்பலசாமி, சேத்தி லட்சுமி நரசிம்மன் *(1879-1941)* ஆகியோர் உள்பட இளைஞரும் முதியவருமாகப் பலருடன் ஸ்ரீஸ்ரீக்கு நெருங்கிய தொடர்பு இருந்தது. இவர்கள் அனைவரும் மொழி - இலக்கியத் துறையில் நவீனச் சிந்தனைக் குழுவை ஆதரிப்பவர்களாகவே இருந்தார்கள். இவர்களால் ஏற்பட்ட பாதிப்பு, ஸ்ரீஸ்ரீயின் இளைய நெஞ்சத்தில் அழுத்தமான, நிரந்தரமான விளைவை உண்டாக்கிவிட்டது.

ஸ்ரீஸ்ரீ கல்லூரி மாணவராக இருந்த நேரம்; கைக்குக் கிடைத்தவை, கண்ணில் கண்டவை அனைத்தையும் படிப்பவராக இருந்தார். அந்தக் காலக்கட்டத்தில் இரண்டு, மூன்று முக்கிய எழுத்தாளர்கள் தெலுங்கு இலக்கிய உலகத்தில் தோன்றியிருந்தார் கள். வழக்கறிஞராக இருந்த நந்தூரி அப்பாராவ் (1895-1958) 'யெங்கி பாட்டலு' என்ற பெயரில் நாட்டுப்புறக் கவிதை நூல் ஒன்றை வெளியிட்டிருந்தார். மரபுவழி யாப்புமுறை தவிர்க்கப்பட்டு,

நாட்டுப்புறப்பாணி மீது ஆர்வம் கொண்டு, கவிதை என்பது இவ்வாறு சீரழிந்துவிட்டதே என்று கருதிய மரபுவாதிகள் அப்படியே ஸ்தம்பித்துப் போய்விட்டார்கள். பிரிட்டிஷ் ஆட்சியில் சிறைக்குள் வாடிக்கிடந்த நேரத்தில், 1922இல், புகழ்பெற்ற காங்கிரஸ் தலைவரான உன்னவலட்சுமி நாராயணா (1873-1958) 'மாலபள்ளி' என்ற நாவலை வெளியிட்டார். அந்த நாவலை ஆங்கில அரசு உடனே தடை செய்துவிட்டது. உன்னவ எழுதிய இந்த நாவல் அல்லூரி சீதாராமராஜுவை ஆந்திரப்பிரதேசத்தில் ஆங்கிலேயே அரசுக்கு எதிராக ஆயுதம் தாங்கிப் போராடுவதற்குத் தூண்டியது என்று கருதப்பட்டது; தொலைதூரத்தில் இருந்த மலபார் பிரதேசத்தின் 'மாப்ளா' இனத்தவரைக் கலகம் செய்யத் தூண்டியது என்றும் கருதப்பட்டது. (ஆனால், 'மாப்ளா' கலவரம் நாவல் வெளிவரும் முன்னரே நடந்துவிட்டது என்பதே உண்மை). நாவல் நவீன நடையில், பேச்சு வழக்கு நடையில் அமைந்திருந்தது. பிரிட்டிஷ் ஆட்சியில், கிராமத்துப் பொருளாதாரம் எப்படியெல்லாம் அழிக்கப் படுகிறது என்பதை நாவலின் கரு சித்திரம்போல் தீட்டிக் காட்டியிருந்தது. இந்த நாவல் காந்தியத் தத்துவத்தால் தூண்டப்பட்டு எழுதப்பெற்ற படைப்பாகும். எனினும், நாவலின் முடிவு, தேவைப் படுமானால், மார்க்சியம்தான் ஒரு மாற்று வழியாகும் என்பதைச் சொல்லி, அதை வரவேற்று அமைந்திருந்தது. நாவல் அரசாங்கத்தால் தடைசெய்யப்பட்டது உண்மைதான் என்றாலும், நாவல், படிக்கத் தெரிந்த பலருடைய கைகளுக்கு ஏதோ ஒரு வழியில் போய்ச் சேர்ந்து விட்டது. இந்த இரண்டு படைப்பாளர்களைத்தவிர, மூன்றாவதாக வந்த எழுத்தாளர் ஒரு விபத்தைப்போலப் புறப்பட்டார்; ஆனால் ஓர் ஆன்மிகவாதியைப்போல ஆகிவிட்டார். அவர்தான் குடிபாடி வேங்கடாச்சலம் (1894-1979). இவர், இந்தியப் பெண்களுக்குப் பாலியல் விவகாரங்களில் உரிமையும் சுதந்திரமும் வேண்டும் என வாதிட்டார். இவருடைய இந்தக் கருத்துக்கள், கந்துகூரி முன்னர் வெளியிட்டிருந்த வாதங்களோடு ஒப்பிடுகையில் புரட்சிகரமானவை எனக் கொள்ளப்பட்டன. சலம், பின்னாளில், ஸ்ரீஸ்ரீயின் கவிதைக்கு ஒரு நற்சாட்சிப் பத்திரம் (யோக்கியதாம்சப் பத்திரம்) வழங்கினார். அந்தப் பத்திரம், இலக்கிய வரலாற்றின் போக்கையே தடம் மாற்றும் அளவுக்கு அமைந்திருந்தது. சலம் ஈடு இணையற்ற உரைநடை எழுத்தாளராக விளங்கினார். 1924ஆம் ஆண்டிலிருந்து புதினங் களும், வேறு பிற வடிவங்களில் படைப்புக்களும் எழுத ஆரம்பித்தார். சமூதாயம் பற்றிய அவருடைய தீவிரமான பார்வைகள் பயங்கரமான விளைவுகளை ஏற்படுத்திவிடும் எனப்பலரும் பயந்துபோயிருந்த காரணத்தால், அவருடைய படைப்புக்களை யாரும் வெளியிட முன்வரவில்லை. 1949ஆம் ஆண்டு, சலம், அவருக்கென்று, ஒரு

சொந்த அச்சகத்தை உருவாக்கிக் கொள்ளும்வரை அவரால் அவருடைய படைப்புக்களை வெளியிடமுடிட வில்லை.

அந்தக் காலக்கட்டத்தில் நிலவிய இலக்கிய, மொழியியல் முரண்பாடுகளும் இயக்கங்களும் பல புதிய அமைப்புக்கள் உருவாவதற்குக் காரணமாய் அமைந்தன. 1911இல், காக்கிநாடாவில், 'ஆந்திர சாகித்திய பரிஷத்' என்னும் அமைப்பு, மரபையும் மரபுவழி ஆர்வத்தையும் காப்பாற்றுவதற்காகவே உருவாக்கப்பட்டது. தன்னுணர்ச்சிப் பாடல் ஆக்கத்தைத் தமது பாதையாக வகுத்துக் கொண்டிருந்த இளம் கவிஞர்கள் ஒன்றிணைந்து 'சாகித்தி சமிதி' என்னும் ஒரு போட்டி அமைப்பை 1919இல் தெனாலியில் உருவாக்கினார்கள். இந்த அமைப்பில் ஸ்ரீஸ்ரீ சேர்ந்து கொண்டார். 1926இல் விசாகப்பட்டினத்தில், ''கவிதா சமிதி'' என்னும் ஓர் அமைப்பும் பிறந்தது; ஸ்ரீஸ்ரீ உடனடியாக இந்த அமைப்பிலும் ஓர் உறுப்பினர் ஆனார். 1933இல் பெர்ஹாம்பூரில், 'நவ்ய சாகித்திய பரிஷத்' என்ற பெயரில் ஓர் இலக்கிய அமைப்பும் பிறந்தது. ஸ்ரீஸ்ரீ இந்த அமைப்பிலும் ஒரு தீவிர உறுப்பினர் ஆனார். இந்த அமைப்பு, 'பிரதிபா' என்ற இலக்கியப் பத்திரிகை ஒன்றையும் தொடங்கியது. ஸ்ரீஸ்ரீ இந்தப் பத்திரிகையின் ஆசிரியர் குழுவிலும் ஓர் உறுப்பினர் ஆனார். சிந்தனையில் ஒரு புதுமை, வெளிப்பாட்டில் புதுமை, இயக்கத்தில் புதுமை - என எங்கெல்லாம் புதுமை அல்லது நவீனத்துவத்தைக் காண நேர்ந்தாலும், ஸ்ரீஸ்ரீ அங்கெல்லாம் தன்னை ஈடுபடுத்திக் கொள்பவராக இருந்தார்.

இவ்வாறாகத் தோன்றிய இலக்கிய முரண்பாடுகள் வெறும் சிறிய அலைகளைத் தோற்றுவித்துக் கொண்டிருந்த வேளையில், இன்னொரு பக்கம், 'தன்னுணர்ச்சிக் கவிதை' மிகுந்த செல்வாக்குப் பெறலாயிற்று. இதே நேரத்தில், இன்னொரு இலக்கிய சோதனையும் படித்தவர்கள் மத்தியில் புகழ்பெறலாயிற்று. ''அவதான ப்ரதர்ஷனலு'' அல்லது ஆசுகவியாகக் கவிபாடுதல் என்னும் இலக்கிய முயற்சியே அது. (அல்லது மொழி ஜாலம் காட்டும் சாகச முயற்சி) 'இரட்டையர்கள்' என அழைக்கப்பட்ட திருப்பதி வேங்கடகாவுலு (திவாகரல திருப்பதி சாஸ்திரி 1872 - 1919), செல்லப்பில்லா வேங்கடசாஸ்திரி (1870-1950) ஆகிய இருவரும்தான் இந்த இலக்கிய சோதனைகளைச் செய்தவர்கள். இவ்விருவருள் செல்லப்பில்லா வேங்கட சாஸ்திரி ஒருங்கிணைந்த பழைய சென்னை மாகாணத்தின், தெலுங்கு மொழி சார்பாக, அரசவைக் கவிஞராக இருந்தவர். ஆசுகவி படைப்பதன் மூலமாக வெளிப்படுத்தப்பட்ட விரைவுத்தன்மை, மனப்பாட ஆற்றல் ஆகியவை மக்கள் கூட்டத்தைக் கவர்ந்து இழுக்கத்தான் செய்தன; மரபுவழியாப்பின் மீது அவர்களுக்கு இருந்த வலிமை,

அறிவாற்றலின் ஆழம், ஆயிரக்கணக்கான இளம் கவிஞர்களையும் ஈர்க்கத்தான் செய்தன. ஆனால், ஸ்ரீஸ்ரீ மட்டும் இதிலிருந்து விலகித் தனியே இருந்தார். ஆனால், விஸ்வநாதா இவ்விருவருடைய சீடராகவே இருந்தார். நவீன இலக்கிய உரைநடை மற்றும் கவிதை வடிவங்களின் உள்ளே அவர் சிறிது தலையிட்டிருந்த போதிலும், அவருடைய பன்முக மேதைமையின் காரணமாக, பழைய மரபைப் போற்றுபவராகவே விளங்கினார். குறிப்பிடத்தக்க அறிஞரான அக்கிராஜு உமாகாந்தம் (1882-1942) தனது விமர்சன நூலாகிய 'இன்றைய காலத்துக்கவிதைகள்' என்றும் படைப்பில் தன்னுணர்ச்சிக் கவிஞர்களைத்தாக்கி எழுதியிருந்த பிறகும், தேவுலபள்ளி விஞ்சியே நின்றார். சமஸ்கிருத மரபுதான் அதிகாரபூர்வமான மரபு எனக் கருதிக் கொண்டு, உமாகாந்தம், தன் சமகாலத்துத் தெலுங்கில் எழுதிய ஒவ்வொரு வரையும், எழுதப்பட்ட ஒவ்வொன்றையும், கண்டனம் செய்தார். இதே போலத்தான், இவருக்கு முன்னதாக, சி.ஆர். ரெட்டி, மேற்கத்திய இலக்கியத்திறனாய்வைத் தரமானது எனக்கருதிக் கொண்டு, தனது, ''கவிதா தத்துவ விசாரமு'' என்னும் நூலில், தெலுங்குப் படைப்பாளர்களையும், படைப்புக்களையும் கண்டனம் செய்திருந்தார். இவ்விரு படைப்புக்களும் ஒன்று சேர்ந்து, படித்தவர்களின் கண்களைத் திறந்துவிட்டன; அவர்கள் மத்தியில் சுயவிமர்சனப்போக்கு விரைந்து எழுந்தது. சுருக்கமாகச் சொன்னால், இந்த நூற்றாண்டின் தொடக்க காலத்திலிருந்து, 1930ஆம் ஆண்டுக் காலம்வரை, மேலைநாட்டுப் பாதிப்பினாலும், அதற்கு எதிரிடையாக எழுந்த மரபு வழிச் சிந்தனைகளின் பாதிப்பினாலும் தெலுங்கு இலக்கிய உலகம் இடர்ப்பாடுகள் நிறைந்ததாகவே இருந்தது. ஸ்ரீஸ்ரீ எழுத்தாளராக உருவாகி வளர்ந்து வந்த காலக்கட்டம் இவ்வாறுதான் இருந்தது.

சமுதாய அரசியல் சூழ்நிலையும், அதேபோல சமுதாயப் பொருளாதாரச் சீர்திருத்தச் சூழ்நிலையும், விடுதலைப் போராட்டத்தின் காரணமாக, அமைதி இழந்து கொந்தளிப்பு நிலையில்தான் இருந்தன. காந்தியத் தத்துவமாகிய அகிம்சைக் கொள்கை சில தெலுங்குக் கவிஞர்கள் மீது ஒருவகையில் பாதிப்பை ஏற்படுத்தி யிருந்தது. இது, முன்பு மக்களின்மீது பாதிப்பை ஏற்படுத்தியிருந்த புத்தமதக் கொள்கையைப் புதுப்பித்துக் கொள்வதுபோல அமைந்தது. அத்தகைய கவிஞர்கள், புத்தரையும் அவருடைய தத்துவத்தையும் புகழ்ந்து, கவிதைகள், நாடகங்கள், புதினங்கள், ஏன், விமர்சனக் கட்டுரைகளும் கூட, எழுதத் தொடங்கினார்கள். இந்திய விடுதலை எழுச்சியானது, வேறு சில எழுத்தாளர்களை, இந்தியர்களின் கடந்த காலப் பெருமைகளை முழுவதுமாகத் தீட்டிக் காட்டும் வரலாற்று நாவல்கள் எழுதுமாறு தூண்டியது. இந்தியாவை

அன்னையாகக் கருதிப் பார்க்கும் ''அன்னை இந்தியா'' என்னும் கருத்துஉரு வங்காளியிலிருந்து ஆந்திராவுக்கு வந்து சேர்ந்தது. இதன் விளைவாக, தெலுங்கு மொழியோடு அல்லது தெலுங்கு மக்களோடு தொடர்புடைய ஒவ்வொன்றையும், அது எதுவாக இருந்தாலும், அதைத் தெய்வ உருவப்படுத்திப் பார்க்கும் பழக்கம் ஆந்திராவில் உருவாகியது. தேசபக்தக் கவிதைகள் மக்களுக்கு ஒரு தினசரி நிகழ்ச்சி போலவே ஆகிவிட்டன. புகழ்பெற்ற தன்னுணர்ச்சிக் கவிஞர்களும் கூட (காதல், பிரிவு என்ற அவர்களுடைய ஆழமான உணர்வு நிலையிலிருந்து அவர்களுக்கு சிறிது மாற்று தேவைப்பட்டிருக்கலாம்). ''தேச பக்திக் கவிதைகள்'' என்னும் பிரிவுக்கு தங்களால் இயன்ற சிறிய அளவு பங்களிப்பைச் செய்யலானார்கள். அவர்களது பங்களிப்பின் வழியே வெளிவந்த இந்தக் கவிதைகள், ''அரசியல் உரிமை பெற்ற தனி ஆந்திர மாநிலம் வேண்டும்'' என்ற கிளர்ச்சியை ஆழப்படுத்துவனவாக அமைந்தன. இந்த அரசியல் கிளர்ச்சியானது, எழுத்தாளர் சிலருடைய கவனத்தை, சமுதாய அபிலாட்சை நோக்கிச் சிறிதளவு திசைமாற்றியிருந்தது; அதுவும் நீண்ட காலத்திற்கு இல்லை, குறுகிய காலத்திற்குத்தான். ஒவ்வொரு சாதியும், இனமும், தொழிலும் தங்களுடைய கடந்த காலப் பெருமைகளைத் தோண்டித் துருவ ஆரம்பித்துவிட்டன; தத்தம் முக்கியத்துவத்தைக் கண்டுகொள்ள முனைந்தோடு, பிறரோடு ஒப்பிட்டுப் பார்த்து, தங்களது தலைமைத் தன்மையை நிறுவவும் முயன்றன. இவ்வாறாகப் பல சாதிய அமைப்புக்கள் தோன்றலாயின; தோன்றி, அவை, மிக ஆர்வத்துடன், அவைகளுக்கே உரிய இலக்கியங்களையும் உருவாக்கின. தத்தமது சாதி, இனப்பெருமைகளை நிறுவிக் காட்டுவதில், ஆவல் மிகுந்திருந்த காரணத்தால், மக்கள் அனைவரும், தத்தம் பொருளாதாரச் சீர்கேட்டு நிலையை மறந்து போய்விட்டனர். இப்படி ஒரு நிலை உருவாகி விட்டதை உணர்ந்தபோது, மக்களில் சில குழுவினர், தமது பொருளாதார, அரசியல் உரிமைக்கான போராட்டங்களைத் தொடரவும் செய்தனர். இந்த நிலைமைகளைத் தெரிவிக்கும் சில இலக்கியங்களும் அந்தக்காலக்கட்டத்தில் உருவாயின. செய்தித்தாள்களின் வளர்ச்சி, சமுதாய அரசியல் உரிமைகளின் விரிவாக்கம், கல்வி வாய்ப்புக்கள், ஆகிய அனைத்தும் சமுதாயத்தையும், சமுதாயத்தின் பல்துறை அபிலாட்சைகளையும் மிக விரைவாக மாற்றியமைத்தன! தாய் அமைப்பான இந்திய தேசியக் காங்கிரசிலும் மாறுதல்கள் நிகழ்ந்தன. மனம் முறிவடைந்து சில அரசியல் குழுவினர், தனித்தனியே பிரிந்து சென்று, 'இந்து மகா சபை', 'காங்கிரஸ் சோஷலிஸ்டுகள்', 'சோஷலிஸ்டுக்கட்சிகள்', 'கம்யூனிஸ்ட் கட்சி' எனக் காலப்போக்கில் பலவாறாகப் பல அமைப்புக்களை உருவாக்கினர். ஒரு முனையில் ''விசால ஆந்திரா''

(அகண்ட தெலுங்கு மாகாணம்) என்ற குரல் எழுந்தது. மறுமுனையில், வேறு வேறு நோக்கங்கள் கொண்ட பற்பல அரசியல் அமைப்புக்கள்! எனினும், இவை அனைத்தும் தமக்குள் பெரும் வெறுப்புக் காட்டிக் கொள்ளாமல் ஒருங்கிணைந்தே செயல்பட்டன. தேசத்தின் பிற பகுதிகளில் நிகழ்ந்த அரசியல், இலக்கிய மாறுதல்கள் சிறிது சிறிதாக ஆந்திராவுக்குள்ளும் கசிய ஆரம்பித்தன. அவ்வாறு கசிய ஆரம்பித்து, சில வேளைகளில் மோதல் முரண்பாடுகளாகவும், வேறு சில வேளைகளில் இசைவான தன்மைகளாகவும் தம் சுவடுகளைப் பதிக்கத் தொடங்கின. இத்தகைய காலக்கட்டத்தில் தான், எத்தனையோ மனிதர்கள் மூலமாகவும் படைப்புக்கள் மூலமாகவும் கிடைத்த, மிகத்திரண்ட செல்வாக்கின் கீழ், ஸ்ரீஸ்ரீ தன்னுடைய சமுதாய அரசியல் இலக்கியப் பார்வையை உருவாக்கிக் கொண்டார்.

தனது குழந்தைப் பருவத்திலிருந்தே, ஸ்ரீஸ்ரீ விசாகைக்கும் விஜயநகரத்திற்கும் இடையே சுற்றித்திரிந்திருக்கிறார். விஜயநகரம் அன்றைக்குக் கல்வியின் இருப்பிடமாகத் திகழ்ந்தது. பெரும்பாலும் மரபுவழி நகரமாக அது திகழ்ந்த போதிலும், கிடுகு, குரஜாடா மற்றும் அன்பும் அறிவும் நிறைந்த விஜயநகரத்து ஜமீன்தாரிமுறை முதலியோரால், அந்த நகரம், மரபு வழிக்கு இணையாக, புதுமைப் பல்கலைகளின் இருப்பிடமாகவும் இலங்கியது. ஸ்ரீஸ்ரீயின் ஒன்று விட்ட சகோதரர் நாராயணபாபு, சாகந்தி சோமயாஜுலு (1915-1993) முதலிய எழுத்தாளர்கள், ரோணன்கி அப்பல சுவாமி (1909-87) போன்ற அறிஞர்கள் ஸ்ரீஸ்ரீக்கு முழுமையான அன்பும் ஆதரவும் அளித்தார்கள். இவர்கள் ரோணன்கி அப்பல சுவாமி பிரெஞ்சு, ஜெர்மன் போன்ற ஐரோப்பிய மொழிகளில் மிகவும் தேர்ச்சி பெற்றிருந்தார்; மிகச்சிறந்த ஆசிரியர்; புதுமை நாட்டம் மிகுந்த மேதை! அவர்தான் மேற்கத்திய உலகின் இலக்கியப் போக்குக்களை ஸ்ரீஸ்ரீக்கு அறிமுகம் செய்து வைத்தார்; அது மட்டுமல்ல, அம்மொழிகளில் வழங்கிய மூல இலக்கியங்களை, தனது இளைய சீடராகிய ஸ்ரீஸ்ரீயின் நன்மை கருதி, ஆங்கிலத்தில் ஆக்கித்தந்து அறிமுகப் படுத்தினார். ஸ்ரீஸ்ரீ பெற்றிருந்த மேற்கத்திய இலக்கியங்கள் பற்றிய அனைத்து அறிவுக்கும், அவர் ரோணன்கிக்குத்தான் கடமைப் பட்டவரா, இல்லையா என்பது ஒருபுறம் இருக்க, ஸ்ரீஸ்ரீயின், எதையும் பசுமரம்போல் தனக்குள் பதியவைத்துக்கொள்ளும் பக்குவமான அந்தப் பருவத்தில், புதியது எதுவானாலும் அதைக் கற்றுக் கொள்ளவேண்டும் என்னும் பசியைச் சிறுகச் சிறுக ஊட்டியவர் ரோணன்கிதான். 1909இல் வெளியான, இத்தாலி நாட்டு மேரிநேட்டி (1876-1944) எழுதிய ''எதிர்காலத்திய அறிக்கை'', 1916இல் வெளியான ட்ரிஸ்டான் ஜாரா எழுதிய ''தாதாயிசம்'',

1918இல் வெளியான ''தாதாயிச அறிக்கை'', 1921இல் வெளியான அப்பெல்லிநேய்ர் எழுதிய ''சர்ரியலிச அறிக்கை'', பிராய்டு எழுதிய ''அடிமனத்தின் கொள்கைகள்'' போன்ற நூல்களும், இவைபோன்ற பிறவும் ஸ்ரீஸ்ரீ இளம் படிப்பாளியாக இருந்தபோதே அவருடைய கவனத்துக்கு வந்துவிட்டன.

பூரிபந்தாவினால் அறிமுகம் செய்யப்பட்ட பிறகும், விசாகப் பட்டினத்திற்கு வந்த பின்னர், ஸ்ரீஸ்ரீயின் மீதான அபூரியின் செல்வாக்கு மிகவும் அழுத்தமாகவே இருந்தது. அபூரி பல்திறனும் சிறந்தமைந்த ஒரு மேதை; ஆனால் வாழ்க்கையில் மிகவும் எளிமை யான மனிதர். அபூரி மரபுவழிச் சிந்தனை மேதை; அதற்காக, மரபு வழியை வெறுப்பவர்களை அவர் வெறுக்கவில்லை; மாறாக, சரிநிகர் சமாதான மனப்பாங்குடன் நேசிக்கவே செய்தார். நாட்டின் ஒவ்வொரு துறையிலும் வல்லவர்களாக இருந்தவர்களோடு அபூரி தொடர்பு கொண்டிருந்தார். துறைமுகத்தில் பணியாற்றும் கல்வியறிவில்லாத தொழிலாளர்களுக்கு, அவர்களது பணிநேரம் முடிந்த பிறகு, அபூரி கல்வி கற்றுக் கொடுத்தார்; இந்தப் பணியை ஆற்றி வந்தபோதே, விசாகையில் கம்யூனிஸ்ட் கட்சியின் கிளை ஒன்றை உருவாக்க வேண்டுமென்று முயன்றார். பி. சுந்தரய்யா, சிஎச். ராஜேஸ்வரராவ் இருவரும் மாணவர்களாக இருந்தபோது இருவரையும் அபூரி ஆதரித்துப் பாதுகாத்து வந்தார்; ஆந்திரப்பல்கலைக்கழகத்தில் ஹிரேன் முகர்ஜியுடன் சேர்ந்து பணியாற்றியவரும் ஆவார். டாக்டர் ஹேமு அதிகாரி, லண்டன் முற்போக்கு எழுத்தாளர் சங்கக் (1935) கொள்கை அறிக்கையையும், 1932ஆம் ஆண்டு தோன்றிய புதிய படைப்பாளிகளின் இலக்கியப் படைப்புக்களையும் இந்தியாவுக்குக் கடத்திக்கொண்டு வந்து சேர்த்தவர். இவரோடும் ஸ்ரீஸ்ரீக்குத் தொடர்பு இருந்தது. 1936இல், முன்ஷி பிரேம்சந்த் முன்னிலையேற்றிருந்த லக்னோ முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் முதலாம் மாநாட்டுக்கு ஜவகர்லால் நேரு தலைமை ஏற்றிருந்தார். அந்த மாநாட்டில் ஸ்ரீஸ்ரீயும் கலந்து கொண்டார். கடத்திக் கொண்டுவரப்பட்ட அந்த அறிக்கை பிரிட்டிஷ் அரசாங்கத்தினால் தடை செய்யப்பட்டிருந்தது. இளைஞர் களின் மத்தியில், தீவிரத்தன்மைக்குப் பற்றுதல் இருக்கிறது என்பதைக் கண்டு, நிறைவடைந்த டாக்டர் ஹேமு அதிகாரி அந்த அறிக்கையின் ஒரு பிரதியை ஸ்ரீஸ்ரீக்கு அனுப்பி வைத்தார். அறிக்கை யைப் படித்தபிறகு, அவரது கவிதைகளிலேயே மிகச்சிறந்த கவிதை என்று பாராட்டப்படுகின்ற கவிதை ஒன்றை ஸ்ரீஸ்ரீ படைத்தளித்தார். தன்பொறுப்பில் ஒப்படைக்கப்பட்டிருந்த ஆந்திரப்பல்கலைக் கழகத்தின் நூலகத்தை, எந்த நிபந்தனையும் இன்றி ஸ்ரீஸ்ரீக்காக அபூரி திறந்துவிட்டார். அபூரியின் இளைய சீடராக விளங்கிய ஸ்ரீஸ்ரீ தனது கவிதைத் தாகத்தையெல்லாம், அந்த நூலகத்தைப் பயன்படுத்தியதன்

மூலம் தீர்த்துக்கொண்டார். உலக இலக்கியங்களை நோக்கி, ஸ்ரீஸ்ரீயின் கண்களைத் திறந்துவிட்ட முதலாம் நூலகம் இந்த நூலகம் தான். அதற்குப்பிறகு, ஸ்ரீஸ்ரீயின் இலக்கியப் பார்வைக்கு வலுவூட்டும் வகையில் அவருக்குக் கிடைத்த புகழ்பெற்ற படைப்புக்கள் எல்லாம் சென்னை அடையாறு நூலகத்திலும் கன்னிமாரா பொது நூலகத்திலும்தான் கிடைத்தன. அபூரியின் மகன் வரதராஜேஸ்வர ராவுக்கு (1923-93) ஸ்ரீஸ்ரீ நெருங்கிய நண்பராகவும் அபிமானியாகவும் ஆனார்; அவருடன் சேர்ந்து இணையாசிரியராக இருந்து சில கவிதைகளையும் ஸ்ரீஸ்ரீ எழுதினார். அபூரி உருவாக்கி யிருந்த 'நடலி' என்னும் நாடக அமைப்பிலும் அவருடன் ஸ்ரீஸ்ரீ உழைத்தார். எம்.என்.ராயின் நெருங்கிய கூட்டாளியாகவும் அவரைப் பின்பற்றுபவராகவும் ஆகிய அபூரி, பின்னாளில், பொதுவுடைமைக் கொள்கையிலிருந்து விலகிக்கொண்டதைப் போல, ஸ்ரீஸ்ரீ விலகிவிடவில்லை. (படைப்பிலக்கியங்கள் மூலமாகத் தான் ஸ்ரீஸ்ரீ பொதுவுடைமைக் கொள்கை மீதான தனது நெருக்கமான உறவை அமைத்துக் கொண்டார்). நஸ்ருல் இஸ்லாம் (1899-1916) ஹரீந்திரநாத் சட்டோபாத்யாயா (1858-1990) முதலிய கவிஞர்களின் கவிதையை பூரிபந்த அப்பலஸ்வாமி ஸ்ரீஸ்ரீக்கு அறிமுகம் செய்து வைத்தார். அபூரியாலும் பூரிபந்தாவாலும் இதே அளவுக்கு அபிமானம் கொள்ளப்பட்டவர் ரவீந்திரநாத தாகூர் ஆவார். ஸ்ரீஸ்ரீ மீதும் தாகூர் மிகுந்த பாதிப்பை ஏற்படுத்தியிருந்தார். தாகூரின் இசை நாடகங்கள் மீது (சப்த லலிதம்) தனக்கு ஒருவித மயக்கமே இருந்தது என்று பின் ஒரு சந்தர்ப்பத்தில் ஸ்ரீஸ்ரீ தன் வாய்மொழிமூலமாகவே ஒப்புக்கொண்டிருக்கிறார். தேவுல பள்ளியால் பாதிக்கப்பட்டிருந்த ஸ்ரீஸ்ரீ ஒரு குறிப்பிட்ட காலக்கட்டத்திற்கு கவி தாகூரின் ஆளுகைக்கு ஆட்படலானார். தேவுல பள்ளியும் ஒரு காலக்கட்டத்தில் தாகூரினால் ஆகர்ஷிக்கப்பட்டிருந்தவரே. எத்தனையோ பல தன்னுணர்ச்சிக் கவிஞர்கள், தேசப்பற்றுக் கவிஞர்களாக மாறியதைப்போலவே ஸ்ரீஸ்ரீயும் மாற்றம் அடைய நேர்ந்தது. ஆனாலும், தேவுலபள்ளி தாகூர் முதலியோரிடமிருந்து ஸ்ரீஸ்ரீ பெற்றிருந்த 'காதல்-கற்பனை' போன்ற விஷயங்கள் ஸ்ரீஸ்ரீயிடம் இறுதிவரையில் இருக்கவே செய்தன.

விஸ்வநாதாவும் தேவுலபள்ளியும் ஓரளவுக்கு மிக்க மகிழ்ச்சி யுடன் இலக்கியத்தின் வேறுபிற வடிவங்களில் படைத்தளித்தவர்கள் என்றாலும், அவர்கள், முதன்மையாக மரபுவழி யாப்பில்தான் சிறப்புப் பெற்ற கவிஞர்களாகத் திகழ்ந்தார்கள். ஆனால் குரஜாடா வெகுகாலத்திற்கு முன்னதாகவே இந்த மரபு வழிகளையெல்லாம் உடைத்தெறிந்துவிட்டார்; அத்தோடு தனக்கென ஒரு வழியையும் உருவாக்கிக் கொண்டார். ஆனால், இவ்வாறு நிகழ்ந்து வந்திருந்த

காலமுறை வளர்ச்சிகளையெல்லாம் ஸ்ரீஸ்ரீ பின்பற்றவில்லை; எனவே ஸ்ரீஸ்ரீ தனது தொடக்க கால இலக்கியப் பணிகளின்போது குரஜாடாவைக்கண்டு கொள்ளத்தவறிவிட்டார். கவிதையைப் பொறுத்த வரையில் தனக்குரிய ஆசான்மார்களாகத் தொடக்க காலத்தில் இருந்தவர்கள் பசவ ராஜு அப்பாராவ் (1894-1933), கவி கொண்டல வேங்கட்டராவ் (1892-1969), சிந்ததீட்ஷிலு (1891 - 1960) முதலியவர்களே என்றும் அவர்கள் மூலமாகவே குரஜாடாவை கண்டு கொண்டேன் எனறும் ஸ்ரீஸ்ரீ தனது வாய்மொழிகள் மூலமாகவே தெரிவித்துள்ளார். இந்த மூவரும்தான் யாப்பின் பல்வேறு வடிவங்களைச் சோதனைப்படுத்திப் பார்த்துக் கொள்ள ஸ்ரீஸ்ரீக்கு உதவினார்கள்; ஆனால், இறுதியாக, கவிதை யாப்பதில் மேதைமை பெறுவதற்கான அடிப்படைச் சூட்சுமத்தை குரஜாடா மூலமாகவே ஸ்ரீஸ்ரீ கண்டுகொண்டார். ஸ்ரீஸ்ரீயின் 'பிரபவா' (1925) என்னும் படைப்பு மரபுவழியாப்பில் அமைந்தது; ஆனால் அவருடைய 'சுப்தஷிகலு' (1929) படைப்பு வசனகவிதை முயற்சியாகவே இருந்தது. படைப்பிலக்கிய உருவாக்கத்தில் 'இதோ, இன்னொரு ஸ்ரீஸ்ரீ வருகிறார்' என்று கண்டுகொள்ளும் அளவுக்கு, இந்த இரண்டு நூல்களிலும் மொழியில், பாணியில், சொல்லாட்சியில் மிகுந்த வேறுபாடுகள் புலப்பட்டன. குரஜாடாவை முன்மாதிரியாகக் கொண்ட தன்னுணர்ச்சிக் கவிஞர் சிலர் தேசியப் பெருமை என்ற குறுகிய வட்டத்திற்குள்ளேயே நின்றுவிட்டனர். ஆனால் குரஜாடாவை ஸ்ரீஸ்ரீ நன்கு ஆய்ந்து அறிந்தவர்; இந்த ஆய்ந்த அறிவு ஸ்ரீஸ்ரீயை சர்வதேசிய எல்லைவரை இழுத்துச் சென்றுவிட்டது. அபூரி, ரோணன்க் முதலியோர் தொடர்பின் வழியே ஸ்ரீஸ்ரீ சமகாலத்து உலகின் இலக்கியப்போக்குக்கள் அனைத்தையும் தெரிந்து கொண்டார். இந்த இலக்கிய அறிவு ஸ்ரீஸ்ரீயின் மன எல்லையை மிகவும் விரிவுபடுத்தியது; கவிதை யாப்பில் பல்வேறு சோதனை வழிமுறைகளையும் ஸ்ரீஸ்ரீக்கு புலப்படுத்திக்காட்டியது. இந்த நிலையில் 'தாதாயிஸம்', 'சர்ரியலிசம்' போன்றவையும் இன்னும் பிற முறைகளும் அவருடைய குறிக்கோளை அடைவதற்கு அவருக்குக் கைவந்த கருவிகளாகவே அமைந்தன.

தனது பட்டப்படிப்பை முடித்துக் கொண்டதும் ஸ்ரீஸ்ரீ தனக்கு ஒரு வேலை தேடும் படலத்தைத் தொடங்கினார். அப்போதையக் காலக்கட்டம் கடுமையான பொருளாதார அழுத்தத்தின் பிடிக்குள் சிக்கியிருந்தது. ''பசிமிக்க அந்த முப்பதுகள்'' - என்று ஸ்ரீஸ்ரீ அந்தக் காலக்கட்டத்தை எப்போதும் நினைவு கூர்வார். அந்தக் காலக்கட்டம் அவருடைய இளம் மனத்தில் அழியாத வடுக்களைப் பதித்திருந்தது. உடலாலும் உள்ளத்தாலும் ஸ்ரீஸ்ரீயால் ஒரு நிலைக்கு வரமுடிய வில்லை. தேவைகளின் மிகுதியால் அவர் எல்லா நேரத்திலும்

துன்பப்பட்டார்; ஆனால் அவருடைய உணர்வுகள் அணைந்து விட வில்லை. இத்தகைய முப்பதுகளின்போதுதான் ஸ்ரீஸ்ரீ பெர்ஹாம்பூரில் உள்ள ''நவ்ய சாகித்திய பரிஷத்'' என்னும் அமைப்பில் சேர்ந்தார்; புகழ்பெற்ற இலக்கிய இதழாகிய ''பிரதிபா''வின் ஆசிரியர்களுள் ஒருவராகவும் ஆனார்; இலக்கிய உலகின் பெரியவர்கள், சிறியவர்கள் என்றவாறாகப் படைப்பாளர்கள் பலருடன் தொடர்பு கொண்டார். முத்தாய்ப்பாக ஸ்ரீஸ்ரீ 'மகாப்பிரஸ்தானம்' கவிதைகளையும் எழுதினார். இந்த நூலின் சில கவிதைகளை ஸ்ரீஸ்ரீ பொதுக்கூட்டங் களில் மனப்பாடமாகச் சொல்லியும் வந்தார். பொதுக்கூட்ட உரையைப் பொறுத்தவரையில், இதுகாறும், 'ஸ்ரீனிவாசராவ்'ஆக இருந்த அவர் திடீரென்று ஒரு நாள் பேச்சிலும் எழுத்திலும் 'ஸ்ரீஸ்ரீ' ஆக உருவாகிவிட்டார். புதியது எதுவாக இருந்தாலும், அதனால் ஸ்ரீஸ்ரீ கவரப்படுபவராக இருந்தார்; அதே நேரத்தில், தான் வாழ்ந்து கொண்டிருக்கும் நிகழ்கால உலகத்தோடு மாறுபட்டார்; இத்தகைய அவருடைய வாழ்க்கை, ஒரு கவிஞன் என்ற அளவிலும், ஓர் அறிவு ஜீவி என்ற அளவிலும், அவர் தன்னைத்தானே தேடிக்கண்டு பிடித்துக் கொள்வதான ''நிரந்தரமான தேடல்'' போலவே அமைந்திருந்தது. யாப்பின் மீதும், மொழியின் மீதும் ஆணை செலுத்த வல்ல ஆளுமையை அவர் கைவரப்பெற்றிருந்தார்; எல்லாருடைய அங்கீகாரத்தையும் அவர் அடைந்திருந்தார். ஆந்திர மாநிலத்துக் கம்யூனிஸ்டுக் கட்சிக்கு அருகில் நெருங்கி நெருங்கி ஸ்ரீஸ்ரீ வந்து கொண்டிருந்தார். இவ்வாறு அவர் நெருங்கி வருவதற்கு அவர் பெற்றிருந்த மார்க்சிய அறிவு காரணமல்ல; சமுதாய, பொருளாதாரத் தத்துவங்களை இலக்கியங்களின் வழியே அவர் கண்டு கொண்டிருந் ததே காரணம் ஆகும். தான் அடைந்த துன்ப துயரங்களை ஸ்ரீஸ்ரீ தன்னைச் சுற்றியிருந்த மக்களிடமும் கண்டார்; தனது இலக்கிய வலிமையை முழுமையாகப் பயன்படுத்திச் செயல்பட்டார்; அவ்வப்பொழுது அரசியல் கூட்டங்களிலும் பேசத்தொடங்கினார்.

எல்லாருக்கும் உரிய பொது மனிதர்

ஸ்ரீஸ்ரீ பொதுவுடைமைக் கொள்கையோடும், அந்தக் கட்சி யோடும் தொடர்பு கொண்டிருப்பது ஐம்பதுகளின்போது வெளிப் படையாகவே தெரியவந்தது. 1946-1950ஆம் ஆண்டுகளுக்கு இடையில் தெலுங்கானா பகுதியில், நிஜாமின் பாசிசக் கொடுங்கோல் ஆட்சி ஆயுதப்படையுடன் அடக்கு முறையில் ஈடுபட்டபோது, பாதிக்கப் பட்ட மக்களின் சார்பாக ஸ்ரீஸ்ரீ எதுவுமே எழுதவில்லை. ஒரு வேலை வாங்கவேண்டும் என்பதற்காக, அவர் பல முயற்சிகள் செய்தார்; அவற்றுள் ஒன்றின் பயனாக அவருக்கு நிஜாம் அரசில்

வேலை கிடைத்தது; சில மாதங்கள் பணியிலும் அவர் இருந்தார். மக்களின் சார்பாகத் தனது இரக்க உணர்வை ஸ்ரீஸ்ரீ வெளியிடுவதைக் கூட, அவர் நிஜாமின் அரசில் வேலையில் இருந்த நிலைமைதான் தடுத்து விட்டது என்றால், அவர் மிகவும் கூடுதலான முன் எச்சரிக்கைக்காரராகவும், சுயநலக்காரராகவும், தன்னலம் கருதியே செயல்படுபவராகவும் இருந்திருக்கிறார் என்று சாடத்தான் வேண்டியிருக்கிறது. நிஜாமை ஆதரிப்பது மாதிரியான வேறு எதையும் அவசரப்பட்டுச் சொல்லிவிடக்கூடாது என்று கருதித்தான் ஸ்ரீஸ்ரீ தனது உணர்ச்சிகளையெல்லாம் அடக்கிக் கொண்டிருந்தார் என்று அவருக்கு நெருங்கிய எழுத்தாளர் சிலர் உறுதியாகக் கருதுகின்றார்கள். ஹைதராபாத்தில் ஸ்ரீஸ்ரீ தங்கி வாழ்ந்த வாழ்க்கை மிகவும் குறுகிய காலம்தான்; அந்தக் குறுகிய கால வாழ்க்கையின் போது, ஸ்ரீஸ்ரீ நிஜாம் ஆட்சிக்கும், ரஜாக்கர் இயக்கத்திற்கும் எதிர்ப்புத் தெரிவிக்காமல் இருந்ததற்கு இவ்வாறு பற்பல செய்திகள் கதைகளாகச் சொல்லப்படுவது உண்டு.

தனது பாராட்டுதலில் கம்யூனிஸ்டு கட்சி, குரஜாடாவுக்கு அடுத்து, ஸ்ரீஸ்ரீக்கு இரண்டாம் இடம் அளித்துப் பாராட்டியது. கம்யூனிஸ்டுக் கட்சியைப் பயன்படுத்தி ஸ்ரீஸ்ரீ ஒரு 'இடது சாரிக் கவிஞர்' என்ற நிலைக்கு வளர்ந்து கொண்டுவந்தார் என்று நம்பு வதற்கு இடமளிக்கும் சில நிகழ்ச்சிகளும் நிகழ்ந்தன. 1943இல் உருவாக்கப்பட்ட 'ஆந்திரப்பிரதேச முற்போக்கு எழுத்தாளர் சங்கம் ('அரசம்')' தனது முதலாவது மாநாட்டைத் தெனாலியில் நடத்திய போது, ஸ்ரீஸ்ரீ மாநாட்டில் கலந்து கொள்ளவில்லை. உண்மை யானதோ, கற்பனையானதோ, ஸ்ரீஸ்ரீ கலந்து கொள்ளாததற்கான காரணம் யாருக்கும் தெரியவில்லை. 1944இல் பெஜவாடாவில் நடந்த மாநாட்டிலும் ஸ்ரீஸ்ரீ கலந்து கொள்ளவில்லை. ஸ்ரீஸ்ரீ கலந்து கொள்ளாததை யாரும் கண்டு கொள்ளவில்லை. 1945-46ஆம் ஆண்டின்போது, ராஜமுந்திரியில், தேவுலபள்ளி தலைமையில் நடந்த மூன்றாம் மாநாட்டில் ஸ்ரீஸ்ரீ மாநாட்டுத் திறப்புரை ஆற்றினார். 1947இல் நான்காம் மாநாடு சென்னையில் நிகழ்ந்தது; நீதிபதி பி.வி. ராஜமன்னார் (1901-78) தலைமை தாங்கினார்; காஜா அகமது அப்பாஸ் மாநாட்டைத் தொடங்கி வைத்தார். இந்த நான்காம் மாநாட்டில் ஸ்ரீஸ்ரீயின் பங்கு என்னவாக இருந்தது என்று தெரிய வில்லை. ஆனால், 1950இல், பெஜவாடாவில் நடந்த ஐந்தாம் மாநாட்டில் ஸ்ரீஸ்ரீ தலைவராகப் பங்கேற்றார். இவ்வாறாக, ஸ்ரீஸ்ரீ மாநாடுகளில் ஆஜராக இருந்தது - இல்லாமல் போனது ஆகியவை பற்றிச் சுவையான துணுக்குச் செய்திகள் பல இருக்கின்றன; இதற்கான காரணங்கள் எவை என்று ஆராய்வது இவ்விடத்தில் அவ்வளவு முக்கியமான விஷயமல்ல. ஸ்ரீஸ்ரீயின் அரசியலானது

எப்போதும் மேலெழுந்த வாரியாகவே அமைந்திருந்தது; அவர் எப்போதும் கவிதை அடிப்படையிலான நடவடிக்கைகளுக்குத்தான் முக்கியத்துவம் கொடுத்து வந்தார்; அரசியல் சார்பான நடவடிக்கை களுக்கு அதிகம் முக்கியத்துவம் கொடுக்கவில்லை. ஸ்ரீஸ்ரீ தன்னை 'ஒரு ஒப்புக்கொடுத்த கம்யூனிஸ்ட்' என்று சொல்லிக்கொண்டார்; ஆனால், தனது 'கம்யூனிஸம்' அறிவார்ந்த அரசியல் அடிப்படையில் அமைந்தது அல்ல, மார்க்சியத் தேர்ச்சியினால் அமைந்ததும் அல்ல என்றும் அவர் சொன்னார். ஆனால் அவர் எப்போதும் உழைக்கும் மனிதர்களிடம் இரக்கம் கொள்பவராகவே இருந்தார். இதில் எவ்வித ஐயப்பாட்டுக்கும் இடம் இல்லை. 1945ஆம் ஆண்டு வாக்கில், ஸ்ரீஸ்ரீ திரைப்பட உலகிற்குள் நுழைந்து பணம் சம்பாதித்தார். சம்பாத்திய மாகத் தன் கைக்குச் சிறிது பணம் கிடைத்தாலும் அந்த நேரங்களில் எல்லாம் ஸ்ரீஸ்ரீ 'அரசம்' அமைப்புக்கு, அதனுடைய மாதாந்திரப் பத்திரிகையான 'அபியுதா' வெளிவருவதற்காக நிதியுதவி செய்திருக் கிறார். தீவிரமாக இருந்தாரோ இல்லையோ, ஏதோ ஒரு வகையில் 1970ஆம் ஆண்டு வரைக்கும் ஸ்ரீஸ்ரீ கம்யூனிஸ்ட் கட்சியுடனும் 'அரசம்' அமைப்புடனும் தொடர்பு வைத்துக் கொண்டிருந்தார்.

ஐம்பதுகளின்போது, திரைப்படத்துறையில் வெகு சுறுசுறுப் பாகப்பணி புரிந்த நேரத்திலும் ஸ்ரீஸ்ரீ, கவிதைகளைப் பற்றி மட்டு மல்ல, இலக்கியத்தின் வேறுபிற வடிவங்கள் பற்றியும் படிப்பதிலும் எழுதுவதிலும் கவனம் செலுத்தினார். சான்பிரான்ஸிஸ்கோ அரசு கல்லூரியின் கவிதை மையம் பற்றி ஸ்ரீஸ்ரீ ஆராய்ந்தார்; பிரான்ஸ் நாட்டின் பீட் கவிஞர்கள், பீட்நிக் எழுத்தாளர்கள், மார்க்சிய அடிப்படையில் அமைந்த 'டியால்கல்' இயக்கம் ஆகியன பற்றியும் ஆராய்ந்தார். இவற்றோடு ''எதிர்மறுப்பு வாதம்'' ''விஞ்ஞான ரீதியான பகுத்தறிவு வாதம்'' ''கூட்டுப்பொறுப்பு இயல்'' போன்றவை குறித்தும் ஆராய்ந்து அறிந்தார். அடுத்து வந்த பத்தாண்டுக் காலத்தில், டான்ஜியார்ஜிகளின் பழைய தலைமுறை யினர், லண்டனின் கோபமுள்ள இளைஞர் கூட்டம், ஹாலண்டின் காயப்பட்ட இளைஞர் கூட்டம் மற்றும் புரோவா இயக்கம், அமெரிக்காவின் ஹிப்பி இயக்கம், ஜார்ஜ்புரோக், எடித்சிட்வெல் ஆகியோருடைய கியூபிசம், இயற்சுழற்சி இயக்கக்கோட்பாடு, 'வெர்ஸ் லிப்ரே', கட்டில்லாக் கவிதை, பல்வகை ஒலிக்குறிப்பு உரைநடை அல்லது ஆங்கிலேய எழுத்தாளர் அமிலோவெல்லின் கவிதை - ஆகிய இவை அனைத்தின் மீதும் ஸ்ரீஸ்ரீ ஆர்வம் கொண்டி ருந்தார். நவீனத்தன்மையின் அனைத்து அம்சங்களும் அமையப் பெற்ற ஒரு தெலுங்கு எழுத்தாளர் இவர்தான் என்றும், புதிதாக வரும் எதனையும் மேற்கொள்வதிலும் மாற்றி அமைத்து ஏற்றுக் கொள்வதிலும் மிகவும் ஆர்வம் கொண்டவர் இவர்தான் என்றும்

எவ்விதத் தயக்கமும் இன்றிச் சொல்லிவிடலாம்; அந்த அளவுக்கு ஸ்ரீஸ்ரீ நவீனத்தன்மை மிகுந்தவராக விளங்கினார். 1909இல் குரஜாடா வினால் உருவாக்கப்பட்டிருந்த புதிய யாப்பு வடிவம் கவிஞர்களின் மத்தியில் ஏற்கனவே பழக்கத்தில் இருந்து வந்தது. புகழ்பெற்ற தன்னுணர்ச்சிக் கவிஞரும் நாட்டுப்புறக் கவிஞருமாகிய துவ்வூர் ராமிரெட்டி எப்போதும் செவ்வியல் மொழியைச் சார்ந்தவராகவே இருந்தார்; தனது படைப்புக்களுக்கு மரபு வழி யாப்பைப் பயன் படுத்துபவராகவும் இருந்தார். அவரும் கூட இப்போது, கட்டில்லாக் கவிதையின் வட்டத்துக்குள், ஆளுகைக்குள் ஆட்பட்டுவிட்டார். சிஸ்ட்லா உமா மகேஸ்வரராவ் (1909-1953), அடவி பாபிராஜு (1895-1952) முதலியோர் ஒலிக்குறிப்புக் கவிதை என்று சொல்லப் படும் நடையை நடைமுறைப்படுத்தத் தொடங்கியிருந்தனர். சிஸ்ட்லா உமா மகேஸ்வரராவ் இந்தக் கவிநடையைச் செயல்முறைப் படுத்துவதில் ஸ்ரீஸ்ரீயை முந்திக் கொண்டிருந்தவர் என்றாலும் அடவி பாபிராஜுதான் இந்த வகையில் ஸ்ரீஸ்ரீயை விஞ்சுபவராக இருந்தார். சிஸ்ட்லா, தான் படைத்திருந்த கவிதைப் பண்புக்கு ''பிரகலாதா கவித்துவம்'' என்று பெயர் கொடுத்திருந்தார். இந்தப் பெயர்தான் யாரையும் கவரவில்லை; ஆனால், படைப்பு வடிவம் பலரையும் கவருவதாக அமைந்தது; சிறப்பாக ஸ்ரீஸ்ரீயை மிகவும் கவர்ந்து விட்டது.

ஆந்திராவின் தன்னுணர்ச்சிக் கவிஞர்கள் பெரும்பாலும் தாகூர், நிராலாவின் 'சாயாவாத்' சுமித்திரானந்தன் பந்த், மகாதேவி வர்மா முதலியோரால் கவர்ந்து இழுக்கப்பட்டிருந்த வேளையில் ஸ்ரீஸ்ரீ மட்டும், யஷ்பால், உபேந்திரநாத் அஷ்க், பிரேம்சந்த், ராகுல சாங்கிருத்தியாயன் போன்ற இந்தி எழுத்தாளர்களை நோக்கிக் கவர்ந்து இழுக்கப்பட்டிருந்தார். மேலும், ஸ்ரீஸ்ரீ ஃபாஜ் அகமது ஃபாஜ் சஜாத் ஜாகீர், காய்ஃபி ஆஜ்மி, மக்தும் முகைதீன் முதலியோர் மீது ஆர்வம் கொண்டவராகவும் இருந்தார். புதிய முயற்சியாக, எங்கே, யார் செய்திருந்தாலும், ஸ்ரீஸ்ரீ உடனே அதனை ஊக்கப் படுத்துவார்; தனது ஆதரவை அளித்துவிடுவார். ஸ்ரீஸ்ரீ 1943இல் 'நவ யுகால சமிதி'க்கும் அது வெளியிட்ட 'நயாகரா' வெளியீட்டுக்கும் முழுமையான ஆர்வலராகவும் ஆதரவாளராகவும் இருந்தார். 1955இன் போது, குந்துர்தி ஆஞ்சநேயலு (1922-1982) நிறுவிய 'கட்டில்லாக் கவிதை முன்னணி'யை ஸ்ரீஸ்ரீ வரவேற்று ஆதரித்தார். ஸ்ரீஸ்ரீ இவ்வாறு ஆதரித்ததோடன்றி, 'திகம்பரகவுலு' (1965) நூலிலிருந்து கவிதைகளை ஆங்கிலத்திற்கு மொழியாக்கமும் செய்தார். இறுதியாக, 1970இல் ஸ்ரீஸ்ரீ புரட்சிகர எழுத்தாளர் சங்கத்தின் (விரசம்) நிறுவுநர் தலைவராக ஆனார். 1946-50களில் ஆந்திர மகாசபையும் இந்தியப் பொதுவுடைமை இயக்கமும் நடத்திய நிஜாம் எதிர்ப்பு ஆயுதப்

போராட்டத்தின்போது, தான் செய்யாமல் விட்டுவிட்ட வேலைகளை, பழிக்குப்பழி எடுக்கும் நடவடிக்கையாக, அறுபது களின்போது, ஸ்ரீகாகுலம் ஆயுதப் போராட்டத்தை ஆதரிப்பதன் மூலம் ஸ்ரீஸ்ரீ செய்து காட்டினார். தரிமேலா நாகிரெட்டியுடன் சேர்ந்து ஆந்திரா முழுவதும் சுற்றுப்பயணம் செய்து ஸ்ரீஸ்ரீ புரட்சியாளர் களுக்கு நிதி திரட்டினார். தாகம் மிகுந்த தலைமுறையினர் படைத்த வங்காள இலக்கியத்தினாலும், இந்திமொழியின் ஜகதீஷ் சதுர்வேதி யின் 'ஆகவிதாவாத்' இயக்கத்தினாலும், மைதிலி மொழியின் 'அனாம' இயக்கத்தினாலும், மராத்தியின் 'ஆசே' குழுவினராலும் ஸ்ரீஸ்ரீ ஆரம்பத்தில் கவரப்பட்டிருந்தார். இவ்வாறு, பல்வேறு கொள்கைகளுடனும் தொடர்பு கொண்டு, அவற்றை எந்த அளவுக்கு ஸ்ரீஸ்ரீ தன்வயமாக்கிக் கொண்டார் என்று ஆராய்வது அவரது படைப்புக்கள் பற்றிய ஓர் ஆழமான ஆராய்ச்சியாகவே இருக்கும். அத்தகைய ஆராய்ச்சியை இங்கே, இந்தச் சிறிய நூலில் செய்ய இயலாது. குரஜாடாவின் மதிப்பைக் குறைக்கும் சில முயற்சிகள் நடந்தபோது, தனது குருவான குரஜாடாவை ஆதரித்து ஸ்ரீஸ்ரீ விமர்சனங்கள், கலை நுணுக்க விவாதக் கட்டுரைகள் பல எழுதினார். இலக்கிய உலகத்தில் கவனத்துக்கு உரிய ஒரு சக்தியாகத் தான் உருவாகியுள்ளதை ஸ்ரீஸ்ரீ புரிந்து கொண்டார். முன்பு வரலாற்றுச் சக்திகளால், தான் இழுத்துச் செல்லப்பட்டதாகவும், ஆனால் இனி மேல் அந்தச் சக்திகளுக்குத் தானே தலைமை ஏற்று நடத்திச் செல்லப் போவதாகவும் 1933ஆம் ஆண்டுக் காலத்திலேயே ஸ்ரீஸ்ரீ தன்னிடம் சொன்னதாகப் பூரிபந்தா தெரிவித்திருக்கிறார். ஸ்ரீஸ்ரீயின் தன்னம் பிக்கை மிகவேகமாக வளர்ந்தது; அவர் தொய்வு ஏதுமின்றித் தொடர்ந்து வளர்ந்து வந்தார். 1950ஆம் ஆண்டுக் காலக் கட்டத்தில், ஸ்ரீஸ்ரீ பற்றிக் குறிப்பிடும் போதெல்லாம் ''மகாகவி'' என்றே குறிப் பிடும் மரபு வந்துவிட்டது. அவருடைய எதிராளிகளும் கூட அவரை ''மகாகவி'' என்றே குறிப்பிட்டார்கள். பிரியமாக அழைக்கும்போது மட்டும் ''ஸ்ரீஸ்ரீ'' என்ற சுருக்கப் பெயரால் அழைத்தார்கள். இதற்கான காரணம் மிகவும் எளியது. ஸ்ரீஸ்ரீ இலக்கிய விஷயங்களில் மிகவும் குறிப்பிடத்தக்க அளவில் மேதைமை பெற்றவராக இருந்தார்; அதுமட்டுமல்ல, அவற்றை மிகவும் வலிமையுடன் எடுத்துரைப்பவ ராகவும் இருந்தார். தனது குறைபாடுகளை மறைக்காமல் விவாதிக்கும் அளவுக்கு வெளிப்படையான மனம் உடையவராகவும் அவர் இருந்தார். எப்போதும் தன்னைத் தாழ்த்திக் கொள்ளும் பணிவுடைய வராகவும் இருந்தார். யாரிடமாவது, புதுமை புதிய சோதனை முயற்சி என்பதை எந்த வடிவத்தில் பார்க்க நேர்ந்தாலும் ஸ்ரீஸ்ரீ உடனே ஊக்கப்படுத்திவிடுவார். குழந்தை மனமுடையவராக இருந்த ஸ்ரீஸ்ரீ, தன்னை, ''வயது வந்த குழந்தை'' என்றே கருதி வந்தார். அவருடைய

புத்திசாலித்தனமும், பதில் சொல்லும் ஆற்றலும் ரசிக்கத்தக்கனவாய் இருந்தன. அவர் எப்போதும் நண்பர்களுக்கும், முன்பின் தெரியாத வர்களுக்கும் கூட, உதவி செய்பவராக இருந்தார். அவரது வறுமை பற்றியோ, தேவைகள் பற்றியோ அவர் யாரிடமும் வெளிப்படுத்திக் கொண்டதேயில்லை. அவர் ஒரு குறிப்பிடத்தக்க கவிஞராகவும் இருந்தார்; குறிப்பிடத்தக்க மனிதராகவும் இருந்தார்; சுவைமிக்க சம்பாஷணைக்காரராகவும் இருந்தார்; ஆனால் பொதுக்கூட்டங்களில் நல்ல பேச்சாளராக அவர் இல்லை; அவருடைய குறைபாடுகளை, அவரைப் பின்பற்றிய இளைய தலைமுறையினர் ஒரு பொருட்டாகக் கருதவில்லை. அவர் ஆந்திராவில் அனைவராலும் அறியப்பட்டவர் ஆகிவிட்டார். அவருடைய சில வித்தியாசமான குணாம்சங்களும் கூட, மக்களுக்கு அவரைப் பிரியமானவராகவே ஆக்கியிருந்தன. ஸ்ரீஸ்ரீ வாழ்ந்த காலத்தில் குரஜாடா உட்பட, ஸ்ரீஸ்ரீயைப் போல் புகழ் பெற்ற இன்னொரு தெலுங்கு எழுத்தாளர், மக்களுக்குப் பிரியமான எழுத்தாளர் ஆந்திராவில் இல்லை என்றே சொல்லிவிடலாம்.

4. ஸ்ரீஸ்ரீயின் படைப்புக்கள்

பதினைந்தாம் நூற்றாண்டில் வேலங்கி தாத்தம்பட்டு எழுதிய புகழ்பெற்ற *'சுலக்ஷண சாரமு'* என்ற இலக்கண நூலை ஸ்ரீஸ்ரீ தனது எட்டு வயதுப் பருவத்தின்போதே அறிந்திருந்தார். அப்போதிருந்தே, தான் கவிதை படைக்க ஆரம்பித்து விட்டதாக ஸ்ரீஸ்ரீ கூறியிருக்கிறார். தன் தந்தையாருடன் பணிபுரிந்த வேதகேசவ ராவ் என்பவர் மூலம் *'அப்பகவியமு'* என்னும் இலக்கண ஆய்வு நூலையும் பத்து வயதாக இருக்கும் போதே தான் கற்றுக் கொண்டதாகவும் ஸ்ரீஸ்ரீ கூறியுள்ளார். ஸ்ரீஸ்ரீ எழுதியுள்ள 'அனந்தம்' என்னும் சுயசரிதை நூலில் தனது குழந்தைப் பருவ நிகழ்ச்சிகளாகக் குறிப்பிடும் அனைத்து நினைவு களும் ஒருவேளை மிகவும் துல்லியமானவையாக இல்லாதிருக் கலாம்; ஆனால் ஸ்ரீஸ்ரீ தனது இளமைப் பருவத்தின் போதே எழுதத் தொடங்கிவிட்டார் என்பதை ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும். தான் எழுதி, வெளியிட்டு, பின்னர் தொலைந்து போய் விட்டன என்று ஸ்ரீஸ்ரீ சில புத்தகங்களைக் குறிப்பிடுகின்றார். ஆனால் அவற்றை யெல்லாம் தேடிக் கண்டு பிடிப்பது என்பது இயலாத காரியம். அவரால் குறிப்பிடப்பட்டு, இப்போது கண்டுபிடிக்கப் படாதவற்றுள் முதன்மையான நூல் ஒரு சிறிய நாடக நூல். ''சாவித்திரி சத்திய வந்துலு'' என்ற அந்த நாடக நூல், முப்பதிலிருந்து நாற்பது பக்கங்களுக்குள் இருக்கலாம். அந்த நூல் மிகவும் பழைமையான மரபுவழி யாப்பில் எழுதப்பட்டது; உரை நடை வரிகளும் சிற்சில இருக்கும்; இரண்டாவது நூல் ஒரு குறுநாவல்; 'பரிஞ்ஞாயரகஸ்யமு' என்னும் அந்தக் குறுநாவல் இப்பொழுதுதான் அண்மைக் காலத்தில் கண்டுபிடிக்கப்பட்டது. மூன்றாவது நூல் 'கோகுலாய்' என்ற ஒரு துப்பறியும் நாவல்; இந்த நாவல் 'காலூரே' என்ற ஒரு புகழ்பெற்ற வங்காளிப் படைப்பை மாதிரியாகக் கொண்டு படைக்கப்பெற்றது. காணாமல் போனவற்றுள் கடைசி எனக் கருதப்படுவது ''வீரசிம்ஹ,

விஜயசிம்ஹலு''- என்னும் பெயர் கொண்ட படைப்பு; இது தேசபக்தியை அடிப்படையாகக் கொண்ட ஒரு புனைகதைப் படைப்பு. ஸ்ரீஸ்ரீ படைத்து, பின்னர் கண்டு பிடிக்க முடியாமல் போனவை (இரண்டாவதாகச் சொல்லப்பட்டது நீங்கலாக) என்று சொல்லப்படும் படைப்புக்கள் அனைத்தும் ஸ்ரீஸ்ரீ உயர்நிலைப் பள்ளியின் தாழ்வாரத்தைவிட்டு வெளியேறுவதற்கு முன்னதாகவே படைக்கப்பட்டவை ஆகும். காணாமல் போய் விட்டவையாகக் கருதப்படும் படைப்புக்கள், ஸ்ரீஸ்ரீயின் மனம் இளம் வயதில் எவ்வாறு படைப்புப் பணியில் லயித்துக் கிடந்தது என்பதற்கான வெறும் உதாரணங்களாக மட்டுமே நிலவுகின்றன.

தனது வாழ்நாளில் ஸ்ரீஸ்ரீ செய்து முடிக்க வேண்டும் என்று விரும்பி, முடிக்க முடியாமல் போன சில இலக்கியப் பணிகளும், வேறு பிற பணிகளும் இருந்தன. ''பெண்டைய காரி கதி'' (பெந்தைய்யாவின் பாசறை) என்னும் பெயரில் மூன்று காட்சிகள் கொண்ட ஒரு நாடகம் எழுத வேண்டும் என்று ஸ்ரீஸ்ரீ விரும்பினார். இப்படி ஒரு நாடகம் படைக்க வேண்டும் என்ற எண்ணம் ஒரு திடமான உருவத்தை அடையாத நிலையிலேயே, அவருடைய மனத்தளவில் நாற்பதாண்டுக் காலம் இருந்து வந்தது. கிருஷ்ண லீலைகள் என்பனபற்றி அவர் வேறுசில கருத்துக்கள் கொண்டிருந்த போதிலும் 'கிருஷ்ண நாடகலு'- என்ற பெயரில் ஒரு படைப்பு படைக்க ஸ்ரீஸ்ரீ விரும்பியிருந்தார். ''சா...சா'' (சாகித்யமும் சாம்ய வாதமும் அல்லது இலக்கியமும் சமதர்மமும் என்பதன் சுருக்கம்) என்ற பெயரில் ஒரு விமர்சனப் படைப்பு எழுத வேண்டும் என்றும் ஸ்ரீஸ்ரீ வேட்கை கொண்டிருந்தார்; ஆனால் அவ்வாறு எழுத இயலாமல் போய்விட்டது என்று அவரே ஒப்புக் கொண்டார். வெளியில் அதிகம் பேசப்படாத மனிதர்கள் பற்றி விளக்கி நூறு பாடல்கள் கொண்ட ஒரு கவிதைப் படைப்பு எழுத வேண்டும் என்றும் அதற்கு 'ஏதி நேரம்? ஏதி சிட்ஷா?' (எது குற்றம்? எது தண்டனை?) என்று பெயரிட வேண்டும் என்றும், ஸ்ரீஸ்ரீ ஆசைப்பட்டார். மிகவும் பிந்திய வயதுக் காலத்தில், ''ஹம்ஸதோ ஆமெல்லு'' (அன்னப் பறவையுடன் ஆறு மாதங்கள் அல்லது மகர்ஷி) என்ற பெயரில் ஒரு நாவலும் கூட எழுத வேண்டும் என்று ஆசைப்பட்டார். விசாகையின் அடித்தட்டு மக்கள், நடுத்தர அடித்தட்டு மக்கள் ஆகியோரின் மொழியில் நூறு கவிதைகள் படைக்க வேண்டும் என்றும் ஸ்ரீஸ்ரீ விரும்பினார். 'ஆகலி மந்தலு' (பசியின் ஜ்வாலைகள்) என்ற நாவலை எழுதி, திரைப்படக் கதையாக ஆக்கி, பின்னர் ''ருக்மிணிகல்யாணம்'' (ருக்மிணிதிருமணம்) என்ற பெயரில் படமாகவும் ஆக்கிவிட வேண்டும் என்றும் ஸ்ரீஸ்ரீ எண்ணியிருந்தார். நீண்ட நாள்கள் வரையிலும் இவற்றையெல்லாம் எழுதமுடியாதவாறு

அவரைத் தடுத்தது எது என்பது புரியாத புதிராகவே உள்ளது. ‘வைஷாக்’ என்றும் ‘பாஷன்’ என்றும் இரண்டு புனை பெயர்களைத் தனக்கு வைத்துக் கொள்ள வேண்டும் என்றும் ஸ்ரீஸ்ரீ யோசித்திருந்தார். ஆனால் அவ்விரண்டு பெயர்களையும் ஸ்ரீஸ்ரீ பயன்படுத்தவே இல்லை. ஸ்ரீஸ்ரீ ‘எம்.எஸ்ஸி’ பட்டமும், ‘எல்எல்.பி ’ பட்டமும் படித்துப் பெற விரும்பினார்; ‘ஆசாந்தி’ (அமைதியின்மை) என்ற பெயரில் ஓர் இதழும் ஆரம்பிக்க விரும்பினார்; இவையும் நிறைவேறவில்லை. ‘சிங்கி குட்டல சிம்ஹம்’ (கிழிந்த அங்கி அணிந்த சிங்கம்) என்ற கவிதை எழுதி அதுவும் முடிவு பெறாமலேயே நின்றுவிட்டது என்றும் ஸ்ரீஸ்ரீ தெரிவித்துள்ளார். 1950-ஆம் ஆண்டுக்கு முன்னதாகவே, ஸ்ரீஸ்ரீ சுயசரிதத்தை எழுதி வெளியிடத் தொடங்கி விட்டார். 1980-ஆம் ஆண்டு வரை அது தொடர்ந்து வெளியாகி வந்தது. தனது சுயசரிதத்தில், கண்ணியமான வாசகர்கள் தாங்கிக் கொள்ள முடியாத தன்னுடைய செயல்கள் அல்லது தவறுகள் பலவற்றை ஸ்ரீஸ்ரீ குறிப்பிட்டுத்தான் உள்ளார்; என்றாலும், அந்தச் சுயசரிதை நூலில், தனது பலவீனங்கள், தோல்விகள் அனைத்தையும் விரிவாகச் சொல்லிவிடவில்லை என்றும், தன்னைச் சுற்றியுள்ள சமூகத்தைச் சந்திப்பதற்குத் தனக்குச் துணிச்சல் இல்லை என்றும் ஸ்ரீஸ்ரீ சொல்லியிருக்கிறார். குறிப்புரைகளோடும், சாதுர்ய மொழிகளோடும் வேடிக்கைக் கருத்துக்களோடும், கூர்மையான சொடுக்கு உரைகளோடும் கூடிய சில இழிசுவைப் பகுதிகளையும், எந்தவித முன் ஆயத்தமும் இன்றி, அந்தந்த நேரத்தில், தனிச் சுற்றுக்காக ஸ்ரீஸ்ரீ எழுதினார். இவையெல்லாம், ஸ்ரீஸ்ரீ என்ற பெரிய எழுத்தாளனின் இன்னொரு கோணத்தை எடுத்துக் காட்டும் ஒரு கூறாக அமைந்தனவே அன்றி, அவருடைய இலக்கிய அல்லது தனிப்பட்ட பண்பு நலன்கள் சம்பந்தப்பட்ட தோல்வியைக் காட்டுவனவாக அமையவில்லை; அவருடைய கவர்ந்து இழுக்கும் ஆற்றலைக் குறைப்பதாக அமையவில்லை; அவரது இலக்கிய அந்தஸ்தைக் குறைப்பதாகவும் அமையவில்லை. ஒளிவு மறைவு இல்லாத வெளிப்படையான அவருடைய இத்தகைய பண்பானது, சாதாரணமாகக் கிடைத்திருக்கக் கூடிய அன்புணர்வைக் காட்டிலும் மிகுதியான அன்புணர்வையே அவருக்கு உண்டாக்கித் தந்தது.

ஸ்ரீஸ்ரீக்கு முதன்மையான ‘இருப்பிடம்’ கவிதைதான்; கவிதைத் துறையில், அவர் காலத்திய கவிஞர்கள், அவர்களில் மூத்தவர்கள், இளையவர்கள் முதலிய அனைவர் மீதும் ஸ்ரீஸ்ரீ தலை உயர்த்தி, தோள் உயர்த்தி, நிமிர்ந்து நின்றார். இவ்வாறாக, கவிதைத் துறையில் மட்டுமின்றி, பிற துறைகளிலும் தனது பங்களிப்பைச் செய்தார்; சிறு நாடகங்கள், சிறு கதைகள், விமர்சனக் கட்டுரைகள், நூல் மதிப்புரைகள் என்றும் ஸ்ரீஸ்ரீ எழுதினார். நிறைவு செய்யப்படாத

அவரது சுயசரிதையும் இவற்றுள் அடங்கும். சிறிதும் பெரிதுமான தனது கவிதை முதலிய படைப்புக்களையும் பிறருடைய படைப்புக்களையும் ஆங்கிலத்திலிருந்தும், ஆங்கிலத்துக்குமாக ஸ்ரீஸ்ரீ மொழிபெயர்ப்பும் செய்தார். பல்வேறு காலக் கட்டங்களில், அவர் அளித்த மிக விரிவான 'நேர் காணல்'கள் இலக்கிய அந்தஸ்துப் பெற்றவை; மிகவும் புகழ் வாய்ந்தவை; நேர்படப் பேசியவை; ஒளியும் பிரகாசமும் உடையவை. ஸ்ரீஸ்ரீயின் படைப்புக்களுக்குள், அவை எந்த வகையைச் சார்ந்ததாக இருந்தாலும், அவற்றுள் முதன்மையானவை பற்றி நாம் இங்கே முதலில் ஆராய்வோம்; பிறவற்றைப் பின்னர் பார்ப்போம். ஸ்ரீஸ்ரீயின் வெளியீடுகள் பற்றிய காலவாரியான அட்டவணை இந்த நூலின் இறுதியில் பின்னிணைப் பாகத் தரப்பட்டுள்ளது. அவருடைய அனைத்துப் படைப்புக்களும் 'விரசம்' அமைப்பின் மூலமாக 20 தொகுதிகளாக வெளியிடப் பட்டுள்ளன.

'பிரபவா'- என்னும் கவிதைப் படைப்புத்தான் ஸ்ரீஸ்ரீயின் முதலாவது முக்கியத்துவமான படைப்பு ஆகும். இது எழுதி முடிக்கப்பட்ட ஓராண்டுக்குப் பிறகு, அதாவது 1928-இல், விசாகையின் 'கவிதா சமிதி'யினால் வெளியிடப்பட்டது. அப்போது ஸ்ரீஸ்ரீக்கு வயது வெறும் பதினேழுதான்! தேவுலபள்ளி கிருஷ்ண சாஸ்திரியின் 'பாவ கவிதா' முறையைப் பின்பற்றி தன்னுணர்ச்சிப் பாணியில் இது அமைந்திருந்தது. ஆனால் நூலின் யாப்பு, மரபு வழியிலும், மொழிநடை நவீனச் செவ்வியல் நடையிலுமாய் அமைந்திருந்தன; 'பிரகிருதி' (இயற்கை) 'பிரணயம்' (காதல்), 'பிரகீர்ணயம்' (பல்வகை) என மூன்று பகுதிகளைக் கொண்டிருந்தது; இந்தப் படைப்பு, பல்சுவையால் அமைந்த மிக நீண்ட உரையாட்டுப் போக்கினாலும், சரியான சொல்லாட்சித் திறத்தினாலும், தன்னுணர்ச்சிக் கவிஞர்கள் குழுவில் மதிப்பு மிகுந்த உறுப்பினர் என்ற ஸ்தானத்தை ஸ்ரீஸ்ரீக்குப் பெற்றுத் தந்தது.

'சுப்தாஷிகலு' (உறங்கும் எலும்புகள்) என்னும் கவிதை 1929-இல் எழுதப்பட்டது. இது 'பாரதி' என்னும் புகழ்பெற்ற இலக்கிய இதழுக்கு அனுப்பப்பட்டது. பிரசுரிப்பதற்கு இயலாது என்று அதன் ஆசிரியர்களால் மறுக்கப்பட்டு, அடுத்த தபாலிலேயே திருப்பி அனுப்பப்பட்டு விட்டது. மகாத்மா காந்தியின் (1869-1948) மரணத்தால் மக்களிடையே ஏற்பட்ட துன்ப துயரங்களின் எதிர் விளைவுகள் என்பதை மையக் கருத்தாகக் கொண்டு 'சுப்தாஷிகலு' என்ற அதே தலைப்பில் ஒலிபரப்பப்பட்ட வானொலி நாடகம் ஒன்றில், பின்னாளில் அந்தக் கவிதையின் சில பத்திகள் சேர்க்கப்பட்டு ஒலிபரப்பு ஆகியது. கவிதையின் வருணனைப் பகுதிகள் உயர்தனிச்

செம்மொழி நடையில் அமைந்திருந்தன; யாப்பும் மரபு வழி யாப்பாக இருந்தது. அழுது புலம்பும் சோகக் காட்சிகளும் அறிவிப்புப் பகுதிகளும் இசைப்பாடல் வடிவத்திலும் பேச்சுவழக்கு நடையிலும் அமைந்திருந்தன. ஸ்ரீஸ்ரீ இப்படைப்பில் குறியீட்டு உத்தியைப் பயன்படுத்தியிருந்தார். 'அஸ்திகலு' (எலும்புகள்), 'சந்தியா' (பொழுது மயங்கும் நேரம்) இரண்டும் மரணத்துக்கு உரிய 'குறியீடுகளாக' ஆளப்பட்டுள்ளன. 'அந்தகாரம்' (இருட்டு) 'நட்ஷத்திரம்' (விண்மீன்) ஆகியவை முறையே 'மனவெறுப்பு' 'காதல்' ஆகியவற்றுக்குரிய 'குறியீடு'களாக ஆளப்பட்டுள்ளன. இந்தச் சிறுநாடகத்தில் காந்தியடிகள் பார்வைக்குப் புலப்படாத பின்னணிப் பாத்திரமாக வருகின்றார். மிகப்பெரிய ஆத்மாவாகிய இவரது மரணத்தால் அகில உலகமே இமாலய அளவில் நெஞ்சம் வெந்து நொறுங்கிப் போனது; மக்கள் கங்கையைப் போல் கண்ணீர் வடிக்கிறார்கள். மகாத்மா என்பவருக்கும் கூட மரணம் என்பது தவிர்க்க முடியாத ஒன்றாக இருக்கலாம்; அறிஞர் ஒருவருடைய இழப்புக்காகத் துக்கம் மேற்கொள்வதன் மூலம் இந்த உலகம் சரி செய்யப்படலாம். ஆனால் கவிஞன் ஒருவன், பின் விளைவுகளாக, அவலக் குழப்பம் நேரிடலாம் எனத் தொலை நோக்காய் உணர்வதும் உண்டு. அப்படி உணர்ந்து, அவலக் குழப்பத்தைக் கவிஞன் ஒருவன் முதிர்ச்சியின்றி சாதாரணமாகப் படைத்து விடுவானாகில் அது, அறிவார்ந்த முறையில், மகாத்மாவின் அபிமானியாக விளங்கும் ஒருவரைத் துன்புறுத்தவே செய்யும். ஆனால் ஸ்ரீஸ்ரீ என்ற கவிஞனது நிலை வேறுவிதமாக இருந்தது. மகாத்மாவின் மரணத்துப் பின்விளைவுகளைப் படைத்தளித்த ஸ்ரீஸ்ரீயின் கவித்துவம், மேன்மையானதாகவும், கவிஞரின் மனநிலையையும் இயல்பு கடந்த உளவியலையும் காட்டுவதாகவும் அமைகிறது.

''மகாப்ரஸ்தானம்''

முப்பதுகளின் காலக்கட்டம் பசிமிக்கதாக இருந்தது; பொருளாதார அழுத்தம் மிகுந்ததாகவும் இருந்தது. அந்தக் காலக் கட்டத்தையும் ஸ்ரீஸ்ரீ கடந்து வந்தார். அவருடைய தலையாய படைப்பு என்று புகழப்படுகிற 'மகாப்ரஸ்தானம்' என்னும் கவிதைத் தொகுதியை 1934-1940ஆம் ஆண்டுகளுக்கு இடையில் எழுதி வெளியிட்டார். இந்தக் காலக் கட்டத்தில் அவர் எழுதிய எல்லாக் கவிதைளையும் இந்தத் தொகுதியில் கவிஞர் சேர்க்கவில்லை. 'உலகம் தழுவிய மானுடத்தின் துன்பங்கள்' - என்னும் முக்கியமான மையக்கருத்தைத் தாங்கிய கவிதைகள் மட்டுமே தேர்வு செய்யப் பட்டுத் தொகுக்கப்பட்டன. இப்போது கிடைக்கிற தொகுப்பு வடிவம்

1950-ஆம் ஆண்டின் போதுதான் முதன் முதலில் வெளியாயிற்று. மசூலிப்பட்டம் நளினிகுமார் என்னும் நண்பர் செய்த அறக்கட்டளையின் உதவியால்தான் இந்த வடிவத்தில் நூல் வெளியானது. மிகவும் இளவயதிலேயே இறந்து போனவரும் 'உதயிணி' என்னும் இலக்கிய இதழின் ஆசிரியருமான கொம்பள்ளி ஜனார்தன ராவுக்கு ஸ்ரீஸ்ரீ இந்த நூலைச் சமர்ப்பணம் செய்திருந்தார். 'நளினி குமார்' (1915-76) என்பது உண்டவல்லி சூரிய நாராயணாவின் (பாணவி பாணியின் ஆசிரியர், சிறிய கவிஞர்) புனை பெயர்; இவர் நல்ல செல்வந்தர். சென்னையில் ஸ்ரீஸ்ரீ இருந்தபோது மிகவும் நெருக்கம் ஆகியவர்; ஸ்ரீஸ்ரீயுடன் சில வழிகளில் இணைந்து செயல்பட்டவரும் கூட. கொம்பெல்ல பெரிய மேதை; செவ்விலக்கியவாதியாகவும் மரபிலக்கிய வாதியாகவும் இருந்தார்; மரபுக்கு எதிரான முரண்பட்ட சிந்தனைகளையும் கூட ஏற்றுச் சகித்துக் கொண்டார். மிகக் குறைந்த வசதி என்ற நிலையிலும், இலக்கியத்தைப் பரப்புவதற்காக என்றே ஓர் இதழ் தொடங்குகிற அளவுக்கு அவர் மிகுந்த ஆர்வம் உடையவராக இருந்தார். அந்த இலக்கிய இதழுக்குத் தேவைப்படும் பொருளாதாரத்தைத் திரட்ட முடியவில்லை; தான் மட்டுமே அதற்கு விட்ட வழி என்ற நிலை உருவானபோது, அவர் இதயம் நொந்து போனார். ஸ்ரீஸ்ரீ பெர்ஹாம்பூர் மாநாட்டில் அவரைச் சந்தித்தார். 'பிரபவா' பற்றிய அவரது விமர்சனத்தைத் தான் ஏற்றுக் கொள்வதாகத் தெரிவித்தார்; அவருக்கு மிகவும் நெருங்கியவராகவும் ஆனார். சலம் (குடிபாடி வேங்கடாசலம், 1894-1979) அன்று இலக்கிய உலகில் சர்வ வல்லமை படைத்தவராக இருந்தார். 'மகாப்ரஸ்தானம்' படைப்புக்கு அவர் வழங்கியிருந்த முன்னுரை சிறப்பான அம்சமாக அமைந்திருந்தது. தொகுப்பு நூலுக்குள் அடங்கியிருந்த 'மகாப்பிரஸ்தானம்' என்னும் கவிதையை காக்கிநாடாவில் நடந்த கம்யூனிஸ்ட் இளைஞர் மாநாட்டில் ஸ்ரீஸ்ரீ அப்படியே ஒப்புவித்தார்; அடவி பாப்பிராஜு, ஸ்ரீரங்கம் நாராயணபாபு போன்றவர்களுக்கு அந்தக் கவிதை கிளர்ச்சியும் ஆர்வமும் ஊட்டிவிட்டது; பின்னர் ஸ்ரீஸ்ரீயைப் போலவே அவர்களும் அந்தக் கவிதையை ஒப்புவிக்கத் தொடங்கி விட்டார்கள்; முத்துக் கிருஷ்ணா 'ஜ்வாலை' என்ற தனது பத்திரிகையில் அந்தக் கவிதையை வெளியிட்டார். இந்தத் தொகுப்பு நூலில், 'சேது பாட்ட' (கசப்புப் பாடல்) என்ற ஒரு கவிதை இருக்கிறது. ஒரு முறை, இலக்கிய மேதையும் அங்கத எழுத்தாளருமான ஜலசுத்ரம் ருக்மிணிநாத் சாஸ்திரி (1914-68) இந்தக் கவிதையை சலம் அவர்களிடம் வாசித்துக் காண்பித்தபோது, சலம் அவர்களின் கண்களில் கண்ணீர் ததும்பிவிட்டது. ''கவிதா! ஓ! கவிதா!'' என்று ஒரு படைப்பு; இந்தப் படைப்பைக் கேட்க நேர்ந்த விசுவநாதா எழுந்து வந்து ஸ்ரீஸ்ரீயை அப்படியே இறுகக் கட்டித் தழுவிக் கொண்டார்.

அந்தக் கவிதையைத் தான் வெளியிடப் போவதாகவும் விசுவநாதா சொன்னார். ஸ்ரீஸ்ரீயின் கவிதைகளுள் மிகச் சிறந்த கவிதை எனப் பாராட்டப்படும் இந்தக் கவிதையும் தொகுதியில் இடம் பெற்றிருக் கிறது. 'மகாப்பிரஸ்தானம்' வெளிவருவதற்கு நீண்ட காலம் முன்னதா கவே ஸ்ரீஸ்ரீ இலக்கிய உலகில் மிகுந்த புகழ் பெற்றவர் ஆகிவிட்டார். அதற்குக் காரணம், அவரது படைப்பின் உள்ளார்ந்த இலக்கியச் சிறப்புக்கள் மட்டுமல்ல; தேவுலபள்ளி, அடவி பாப்பி ராஜு போன்றவர்கள் ஸ்ரீஸ்ரீ படைத்த சில கவிதைகளைப் பொதுக் கூட்ட மேடைகளில் எடுத்துப் பாடி வந்ததும் காரணம் ஆகும். சலம் வழங்கியிருந்த 'யோக்யதா பத்திரம்' (தகுதிச் சான்றிதழ்) தொகுதியில் இருந்த கவிதைகளுக்கு இணையான கவித்துவம் உடையதாகவும், வேகம் உடையதாகவும், கவர்ந்து இழுக்கும் ஆற்றல் உடையதாகவும் அமைந்திருந்தது. 'மகாப் பிரஸ்தானம்' தொகுதி 1952-1984 ஆம் ஆண்டுகளுக்கு இடையில் இருபது பதிப்புக்கள் வெளி வந்துள்ளது; இன்று தேதி வரைக்கும் எல்லையற்ற புகழ் வாய்ந்த நூலாகவும் அது இருந்து வருகிறது. 1984-க்குப் பிறகும் அது மேலும் மூன்று பதிப்புக்கள் கண்டுள்ளது. அறிஞர்களும் மாணவர்களும் கூட இந்தக் கவிதைகளின் அடிகள்தரும் கருத்துக்களை உச்சரித்துக் கொண்டிருந்தார் கள். லண்டனில் இருந்த, டாக்டர் கூட்டால கிருஷ்ணமூர்த்திக்கு உரிய 'விதேசாந்திர பிரகுரணாலயம்' என்னும் நிறுவனம், ஸ்ரீஸ்ரீயின் கவிதைகளை அவரது குரலிலேயே பதிவு செய்து வெளியிட்டது; அவரது கையெழுத்திலும் வெளியிட்டது. காட்சிப் பெட்டிகளில், காட்சிப் பொருளாக 'என்சைக்ளோ பீடியா பிரிட்டானிக்கா' போன்ற அருமையான தொகுதிகளைப் பெருமையுடன் வைப்பது போல, ஸ்ரீஸ்ரீயின் கவிதைகள் பதிவு செய்யப்பட்ட ஒலி நாடாக்களைக் காட்சிப் பொருளாக வைப்பது சமுதாயப் பெருமையின் அடையாள மாகவே ஆகிவிட்டது. வாழும் கவிஞனுக்கு அவர் வாழ்நாளின் போதே கிடைத்த அருமைக்குரிய பெருமை இது! ஸ்ரீஸ்ரீ கவிதைகளில் இன்னும் சில கவிதைகள் இன்னிசைக் குழுவினரால் இசையமைக்கப் பட்டு இசைக்கப்பட்டன; நாடறிந்த கதைப் பாடல் வடிவங்களில் தழுவிக் கொள்ளப்பட்டன; திரையிலும் பயன்படுத்தப்பட்டன.

தலைசிறந்த, இலக்கிய சாதனை படைத்த 'மகாப் பிரஸ்தானம்' என்னும் இந்தப் படைப்புபற்றி, இன்னும் சிறிது விரிவாக விவாதிப்பது நல்லது. இறுதியில் உள்ள சமர்ப்பணக் கவிதை நீங்கலாக இந்தப் படைப்பில் நாற்பது கவிதைகள் இருக்கின்றன. முதலாவதாக உள்ள கவிதை அணிவகுப்புக் கவிதை ஆகும். அதன் தலைப்புத்தான் நூலின் பெயராகவும் அமைந்துள்ளது. இந்தப் படைப்பு ச்ஸ்ட்லா உமா மகேஸ்வரராவின் 'மாரோ, மாரோ' (முழங்கு, முழங்கு) என்பதற்குப் போட்டியாக இருந்தாலும், இது

எட்கர் ஆலன்போ எழுதிய 'தி பெல்ஸ்' படைப்பின் தூண்டுதலினால் எழுதப்பட்டதாகும். இந்தக் கவிதை இளைஞர்களை நோக்கி, "எதிர்ப்படும் தடைகளையெல்லாம் புறந்தள்ளி விட்டு அணிவகுத்து முன்னேறு! புதியதோர் உலகம் படைக்க முன்னேறு! செம்பதாகையின் கீழ் முன்னேறு!"- என்று மன்றாடிக் கேட்டுக் கொள்கிறது. "ஹரோ! ஹரோ! ஹர!" என்ற போர் முழக்கத்தையும் கவிதையில் அவர் கொடுத்திருக்கிறார். மதச் சார்பான வாசகங்களையெல்லாம் ஸ்ரீஸ்ரீ மதச்சார்பற்ற குறியீடுகளாக உருவாக்கித் தந்திருக்கிறார். அன்றிலிருந்து இன்றுவரை, அவர் உருவாக்கிய வாசகங்கள், தீவிரக் கொள்கையுடையோர் கூட்டங்களிலும் மிதவாதக் கொள்கையினர் கூட்டங்களிலும் எல்லையற்ற புகழ் பெறுவதாக அமைந்துவிட்டன. இந்த அணிவகுப்புப் பாட்டு பின்னாளில் திரைப்படத்திலும் பயன் படுத்தப்பட்டது. புகழ் பெற்ற நாடக நடிகர் பந்த கனகலிங்கேஸ்வர ராவ் அந்தப் பாடலைப் பாடினார். இரண்டாவது கவிதை மிகவும் ஆழ்ந்த, அகவயமான கவிதை; மனத்தால் நினைத்தாலும் சரி, இசையரங்கில் உரக்கப் பாடினாலும் சரி, தன்னை ஒரு கவிதையாகவே வெளிப்படுத்திக் கொள்ளும் புரட்சிகரமான இக்கவிதை மூலம், ஸ்ரீஸ்ரீ தன்னை அடையாளம் காட்டிக் கொள்கிறார். கவிதையின் இறுதியில், ஸ்ரீஸ்ரீ தனது இந்த அணிவகுப்பு, "நிறுத்தப்பட முடியாதது, யாராலும் இது போலச் செய்து காட்ட முடியாததும் ஆகும்!" என்று தீர்க்க தரிசனமாய் அறிவிக்கின்றார். "ஜெய பேரி" (வெற்றி முழக்கும் இசைக் கருவி) என்னும் மூன்றாம் கவிதை, மனிதருள் ஒருவராகத் தன்னைப் பிரதிநிதித்துவப் படுத்திக் கொள்ளும் கவிஞன், தனது பங்களிப்பாக, உலகளாவிய உயரத்திற்குத் தான் எவ்வாறு உயர்ந்து செல்ல முடியும் என்பதையும், சமுதாயத்தில் சமாதானத்தையும், நல்லிணக்கத்தையும் எவ்வாறு உருவாக்க முடியும் என்பதையும் விவரித்துச் சொல்வதாக அமைகிறது. இந்தக் கவிதையின் இறுதி ஒன்பது அடிகள் இலக்கிய வட்டாரங்களிலும் அரசியல் கூட்டங்களிலும் அடிக்கடி மேற்கோளாகக் காட்டப் படுகின்றன.

'அபியுதயம்' (முன்னேற்றம்) என்ற நான்காம் பாடல், இரண்டாம் உலகப் போர் என்னும் பேரழிவுக்குப் பிறகு தோன்றக் கூடிய, ஒரு புதிய உலகின் விடியலைக் காட்சிப்படுத்திச் சொல்லு கிறது. 'அவதாரம்' (உருவம் எடுத்தல்) என்னும் அடுத்த பாடலில், புதிய விடியலுக்குப் பிறகு உலகில் என்ன நிகழும் என்று பௌராணிக உருவகங்களால் குறியீட்டு விளக்கம் தருகிறார் கவிஞர். ஆனாலும், ஒரு புதிய உலகம் உருவாகிக் கொண்டிருக்கிறது என்பதையும் உறுதிப்படுத்துகிறார். 'ஜ்வாலா தோரணம்' (அனல் வட்டம்) என்னும் பாடல் 'புதிய உலகம் உருவாகிக் கொண்டிருக்கிறது'

என்னும் கருவையே பின்பற்றி விரித்துச் சொல்வதாக அமைகிறது; இந்தக் கவிதை மரபு வழி யாப்பில் அமைந்துள்ளது; ஆனால் ரீதி முழுவதும் புதிதாக உள்ளது.

ஸ்ரீஸ்ரீயின் 'நவகவிதை' (இக்காலக் கவிதை) என்ற படைப்பு, புதிய கவிதைக்குரிய அம்சங்களையெல்லாம் ஒவ்வொன்றாய் அடுக்கிச் சொல்லி, புதிய இக்காலக் கவிதைக்கு ஊக்கம் தருவதாக அமைகிறது. ஒரு வகையில் பார்த்தால் ஸ்ரீஸ்ரீயின் இந்த 'நவகவிதை' புதிய கவிதையில் என்ன என்ன இருக்க வேண்டும் என்று காட்டுகின்ற அட்டவணைதான்; ஆனால், ஸ்ரீஸ்ரீ இதில், புதிய கவிதைக்குரிய பாடுபொருள் பற்றியும், நோக்கம் பற்றியும் விளக்கிக் கூறுகின்றார். இந்த அட்டவணைப் பட்டியலில் 'சிவப்புத் தன்மை', 'அழுத்தம்' 'வலிமை' 'குறிக்கோளோடு அச்சுறுத்தும் தன்மை' 'அழித்துப் போடுதல்' 'தடுக்க முடியாத தன்மை' ஆகிய அம்சங்கள் இடம் பெற்றுள்ளன. இக்காலப் புதிய கவிதைக்கு, தன் அளவிலும், செயல்பாட்டுப் புற அளவிலும் என்னவெல்லாம், எப்படியெல்லாம் அமைதல் வேண்டும் என்று விவரிக்கும் போது, தன்னைத் தானே இயக்கிக் கொள்ளும் தன்மை, மக்களை முன்னோக்கி அணி வகுக்கத் தூண்டும் இயல்பு, தனக்குள் ஏற்படும் மாறுதல்களை உள்ளடக்கிக் கொள்ளும தன்மை ஆகியவற்றைப் பெற்றிருக்க வேண்டும்; அதே நேரத்தில் வாழ்க்கையின் அனைத்துத் திசைகளிலும் ஒரு மாறுதலைத் துரிதப்படுத்தும் தன்மை பெற்றிருக்க வேண்டும்; தனக்குத் தானே இசைத்துக் கொள்ளும் தன்மையும பெற்றிருக்க வேண்டும்; அது போலவே பிறரையும் இசைக்கத் தூண்டும் தன்மையும் பெற்றிருக்க வேண்டும்; மக்களை அவர்களுடைய தூக்க நிலையிலிருந்து உசுப்பி விடுவதாகவும் இருக்க ண்டும்; அவ்வாறு உசுப்பிவிட்டு அவர்களது முற்போக்குப் பயணத்திற்குத் தலைமை ஏற்று அழைத்துச் செல்வதா கவும் இருக்க வேண்டும்; இறுதியாக, மக்களின் வாழ்க்கையை அர்த்தமுள்ளதாகவும் முழுமையானதாகவும் இக்காலப் புதிய கவிதை செய்யக் கூடிய தன்மை பெற்றிருக்க வேண்டும் என்கிறார். ஸ்ரீஸ்ரீ உருவாக்கிய படிமங்கள், அவர் பயன்படுத்திய மூல விஷயங்கள் அனைத்தும் புதுமையானவையாக இருந்தன. தற்காலப் புதிய கவிதைக்கு ஒரு வழிகாட்டுநர் போலவே அமைந்த ஸ்ரீஸ்ரீ கவிதைக்குரிய திசைவழி இது எனக் காட்டினார்; குறிக்கோள் இதுவெனக் காட்டினார். இந்தக் காலக் கட்டத்தில் ஸ்ரீஸ்ரீ, விஸ்வநாதா, தேவுல பள்ளி முதலியோரிடமிருந்து பெற்ற தன்னுணர்ச்சிக் கற்பனாலங்காரங்களையெல்லாம் 'வேண்டாம்' என்று ஆழப் புதைத்துப் போட்டு விட்டார். ஸ்ரீஸ்ரீயின் கவிதைகளில் இருந்த வெளிப்பாட்டு வேகம், சொல்லாட்சித் திறம், இசைத் திறம் கலந்த நடையழகு, இவையெல்லாம் சேர்ந்து பிரகாசம் செய்து வாசகனை

ஒளி வெள்ளத்தில் ஆழ்த்தின. அடுத்து இடம் பெறும் 'சாகசி' (முரட்டுத் துணிச்சல்) என்ற கவிதையில், தான் விலகிவிட்டதைப் போல, ஒவ்வொருவரும் ஆன்மிக உணர்வுகளிலிருந்து விடுபடவேண்டும் என்று ஸ்ரீஸ்ரீ வேண்டிக் கேட்டுக் கொள்கிறார். அடுத்து இடம் பெறும் 'கலாரவி' (ஒளி பொருந்திய கலைஞன்) என்ற கவிதையில், கவிஞன் ஒருவன், அவனுக்கு என்ன நேர்ந்தாலும், தனக்குரிய வழியைத் தானே தேர்ந்தெடுத்துக் கொண்டாக வேண்டும்; அந்த வழியில் அவன் மேலும் மேலும் துரிதமாக முன்னேறிச் செல்ல வேண்டும் என்று ஸ்ரீஸ்ரீ தெரிவிக்கின்றார். இளங்கவிஞர்களுக்கு எடுத்துரைப்பது போல, ஸ்ரீஸ்ரீ பின்ருமாறு ஒரு விஷயத்தை எடுத்துரைத்து உறுதிமொழி அளிக்கிறார். 'ரிக்குலு' என்ற கவிதையில், கவிதைக்குள் சொல்லப் படுவதற்கு உரியவை அல்ல என்று தள்ளப்பட்ட சாதாரண விஷயங்களும் கூட, சரியான முறையில் பயன்படுத்தப்பட்டால், அவையும் கவிதையில் சொல்லப்படுவதற்கு உரிய பொருளாக ஆகும் என்றும், கண் இருந்து காணக் கூடியவர்களுக்கும், எழுதுகோல் ஏந்தி எழுதக் கூடியவர்களுக்கும் இந்தப் பிரபஞ்சத்தில் தீண்டத்தகாதது என்று எந்தப் பொருளும் இல்லை என்றும் ஸ்ரீஸ்ரீ எடுத்துரைக்கிறார். இந்தக் கவிதையின் இறுதியில் ஸ்ரீஸ்ரீ பின்வருமாறு கூறிக் கவிதையை முடிக்கிறார்: "இந்தப் பிரபஞ்சம் புதிரானது; கவிதை என்பது தீராத தாகம் போன்றது" இவ்வாறாக, ஸ்ரீஸ்ரீ இந்தக் கவிதைத் தொகுப்பின் வழியே, தனது சிந்தனையோட்டத்தையும் கவிதையின் குறிக்கோள் என்ன என்பதையும் சிறிது சிறிதாக விரித்து விரித்துச் சொல்லிக் கொண்டே செல்கிறார்.

"கவிதா! ஓ! கவிதா!" - என்ற படைப்பு சந்தேகத்திற்கு இடமின்றி ஸ்ரீஸ்ரீயின் மிகச் சிறந்த படைப்பு ஆகும். தன் மனத்துக்குக் கவிதை என்னவாக இருக்கிறது என்பதை, இந்தப் படைப்பில் விவரித்துச் சொல்லிச் செல்லும் ஸ்ரீஸ்ரீ அப்படிச் சொல்லிக் கொள்வதன் மூலமாக ஓர் ஆனந்தப் பரவச நிலையை அடைந்து விடுகிறார். "நவ்ய சாகித்ய பரீஷத்" மேடையில் ஒரு முறை ஸ்ரீஸ்ரீ இந்தக் கவிதையை அப்படியே ஒப்புவித்தார். தனது தெளிவில்லாத, முணு முணுத்த குரலில்தான், கவர்ச்சியில்லாத பாணியில் ஸ்ரீஸ்ரீ அந்தக் கவிதையை ஒப்புவித்தார். அந்த நிலையிலும் கவிதையைக் கேட்ட கூட்டத்தின் தலைவர் விசுவநாதா, தன் இருப்பிடத்திலிருந்து எழுந்து நடந்து வந்து, கசிந்து கண்ணீர் மல்க, ஸ்ரீஸ்ரீயைக் கட்டித் தழுவிக் கொண்டார்; ஸ்ரீஸ்ரீயை "மகாகவி" எனப் பாராட்டினார். விசுவநாதா இப்படிச் செய்வார் என்று யாராலும் நினைத்துக் கூடப் பார்க்க முடியாது! ஏன் எனில் விசுவநாதா போலியானவர் அல்ல; வேறு எந்தக் கவிஞர் மீதும் இப்படியெல்லாம் அன்பு பாராட்டி

வெளிப்படுத்திக் கொண்டரும் அல்ல! மலிவான விளம்பரத்துக்காக இதுபோன்ற காரியங்களில் ஈடுபடுகின்றவருமல்ல! ஸ்ரீஸ்ரீயின் இந்தக் கவிதையைத் தானேதன் முயற்சியில் வெளியிட விசுவநாதா எண்ணினார்; கவிதை நூலுக்கு ஒரு முன்னுரை எழுதித் தருமாறு கேட்டு, புகழ் பெற்ற எழுத்தாளர் சிந்த தீக்ஷிதலு என்பவர் மூலம் விசுவநாதா, சலம் அவர்களுக்குச் செய்தி அனுப்பினார். ''எனது மொழியையும் எனது நடையையும் வேறு எவராலும் பின்பற்றி, போலச் செய்து கொள்ள முடியாது'' என்று ஸ்ரீஸ்ரீ சொல்லுவார். இவரது இந்தக் கருத்தை நிருபிப்பது போலவே, மிகச் சிறந்த படைப்பான இந்த நூலின் மொழியும் நடையும் அமைந்திருக் கின்றன. இந்தக் கவிதையை மொழி பெயர்த்துத் தரும் பணியில் ஸ்ரீஸ்ரீயே ஈடுபட்டு, தனது கவிதையின் ஆத்மா இன்னதுதான் என்று அவர் எடுத்துரைத்திருந்தார். ஸ்ரீஸ்ரீ இவ்வாறு வெளிப்படுத்தாம லிருந்திருப்பாரேயானால், இந்தக் கவிதையை வேறு பிற மொழியில் மொழியாக்கம் செய்வதும் இயலாத காரியமாகவே இருக்கும். (ஸ்ரீஸ்ரீயே செய்த மொழியாக்கம் நூலின் இறுதியில் பின்னிணைப் பாகத் தரப்பட்டுள்ளது) ஒரு கவிஞனாக உருவாகி வருவதற்காக, ஸ்ரீஸ்ரீ பட்டபாடுகள், முயற்சிகள், அவர் ஆற்றிய தவம், அவருடைய உணர்வுகள், உற்றுக் கவனிக்கும் கவன ஆற்றல், அவரைக் குழப்பத்தில் ஆழ்த்திய அவரது கற்பனைகள், மெய்மைகள், அவரது தொலை நோக்குப் பார்வைகள், தோல்விகள், மனத்தை உலையச் செய்த சூழ்நிலைகள், தன் எழுத்துக்கள் மீது தன் மனத்தை ஊன்றிச் செலுத்துவதற்கு அவர் எடுத்துக் கொண்ட முயற்சிகள், கவிதை யாக்கத்தின் மூலமாக அவர் பூர்த்தி செய்ய எண்ணியிருந்த அவரது அபிலாட்சைகள், அவருடைய அனைத்து வேட்கைகள், விழைவுகள், குறைபாடுகள், இலட்சியங்கள் - இவை அனைத்தும் ஒன்றிணைக் கப்பட்டு, தெலுங்கு இலக்கிய வரலாற்றில் ஈடு இணை சொல்ல முடியாத அளவுக்கு ஸ்ரீஸ்ரீயின் படைப்புக்களில் பதிவு செய்யப்பட்டுள்ளன. சொல்லாட்சி மிக்க அணி இலக்கணக்காரர் களால் உருவாக்கப்படுவதும், தமது கவிதைகள் வழியே மிகப்பெரிய ஞானிகளால் மட்டுமே அடையப்படுவதுமான 'உலக நன்மை' (விஸ்வஸ்ரேயாஸ்) என்பது வாசகர்கள் திகைத்துப் போகும் அளவுக்கு ஸ்ரீஸ்ரீயால் விளக்கிக் கூறப்பட்டது. ஸ்ரீஸ்ரீயின் இத்தகைய கவிதைச் சிறப்பு அம்சமானது, கல்மனம் படைத்த எந்த ஒரு விமர்சகனையும் கூட மனம் இளகச் செய்துவிடும்; கவிஞர் ஒருவர், அவர் எத்தகைய மதிப்பீட்டுக்காரராக இருந்தாலும் அவரையும் மனம் உருகச் செய்துவிடும்; இலக்கியத்தில் எந்தச் சுவை உடையவராக இருந்தாலும் அவரை ஓர் ஆனந்தப் பரவச நிலைக்கே இட்டுச் சென்று விடும். இத்தகைய ஒரு மயக்கமே தரக்கூடிய, மிகப்பெரிய

உச்சத்தை, கவித்துவ மாட்சியை இந்தப் படைப்பின் மூலம் ஸ்ரீஸ்ரீ அடைந்து விட்டார். தெலுங்குக் கவிதையின் ஓராயிரம் ஆண்டுக்கால வரலாற்றில் ஈடு இணை இல்லாத இடமாகும் இது.

தொகுப்பில் அடுத்து இடம்பெறும் பகுதி 'பிரதிக்ஞா' (உறுதி மொழி) என்பது ஆகும். லண்டன் முற்போக்கு எழுத்தாளர்கள் வெளியிட்டிருந்த கொள்கை அறிக்கையை அபூரி, அங்கிருந்து ரகசியமாய் ஸ்ரீஸ்ரீக்குக் கிடைக்குமாறு செய்திருந்தார். அந்த அறிக்கையை மிகக் கவனமாகப் படித்த பிறகு 1937-இல் ஸ்ரீஸ்ரீ இந்தக் கவிதையை எழுதினார். அந்தக் கொள்கை அறிக்கையின் உள்ளடக்கம் ஸ்ரீஸ்ரீயின் மனத்தில் அழுத்தமாகப் படிந்து விட்டது. மனத்தில் பதிந்துவிட்டால் உடனே எழுத்தாக்கி விடும் பழக்கம் உடையவர் அல்லவா ஸ்ரீஸ்ரீ! அந்த வழக்கத்திற்கேற்ப, அந்தக் கொள்கை அறிக்கையைத் தழுவி ஒரு கவிதை எழுத விரும்பினார். அந்தக் கொள்கை அறிக்கையின் வழியே பெற்ற உணர்வை வெளிப்படுத்த விரும்பிய வேளையில், தன் மனத்துக்குள், ஜான் எட்வர்டு மாஸ்பீல்டு (1878-1967) எழுதிய ''உப்புநீர்க் கதைப் பாடல்கள்'' (1902) என்ற படகோட்டிகளின் கிளை மொழியில் அமைந்த கவிதை, ''ஓர் அர்ப்பணம்'' என்னும் கவிதை ஆகிய இரண்டு கவிதைகளும், ரூடியார்டு கிப்ளிங் (1865-1936) எழுதிய ''பாசறைக் கதைப் பாடல்கள்'' (1892) என்னும் கவிதையும் இருந்தன என்று ஸ்ரீஸ்ரீயே ஒரு முறை குறிப்பிட்டுள்ளார். அதன் விளைவுதான் 'பிரதிக்ஞா' என்ற கவிதை! இந்தக் கவிதை, ஸ்ரீஸ்ரீயின் வழிகாட்டியால் பாராட்டப்படுவதற்குரிய சரியான தகுதியைப் பெற்றிருந்தது. அத்தோடு வெளியிடப்பட்ட அந்தக் கணத்திலேயே எல்லையற்ற புகழையும் பெற்றுவிட்டது. இந்தக் கவிதையில், ஸ்ரீஸ்ரீ விவசாயிகள், பட்டாளிகள், ஏழை எளிய மக்கள் முதலியோரின் மிக மோசமான வாழ்நிலைகளுக்காக வருந்தியிருந்தார். இவர்கள் சிந்தும் கண்ணீரின் மதிப்பு இவ்வளவுதான் என்று யாரும் அளவிட்டுச் சொல்லிவிட முடியாது என்றும் ஸ்ரீஸ்ரீ இந்தக் கவிதையில் குறிப்பிடு கின்றார். அப்போதிருந்து, ஒடுக்கப்பட்டுக் கிடக்கும் மக்களின் முன்னேற்றத்துக்காகவே தனது கவிதையை அர்ப்பணிக்கப் போவதாக ஸ்ரீஸ்ரீ ஒரு சபதம் எடுத்துக் கொண்டார். ஒடுக்கப்பட்ட மக்களின் வேதனைக் காட்சிகளே ஸ்ரீஸ்ரீயின் கவிதையாக்கங்களின் ஆத்மாவாக அமையலாயின. ஆற்றல் மிக்க யாப்பில் படைக்கப் பட்ட இந்தக் கவிதை இசையமைக்கப்பட்டு இசைக்கப் பட்டது; நாடகமாகவும் ஆக்கப்பட்டது; புகழ் பெற்ற நாட்டியக்காரர் டாக்டர் சம்பத் அவர்களின் கருப்பொருளாகவும் இந்தப் பாட்டு அமைந்தது. 'உணர்வு' என்பது எவ்வளவு காலத்துக்கு இருக்குமோ அவ்வளவு காலம் வரைக்கும் ஸ்ரீஸ்ரீ என்னும் கவிஞர் வாழ்ந்திருப்பார்;

அவருடைய வாசகர்களையும் சுவைஞர்களையும் அவரது கவித்துவம் மயக்கிக் கவர்ந்து தன்பக்கம் ஈர்த்துக் கொள்ளும். இந்தக் கவிதையில் ஸ்ரீஸ்ரீ உழைப்பின் வனப்பையும் மேன்மையையும் புகழ்ந்து சிலாகித்து உரைத்துள்ளார். இவ்வாறு உழைப்பின் மேன்மையைக் கவிதையில் சிறப்பித்துரைப்பது, தெலுங்கு இலக்கியங்களில் அதுவரை காணப்படாத அம்சமாகும்.

தொகுப்பில் அடுத்து, சிறிய கவிதைகளின் வரிசை இடம் பெறுகிறது. அந்தச் சின்னக் கவிதைகள் ஒவ்வொன்றும், இது வரைக்கும் யாராலும் குரல் கொடுக்கப்படாத, யாராலும் பாடப்படாத, அடித்தட்டு மக்களின் துயரம் மிகுந்த வாழ்க்கையைச் சித்திரிக்கின்றன. 'பாதசாரி' (கால்நடைப் பயணி) என்பது ஒரு சிறு கவிதை. பாதசாரி ஒருவன் தனது வழியைத் தவற விட்டுவிடுகிறான்; தனது இடத்தைச் சென்று அடைவதற்கு முன்னால் மிகவும் களைத்துப் போகிறான்: இது கவிஞர் ஸ்ரீஸ்ரீயை மிகவும் நெகிழ்விக்கிறது. கவிஞர் அவன் மீது இயல்பாகவே இரக்கம் கொள்கிறார். அவ்வாறு இரக்கம் செலுத்தியும் பயன் இல்லை; அந்தப் பாதசாரி மறுநாள் விடிவதற்கு முன்னதாகவே இறந்து போய்விடுகிறான். அடுத்து வரும் சிறுகவிதை 'பிக்சு வர்ஷியாசி' (வயது முதிர்ந்த பிச்சைக்காரக் கிழவி) பற்றியது; அச்சம் தரத்தக்க சூழ்நிலையில் அவள் செத்துக் கிடக்கும் காட்சியை இக்கவிதை சித்திரிக்கிறது. இவள் இவ்வாறு செத்துக் கிடப்பதற்குப் பொறுப்பு யார்? என்று கேட்பது போல, வேகமாய் வீசும் காற்று அவள் உடலைப் புரட்டித் தள்ளுகிறது. தெரு நாய் ஒன்று எந்தச் சலனமும் இன்றி அவளுடைய எலும்பைக் கடித்துக் கொண்டிருந்தது. பல்லி ஒன்று, தான் பிடித்த ஈயைக் கடித்தவாறே அங்கிருந்து விரைந்து கொண்டிருந்தது. தாம்பாளம் போன்ற ஓர் இலை இது என்னுடைய வேலை அல்ல என்று சொல்வது போல் சுழற்காற்றில் மிதந்து வந்து கொண்டிருந்தது. இந்தக் கவிதையில் கையாளப் பட்டுள்ள மொழிநடை, சித்திரிக்கப் பட்டுள்ள சூழ்நிலை, முன் வைக்கப் பட்டுள்ள கரு - ஆகிய இவையெல்லாம் சேர்ந்து உருவாக்கும் பரிதாபக் காட்சியானது எந்த ஒரு மனிதனுடைய உயிர் ஆதாரத்தையும் அப்படியே உட்கொண்டுவிடும். அடுத்து வரும் கவிதையில், பட்டினியாய்க் கிடக்கிற, பாதி செத்துப் போன, பித்துப் பிடித்தவன் ஒருவனை ஸ்ரீஸ்ரீ சித்திரித்துக் காட்டுகிறார். பித்துப் பிடித்துப் பட்டினியாய் அலையும் இவனுக்காக யாரும் எதுவும் சொல்ல வேண்டாம்; யாரும் அவன் மீது பாடல் பாட வேண்டாம் என்று கேட்டுக் கொள்ளும் ஸ்ரீஸ்ரீ, அவனை அந்த நிலைக்கு ஆளாக்கியவர்கள் மீது தனது விமர்சனத்தைத் தெரிவிக்கிறார். அடுத்து வருவது 'சேது பாட்ட' (கசப்புப் பாட்டு) என்னும் கவிதையாகும். இக்கவிதையில் ஸ்ரீஸ்ரீ நாய்களைப் போலவும்

பன்றிகளைப் போலவும் வேறு பிற மிருகங்களைப் போலவும் நாம் அடிமை வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருக்கிறோம் என்று வருந்திப் புலம்புகிறார். நமது வாழ்க்கை வெறும் நிழலாக இருக்கிறது; நமது கல்வி ஒரு பொய்மைப் பொருளாக, மாயப் பொருளாகப் போய் விட்டது என்று கூறிக் கவிஞர் இக்கவிதையை முடித்து வைக்கிறார். இந்த அடிப்படையில் இந்தக் கவிதை ஒரு 'கசப்புக் கவிதை'தான் என்கிறார். 'வாழ்க்கையை மாயம்' என்று பேசும் தத்துவவாதிகளைக் கவிஞர் மறைமுகமாக இங்கே ஏளனம் செய்கிறார். 'சந்தியா சமஸியலு' (ஒரு மாலை நேரத்துப் பிரச்னைகள்) என்ற கவிதை அடுத்து இடம் பெறுகிறது. இக்கவிதையில் ஸ்ரீஸ்ரீ, வாழ்க்கையின் பன்முக வழிகள், ஈர்ப்புத் தன்மைகள், மாணவன் ஒருவனின் பிரச்னைகள், அலுவலர் ஒருவரின் பிரச்னைகள், ஒரு பெரிய குடும்பத்து நடுத்தர வர்க்க அடித்தட்டு மனிதர் ஒருவரின் பிரச்னைகள் ஆகிய இவற்றின் முரண்பாடுகள் பற்றியும் சொல்கிறார்.

தொகுப்பில் அடுத்துவரும் பகுதிகள் ஸ்ரீஸ்ரீயினுடைய உள்முக - அக உணர்வுகள் பற்றித் திரும்புகின்றன. அகில உலகம் முழுவதும் தூங்கும் நேரத்தில், யாருக்கும் புலப்படாத ஒரு பொருள் பற்றித் தான் மட்டும் தேடிக்கொண்டே இருக்கிறாரே, அது ஏன் என்று ''டேனிகோரகு?'' (எதற்காக?) என்ற கவிதையில் ஸ்ரீஸ்ரீ ஆன்ம விசாரம் செய்கிறார். அடுத்து வருவது 'கேகா' (ஒரு முழக்கம்) என்னும் கவிதை. இக்கவிதையில், யாருடைய உதவியுமின்றி, தூக்கமில்லாதவராய், கண்ணீரும் கம்பலையுமாய், தன்னந்தனி யாய்க் கவிஞர் மட்டும் நிற்கிறார்; இந்தப் பிரபஞ்சத்தை வேதனையில் ஆழ்த்தும் அனைத்தும் சேர்ந்து கவிஞரைச் சூழ்ந்து கொண்டு அவரைச் சித்ரவதை செய்கின்றன. கவிஞருக்குப் பிரமையும் ஏமாற்றமுமாய் ஆகிறது. 'ஒக ராத்திரி' (ஓர் இரவு) என்னும் கவிதையில் நிலவின் ஒளிகூட அவரை அச்சுறுத்துகிறது என வருந்திப் புலம்புகிறார். நிலவின் ஒளி மூடுபனி போலப் பரவுகிறது. வானம் ஒரு பாலைவனம் போலவும், அந்தப் பாலைவனத்தில் தூசிப் புயல் வீசியடிப்பது போலவும் தோன்றுகிறது! மண்ணுக்கும் விண்ணுக்கும் இடையில் ஏதோ இனந்தெரியாத உருவங்கள் உலாவி வருவது போலத் தெரிகிறது! கடல் ஓங்காரமிட்டு முழங்குகிறது! யானையின் சடலம் போல் மலை அப்படியே அசையாமல் நிற்கிறது. கால் ஒடிந்த தன்னந்தனி ஒட்டகம் ஒன்று பாலைவனத்தில் மணலில் மிதித்து மிதித்து நடந்து செல்வது போல் வானத்து நிலவு தோன்றுகிறது. உலகமெங்கும் பரவிக் கிடக்கும் நிலவின் ஒளி வெள்ளைச் சாம்பல் பரவிக் கிடப்பது போல் காட்சியளிக்கிறது. இவ்வாறு ஸ்ரீஸ்ரீ சித்திரித்துக் காட்டும் கற்பனைக் காட்சிகள், அதுவரைக்கும் தெலுங்குக் கவிதையில் இடம் பெற்றிராத காட்சிகள் ஆகும். அடுத்து இடம்

பெறும் கவிதை 'ஆகாச தீபம்' (வானத்து விளக்கு) என்பதாகும். ஓர் அமைதியான அறை; அந்த அறையில் ஒரு விளக்கு இருக்கிறது; அந்த அறையில் இருந்து இறந்து போகும் ஒருவனுக்கு ஊமைச் சாட்சியாய் மாலை ஆறு மணிக்கு எரிந்து கொண்டிருந்த அந்த விளக்கும் அதிகாலை ஆறுமணி அளவில் தானாகவே அணைந்து போய் விடுகிறது. மாலையில் தோன்றிக் காலையில் மறையும வானத்து நட்சத்திரம் போன்றுள்ளது இது என்று சொல்லலாம். இந்த நிகழ்ச்சியை ''மண்ணில் தோன்றியது மண்ணுக்குள்ளேயே போகும்'' என்று பேசப்படும் தத்துவத்தை நினைவுபடுத்துவதாகக் கொள்ள முடியாது; மாறாக, ஒரு சாமானிய மனிதன் ஒருவனின் மரணத்தை யாரும் கண்டு கொள்வதில்லை என்பதன் விளக்கமாகவே கொள்ளலாம் - இவ்வாறு இக்கவிதை விவரித்துச் செல்கிறது. அடுத்து இடம் பெறுவது, ''ஆ!'' (ஓ!) என்ற கவிதை. இக்கவிதையில், ''வெற்றி பெறுபவர்களைப் பாராட்டி, வாழ்ந்தார்க்கு மாரடிக்கும் இந்த உலகம், தீனமாய்க் குரல் கொடுக்கும் ஒருவனுக்காக ஒரு சொட்டுக் கண்ணீர் கூட விடுவதில்லையே'' என்று ஸ்ரீஸ்ரீ சொல்லி, உலகின் மனநிலையைக் குறை கூறுகின்றார். அடுத்து இடம் பெறுவது, ''ஒக ஷணம்லோ'' (அரை நொடியில்) என்னும் கவிதை. இக்கவிதை, இந்த உலகத்தில் நிகழ்கின்ற திடீர் மாற்றங்கள் எவ்வாறு மனித குலத்தை அப்படியே அழுத்தி மூழ்கடித்து விடுகின்றன என்று எடுத்துரைக்கிறது. அடுத்து இடம் பெறும் 'நீடலு' (நிழல்கள்) என்னும் கவிதை, 'மனிதர்களாக இல்லாமல் வெறும் நிழல்களாக வாழ்ந்து கொண்டிருக்கும் ஏழை மக்களைக் கண்ணெடுத்துப் பாருங்கள்' - என்று வாசகனிடம் கெஞ்சி விண்ணப்பித்துக் கொள்வதாய் அமைகிறது.

ஸ்ரீஸ்ரீயின் கவிதை அம்சத்தில், பசி, பட்டினி, துன்பம் இவற்றைத் தவிர வேறென்ன இருக்கின்றன? என்று ஒரு விமர்சனம் சொல்லப்படுவதும் உண்டு. இந்த விமர்சனத்தை வாயடைப்பது போல, ஸ்ரீஸ்ரீயின் 'மகாப் பிரஸ்தானம்' தொகுதி மானுடத்தின் மிக நுட்பமான உணர்வுகளின் பக்கம் திருமபுகிறது. ஸ்ரீஸ்ரீயின் 'ஷைஷவ கீதி' (குழந்தைப் பருவம் பற்றிய கவிதை) என்ற கவிதை குழந்தை களுடைய அறியாமை, விளையாட்டுக் குணம் ஆகியவை பற்றி விளக்குகிறது. இயற்கையின் அழகுதான் கறைபடியாத பேரழகு என்று ஸ்ரீஸ்ரீ குழந்தைகளுக்குச் சொல்கிறார். தனது குழந்தைப் பருவத்தின போது, இயற்கையின் அழகுகளையெல்லாம் தானும் நேசித்ததை ஸ்ரீஸ்ரீ நினைவு கூர்கின்றார். குழந்தைப் பருவம் தாண்டி வந்து இப்போது 'தனிமை' என்னும நரகத்திலிருந்து கொணடு, தான் பாடும் இந்தப் பாடலைக் குழந்தைகள் கவனித்துக் கேட்க வேணடும் என்று ஸ்ரீஸ்ரீ கெஞ்சிக் கேட்டுக் கொள்கிறார். தனது துன்ப துயரங்

களின் விளைவாகத் தான் அடைந்துள்ள அமைதியற்ற வாழ்வுக்காகத் தன்னை யாரும் பரிகசிக்காமல் இருக்க வேண்டும் என்றும் ஸ்ரீஸ்ரீ விரும்புகிறார். இந்தக் கவிதை ஒரு கூட்டு நடனமாக நடிக்கப் பட்டபோது பெருத்த வரவேற்பைப் பெற்றது. 'பேடலு' (அந்த ஏழை) என்று தலைப்பிடப்பட்ட அடுத்த கவிதை எமிலிவெர் ஹேரன் என்னும் பெல்ஜியக் கவிஞன் பாடிய 'லே பாவ்ரெஸ்' என்ற கவிதையின் மொழி பெயர்ப்பு ஆகும். இது மொழி பெயர்ப்புக் கவிதைதான் என்று ஸ்ரீஸ்ரீ சொல்லியிருக்காவிட்டால், மொழி பெயர்ப்பு என்று யாராலும் கருதியிருக்க முடியாது. 'கண்டலு' (அந்த மணிகள்) என்னும் கவிதை எட்கர் ஆலன்போவின் 'அந்த மணிகள்' என்னும் கவிதையின் மொழி பெயர்ப்பு அல்ல; இதனை ஸ்ரீஸ்ரீயே தெரிவித்துள்ளார். ஸ்ரீஸ்ரீயின் இந்தக் கவிதை அவருடைய உள்ளத்தின் கற்பனைகளை யெல்லாம் பிரதிபலித்துக் காட்டும் ஒரு தன்னுணர்ச்சிக் கவிதை. ஸ்ரீஸ்ரீயின் புகழ்பெற்ற பாடல்களுள் அடுத்த பாடல் அத்வைதம் (ஒருபொருண்மை வாதம்) என்பதாகும். இந்தக் கவிதை இசை நாடகமாக நடிக்கப்பட்டது; ஒரு திரைப்படத்தில் நாட்டிய நிகழ்ச்சியாகவும் இடம் பெற்றது. ஏ.சி. ஸ்வின்பர்ன் எழுதிய ''ஓர் இணை'' என்ற கவிதையைப் பார்த்து, அதிலிருந்து மொழியாக்கி உருவாக்கப்பட்டதே இந்தக் கவிதை என்று ஸ்ரீஸ்ரீயே ஒப்புக் கொண்டுள்ளார். இந்தக் கவிதை காதலர் இருவர் சேர்ந்து பாடும் 'டூயட்' வடிவத்தில் எழுதப்பட்டுள்ளது; சேர்ந்து பாடும் பாடலில் இருவரும் தங்களது முரண்பட்ட உணர்வுகளைச் சொல்லுவதாகவும், இறுதியில் பல கருவிகள் இணைந்த சேர்ந்திசையை உருவாக்கு வதாகவும் இந்தக் கவிதை அமைகிறது. ஸ்வின்பர்ன் (*1837-1909*) மீது ஸ்ரீஸ்ரீ எல்லையற்ற மதிப்பு வைத்திருந்தார். ஸ்வின் பர்ன் கவிதையில் ஸ்ரீஸ்ரீ ஷெல்லியின் கவித்துவ அழகைக் கண்டார்; விண்மீன்களின் நுண் இசையைக் கண்டார்; பிரெஞ்சுக் கவிதைகளில் உள்ள ஓசை நயத்தைக் கண்டார். எனவே ஸ்ரீஸ்ரீ ஸ்வின்பர்ன் கவிதையைப் பாராட்டி ஒரு தனிக் கவிதையே எழுதினார். மேலும், ஸ்வின்பர்ன் கவிதைகளில் ஒரு தீவிரமான கொள்கையின் விடியலையும் புரட்சிப் பறவை ஒன்று சிறகடிப்பதையும் கூட ஸ்ரீஸ்ரீ கண்டு கொண்டார். ஸ்வின்பர்ன் படைத்திருந்த கலாபூர்வமான இசைச் சிறப்புக்குள் தான் ஈர்க்கப்பட்டதாகவும், அதற்குள் கரைந்து போனதாகவும், அதனுடைய ஓர் அங்கமாகவே தான் ஆகிவிட்டதா கவும் இறுதியில் ஸ்ரீஸ்ரீ பிரகடனமே செய்தார். கவிதைப் படைப்பில் உள்ளடக்கத்தின் மீது இருப்பதை விடவும், இசையின் மீதும், இசையின் வேகத்தின் மீதும் தனக்கு இருந்த மயக்கத்தை ஸ்ரீஸ்ரீ இவ்வாறு பகிரங்கப்படுத்திக் கொண்டார்.

பெர்டோல்டு பிரெச்ட் (1898-1956) என்னும் ஜெர்மானியக் கவிஞரின் பாதிப்பினால் ஸ்ரீஸ்ரீ 'தேச சரித்ரலு' (தேசங்களின் வரலாறுகள்) என்ற நீண்ட கவிதை ஒன்று எழுதினார். அந்த நீண்ட கவிதை, மனிதகுல வரலாற்றைக் காரல் மார்க்சின் பார்வையில் விளக்குகிறது. ஸ்ரீஸ்ரீ மார்க்சியத்தில் முறையான பாண்டித்தியம் பெற்றவர் அல்லர். மார்க்சியக் கொள்கையை அவர் புரிந்து கொண்டிருப்பதும், அவர் ஆதரிப்பதும் எதனால் என்றால், கவிதைகளின் வழியே பெற்றுள்ள கருத்துக்களினால்தான் என்று ஸ்ரீஸ்ரீயே அடிக்கடி தன்வாக்கு மூலமாகவே தெரிவித்திருக்கிறார். மனித வரலாற்றில், வரலாற்றுக்கு மிகவும் தொல்லை கொடுத்த கூறுகளையே தேர்ந்தெடுத்து அவற்றுக்கான நிகழ்ச்சிகளையே இந்தக் கவிதையில் ஸ்ரீஸ்ரீ விவரிக்கின்றார். மிக மோசமான ஒரு விமர்சகரையும் கூட, உடனே நிராயுத பாணியாக ஆக்கிவிடக் கூடிய யாப்பிலும், மொழி நடையிலும் இந்தக் கவிதை எழுதப்பட்டிருந்தது. ''உலகின் எந்த ஒரு நாட்டின் வரலாற்றிலும் அந்த நாட்டைப் பெருமைப்படுத்துகிற விஷயம் எதுவுமே இல்லை'' - என்ற வாசகத்தோடு தொடங்குகிற இக்கவிதை, பின்னர் கவிதை முழுவதும், உலக நாடுகள் எவ்வாறு அழிவுற்றன என்று சுட்டிக் காட்டி முடிவு பெறுகிறது. விடுதலைப் போராட்ட இயக்கத்தின் காரணமாக, நம் நாட்டின் தேசியப் பெருமை மிகவும் உச்சக் கட்டத்தில் இருந்த வேளையில் இந்தக் கவிதை எழுதப்பட்டது. வேறு பிற கவிஞர்கள், வரலாற்றுப் பழம் பெருமையில் லயித்துக் கிடந்தவர்களாக இருந்தார்கள்; நாட்டு உரிமையைக் கூடப் பெற முடியாதவர்களாக இருந்த முன்னோர்களை மிகவும் மெச்சிக் கொண்டிருந்தார்கள். ''தேசிய உணர்வே பெரிது'' என்ற வெறி எங்கும் பரவிக் கிடந்தது. தேசிய உணர்வு என்பது குறுகிய சிந்தனை உடையது என்ற அதனுடைய பலவீனத்தை எடுத்துக் காட்டி, அதை மட்டுப்படுத்த வேண்டும் என ஸ்ரீஸ்ரீ விரும்பினார்; அதே நேரத்தில், 'சர்வதேசியம்' என்ற சிந்தனையைப் பரப்பவும் விரும்பினார்; 'சர்வதேசியம்' என்னும் கொள்கை மனிதமதிப்பு மிகுந்த கொள்கை, எல்லாருக்கும் பொதுவான கொள்கை; ஒரு குறிப்பிட்ட காலக் கட்டத்தில், பிரிட்டன் போன்ற நாடு மிகவும் முக்கியத்துவம் பெற்றிருந்த வேளையில், எஞ்சியிருந்த உலகின் பிற நாடுகள் அனைத்தும் ஏற்று இயங்கிய கொள்கை - என்று எடுத்துரைக்க விரும்பினார். வரலாறு என்பது அதன் முழுவதிலுமாக ரத்தக் கறை படிந்து, அடிமை கொண்டு, மானுடத்தை அழித்துப் போடுவதாகவே இருந்து வந்துள்ளது என்றும் ஸ்ரீஸ்ரீ எடுத்துரைத்ததார். மக்களைக் கொள்ளையடிக்கும் கொள்ளைக்காரர்களைவிட, ராஜாக்கள் பெரிய கொள்ளைக்காரர் களாக இருந்தார்கள்; வரலாறு சாதாரண ஜனங்களின் குருதிக்

குளியலை அல்லது தாங்க முடியாத துன்பங்களைத் தானே பதிவு செய்திருக்கிறது! வலிமை வாய்ந்த சக்திகள் வெளியிலிருந்து வரும்போதெல்லாம் பெரும் சாம்ராஜ்ஜியங்கள் வீழ்ந்தொழிகின்றன! இவ்வாறாக, வரலாறு என்பது போர், அதன் அழிவு ஆகிய இவற்றின் விளைவாகவே அமைந்துள்ளது! வலிமை படைத்தவர்களின் ஏமாற்று வித்தைகளை இனிமேலும் நாம் சகித்துக் கொள்ள முடியாது என ஸ்ரீஸ்ரீ எச்சரிக்கை விடுக்கிறார். ஒரு சிலர் கூட அடிமையாய் இருக்கும் நிலை நீடிப்பது என்பது இயலாது. ஸ்ரீஸ்ரீயின் பார்வையில் வரலாறு என்பது வெறும் போர்களையும் ஒப்பந்தங்களையும் மட்டும் கொண்டது அல்ல; அந்தப்புரத்து அரசியரின் காதல் கதைகளைக் கொண்டது அல்ல; போர்களுக்காகவும் நாடு கைப்பற்று தலுக்காகவும் மேற்கொள்ளப்பட்ட செலவினங்களைக் கொண்டது அல்ல; வெறும் தேதிகளும் இடங்களும் சம்பந்தப்பட்டதல்ல; வரலாறு என்னும் கல்லறையில் காணப்படுவது ஒளியாக இருந்தாலும் இருட்டாக இருந்தாலும் அந்த ஒளியின் கீழ், அந்த இருட்டின் கீழ் படிந்து கிடக்கும் மானுடத்தின் உண்மையான கதைகள் பற்றிய ஒவ்வொன்றையும் விரிவாகக் காணவே ஸ்ரீஸ்ரீ விரும்பினார். நைல்நதிப் பிரதேசத்து நாகரிகம் செழித்தோங்கிய காலங்களில் அங்கே சாதாரண மனிதன் எப்படி வாழ்ந்திருந்தான் என்று அறிந்து கொள்ளவே ஸ்ரீஸ்ரீ விரும்பினார்; தாஜ்மகாலைக் கட்டுவதற்காக அந்தச் சலவைக் கற்களைத் தூக்கிச் சுமந்தவன் யார் என்று அறிந்து கொள்ளவே ஸ்ரீஸ்ரீ விரும்பினார்; அரசனைச் சுமந்து சென்ற பல்லக்குகளைக் கவனிப்பதற்கு ஸ்ரீஸ்ரீ அக்கறை கொள்ள வில்லை; குறிப்பாக அந்தப் பல்லக்குகளைத் தூக்கிச் சுமந்து சென்றவர்கள் யார் என்று கண்டறிவதிலேயே ஸ்ரீஸ்ரீ அக்கறை மிகக் கொண்டிருந்தார்; நாடு பிடிக்கும் படைகளை நடத்திச் சென்றது யார்? என்று அறிய ஸ்ரீஸ்ரீ விரும்பியதில்லை; அந்தப் படையில் ஒரு போர் வீரனாய் இருந்து உண்மையிலேயே களத்தில் போராடினானே, அந்த வீரனின் தைரியத்தை அறிந்து கொள்ளவே ஸ்ரீஸ்ரீ விரும்பினார். மிகவும் ஆதி காலத்திலிருந்து மானுட இனம் எவ்வாறெல்லாம் வளர்ந்து வந்துள்ளது என்பதிலும் அந்த மனித இனம் கலையில், கட்டட நாகரிகத்தில், விஞ்ஞானத்தில், இசையில், இலக்கியத்தில், தத்துவத்தில் எவ்வாறெல்லாம் பெருமைகளை ஈட்டி வந்துள்ளது என்பதிலும் ஸ்ரீஸ்ரீ முதன்மையான அக்கறை செலுத்தினார். ஒட்டு மொத்தமான இந்த மானுடமானது எவ்வாறு தனது அபிலாட்சை களையெல்லாம் நிறைவேற்றி வந்துள்ளது என்பதிலும், அமைதி மிக்க, அன்புமிக்க, ஆதரவு மிக்க ஓர் எதிர்காலத்தை உருவாக்கிக் கொள்வதற்காக எவ்வாறு இந்த மானுடம் முன்னேற்றப் பயணத்தைச் செய்து வந்துள்ளது என்பதிலும் ஸ்ரீஸ்ரீ உள்ளபடியே

மிகுந்த ஆர்வம் காட்டியவராக இருந்தார். சந்தேகத்துக்கு இடமின்றி, இந்தக் கவிதை அவருடைய கவிதைகளுக்குள் மிகவும் அழகான கவிதை, மிகவும் புகழ் பெற்ற கவிதையும் கூட. ஸ்ரீஸ்ரீயின் இந்தக் கவிதையைப் பின்பற்றி, அது போலவே ஓர் அங்கதப் பாடல் ஒன்றை மாச்சிராஜு தேவி பிரசாத் (1922-74) எழுதினார். இந்தக் கவிதையை ஸ்ரீஸ்ரீ மிகவும் ரசித்துப் பாராட்டினார். மாச்சிராஜு அவரது கவிதையில், ''வரலாற்றின் சாலைகள்'' என்பது பற்றி எழுதியிருந்தார். இந்தக் கவிதையில் மாச்சிராஜு முதன்மைச் சாலைகள் நெடுஞ்சாலைகள் ஆகியவற்றின் பெருமை, ஆடம்பரம் பற்றிச் சித்திரிக்கின்றார்; சந்து பொந்துகளின் கேடுகள் பற்றியும் சித்திரிக்கின்றார்; கவிதையின் இறுதியில், அந்தக் காலத்தில் இப்படிப்பட்ட 'சாலைகள்' இல்லாத காரணத்தால்தான் அனுமன் இலங்கைக்குப் பறந்து செல்ல வேண்டியிருந்தது என்று முடிக்கிறார். ''இனிமேல் சுரண்டல் என்பதைச் சகித்துக் கொள்ள முடியாது'' என்று ஸ்ரீஸ்ரீ விடுத்திருந்த எச்சரிக்கை முழக்கமானது, எந்த ஒரு அரசியல் கட்சி எங்கே கூட்டங்கள் நடத்தினாலும், அந்தக் கூட்டங்களிலெல்லாம் எடுத்து முழங்கப்பட்டு ரீங்காரம் செய்து கொண்டே இருந்தது.

'நீண்ட பயணம்' (மகாப் பிரஸ்தானம்) கவிதைத் தொகுதியில், 'தேச சரித்திரம்' கவிதையைத் தொடர்ந்து இடம் பெற்றுள்ள இன்னொரு வசன கவிதை 'வாது' (அவன்) என்பதாகும். இந்தக் கவிதை ஒப்பனை ஏதுமற்ற வெள்ளை நடையில் அமைந்துள்ளது; ஆனால், அதே நேரத்தில் மிகவும் கூர்மையானது. இந்தக் கவிதை மூன்று பகுதிகளாக அமைந்துள்ளது. எண்ணிக்கையில் பெரும்பான்மையான, சுரண்டப்பட்டுக் கிடக்கும் மக்களின் வாழ்நிலையைச் சரி என்று சொல்லி, சுரண்டுகிறவர்களுக்குச் சார்பாக நிற்கும் 'கர்மாக் கொள்கை'யைக் கவிதையின் முதலாம் பகுதி ஏளனம் செய்கிறது. பிறரைப் பற்றிக் கவலை ஏதும் கொள்ளாத மரபு வாதிகள் மீது பல கேள்விக் கணைகளைத் தொடுத்துத் திகைக்க வைக்கிறது இரண்டாம் பகுதி; உழைப்பாளி ஒருவன், தனது வாழ்க்கைப் பாட்டுக்காக முறையீடு செய்யும் போது, அதைக் கூடப் பொறுக்காமல் அவன் மீது, வன்முறைத் தாக்குதலை ஏவிவிடுவோர் மீது கவிதையின் மூன்றாம் பகுதி கேள்வி கேட்கிறது. 'மித்தி ஆவதி' (மருட்சிக்காரன்) என்ற அடுத்த கவிதையில், சுரண்டப் படுபவர்களாகவும், சுரண்டுபவர்களாகவும் பிளவுபட்டுக் கிடக்கின்ற இந்த உலகின் நிதர்சனமான நிலையைக் கண்டு கொள்ளாமல், இந்த உலகம் மாயமானது, நிலைத்த உண்மை வேறு ஒன்று உள்ளது என்ற போக்கில் சிந்தித்துவரும் தத்துவவாதிகளையும் உளவியல் வாதிகளையும் நோக்கி, ஸ்ரீஸ்ரீ கேள்விக் கணைகளைத் தொடுக்கிறார். இந்தத் தொகுப்பின் கடைசிப் பகுதியில் பார்க்கும் போது, ஏற்கனவே

இம்மை வாழ்வு பற்றிய சிந்தனைகளே நிரம்பியிருந்த கவிஞரின் கவிதைகளில், சொல்லாட்சித் திறமும் நடையும் கனிந்து ஒரு முதிர்ந்த பரிபக்குவ நிலைக்கு வந்திருப்பதை உணரலாம். அடுத்து வருகிற 'வித்யாசம்' (வேறுபாடு) என்னும் வசன கவிதையில் மேட்டுக்குடி மனிதர்களைப் பார்த்து, ''ஏழை எளியவர்களான பாட்டாளிகள் உங்களில் ஒருவர்தானே?'' என்று கூறி ஏழை மக்களின் நலிந்த நிலைமைகளை விளக்கிச் செல்கிறார். மேட்டுக்குடி மக்களுக்கு என்ன இல்லை? அவர்கள் அனைத்தும் பெற்றிருக்கிறார்கள்; இனிமேல் அடைவதற்கு என்று தனியே ஒன்றுமில்லை; நீதிமன்றங்கள், காவல் நிலையங்கள், சிறைச் சாலைகள், தூக்கு மேடைகள் ஆகிய அனைத்தும் அவர்களைப் பாதுகாத்து நிற்கின்றன; ஆனால், சாதாரண மனிதனின் நிலைமை என்ன? அவன் வாழ்வில் ஒளி இல்லை; வாழ்க்கை முழுவதும் ஐயப்பாடுகள்; விடைகளே இல்லாத வெறும் கேள்விகள்; அவனுக்குச் சுவர்களுமில்லை, சுற்றியுள்ள எல்லைகளுமில்லை; அப்படி எவையேனும் இருப்பின் அவற்றைத் தகர்ப்பதே இனி அவனது பணி; அவனுக்கு வாழ்க்கை முழுதும் குமுறல்! அவனுக்கு ஆர்ப்பாட்டம் என்பதுதான் மூச்சு! புரட்சி என்பதே அவனது தத்துவம்! தடைகளைத் தகர்த்துக் கொண்டு இனி அவன் மேலே மேலே முன்னேறிப் போவான்! மற்றவர்கள் இனி அவனைப் பின்பற்றிச் செல்லத்தான் வேண்டும்! மேட்டுக்குடி மக்கள் நிம்மதியாய் மடிவர்; பின்னர் உலகத்தாரால் மறக்கப்படுவர்; கொள்கைக்காகக் கொடுந்துயர் அடையச் சித்தமாக இருப்பவர்கள், அவனுடன் இணைந்து, அவனைப் பின்பற்றிச் செல்வர்; கொள்கைகளை மாற்றிக் கொண்டு உலகியல் சுகங்களுக்காக வாழ்வோர் அவனுடன் சேரமாட்டார், எதிர்த் தரப்பில் சேர்ந்து கொள்வர் - என்று வருணிக்கிறது 'வேறுபாடு' என்னும் இக்கவிதை. அடுத்து இடம் பெறும் 'ஆசாதூதலு' (ஆசைத் தூதர்கள்) என்னும் கவிதையில் ஸ்ரீஸ்ரீ தனது கருத்துக்கள் எவ்வாறு நான்கு திசைகளிலும் சென்று சேரும் என்று கற்பனை செய்கிறார். அடுத்து இடம் பெறும், 'மானவுடா' (ஓ! மனிதா!) என்னும் கவிதையில் ஸ்ரீஸ்ரீ இந்த மனிதன் என்பவன் மண்ணுலகில் எப்படியெல்லாம் உருவெடுக்கிறான் என்றும், என்ன என்ன பணிகளையெல்லாம் செய்கிறான் என்றும், அவனது செயல்பாடுகளில் அவன் எப்படியெல்லாம் விஞ்சிப் பாடுபடுகிறான் என்றும் புகழ்பாடி விவரிக்கின்றார். அடுத்து, யாப்பு முறைச் சீர் ஒழுங்கில் அமைந்த 'நிஜம் காணே?' (உண்மைதானா?) என்ற கவிதை அமைகிறது. இக்கவிதையில் ''இந்த மானுட சமுதாயத்திற்குச் சமாதானம் கிட்டப் போகிறதா? நல்லிணக்கம் அமையப் போகிறதா? சுதந்திரம் கிட்டப் போகிறதா? அகில உலக சகோதரத்துவம் மலரப் போகிறதா? இது உண்மைதானா?''- என்று வியப்படைகிறார் ஸ்ரீஸ்ரீ. ''கர்ஜின்கு ரஷ்யா'' (ரஷ்யா கர்ஜிக்கிறது)

என்னும் வசன கவிதையில், ஸ்ரீஸ்ரீ சோஷலிச ரஷ்யாவின் சாதனைகளைப் புகழ்ந்து உரைக்கிறார். இரண்டாம் உலகப் போரின் போது நாஜி ஜெர்மனிக்கு எதிராக சோஷலிச ரஷ்யாவின் விமானப் படை களத்தில் இறங்கியதைக் கேட்டு அந்த உணர்ச்சி மேலீட்டால் பாடப்பட்ட கவிதையாகும் இது. ''இளைஞர்களுக்கு ஒரு விண்ணப்பம்'' என்று குரோபோட்கின் எழுதியதைப் படித்து அதனால் உந்துதல் அடைந்தேன் என்று ஸ்ரீஸ்ரீ பின்னர் ஒரு முறை தெரிவித்தார்.

'மகாப்பிரஸ்தானம்' தொகுதியில் சமர்ப்பணமாகச் சேர்க்கப் பட்டுள்ள கவிதை நீங்கலாக, கடைசியாக அமைவது ''ஜெகந்நாதுனி ரதச்சக்ரலு (ஜெகந்நாதனின் தேர்ச்சக்கரங்கள்) என்னும் கவிதை யாகும். ஏதாவது ஒரு வகையில் துன்பப்பட்டுக் கொண்டிருக்கிற மக்கள் அனைவருக்கும் இக்கவிதையில் ஸ்ரீஸ்ரீ ஆறுதல் கூறிப் பேசுகிறார். ''வேதனை அடைந்தவர்களே, நீங்கள் அழ வேண்டாம்'' என்று கேட்டுக் கொள்கிறார். தடுத்து நிறுத்த முடியாத மாபெரிய புரட்சிச் சக்கரம் சுற்றிச் சுழன்று வருகிறது என்று ஸ்ரீஸ்ரீ உறுதி அளிக்கிறார். தனது எழுதுகோல் என்னும் ஆயுதத்தால் அந்தப் புரட்சிச் சக்கரத்தை விண்ணுலகத்திலிருந்து மண்ணுலகத்திற்குத் தான் கொண்டு வரப் போவதாகவும் ஸ்ரீஸ்ரீ உறுதி தருகிறார். தனது இந்த முயற்சி, ஆதரவின்றிக் கிடக்கும் அடித்தட்டு மக்களுக்குச் சுதந்திரம், சகோதரத்துவம், சமாதானம் ஆகியவற்றை அளிப்பதற்கான பெரும் போர்க்களமாகவே அமையும் என்றும் ஸ்ரீஸ்ரீ கூறுகிறார். ஏழை, அடித்தட்டு மக்கள் அனைவரையும் தன்னுடன் ''சேர வாரீர்'' என்று அழைத்து, ''போராட்டத்தில் பங்கு கொள்வீர், இறுதியில் இந்த உலகத்தையே ஆளப் போகிறீர், ஏன் எனில், இந்த உலகம் உண்மையாகவே உங்களுடையது தானே!'' என்று அழைப்பு விடுக்கிறார். 'மகாப் பிரஸ்தானம்' (அதாவது நீண்ட பயணம்) என்னும் தலைப்புக்கு ஏற்பவே, கனல் கக்கும் போர் முழக்கத்தோடு இக்கவிதை நூலைத் தொடங்கியது போலவே, கனல் கக்கும் போர் முழக்கத்தோடு ஸ்ரீஸ்ரீ நூலை நிறைவு செய்கிறார்.

ஸ்ரீஸ்ரீயின் சமுதாய அல்லது அரசியல் சித்தாந்தங்களை ஏற்றுக் கொள்ளாதவர் கொம்பல்லெ ஜனார்த்தன ராவ். அவருக்குத்தான் 'மகாப்பிரஸ்தானம்' கவிதைத் தொகுப்பை ஸ்ரீஸ்ரீ சமர்ப்பணம் செய்துள்ளார். கொம்பல்லெ உள்ளத்தால் உறுதியான மரபுவாதி; செயலால் பழைமைவாதி; ஆனால் எதிர் எதிரான வடதென் துருவங்கள் தங்களை ஒன்றுக்கு ஒன்று ஈர்த்துக் கொள்வது போல, கொம்பல்லெவும் ஸ்ரீஸ்ரீயும் ஒருவரை ஒருவர் ஈர்த்துக் கொண்டனர். ஸ்ரீஸ்ரீ தொடக்க காலத்தில் மரபு யாப்பில் தன்னுணர்ச்சிப் பாடல்களாக

எழுதியிருந்த ''பிரபவா'' கவிதைகளுக்குக் கொம்பல்லெதான் முதன் முதலில் மதிப்புரை எழுதியிருந்தார். ஸ்ரீஸ்ரீயின் கவனம் விஷய அழுத்தத்தில்தான் இருக்கிறதேயன்றி, அது புரியக் கூடியதாகவும் இருக்க வேண்டும் என்பதில் இல்லையே என்று கொம்பல்லெ எழுதியிருந்தார். அதன் பின்னர் கொம்பல்லெ- ஸ்ரீஸ்ரீ இருவரும் பல இலக்கிய நிகழ்ச்சிகளில் ஒருங்கே பங்கேற்கும் நிலையும் வாய்த்தது. சென்னையில் இருவரும் அருகருகே வசித்தனர்; நண்பர்கள் ஆயினர். கொம்பல்லெ 'உதயிணி' என்ற இலக்கிய இதழை ஆரம்பித்து நடத்தினார்; ஆறு இதழ்களுக்கு மேல் அவரால் வெளியிட இயல வில்லை. இலக்கியத்தைப் பரப்ப வேண்டும் என்ற தீராத அபிலாட்சை யின் காரணமாக கொம்பல்லெ காலம் கருதாது உழைத்தார்; ஒவ்வொரு இலக்கியவாதியிடமும் இலக்கியப் பங்களிப்புச் செய்யுமாறு வேண்டிக் கேட்டுக் கொண்டார்; தனது பத்திரிகையின் பிரதிகளை விற்பனை செய்வதற்காக வீதிவீதியாய் அலைந்தார்; அவரது உடல் நலமும் நலிந்தது; பத்திரிகைக்காகப் போட்டிருந்த நிதியும் நலிவுற்றது. ''நவ்ய சாகித்திய பரிஷத்து'' என்ற, அப்போதைய புதுயுகக் கவிஞர்களுக்கான இலக்கிய அமைப்பு, தனக்கு என்று 'பிரதிபா' என்ற ஓர் இலக்கிய இதழைத் தொடங்கியி ருந்தது. இந்த இதழின் வளர்ச்சியால் கொம்பல்லெவின் இலக்கிய இதழ் 'உதயிணி' பாதிக்கப்பட்டு இறுதியில் நின்றுவிட்டது. அச்சகக் கட்டணத் தொகையை கொம்பல்லெ கொடுக்க முடியாத காரணத்தால், அச்சக உரிமையாளர் 'உதயிணி' இதழின் ஏழாவது வெளியீட்டுப் பிரதிகளை பழைய காகித விலைக்கு விற்று விட்டார். மனம் உடைந்து போன கொம்பல்லெ க்ஷயரோகத்தால் பாதிக்கப் பட்டு, கையில் காசும் இன்றி, அவல நிலையில் மரணமடைந்தார். ''இலக்கியமேயானாலும் அது விற்பனை ஆவதற்கு ஒரு வழிவகை இருப்பது மிக அவசியம்''- என்று பிரார்த்தனை செய்தவாறே அவர் இறந்தார். கொம்பல்லெ விடுத்த, மனத்தைச் சுடுகின்ற இந்தப் பிரார்த்தனையால் மிகவும் மனம் நெகிழ்ந்து போன ஸ்ரீஸ்ரீ, கொம்பல்லெயின் நினைவுக்கு, மனத்தைத் தொடுகிற ஒரு சமர்ப் பணக்கவிதை எழுதி 'மகாப்பிரஸ்தானம்' தொகுப்பில் சேர்த்திருந்தார். (''பிரதிபா'' இதழின் ஆசிரியர் குழுவில் ஸ்ரீஸ்ரீ அங்கம் வகித்திருந்தார்; இது ஒரு தற்செயல் நிகழ்ச்சிதான்; ஆனாலும் 'பிரதிபா'வின் வளர்ச்சிதான் கொம்பல்லெயின் பத்திரிகை நின்று போனதற்குக் காரணம் என்பதால், ஸ்ரீஸ்ரீக்கு ஏதோ ஒரு வகையில் குற்ற உணர்வு ஏற்பட்டு, அதன் காரணமாகக் கவிதைச் சமர்ப்பணம் செய்தார் என்றும் கருதப்படலாம்) அந்தச் சமர்ப்பணக் கவிதையின் தலைப்பு ''கொம்பல்லெ ஜனார்த்தனராவ் அவர்களுக்கு'' என்று அமைந்திருந்தது.

கொம்பல்லெயின் அரும்பாடுகள் அனைத்தும் இந்தச் சமுதாயத்தால் எவ்வாறெல்லாம் புறக்கணிக்கப் பட்டன, எத்தகைய துக்ககரமான வாழ்க்கையை அவர் நடத்தி வந்தார், கடைசிக் காலத்துத் துன்பங்களை எவ்வாறு சகித்துக் கொண்டார், எப்படியெல்லாம் துரோகம் செய்யப்பட்டார், தாழ்த்தி வைக்கப்பட்டார் என்று ஸ்ரீஸ்ரீ இந்தச் சமர்ப்பணக் கவிதையில் மிகுந்த அவல உணர்ச்சியுடன் நினைத்துப் பார்க்கிறார். கொம்பல்லெ இறந்தபோது அனுதாபக் கூட்டம் நடந்தது. அந்தக் கூட்டத்தில் மிகச் சில ஆர்வலர்கள்தான் பங்கேற்றனர். ஸ்ரீஸ்ரீயைப் போன்ற மிகச் சில நண்பர்களைத் தவிர, இப்போது, கொம்பல்லெவை நினைத்துப் பார்க்க யாரும் இல்லையே என்றும் ஸ்ரீஸ்ரீ அந்தக் கவிதையில் ஏளனக் குறிப்போடு கேட்கிறார். இப்போது பகை வர்க்கத்தின் பலம் என்ன என்று தாம் எடைபோட்டு விட்டதாகவும், பிரிந்து சென்று விட்ட கொம்பல்லெவின் ஆத்மாவி லிருந்து, தான் உத்வேகம் பெற்றுள்ளதாகவும் குறிப்பிடும் ஸ்ரீஸ்ரீ, கொம்பல்லேவினால் முடிக்கப்படாமல் விட்டுச் செல்லப் பட்ட போராட்டத்தைத் தொடர்ந்து, தான் நடத்தப் போவதாகவும் அறிவிக்கிறார். கடந்த காலத்தில் கைவிடப் பட்டிருந்த போராட்டம் இப்போது நிகழ் காலத்தில் கட்டாயமாக நடத்தப் பட வேண்டும் என்றும் ஸ்ரீஸ்ரீ அறிவிக்கிறார். ''நேற்றுக் கைவிடப் பட்டது இன்றைக்குக் கட்டாயமாகியுள்ளது''- என்ற ஸ்ரீஸ்ரீயின் வரிகள் பழமொழி வாசகம் போல மக்களிடையே புகழ் பெற்றுவிட்டது. ஏதேனும் ஒரு காரணத்தால் போராட்டக் களத்தில் இறங்கும் ஒவ்வொருவரும் எப்போதும் எடுத்து முழங்குகிற முழக்க வரிகளாகவும் இது ஆகிவிட்டது.

சலம் எழுதியுள்ள முன்னுரையில், ''ஸ்ரீஸ்ரீ வார்த்தைப் பிரயோகத்திலும், சிந்தனையோட்டத்திலும் சொற்செட்டு மிகுந்தவர்; சிந்தனைகளையும், செய்திகளையும் நேர்படத் தெரிவிக்கும் ஆற்றல் உடையவர்; கவிதையின் ஆரோக்கியத்துக்காக ஸ்ரீஸ்ரீ ஒரு டானிக் உருவாக்கித் தந்துள்ளார்; செந்நீரும் கண்ணீரும் கலந்த மக்களைப் படைத்தளித்துள்ளார்''- என்று சான்றளித்துப் பேசுகிறார். மேலும், சலம் அப்போது பழக்கத்தில் இருந்த தன்னுணர்ச்சிக் கவிதையையும், ஸ்ரீஸ்ரீ நடைமுறைக்குக் கொண்டு வந்திருந்த அவருக்கே உரியதான நவீனத்துவ பாணிக் கவிதையையும் ஒப்பிட்டுக் காட்டுகின்றார்; ஸ்ரீஸ்ரீயை கிருஷ்ண சாஸ்திரியுடன் உறழ்ந்து காட்டுகின்றார்; கிருஷ்ண சாஸ்திரியின் கவிதைகளில் தனி மனித அவலங்கள் சமுதாய அவலங்களாகச் சித்திரிக்கப்பட்டுள்ளன; அதே நேரத்தில் ஸ்ரீஸ்ரீயினுடையவை தனி மனித அவலங்கள் அல்ல; அவை சமுதாய அவலங்களாம் என்று சலம் வேறுபடுத்திக் காட்டுகின்றார். இந்த மானுடம் முழுமையையும் ஒன்றாகப் பாவித்து அதன் வளர்ச்சியைக்

கணித்துக் கொண்ட ஸ்ரீஸ்ரீ அதன்மீது முழுமையான நம்பிக்கை கொண்டிருந்தார். தெலுங்கின் வேறு பிற கவிஞர்கள் எல்லாரும் தங்களது கனவுலகக் கன்னியர்களுக்காகப் புலம்பிக் கொண்டிருந்தார் கள்; அல்லது வீடு, நாடு என்று மிகவும் குறுகிய எல்லைகளுக்குள் வியர்த்துக் கிடந்தார்கள். ஆனால் ஸ்ரீஸ்ரீ அகில உலக சகோதரத்து வத்திற்காகவும், கண்ணீர் இல்லாத சமாதான சக வாழ்வுக்காகவும், மானுட கௌரவத்துக்காகவும், சமத்துவத்திற்காகவும் உரத்த குரல் கொடுத்தார். *'நீண்ட பயணம்'* என்ற பெயரில், இந்த வடிவத்தில் வெளியான முதலாவது தொகுப்பே ஸ்ரீஸ்ரீயின் மகத்தான படைப்பாக அமைந்து விட்டது. மிகவும் நேர்த்தியான கவிதைகளுள் ஒன்று எனத் தெலுங்கு இலக்கியம் பெருமை கொண்டாடிக் கொள்வதற்கு உரிய படைப்பாகவும் இது அமைந்து விட்டது.

பிற கவிதைப் படைப்புக்கள்

'கட்க சிருஷ்டி' (வாளின் சிருஷ்டி) என்பது ஸ்ரீஸ்ரீயின் அடுத்து வெளியான கவிதைத் தொகுப்பு ஆகும். *1940-1945*ஆம் ஆண்டு களின் இடையில் எழுதப்பட்ட இந்தக் கவிதைகள், இவ்வாறு தொகுக்கப்பட்டு, 1966-இல்தான் முதன்முதலில் வெளியிடப் பட்டது. இந்தத் தொகுதியில் ஸ்ரீஸ்ரீயின் *'மிகை மெய்யியல்'* கவிதைகள் இடம் பெற்றுள்ளன; *'சத்-அசத் சம்சயம்'* (உண்மை - பொய் ஆகியவை பற்றிய சந்தேகம்) என்பன போன்ற தெலுங்கு மொழிக்கு மொழியாக்கம் செய்யப்பட்ட கவிதைகளும் உள்ளன; பின்னாளில் பூர்த்தி செய்யப்பட்ட, அப்போது முழுமை பெற்றிராத, ஒரு கவிதையும் இத்தொகுதியில் உள்ளது. இந்தத் தொகுதி ஸ்ரீஸ்ரீக்கு *'சாகித்திய அகாதெமி'*யின் விருதைப் பெற்றுத் தந்தது; சோவியத்து நாடு பரிசாகிய ரூ.*8,000*/-மும் ஸ்ரீஸ்ரீக்குக் கிடைத்தது. இந்தத் தொகுப்பு முறையாகத் தொகுக்கப்பட வில்லை; உள்ளே இருக்கும் கவிதைகள், அவை வெளியான காலவாரியாக அமைக்கப்பட வில்லை. ஸ்ரீஸ்ரீ 'கம்யூனிசம்' என்னும் கொள்கைக்குத் தன்னை ஒப்படைத்துக் கொண்டதைப் பிரதிபலிப்பதாக இந்தத் தொகுப்பு அமைகின்றது; ஆனால், கவித்துவ நேர்த்தி என்று எடுத்துக் கொண்டால், அங்கும் இங்குமாகச் சில இடங்களே தெரிகின்றன; மற்றபடி இந்தத் தொகுப்பு, *'நீண்ட பயணம்'* தொகுதிக்குக் கிட்டத்தில் நிற்கும் தகுதி கூடப் பெறுவதாக இல்லை. ஸ்ரீஸ்ரீயின் சொல்லாட்சியில் ஓர் எளிமைத் தன்மை அமைந்திருந்தது; யாப்பின் ஆளும் திறமை ஏறத்தாழ முழுமை பெற்றிருந்தது. ஸ்ரீஸ்ரீ துணிகரமான கருத்தறி வுப்புக்கள் பலவற்றை வெளியிட்டிருந்தார். அவை, பெரும்பாலான புரட்சிகரக் கவிஞர்களாலும், தீவிரமான அரசியல் தொண்டர்களாலும்

மேற்கோள் வாக்கியங்களாக ஆளப்பட்டன. 'அஹிம்சை' என்பது ஒரு குறிக்கோளாக மட்டுமே இருக்க முடியும்; அது ஓர் ஆயுதமாக இருக்க முடியாது என்று ஸ்ரீஸ்ரீ சொன்னார். மனித சக்தி என்பது ஓர் அணு ஆயுத சக்தியை விட மிகவும் வலிமையானது என்றார் ஸ்ரீஸ்ரீ. ''சரத் சந்திரிகா'' (பனிக்காலத்து நிலவொளி) என்னும் ஒரு முக்கியமான கவிதையில் ''நாம் ஒவ்வொருவரும் ஒவ்வொன்றையும் பற்றி அறிந்துதான் வைத்துள்ளோம்; அதுதான் நம்மிடத்தில் உள்ள அறியாமையும் கூட; நிகழ்காலத்தைவிட எதிர்காலமே எப்பொழுதும் சிறப்புக்கு உரியதாக இருக்கிறது''- என்று ஸ்ரீஸ்ரீ கூறுகிறார். 'விசாதாந்த்ர' என்னும் கவிதையில் நமக்கு விடுதலையைக் கொண்டு வந்தவர்கள் நிச்சயமாக மிகப் பெரிய வீரர்கள்தான்; ஆனால் விடுதலை அடைந்த பிறகு, நாட்டில் முன்னேற்றம்தான் ஏற்பட வில்லை; விடுதலைக்குப் பிறகு நாட்டின் நிலைமையில் எடுத்துச் சொல்லுவதற்கு ஏதுவுமில்லை என்று ஸ்ரீஸ்ரீ உணர்ந்தார். ஸ்ரீஸ்ரீ பரந்து பட்ட இந்தப் பிரபஞ்சத்திடமிருந்து கையிகந்து வேண்டிய தெல்லாம் ஒரு கையளவிலாவது மாற்றங்கள் நிகழ வேண்டும், கைவிரல் நுனியளவாவது இரக்கம் இருக்க வேண்டும் என்பதுதான். 'மகா சங்கல்பம்' என்னும் கவிதையில் ஸ்ரீஸ்ரீ தன்னுடைய பாடுபொருள் மனிதனும், மனிதன் பற்றிய செய்தியுமே என்று உறுதிப் படுத்தினார். ''காந்திஜி'' என்னும் கவிதையில் கிழிந்து போன கொடியானது மறக்கப்பட்ட சாம்ராஜ்ஜியத்தின் அடையாளம் என்றார் ஸ்ரீஸ்ரீ. 'சாமான்யுனி காமனா' என்னும் கவிதையில் ''மோட்சம் என்பதும் நரகம் என்பதும் வேறுவேறல்ல; இரண்டும் ஒரே சூழ்நிலைக்குரிய இருவேறு பெயர்களே; வேறுபாடு என்பது கவிதைப் படைப்பில்தான் இருக்கிறது; மற்றபடி இவை இரண்டுக்கும் உரிய, கணக்கிட்டுக் காட்டும் வரை கோடுகள் எல்லாம் ஒரே மாதிரித்தான்'' என்று ஸ்ரீஸ்ரீ விவரிக்கின்றார். ''பொம்ம லாண்டரு'' (ஒரு வகையான சீட்டாட்டம்) என்ற கவிதையில் சூரியனைச் சுற்றிப் பூமி உருண்டையானது சுழல்வது போலவே, குறிக்கோளைச் சுற்றிச் சுற்றி ஆவேசம் என்னும் உணர்ச்சி வட்டமிடுகிறது என்று விளக்குகிறார்.

''விதூஷகனின் ஆத்மஹத்யா'' (விதூஷகனின் தற்கொலை) என்னும் கவிதையில், இறந்த காலத்தைப் பற்றிப் படைத்தல் என்பது, ஒரு முன்னுரைக்குள் ஒரு முடிவுரை அமைவதுபோலத்தான் என்று ஒப்பிட்டுக் காட்டுகிறார் ஸ்ரீஸ்ரீ; இப்படிச் சொல்வது விதூஷகன் ஒருவன் மரணமடைவது போன்றது என்பதைத் தவிர வேறல்ல எனவும் கூறுகிறார். 'கொண்ட கோணலு' (குறும்புத் தனமான கோணங்கள்) என்னும் கவிதையில் ஸ்ரீஸ்ரீ பின்வருமாறு வேண்டுகிறார்: ''யாப்பிலக்கண விதிகள் அனைத்தையுமே அழித்துப்

போடுவோமாக; சிலர் 'அடடே, என்ன இது?' என்று கவலைப் படுவார்கள். அவர்களுக்கு, 'இது தானப்பா கவிதை' என்று சொல்லுவோமாக!'' வால்மீகி பற்றி ஸ்ரீஸ்ரீ எழுதியுள்ள 'மா நிஷாத' என்ற கவிதையில் தனிமனிதன் ஒருவனுடைய 'பன்முக வடிவம்' தான் 'சக்தி' என்னும் ஒட்டுமொத்த வடிவம் என்று குறிப்பிடுகின்றார். 'ஒகதி-பதி' (ஒன்று- பத்து) என்ற கவிதையில் உள் முக உலகத்தின் வெளிமுக வடிவம்தான் மொழி என்று ஸ்ரீஸ்ரீ கண்டுணர்ந்து சொல்கிறார். இந்தக் கவிதைத் தொகுப்பில் சில சிறப்பான உருவகங் களையும் உருக்காட்சிகளையும் காணலாம். உதாரணமாக 'பனிக்காலத்து நிலவு ஒளி' என்றும் கவிதையைக் குறிப்பிடலாம். இந்தக் கவிதையில், நிலவை ஒரு பெண்ணாக உருவகித்து, அந்த நிலவுப் பெண் மேகம் என்னும் தனது கைக்குட்டையால் தனது முகத்தை மறைத்துக் கொள்கிறாள் என்றும், அந்த நிலவுப் பெண் சில வேளைகளில் கடலின் மீது கையெழுத்து இடுகிறாள் என்றும் ஸ்ரீஸ்ரீ உருவகங்களைத் தீட்டிக் காட்டுகிறார்.

இந்தத் தொகுப்பில், படைப்பாளர் பலருடைய மூலங்களி லிருந்து மொழி பெயர்க்கப்பட்ட கவிதைகளும் இடம் பெற்றுள்ளன. குரஜாடா, பால் எலுவர்டு (*1895-1952*), கில்லாம் அபோலினர் (*1880-1918*), சல்வாடோர் தலி (*1896-1966*), லீவிஸ் மெனிஸ், ஜேமஸ் ஜாய்ஸ் (*1882-1941*), ஆன்ட்ரே பிரிடோன் (*1896-1966*), ஹென்றி மிக்காக்ஸ் (*1899-*), கிறிஸ்டொபர் லோக், டைலன் தாமஸ் (*1914-53*), ஒடிவன்ஸ் எல்லிட்ஸ், அலெக்சாண்டர் புஷ்கின் (*1709-1837*) நிக்கோலோய் நெக்ரசோவ், மயகாவ்ஸ்கி (*1893-1930*) முதலியோருடைய படைப்புக்களின் மொழி பெயர்ப்புக்கள் இந்தத் தொகுதியில் இடம் பெற்றுள்ளன. சில மீமெய்மையியல் கவிதைகள், கருத்து வேறுபாடுகளையும் பழிப்புரைகளையும் பெருமளவில் கிளப்பி விட்டன. தொகுக்கப்பட்ட காலத்தில் மட்டுமல்ல, சில கவிதைகளுக்கு எதிர்ப்பும் பழிப்பும் அவை முன்பு, இலக்கிய இதழ்களில் வெளியான காலத்திலிருந்தே தொடர்ந்து கிளம்பி யிருந்தன. தனது சமகாலத்தில் உலகில் நிலவிய இலக்கிய வடிவங்கள், இலக்கியப் போக்குக்கள் அனைத்தையும், எழுத்துப் பெயர்ப்பு மூலம் அல்லது மொழி பெயர்ப்பு மூலம் அல்லது தழுவிக் கொள்ளல் மூலம் அல்லது போலச் செய்வது மூலம் தெலுங்கு இலக்கியத்திற்கு அறிமுகப் படுத்தி வைத்த ஒரு தெலுங்குக் கவிஞர் யார் என்றால், அவர் ஸ்ரீஸ்ரீதான்.

குழந்தைத் தனத்தோடு கூடிய சிறு குறும்புப் பேச்சுக்கும் வேடிக்கையான கருத்துக்களுக்கும் ஸ்ரீஸ்ரீ மிகவும் பிரசித்தி பெற்றவராக விளங்கினார். இதை அவரே பலமுறை ஒப்புக்

கொண்டிருக்கிறார். தனது குணாம்சத்தை வெளிப்படையாகத் தானே ஒப்புக் கொள்கிற, ஒளிவு மறைவு இல்லாத தன்மைதான், ஸ்ரீஸ்ரீக்குப் பெரும் புகழை ஈட்டித் தந்தது. ஜனரஞ்சக பாணியில் ஸ்ரீஸ்ரீ ''கார்ட்டூன் கவிதைகள்'' எழுதினார்; அவற்றின் மூலம், சமகாலத்திய உலகில் நிலவிய சமுதாய, அரசியல் இலக்கிய நிலைமைகளை எள்ளி நகையாடினார். இத்தகைய 'கார்ட்டூன் கவிதைகள்' மரபு யாப்பிலும் புனையப்பட்டன; பழைமை யல்லாத வசன கவிதை யாப்பிலும் புனையப்பட்டன; இவை, ஸ்ரீஸ்ரீ படைத்த தீவிரமான சிந்தனை யுடைய பிற படைப்புக்களைப் போலவே புகழடைந்தன. ஸ்ரீஸ்ரீ எப்போதும் இவ்வாறு 'ஜனரஞ்சக' மனப்பாங்குடன் இருந்து கொள்வதில்லை. நகைச்சுவையாய்க் கிண்டல் பேசுகிற சந்தர்ப்பங் களிலும் கூட, ஸ்ரீஸ்ரீ சமகாலத்திய அரசியல் மீதும் விமர்சனப் பாங்குடன்தான் செய்து வந்தார். இதற்கு ஓர் உதாரணமாக, தெலுங்கு 'சுதந்திரா' இதழில் முதன் முதலில் வெளியான 'பிராசக்ருதலு' (இறுதிச்சீர் ஒலி இயைபுத் தொடைச் சொல்லாடல்கள், 1953) என்னும் படைப்பைக் குறிப்பிடலாம். எள்ளி நகையாடல் என்னும் அங்கதப் படைப்புக்களை, ஸ்ரீஸ்ரீயைப் பின்பற்றிப் பலரும் படைக்கலாயினர். அவர்களுள் ஒருவர் கஜீலாமல்லரெட்டி (பிறப்பு: 1922) ஆவார். இவர், ஸ்ரீஸ்ரீயைப் பின்பற்றி அரசியல் அங்கதப் படைப்புக்கள் ஏராளம் படைத்தார்; ஸ்ரீஸ்ரீயின் பாராட்டுக்களையும் பெற்றார். 'சிரிசிரி மூவ்வா' (1946) என்பது பழைய யாப்பு முறையில் படைக்கப்பட்ட ஒரு கவிதைத் தொகுப்பு; இந்தத் தொகுப்பில், ஒவ்வொரு பத்தியும், பல்லவியாய் அமைந்த தலைப்புத் தொடரை இறுதியாகக் கொண்டு அமைகிறது. இந்தப் பாடல்கள், நூலாகத் தொகுக்கப் படுவதற்கு முன்னார், ஆனந்தவாணி, தன்கா, ஆந்திரஜோதி முதலிய இலக்கிய இதழ்களில் வெளியிடப் பட்டவையே. ''மேமே'' (நாங்கள் இருக்கிறோம்) என்னும் படைப்பும் 'சிரிசிரி மூவ்வா' போலவே எழுதப்பட்டு, ஆருத்ராவுடனும் வரதாவுடனும் (ராஜேஸ்வராவ்) சேர்ந்து வெளியிடப்பட்டது. 'ருக்குக்ஷேஸ்வர சதகம்' (1948) என்னும் தொகுப்பில் நூறு கவிதைகள் இடம் பெற்றுள்ளன; இவை பழைய மரபு யாப்பில், ஆனால் புதிய நவீன மொழி நடையில் எழுதப்பட்டவை. இந்நூலின் இணை ஆசிரியர் ஆருத்ரா ஆவார். ஸ்ரீஸ்ரீயின் மிக நெருங்கிய நண்பர்களில் ஒருவரும், புகழ்பெற்ற நகைச்சுவை அங்கதப் படைப்பாளரும் 'ருக்காய்' 'மினி சாஸ்திரி' 'ஜருக்' போன்ற வேறுபல பெயர்களில் அழைக்கப்பட்டவருமான, ஜல சூத்ரம் ருக்மிணி சாஸ்திரி (1914-68) அவர்களைப் பாராட்டிப் புகழ்வதாகவே இந்நூல் அமைகிறது. 'பிராசக்ருதலு' என்ற அங்கதப் படைப்பு நீங்கலாக, பிற அங்கதங்கள் மிகவும் மோசமானவை அல்ல; அவையெல்லாம் ஜனரஞ்சகப் போக்குடையவை: சிறிது கடுமையாகக் 'காமிக்' செய்பவை. இந்த அங்கத வரிசையில் மிகவும்

பிந்திய படைப்பு 'லிமாரிக்குலு' (வேடிக்கைப் பாட்டு) என்பது. இதில் அடங்கிய பல கருத்துக்கள் வரம்பு மீறியும் காரசாரமாகவும் அமைந்து பலரையும் புண்படுத்துவதாக அமைந்துவிட்டன. ஸ்ரீஸ்ரீயின் சிறுசிறு கவிதைப் படைப்புக்கள் பல உள்ளன; வரையறுத்துக் கொள்ளப்பட்ட நோக்கங்களுடன் எழுதப்படும் இந்தச் சிறிய நூலில் அவற்றை விவாதிக்க இயலாது.

ஸ்ரீஸ்ரீயின் 'சத் அசத் சம்சயம்' (சத்தியமா பொய்யா என்னும் சந்தேகம்) என்னும் படைப்பு 1959-ஆம் ஆண்டில் எழுதப்பட்டது. முடிக்கப்படாத இந்தக் கவிதை பின்னர் 'கட்க சிருஷ்டி' என்னும் நூலில் சேர்க்கப்பட்டது. இந்த நூலின் தொகுப்புப் பணிகள் 1965-ஏப்ரலில் தொடங்கப்பட்டு 'சம்வேதனா' என்னும் இலக்கிய இதழிலும் பல கவிதைகள் வெளியிடப்படலாயின. 'கட்க சிருஷ்டி' என்ற இந்தக் கவிதைத் தொகுப்புத்தான், ஸ்ரீஸ்ரீக்கு 1972-ஆம் ஆண்டுக்குரிய சாகித்திய அகாதெமி விருதினைப் பெற்றுத் தந்தது. அகாதமி விருதைப் பெறுவதில் ஸ்ரீஸ்ரீக்கும் புரட்சிகர எழுத்தாளர் சங்கத்திற்கும் இடையில் பெருத்த வேறுபாடு எழுந்தது; பெரிய புகைச்சலுக்குப் பிறகே ஸ்ரீஸ்ரீ விருதைப் பெற்றுக் கொண்டார். இந்த நூல், அதனுடைய இலக்கியச் சிறப்புக் களுக்காக அல்லாமல், அரசியல் சிறப்பு அம்சங்களினாலேயே அறிவு ஜீவிகளின் மிகுந்த கவனத்தைக் கவருவதாக அமைந்தது.

'மரோ பிரஸ்தானம்' ('இன்னுமொரு பயணம்') (1980) என்னும் தொகுப்பும், வேறு சில கவிதைகளும் 'நக்சல்பாரிக் கொந்தளிப்பு மிகுந்த விரசம் பத்தாண்டுக் காலக் கட்டத்தின்' போது 'விரசம்' அமைப்பின் சார்பில் வெளியிடப்பட்டன. 'விரசம்' அமைப்பு 1970-இல் பிறந்தது; அதன் நிறுவுநர் தலைவர் ஸ்ரீஸ்ரீ ஆவார். இந்தத் தொகுதியில் உள்ள கவிதைகள் மொழியாலும் நடையாலும் மிகவும் எளிமையானவை; உரைநடைப் படைப்புக் களை விடவும் கூடக் கவர்ச்சியில்லாதவை; ஆனால் சமரசம் செய்து கொள்ளாத அரசியல் கருத்துக்களைக் கொண்டவை. வெறும் வறட்சியான அரசியல் கருத்துக்களையெல்லாம் கூட, ஸ்ரீஸ்ரீ தனது கைகளால் கவித்துவம் மிகுந்த விளக்கமாகவும், வேகம் மிகுந்தவையா கவும், குறிப்பிடத்தக்க இசைத் தன்மை உடையவையாகவும் மாற்றி அமைத்து விடுவார். அவ்வாறே, ஸ்ரீஸ்ரீ மாற்றி அமைத்துள்ள இடங்களை, இந்தத் தொகுப்பில் அங்கொன்றும் இங்கொன்றுமா கவே காண முடியும். கட்சியைச் சாராத திறனாய்வாளர்களால் பாராட்டப்படுவதற்கும் போற்றப்படுவதற்கும் உரிய சில இடங்கள் இந்தத் தொகுப்பில் இடம் பெற்றுத்தான் உள்ளன; மற்றபடி, புகழ்பெற்ற கவிஞன் ஒருவனின், கலை நுணுக்கம் இல்லாத

புரட்சிகரமான கோஷங்களே நூல் முழுவதும் நிரம்பிக் கிடக்கின்றன. முதலாம் கவிதை, ஒரு புரட்சி இங்கே நிகழ்ந்தால்தான் அனைவருக்கும் உண்ண உணவு கிடைக்கும் என்று பிரகடனம் செய்கிறது. அடுத்து, இன்னொரு கவிதையில் ஸ்ரீஸ்ரீ, தன் தோழர் களைப் பார்த்துத் தூக்கு மரங்களில் தொங்கிட வாரீர் எனக் கேட்டுக் கொள்கிறார். காந்தியடிகளுக்கு எழுதப்பட்டது போலமைந்த இன்னொரு கவிதையில், காந்திய வழியானது, இருக்கும் நிலையை மாற்ற விரும்பாத வழி என்றும், அதைக் காப்பாற்றித் தக்க வைத்துக் கொள்ளும் அரண் என்றும் சொல்கிறார் ஸ்ரீஸ்ரீ. வன்முறைச் செயல் பாட்டினால்தான் புதிய பூக்கள் மலரும் என்றும், அத்தகைய வன்முறைகளால்தான் இங்கே ஒரு மாற்றம் தோன்றும் என்றும் ஸ்ரீஸ்ரீ பிரகடனம் செய்கிறார். இன்னொரு கவிதையில் ஆந்திரப் பிரதேசத்தின் அன்றைய முதலமைச்சர் ஜே. வெங்கல்ராவை வசைபாடுகின்றார். ''மோசடிக்காரர்கள் வாக்களிக்க அமைவ தெல்லாம், ஆட்சியாகுமா? காசும் பணமும் ஒருவருக்குப் பதவி கொடுக்க அமைவதெல்லாம் ஆட்சியாகுமா? ஊழல் போக்கிலிகள் உண்மையைச் சிதைத்துப் போடுகிறார்கள், இது நல்லதன் அடையாளம் ஆகிடுமா?'' - என்று ஸ்ரீஸ்ரீ இந்தத் தொகுப்பில் அமைத்துள்ள கவிதைக் கண்ணியானது இடது சாரிகளுக்கான புகழ்மிக்க கோஷமாகவே ஆகிவிட்டது. இவ்வாறெல்லாம் அரசியல் உணர்வோடு முழங்கும் ஸ்ரீஸ்ரீ யாப்பமைதியோடு பாடிய இன்னொரு கவிதையில், ''கவிஞன்'' என்ற அவருடைய இயல்பு நிலைக்குத் திரும்புகிறார். அந்தக் கவிதையில், அநாதையான ஒரு பெண்ணை வற்றி வறண்டு போன ஓடைக்கு ஒப்பிட்டுப் பேசுகின்றார். ''மனித குலத்துக்கு எதிரியாக உள்ள ஒருவர் தனக்கும் எதிரியாகி விடுகிறார்'' என்றும் ஸ்ரீஸ்ரீ பேசுவார். ''ஒருவன் இன்று சுருக்குக் கயிற்றில் தொங்குகிறான் என்றால், அந்தச் சுருக்குக் கயிறு என்பது அவனது கடந்த காலமே'' என்றும் உரைக்கின்றார். ஸ்ரீஸ்ரீ திரைப்படங்களுக்காக எழுதிய சில பாடல்களும் இந்தத் தொகுப்பில் இடம் பெற்றுள்ளன; வழக்கம் போலவே, ஸ்ரீஸ்ரீ பிற மொழிகளி லிருந்து, மொழியாக்கம் செய்திருந்த சில மொழி பெயர்ப்புக் கவிதைகளும் இந்தத் தொகுப்பில் இடம் பெற்றுள்ளன. உதாரணங்களாக, சிலியின் புரட்சிக்குயில் பாப்லோ நெருடா, ஸ்பானிய நாட்டுப் புரட்சிக் கவிஞர் ரிஜார் வேலேஜோ, க்யூபாவின் தலைவர் சே குவேரா, துருக்கியக் கவிஞர் நஜீம் ஹிக்கன்ட், அங்கோலாவின் அஹோஸ்தி நோவேடோ, சீனாவில் வாழ்ந்திருந்த மங்கோலியாவைச் சேர்ந்த வாங்ஜாங் போன்றோருடைய படைப்புக்களைக் குறிப்பிடலாம்.

வானொலி நாடகங்கள்

முன்னர் விவாதிக்கப்பட்ட ஸ்ரீஸ்ரீயின் 'தூங்கும் எலும்புகள்' என்னும் படைப்பு உட்பட, பதினொரு வானொலி நாடகங்கள் அவற்றின் உத்தி அமைப்புக்காகவும், கவித்துவ உரைநடைக்காகவும் மிகவும் குறிப்பிடத் தக்கவை ஆகும். 'ஒன்டரி பாவி' (தனிமைக் கிணறு) 'பூதால கோலிமி' (பேய்களின் கூடாரம்) ஆகிய இரண்டும் 'தூங்கும் எலும்புகள்' போலவே மிகவும் கவித்துவம் வாய்ந்தவை. சுப்தாஸ்திகலு, கவேசன, (தேடல்), 'விதூஷகனின் ஆத்ம ஹத்ய' (கோமாளியின் தற்கொலை), 'க்ராமபோனு ரிக்கார்டுல திரிகுபாடு' (கிராம போன் ரிக்கார்டு செய்த புரட்சி), 'குமாஸ்தா கலா' (ஓர் எழுத்தரின் கனவு), 'மரோ பிரபஞ்சம்' (மற்றுமோர் உலகம்) ஆகியவை அவற்றின் புரட்சிகரமான உள்ளடக்கத்திற்காகப் பெயர் பெற்றவை. 'சதுராஸ்ரம்' (சதுக்கம்), 'அனந்த்ர யாத்ரா' (காலப் பயணம்), 'பலி' (தியாகம்) ஆகிய சிறு நாடகங்கள் ஸ்ரீஸ்ரீயின் கற்பனைப் படைப்புக்கள் ஆகும்.

'தனிமைக் கிணறு' - என்பது பாதிக்கு மேல் வருணனையாகவே அமைந்துள்ளது. பேதைமைத் தன்மையுடைய, பத்து வயதே நிரம்பிய, பின்னால் தற்கொலை செய்து கொள்ளுகின்ற ஒரு சிறுமியைச் சுற்றி எழுந்த அவதூறு பற்றிக் கூறுகிறது இந்த நாடகம். 'பேய்களின் கூடாரம்' கொலை செய்யப்பட்ட காதலன், இடுகாட்டில் கிடத்தப்பட்டிருக்க, அவ்விடத்திற்கு வந்து துன்புறும் காதலி ஒருத்தியின் அவலங்களைச் சித்திரிக்கிறது. 'தேடல்' என்னும் நாடகம் மானுடத்தின் சாசுவதத் தன்மையைக் குறியீடாகக் காட்டும் படைப்பாக அமைகிறது. இந்தக் கதையில் மனிதன் ஒருவன் வருகிறான்; அவன் ஐந்து ஆண்டுகள் முன் கூட்டியே இறந்து விட்டான் என்று தவறுதலாகக் கருதப்படுகிறான்; எனவே மேலுலகத்தின் நீதிபதியின் உத்தரவின்படி, ஐந்து வயதுக் குழந்தையின் சடலத்துக்குள் புகுந்து கொள்கிறான். அவனுடைய நடவடிக்கைகள் பற்றிச் சொல்கிறது இந்தக் கதை. ''கோமாளியின் தற்கொலை'' என்னும் நாடகமானது, படைப்பாளரான ஸ்ரீஸ்ரீயின் தற்கொலை விருப்பங்களின் குறியீடு என்று அறிஞர் சிலர் நம்புகின்றனர். நடிகராகவும் கோமாளியாகவும் இருக்கும் ஒருவன், தனது உண்மை வாழ்க்கையில், தான்பட்ட கடனைத் திருப்பித் தர இயலாமல், விஷம் அருந்தித் தற்கொலை செய்து கொள்கிறான். இந்தச் சோகக் கதையைச் சொல்கிறது இந்த நாடகம். ஏன் இவ்வாறு தற்கொலை செய்து கொள்ள நினைத்தேன்? என்று விளக்கி அவன் எழுதி வைத்துள்ள கடிதம்தான் இந்த நாடகத்தின் அவலம் மிகுந்த சிறப்பான அம்சம் ஆகும். அந்தக் கோமாளியின் பெயர் கடியாரம் (காலம் காட்டும்

கருவி) என்பது. 'மிருச்ச கடிகம்' (மண்ணியல் சிறுதேர் என்னும் வடமொழி இலக்கியம்) 'கன்னியா சுல்கம்' (குரஜாடா எழுதிய மணப்பெண் விலை என்ற தெலுங்கு நாடகம்) என்னும் இரண்டு பெரிய நாடகங்களின் குறியீடாக இந்தக் கோமாளி படைக்கப் பட்டுள்ளான். இந்த நாடகத்தின் இயக்குநர்- தயாரிப்பாளரின் பெயர் ''ஆதங்கம்'' என்று தரப்பட்டுள்ளது. ''வாழ்ந்த காலத்தில் நான் இறந்து போயிருந்தேன்; இப்போது நான் வாழ்கிறேன், ஏன் தெரியுமா? இப்போது நான் இறந்து போய்விட்டேன்''- என்ற பரிகாசம் மிகுந்த அங்கதக் குறிப்போடு நாடகம் முடிகிறது. ''கிராமபோன் ரிக்கார்டு செய்த புரட்சி'' என்னும் நாடகம், அடிமைகளிடையே நிகழும் ஒரு புரட்சியின் குறியீடு ஆகும். ஒரு நாடகத்தின் 'சூத்ர தாருடு' (மேடையின் பொறுப்பாளர்) 'துடி பலுகு' (கடைசி வார்த்தை) என்ற ஒரு வானொலி நாடகத்தை 'சுவிட்சை'ப் போட்டுத் தொடங்கப் போவதாக அறிவிக்கிறார். அவரது அறிவிப்புக் கேற்ப இயங்க வேண்டிய மூன்று நான்கு ரிக்கார்டுகள் (அடிமைகள்) இயங்கி நடிக்க மறுக்கின்றன. அவற்றுள் ஒன்று கலகம் செய்கிறது. இதெல்லாம் என்ன கூத்து? என்று நாடகத்தின் இயக்குநர் ஓடிவந்து கேட்கிறார். அதற்கு மேடைப் பொறுப்பாளர், ''நாடகத்தின் பாத்திரங்கள் உண்டாக்கிய சிரமங்களால் இப்படி நிகழ்ந்து விட்டது; என் குரலை மாற்றிக் கொண்டு, அவர்களுக்குப் பதிலாக நானே அனைத்து வேடங்களையும் செய்து வருகிறேன்'' என்று பதிலளிக்கிறார். ''ஓர் எழுத்தரின் கனவு'' என்னும் நாடகம் அந்த எழுத்தரின் மூன்று விதமான கனவுகள் பற்றிச் சொல்லுவதாக அமைகிறது. அந்த எழுத்தரின் பெயர் ''ஸ்ரீ ஜே. கோனேந்ரவு பந்துலு'' என்பதாகும். ''பயம்'', ''ஆசை'' என்ற இரண்டு உணர்வு கள் அவரை ஆட்டிப் பிடித்துக் கொண்டிருக்கின்றன. அவர் மூன்று முறை கனவுகள் காண்கிறார். ஒவ்வொரு முறையும், கனவுகள் இயல்பான முடிவுக்கு வருவதற்கு முன்பே, அவர் விழித்துக் கொண்டு விடுகிறார். முதலாவது கனவில், அமெரிக்காவில் நடக்கும் ஒரு பாராட்டுக் கூட்டத்தில் அவர் பேசுவது போல் இருக்கிறது; இரண்டாவது கனவில், அவர் ஜெர்மானியக் கடல் மூழ்கிக் கப்பலின் 'கமாண்டராக' இருந்து பெரிய வெற்றி பெறுவது போல இருக்கிறது; மூன்றாவது கனவில், அவருடைய கனவுக் கன்னியோடு 'டூயட்' பாடுவது போல இருக்கிறது. முதலாவது கனவு அறிவு என்பதன் குறியீடு; இரண்டாவது கனவு வீரத்தின் குறியீடு; மூன்றாவது கனவு அழகின் குறியீடு. ஆனால், அவர் இம்மூன்றில் ஒன்றையாவது முழுமையாக அடைய முடியவில்லை. இதனால் பெறப்படுகிற முடிவு இதுதான்: அதாவது, 'உண்மையான வாழ்க்கை என்பது கனவு போன்றது; இந்தக் கனவு வாழ்க்கையில் கனவுகளில் காண்பவை அடைய முடியாதவை, பொய்யானவை'- 'மற்றுமோர் உலகம்'

நாடகம் 21-ஆம் நூற்றாண்டின் நாட்டு நடப்பு விவகாரங்கள் எப்படி இருக்கும் என்று உருவம் தீட்டிக் காண்பிக்கிறது. அந்த நூற்றாண்டில் வாழக் கூடிய மனிதன் ஒருவன் 'காலவெளி' எங்கும் சுற்றி வரும் ஆற்றல் உடையவனாக இருக்கிறான்; கண்ணாடியால் ஆன, பச்சை நிறப்பந்து போலக் காட்சியளிக்கிறான்; 'கண்ணின் மணி' என்று அழைக்கப்படுகிறான்; அவனுக்குப் பசி என்பது இல்லை; அவனுக்கு மொழி என்பதும் கிடையாது; சூரியனது ஒளிக் கற்றையிலிருந்து வரும் ஒரு வித ஆற்றல்தான் அவனுக்கு உணவாக அமைகிறது. கருத்துக்கள் பரிமாற்றம் என்பது ஒவ்வொரு தனி மனிதனுக்கும் இடையில் நேரடியாகவே அமைகிறது; மக்கள் அந்தக் காலக் கட்டத்தில் கூட்டாகச் சிந்திக்கிறார்கள்; அதுபோலவே கூட்டாகப் புரிந்து கொள்கிறார்கள். அடிமனத்து நினைவோட்டத்தால், செயல்படுத்தப்பட்டு, தவறுதலாகக் கடந்த காலத்திற்குள் சஞ்சாரம் செய்யும் ஓர் இளைய கவிஞனின் செயல்பாட்டில் காட்சிகள் அமைகின்றன.

'சதுக்கம்' அல்லது '1+1=1' என்ற வாய்பாட்டுப் பெயர் கொண்ட நாடகமும் 21-ஆம் நூற்றாண்டை நோக்கியே அமைகிறது. இந்தச் சிறு நாடகத்தின் நாயகன் காலத்தையும், காலனையும் வென்று விடுகிறான்; மனத்தளவிலும் சுதந்திரம் பெற்றவனாகி விடுகிறான். சதுக்கத்திற்கு நான்கு பக்கங்கள் இருக்கின்றன. கதையில் அந்த நான்கு பக்கங்களும் நான்கு பாத்திரங்களால் பிரதிநிதித்துவப் படுத்தப்படு கின்றன. 'ஞானம்' என்கிற எழுபது வயது விஞ்ஞானி; அரசியலைப் பிரதிநிதித்துவப் படுத்துகிற ஐம்பது வயது நிரம்பிய ராஜ்ஜியம் (அதாவது பெண் எனக் கருதப்படுகிற அரசாட்சி); 'அழகு' என்பதைக் குறிப்பிடுகிற 'கலா' (கலை) என்கிற பத்து வயதுச் சிறுமி; கவிதையைப் பிரதிநிதித்துவப் படுத்துகிற முப்பது வயது நிரம்பிய ஒரு கவிஞன்; அவன் பெயர் 'ஸ்ரீ' என்பது (அதாவது, ஆண் எனக் கருதப்படுகின்ற செல்வம்; கவிஞர் 'ஸ்ரீஸ்ரீ' என்ற பெயரின் முதலாம் எழுத்தால் ஆனது)- முதலிய நால்வருமே இந்த நான்கு பாத்திரங்கள். 1999-ஆம் ஆண்டு, டிசம்பர் 3-ஆம் தேதி, நிலவிலிருந்து 'அமிர்தம்' எடுத்துக் கொண்டு வருகிறான் ஒருவன்; வந்து அமிர்தத்தை ஊசிவழியே சகலமான பேர்களுக்கும் மருந்து போலச் செலுத்தி விடுகிறான். இதன் விளைவாய் அனைவரும் முப்பது வயது இளம் பருவம் அடைந்து விடுகின்றனர். ஆற்றல் மிக்கதாய், நான்கு பக்கங்களாய் முன்னர் இருந்து, இப்போது சதுக்கமாய் ஆக்கப்பட்டு, பின்னர் ஒருமுகச் சதுக்கமாய் ஆகிவிடுகிறது. இந்தப் படைப்பின் கதையானது சம்பாஷணை- அரசியல் என்னும் இரு தளங்களில் இயங்குகிறது. இந்த ஒருமுகப் படுத்தப்பட்ட சமத்துவம் எப்போது எட்டப்பட்டது என்று ஆசிரியர் ஸ்ரீஸ்ரீ எந்தக் குறிப்பும் தரவில்லை.

'காலம் என்பதை மெய்யறிவு வெற்றி கொள்கிறது'- என்று குறியீடாகக் காட்டுகின்றார் ஆசிரியர். ''நான் மனிதனைப் படைக்க வில்லை; மனிதனே என்னைப் படைத்தான்''- என்பதே இந்தப் படைப்பின் செய்தியாகும்.

'காலப் பயணம்' என்னும் நாடகம் காலத்தின் இருவேறு நிலைகள் பற்றி விவாதிக்கிறது. ஒரு பிரிவு வாழ்ந்து கொண்டிருப்பவர் களுக்கானது; பிறிதொன்று இறந்து போனவர்களுக்கானது என்று பிரித்துரைக்கின்றது. காலம் என்பது ஒன்றே; ஆனால் அது எல்லாருக்கும் ஒரே மாதிரி இருப்பதில்லை. இதனைக் கருவாக அமைத்து, ஆசிரியர் ரயில்வே விபத்து ஒன்றை நாடகம் ஆக்குகிறார். ரயிலில் சேர்ந்து பயணம் செய்யும் சரளா, காந்தம் என்னும் இருவர் தாங்கள் கட்டியிருக்கும் கடிகாரங்கள் மிகச் சரியாக ஆறு மணிக்கு நின்று போய்விட்டதை உணர்கிறார்கள்; உடன் பயணம் செய்யும் ரங்காராவ் என்பவரிடம் சரியான மணி என்ன என்று இருவரும் கேட்கின்றனர். ஆனால், அவர் தனது கடிகாரத்தைப் பார்ப்பதற்கு முன்னதாகவே ரயில் விபத்துக்கு உள்ளாகி விடுகிறது; அவர் இறந்து விடுகின்றார்; ஒரு நுண்ணுயிராக ஆகி அங்கும் இங்கும் அலைந்து திரிகின்றார். பழம் புராணக் கிளைக் கதையில் குழந்தைகளாகப் பிறக்கப் போகின்ற பாலி, இந்திரா என்னும் இருவராலும், அலைந்து திரியும் அந்த நுண்ணுயிர் கேள்வி கேட்கப்படுகிறது. பாலி என்பவன் கதையின் நாயகன்; அவன் நரகத்தில் உயிரின்றி அலைபவன்; இந்திரா சொர்க்கத்தில் வாழும் ஓர் உயிர். பாலியைப் பார்த்த இந்திரா தப்பி ஓடுகிறாள். பாலி, ஆளப்படுகிற பாட்டாளியைப் பிரதிநிதித்துவப் படுத்துகின்ற பாத்திரம்; இந்திரா ஆட்சி அதிகாரம் செலுத்துபவர் களைப் பிரதிநிதித்துவப் படுத்துகிற பாத்திரம்.

இந்தச் சிறு நாடகப் படைப்புக்கள் ஆசிரியர் ஸ்ரீஸ்ரீயின் சமுதாய - அரசியல் கொள்கைகளையும் கோட்பாடுகளையும் பிரச்சாரம் செய்வனவாக அமைகின்றன. இவை, ஓர் இயல்பான தன்மையைக் கடந்து கவித்துவத் தன்மையில் அமைந்துள்ளன. ஸ்ரீஸ்ரீக்கு 'குறியீட்டு உத்தி' அமைப்பில் மிகுந்த ஈடுபாடு, பற்று. இதன் காரணமாக, இந்த நாடகங்களில் 'பாத்திரப் படைப்பு' என்பது அவ்வளவு சிறப்பாக அமையவில்லை.

உரைநடைப் படைப்புக்கள்

ஸ்ரீஸ்ரீயின் உரைநடைப் படைப்புக்களுக்குள் 'கரம ராத்திரி' (அந்தக் கடைசி இரவு) என்ற தொகுப்பில் இடம் பெற்றுள்ள கதைகளே மிகவும் தனிச்சிறப்புப் பெற்றவையாகும். கருத்துக்

களையும், உணர்வுகளையும் சிறப்பாக வெளிப்படுத்துவதற்கு ஸ்ரீஸ்ரீயைப் பொறுத்தவரை உடைநடையே போதுமானது என்ற நிலையில், ஸ்ரீஸ்ரீ இக்கதைகளில் அமைத்துள்ள உரைநடையானது மிகுந்த கவித்துவ நடையாகவே அமைந்துள்ளது. இந்த உரைநடைக் கதைகளைப் பற்றி ஸ்ரீஸ்ரீயே ஒருமுறை ''இவை யாப்புறுத்தப் படாத கவிதை'' என்று வருணித்து உரைத்தார். ஸ்ரீஸ்ரீ அவ்வப்போது, இலக்கியப் பத்திரிகைகளில் எழுதிவந்த உரைநடைப் படைப்புக்கள் 'வாரம் வாரம்' (ஒவ்வொரு வாரமும்) என்ற தொகுப்பாக வெளியிடப் பட்டது. மிகவும் சுவையான ஸ்ரீஸ்ரீயின் உரைநடைப் படைப்பு அவர் எழுதிய சுயசரிதையே ஆகும். இது 1945-1986 ஆம் ஆண்டுகளுக்கு இடையில் பத்திரிகைகளில் வெளியிடப்பட்டு வந்தது. இந்தச் சுயசரிதை முற்றுப் பெறாத படைப்பாக, அல்லது திடீரென நிறுத்தப்பட்டு விட்ட படைப்பாக அமைந்து விட்டது. சுயசரிதைக்கு ஸ்ரீஸ்ரீ 'அனந்தம்' (முடிவில்லாதது) என்றுதான் பெயரும் இட்டிருந்தார். தன்னைப் பொறுத்த வரையில், இவ்வாறு சுயசரிதை எழுதுவது, தற்கொலை செய்து கொள்ளுவதற்கு உரிய எத்தனையோ பல முயற்சிகளுள் இதுவும் ஒன்று என்றும் ஸ்ரீஸ்ரீ குறிப்பிட்டுள்ளார். சுயசரிதையில், அவர் உள்ளபடியே தன்னை வெளிப்படுத்திக் கொண்டிருக்கிறார் என்றுதான் சொல்ல வேண்டும். சுயசரிதையை ஸ்ரீஸ்ரீ இவ்வாறு வெளியிட்டுள்ள முறையானது, அவருடைய வாழ்க்கைச் சரிதத்தை எழுதுபவர்களுக்கு ஒரு வகையில் உதவிகரமாகவே உள்ளது; இன்னொரு வகையில் சிரமம் தருவதாகவும் உள்ளது. சுயசரிதையில் அமைந்துள்ள 'ஒழுங்கற்ற கால வரிசை' 'கூறியது கூறல்' 'வழிமாறிப் போதல்' ஆகிய இன்னும் பலவுமான குறைபாடுகள் அக்கறை மிகுந்த வாசகர் ஒருவரைக் குழப்பத்தில் ஆழ்த்தவே செய்யும். ஆனாலும், நூலாசிரியர் ஸ்ரீஸ்ரீ தன் சொந்த வார்த்தைகளின் வழியே தனது வரலாற்றை ஒளிவு மறைவின்றிச் சொல்லுகின்ற வெளிப்படைப் பண்பு வாசகரை வியப்பில் ஆழ்த்தவும் செய்கிறது. ஸ்ரீஸ்ரீ தந்த நேர்முகப் பேட்டிகள் 'ப்ர-ஜ' (ப்ரச்னலு - ஜவாபுலு - கேள்விகளும் பதில்களும்) என்ற சுருக்க எழுத்துக்களால் பெயரிடப்பட்டு வெளியாயின. அந்தப் பேட்டிகளில், ஸ்ரீஸ்ரீ இலக்கிய, சமுதாய, அரசியல் தொடர்பான ஏராளமான கேள்விகளுக்குப் பதில் சொல்லியிருக்கிறார்.

1934-1983 ஆம் ஆண்டுகளுக்கு இடையில், ஸ்ரீஸ்ரீ 66-க்கும் அதிகமான முன்னுரைகள் எழுதியிருக்கிறார். அவை மூலம் ஸ்ரீஸ்ரீ தன்னையும் எழுத்தாளர்கள் பலரையும் அறிமுகம் செய்து வைத்துள்ளார். ஸ்ரீஸ்ரீயின் ஆர்வலர்கள் பலர் தங்கள் நூல்களுக்கு ஸ்ரீஸ்ரீயின் கட்டுரைப் படைப்புக்களையே முன்னுரை போல மாற்றியமைத்து வெளியிட்டுக் கொண்டார்கள். கவிஞர் தேவுல

பள்ளியின் கவிதை ஒன்றுக்கு ஸ்ரீஸ்ரீ எழுதிய ஒரு முன்னுரை, ஒரு முன் மாதிரி முன்னுரையாக, தேவுல பள்ளி வெளியிட்ட அனைத்துத் தொகுப்புக்களிலும் திரும்பத் திரும்ப வெளியிடப்பட்டது. ஆருத்ராவின் 'கூனலம்ம பாடலு' என்ற படைப்புக்கும் சேஷேந்திர சர்மாவின் 'ரிதுகோஷ'- என்ற படைப்புக்கும் கவிதை வடிவிலேயே ஸ்ரீஸ்ரீ முன்னுரைகள் வழங்கியிருக்கிறார். 1936-1969 ஆம் ஆண்டு களுக்கு இடையில், ஏறத்தாழ 20 விமர்சனக் கட்டுரைகளை ஸ்ரீஸ்ரீ எழுதினார். இவற்றுள் சில கட்டுரைகள் மிகவும் புகழ் பெற்றவையாய் அமைந்தன. ஸ்ரீஸ்ரீயினுடைய கேலிச் சிரிப்புத் துணுக்குகள், சாதுர்யச் சொல் விளையாட்டுக்கள், புதிர்கள் ஆகிய அனைத்தும் இப்போது ஒரே தொகுப்பாகத் தொகுக்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ளன. பல நேரங்களில் அடிக்கடி ஸ்ரீஸ்ரீயை நோக்கிப் பல கேள்விகள் கேட்கப் பட்டன. அவைகளுக்கு அவர் பதில் சொல்லியிருக்கிறார். அந்தப் பதில்களில், அவர் தன்னைப் பற்றியும், பிறரைப் பற்றியும் கருத்துக்கள் தெரிவித்திருக்கிறார். ஸ்ரீஸ்ரீயின் உரை நடைப் படைப்புக் களில் மிகவும் சுவையான படைப்பு, கேள்விகளுக்கு அவர் தந்துள்ள பதில்கள்தான் என்று சொல்லி விடலாம். ஸ்ரீஸ்ரீயினுடைய முரண் பாடுகள், குழப்ப நிலைகள், உறுதிப்பாடு, விரைந்து செயலாற்றும் மனத்திட்பம் ஆகிய அனைத்தும் அடங்கிய ''ஸ்ரீஸ்ரீ என்னும் ஆளுமை'யைச் சுட்டிக் காட்டுபவையாக அவருடைய பதில்கள் அமைந்துள்ளன. இவை குறித்த செய்திகள் அடுத்து வரும் அத்தியாயத்திலும் இடம் பெறுகின்றன.

5. ஸ்ரீ ஸ்ரீயும் பிறரும்

மக்கள் நலம் போற்றுவதில் ஸ்ரீ ஸ்ரீ மேன்மை மிக்கவர்; ஈடு இணை இல்லாதவர்; காரசாரமான கருத்துரைகளுக்காகவும் புகழ் பெற்றவர்; அதே போல, குழந்தைத்தனமான சிறு குறும்புகளுக்கும் பெயர் பெற்றவர். அவரது ஒளிவு மறைவு இல்லாத வெளிப்படைத் தன்மையானது எதையும் மறைத்து வைக்க அனுமதிக்கவில்லை. விமர்சனமாகக் கருத்துரைக்கும் போது, நகைச்சுவை என்ற பெயரில், தான் உள்பட, அவர் யாரையும் விதிவிலக்காக விட்டு வைப்பதில்லை. அவருடைய இந்தத் தனிப்பட்ட பண்பு நலன்களின் விரிவாக்கம் போல அமைந்தது ஸ்ரீ ஸ்ரீ எழுதிய சுயசரிதம் ஆகும்; அதற்கு ஸ்ரீ ஸ்ரீ 'அனந்தம்' (முடிவில்லாதது) என்று பெயரிட்டார். அந்தச் சுயசரிதையில், மிகவும் சாதாரணமான வேளைகளில் எதிர்பார்க்க முடியாத கருத்துரைகளையெல்லாம் ஸ்ரீஸ்ரீ கூறியுள்ளார். தற்கொலை செய்து கொள்வதற்கான எத்தனையோ வழிகளுள் 'சுயசரிதம் எழுதுவதும்' ஒன்று என்றும், அதனால்தான் சுயசரிதம் எழுதினேன் என்றும் ஸ்ரீஸ்ரீ சொன்னார். அப்படித்தான் அந்த நூலையும் எழுதினார். செய்திகள் மிகவும் குழப்பமான வகையில் தொகுக்கப் பட்ட நூலாகவே ஸ்ரீஸ்ரீயின் சுயசரிதம் அமைந்திருந்தது. சில இடங்களில் நூல் கால வரிசைக் கிரமமாக அமைகிறது; ஆனால் வேறு சில இடங்களில், திடீரென்று, விலகிச் சென்று பொருந்தாத விளக்கங்களுக்குள் போய் விடுகிறது. மிகவும் அதிகமான அளவில் 'கூறியது கூறல்' இடம் பெறுகிறது. அவையும் பல மாதிரியான ''கூறியது கூறல்'' நாற்பதாண்டுக் காலமாகவே எழுதப்பட்டு வந்த இந்தச் சுயசரிதையானது திடீரென்று நிறுத்தப்பட்டது; பின்னர் எதிர்பாராத விதமாக மறுபடியும் தொடர்ந்து எழுதப்பட்டது. நூலின் பெரும்பாலான பகுதியைத் தனது நினைவாற்றலின் அடிப்படை யிலேயே ஸ்ரீஸ்ரீ எழுதினார். மிகவும் தீவிரமான ஒரு நூலில் சொல்லப்

படுவதுபோல, ஸ்ரீஸ்ரீ திடீரென்று ஒரு குறிப்பிட்ட ஓர் அம்சத்தை மிகவும் ஆணித்தரமாகச் சொல்வார். ஸ்ரீஸ்ரீ பல நேரங்களில் பலருக்கு 'நேர்முகப் பேட்டிகள்' பல தந்துள்ளார். அந்தப் பேட்டிகளில் ஸ்ரீஸ்ரீ தன்னைப் பற்றியும் பிறரைப் பற்றியுமான கருத்துகளையும் பார்வைகளையும் தெரிவித்திருக்கிறார். பேட்டிகளில் ஸ்ரீஸ்ரீ கூறியுள்ள கருத்துக்கள், ஏற்கனவே அவர் தெரிவித்திருந்த பல கருத்துக்களைச் சில இடங்களில் மறுத்தும் சில இடங்களில் ஆதரித்தும் அமைந்துள்ளன. ''பிரச்னலு'' (கேள்விகள்) ''ஜவாபுலு'' (பதில்கள்) என்ற தெலுங்குச் சொற்களில் முதலில் வரும் ''பிர-ஜா'' என்ற எழுத்துக்களை 'மக்கள்' என்று பொருள்படுமாறு இணைத்துப் பெயரிட்டு 1955-இல் ஸ்ரீஸ்ரீ ஒரு தொகுப்பாக வெளியிட்டார். அந்த நூலிலும் அவருடைய நோக்கும் போக்கும் இடம் பெற்றுள்ளன. நூலில் இடம் பெற்றுள்ள ஒவ்வொரு கேள்வியும் பதிலும் படிப்பதற்கு மிகவும் சுவையானவை. ஒவ்வொன்றும் ஏதோ ஒன்றை எதிர்மறுத்தும், ஏதோ ஒன்றைப் புதுப்பித்தும் அமைபவை; ஆனால் அவை அனைத்தும் உள்ளீடாக மனம் திறந்தும் பேசப்படுபவை; ஒரு காலக் கட்டத்தில் ஸ்ரீஸ்ரீயின் மனநிலை எவ்வாறு இருந்தது என்பதையே இவையெல்லாம் சுட்டிக் காட்டுகின்றன. அவருடைய ஆளுமை, அவருடைய தனிப்பட்ட பண்புகள், முரண்பாடுகள், குழப்பங்கள் ஆகிய அனைத்தையும் எடுத்துக் காட்டுவனவாகவும் அமைகின்றன. ஸ்ரீஸ்ரீ தன்னைப் பற்றியும் கடுமையாகவே இருந்தார்; தனது குறைபாடுகளையும், குற்றங்களையும், இழிவுகளையும், தாழ்வுகளையும் கூட அவர் அம்பலப் படுத்திக் கொண்டார். ஆனாலும், சமுதாயம் என்ன எதிர்விளைவைத் தருமோ என்று கருதி, பயந்து, தன்னிடமிருந்த அழுக்கு அனுபவங்கள் அனைத்தையும் தனது 'அனந்தம்' சுயசரிதையில் சொல்லாமல் விலக்கி வைத்து விட்டதாகவும் ஸ்ரீஸ்ரீ சொல்கிறார். தொடக்க அத்தியாயங்களில் போகிற போக்கில், ஸ்ரீஸ்ரீயினுடைய சில கருத்துக்கள் பதிவு செய்யப் பட்டுள்ளன. ஆண்டுகள் கழிந்த பிறகு, இலக்கிய வரலாற்றில், தனது இடம் என்ன என்பது பற்றி ஸ்ரீஸ்ரீ அதிகம் உணரத் தலைப்பட்டார். ஸ்ரீஸ்ரீ கர்வமும் அகந்தையும் உடையவராக இருந்தார். ஆனால் இதற்கெல்லாம் காரணம், அழகுணர்ச்சி, அதிகாரம் இவற்றின் மீது, தான் கொண்டிருந்த ஆசைதான் என்று அவர் ஒப்புக் கொண்டார். இவ்வாறு அவரே ஒப்புக் கொண்டபோது, ஸ்ரீஸ்ரீ மீது விமர்சனம் செய்தவர்கள், செயல் இழந்து போனார்கள்; திகைத்துப் போனார்கள்; குழப்பமும் அடைந்து போனார்கள். ஸ்ரீஸ்ரீயின் கருத்துக்களைக் காலக்கிரம வரிசைப்படி தொகுத்துக் கணக்கிடுவது என்பதும், கணக்கிட்டு, அவர் பற்றிய படிப்படியான வளர்ச்சியை அல்லது அவரிடம் நிகழ்ந்த கருத்து மாறுதல்களைத் தெளிவுபடக் காண்பது என்பதும் கடினமான காரியம்தான். ஆனால், ஒட்டுமொத்தமாய்ப்

பார்க்கும் போது, ஸ்ரீஸ்ரீயின் 'பண்பாட்டு முழு உருவம்' ஒரே மாதிரியாகத்தான் இருந்து வந்துள்ளது எனலாம்.

ஸ்ரீஸ்ரீ அவரைப்பற்றி என்ன சொன்னார் என்பதை நாம் முதலில் ஆராய்வோம். தொடக்க காலமாகிய 1933-இன்போது (அப்போது ஸ்ரீஸ்ரீக்கு இருபத்து மூன்றே வயது) இந்த நூற்றாண்டின் தெலுங்கு இலக்கிய வளர்ச்சியை 'தனக்கு மட்டுமே உரியது' என்று ஸ்ரீஸ்ரீ உரிமை கொண்டாடிக் கொண்டார் என்று சொல்லப்பட்டார். உரிமை கொண்டாடிய அந்தக் காலக் கட்டம், ஸ்ரீஸ்ரீயே சொல்லியுள்ளபடி, அவர் விஸ்வநாதா, தேவுலபள்ளி முதலியோரைப் பின்பற்றி, அவர்களைப் போலவே எழுதி 'இமிடேட்' செய்து கொண்டிருந்த காலக் கட்டமாகும். 'நனவோடை உத்தி' என்பதை முதன் முதலாகத் தெலுங்கு மொழிக்குக் கொண்டு வந்ததே தான்தான் என்று ஸ்ரீஸ்ரீ உரிமை கொண்டாடுகிறார். மீமெய்மையியல், வசனகவிதை ஆகியவற்றைப் பரீட்சித்துப் பார்த்துச் சாதனையும் சோதனையும் கண்டது தானே என்றும் ஸ்ரீஸ்ரீ கூறினார். இந்தியப் பொதுவுடைமைக் கட்சியில் ஸ்ரீஸ்ரீ ஓர் உறுப்பினராகக் கூட இருந்ததில்லை; ஆனால் அந்த இயக்கத்தின் அனுதாபியாக இருந்தார். ''மார்க்சியம் என்பது எனக்குள் இருக்கும் நம்பிக்கைப் பொருள்'' என்று ஸ்ரீஸ்ரீ பிரகடனம் செய்தார். புரட்சிக்காக என்று அர்ப்பணம் செய்யப்பட்ட தனது எழுதுகோலால் மட்டுமே ஸ்ரீஸ்ரீ எந்த நேரமும் போராடிக் கொண்டிருந்தார். அரசியலை வழியாகக் கொண்டு அவர் இலக்கிய உலகத்திற்குள் நுழையவில்லை. ஸ்ரீஸ்ரீயின் நடைமுறை ஒழுங்கு களில் ஒரு கணிசமான அளவுக்குக் குழப்பங்கள் இருந்தன; அதற்குக் காரணம், ஸ்ரீஸ்ரீ க்ரோபோட்கின்னின் தொண்டராக, ஏன் சீடர் என்றே சொல்லிவிடலாம், இருந்ததுதான் எனலாம். ஸ்ரீஸ்ரீ வெறும் கதை எழுதும் எழுத்தாளராக மட்டும் இருக்கவில்லை. எப்போதும், ஏதேனும் ஒரு புதுமையில் நாட்டம் உடையவராகவே ஸ்ரீஸ்ரீ இருந்தார். அவர் எழுதிய பெரும்பாலான கவிதைகள் அக உணர்வுக் கவிதைகளாகவே இருந்தன. ''பாராளுமன்ற ஜனநாயகம்'' என்னும் அரசியல்முறை நன்மை செய்துவிடும் என்று ஸ்ரீஸ்ரீ நம்பவில்லை. எனவே, அவர் 'புரட்சி' வரவேண்டும் என்று வரவேற்றார். ஆங்கில மொழியாக்கத்தின் வழியே, வடமொழி, பிரெஞ்சு, ரஷ்யன் ஆகிய மொழிகளின் புகழ்பெற்ற படைப்பிலக்கியங்களைக் கற்று அவற்றில் புலமை பெற்றார். ஸ்ரீஸ்ரீ எழுதும் படைப்புக்களில் இடம் பெறும் சமஸ்கிருதச் சொற்களில் காணப்படும் தவறுகளை ஸ்ரீஸ்ரீயின் நண்பர் கால்லூரி நரசிம்மராவ் சுட்டிக் காட்டும்போது, ஸ்ரீஸ்ரீ அந்தத் தவறுகள் எல்லாம் அப்படியே இருக்கட்டும் என்று வற்புறுத்துவார்; வடமொழியில் தனக்கு இருந்த அறியாமைக்கு அடையாளமாக அவையெல்லாம் இருந்துவிட்டுப் போகட்டும் என்று சொல்லி

விடுவார். அரைபாட்டில் 'விஸ்கி'யை அருந்திவிட்டு அவர் எழுதும் எந்தக் கவிதையும் நிலைபேறு பெற்ற புகழ்வாய்ந்த கவிதையாகவே இருந்தது. 1930-ஆம் ஆண்டுக்குப் பிறகு, தெலுங்கு இலக்கியம் ஸ்ரீஸ்ரீயை வழிநடத்திக் கொண்டுபோனது. என்றாலும், அதற்கு முன்பு, ஸ்ரீஸ்ரீதான் நவீனத் தெலுங்கு இலக்கியத்திற்குப் பின்னால் இருந்து அதனை இயக்கிச் செல்லும் சக்தியாக இருந்தார்; வளர்ச்சிக்குக் காரணமாகவும் இருந்தார். ஸ்ரீஸ்ரீ தனது பிந்திய காலங்களில் புரட்சிகரக் கவிதைக்காகத் தன்னை முழுவதுமாக அர்ப்பணித்துக் கொண்டார். தனது கவிதையின் உருவ உத்தியில் கவனம் செலுத்துவதைக் காட்டிலும், உள்ளடக்க அம்சத்துக்கே கூடுதல் கவனம் செலுத்தும் நிலைக்குத் தன்னை மாற்றிக் கொண்டார். "எனது கவிதையானது எழுபத்தைந்து சதவிகித மக்களைக் கூட இன்னும் சென்றடைய வில்லை, எனவே நான் ஒரு மக்கள் கவிஞனுமல்ல, மகாகவியும் அல்ல" என்று ஸ்ரீஸ்ரீ சொல்லிக் கொண்டார். மக்கள் கவிஞனாகக் கூட ஆகாத ஒருவனால் மகாகவியாக ஆக முடியாது என்றும் ஸ்ரீஸ்ரீ சொன்னார். குரஜாடா தனித்தன்மை மிக்க ஓர் ஒளியை பாய்ச்சினார்; பாய்ச்சி ஒரு சிறிய ஒற்றையடிப் பாதையைத் திறந்து வைத்தார். ஸ்ரீஸ்ரீ அந்த ஒற்றையடிச் சிறுபாதையை விரிவுபடுத்தி, பெரிய நாற்சந்தி நெடுஞ்சாலையாக ஆக்கி வைத்தார். ஸ்ரீஸ்ரீ தனது கவிதைகளைத் தானே ஆங்கிலத்திலும் மொழி பெயர்த்தார். அந்த அவருடைய ஆங்கில மொழி பெயர்ப்புக்கள் ஆங்கிலம் தெரிந்த வாசகர்களை ஈர்க்கவில்லையே, ஏன்? என்ன காரணம்? என்று ஒரு முறை ஸ்ரீஸ்ரீயைக் கேட்டார்கள். "என்னுடைய ஆங்கிலம் என்பது, வெறும் புத்தக அறிவால் வந்த ஆங்கிலமே; அமெரிக்காவில் அல்லது இங்கிலாந்தில் அல்லது ஆஸ்திரேலியாவில் எப்படி ஆங்கிலம் பேசப்படுகிறது என்பதெல்லாம் எனக்குத் தெரியாது" என்று ஸ்ரீஸ்ரீ ஒப்புக் கொண்டார். "கார்ட்டூன் கவிதைகள்" என்று அவரே பெயரிட்டு அழைத்த கவிதைகள் மற்றும் கேலிப்படைப்புக்கள் ஆகியவற்றை அவர் எழுதுவதற்குக் காரணம், தன்னிடமிருந்த நகைச்சுவை உணர்ச்சிதான் என்றும் ஸ்ரீஸ்ரீ தெரிவித்தார்; மேலும் இதுபற்றிக் கூறும் போது தன்னிடத்தில் இருந்த வேடிக்கைக் குணாம்சத்தினாலும், அதிருப்தியான மனநிலையினாலும், வாழ்க்கையைச் சோதனை செய்துபார்க்கும் முயற்சியினாலும் தான் எழுதியதாக ஸ்ரீஸ்ரீ குறிப்பிடுகிறார். ஸ்ரீஸ்ரீயைப் பின்பற்றி அவரைப் போலவே சிலர் கவிதைப் படைப்புக்கள் படைக்கத் தொடங்கினார் கள்; ஆருத்ரா 'இண்டின்டி பாஜ்யாலு' (வீடுதோறும் உள்ள பாட்டு) எழுதினார்; பட்டாபி 'பஞ்சாங்கம்' என்னும் படைப்பைத் (பஞ்சாங்கம் என்று நேர்பொருளாக இருந்தாலும் ஒரு பகுதி சிலேடையாக அமைகிறது) தந்தார்.

தனது சுயசரிதையில், ஸ்ரீஸ்ரீ சிறிதும் வெட்கப்படாமல், தான் செய்த தவறுகளையும் வெளியிடுகிறார். ஸ்ரீஸ்ரீ பல பெண்களோடு தொடர்பு கொண்டு அதன் காரணமாகப் பாலியல் நோய்க்கு ஆளானார். சிறுவனாக இருந்த பருவத்தின் போதே, திருவிழாக் கூட்டத்துப் பையன்களுடன் சேர்ந்து பெண்களோடு தவறான தொடர்புகளைக் கொண்டு திரிந்திருக்கிறார். புனித ஸ்தலமாகிய ஸ்ரீ ரங்கத்திலேயே தான் இவ்வாறு ஒழுக்கமில்லாத செயல்களில் ஈடுபட்டிருந்ததாக ஸ்ரீஸ்ரீ சிறிது பெருமையோடு குறிப்பிட்டுக் கொள்கிறார். யாரேனும் ஒருவர், அவர் இசைவு தெரிவித்தால், அவர் தனக்கு ஏதேனும் ஒரு வேலை கொடுப்பதாக இருந்தால், தனது மனைவிக்கும் விருப்பம் இருந்தால், அந்த மனிதரோடு, தன் மனைவி கேளிக்கை செய்யலாம் என்று ஸ்ரீஸ்ரீ தன் முதல் மனைவியிடம் கேட்டுக் கொண்டார். குடிபோதையில் இருந்தார் என்று ஒருமுறை ஸ்ரீஸ்ரீ கைது செய்யப்பட்டார்; சென்னைச் சிறைச்சாலையில் ஓர் இரவு முழுதும் அடைக்கப்பட்டிருந்தார்; கிண்டி குதிரைப் பந்தய மைதானத்துக்குத் தவறாமல் போய் வந்தார்; பகல்பொழுது முழுவதும் 'மதுபானம்' அருந்தி மயங்கிப் பொழுதைக் கழித்ததும் உண்டு. அடிக்கடி, ஸ்ரீஸ்ரீ தன்னை ஒரு 'நாத்திகவாதி' என்று அறிவித்துக் கொண்டார். ஆனாலும், திருப்பதி மலைக் கோவிலில் தன் மகனுக்கு எல்லாவித மதாசாரச் சடங்கு முறைகளோடு 'உபநயனம்' செய்து வைத்தார். டெல்லியில் உள்ள கன்னட சாகித்திய பரிஷத், தனது 50-ஆம் ஆண்டு மாநாட்டின் போது ஸ்ரீஸ்ரீக்கு ஒரு பரிசு வழங்கியது. பரிசுப் பேழையைப் பெற்றுக் கொண்ட ஸ்ரீஸ்ரீ, பேழையைத் திறந்து அதன் உள்ளே வைக்கப்பட்டிருந்த, சந்தனக் கட்டையால் செய்யப்பட்டிருந்த 'முரளி கிருஷ்ணர்' கடவுள் உருவத்துக்கு வணக்கம் செலுத்தினார். எப்படியோ ஒரு வகையில், ஜஹாங்கீரைப் போலவே, ஸ்ரீஸ்ரீ முரண்பாடுகளின் மொத்த உருவமாகவே இருந்திருக்கிறார்.

'ஸ்ரீஸ்ரீ' என்ற 'ஆள்' பற்றியும் அவருடைய 'ஆளுமை' பற்றியும் பிற எழுத்தாளர்கள் பல்வேறு கருத்துக்களைப் பல்வேறு சமயங்களில் தெரிவித்திருக்கிறார்கள். அந்தக் கருத்துக்களில் சிலவற்றை ஸ்ரீஸ்ரீ சிறிதும் தயக்கமின்றிக் குறித்து வைத்துள்ளார். ஸ்ரீஸ்ரீயின் முதல் கவிதையாகிய 'பிரபவ' என்னும் புகழ் பெற்ற படைப்புப் பற்றி கொம்பல்லெ ஜனார்த்தனராவ் 'பாரதி' இதழில் மதிப்புரை எழுதும்போது, ''ஸ்ரீஸ்ரீ நவீன காலத்திய தண்டி'' என்று மதிப்பிட்டு எழுதினார். பொருள் பொதிந்த வார்த்தைப் பிரயோகத்தை விட, சொற்களின் கதம்பச் சேர்க்கையைத்தான் ஸ்ரீஸ்ரீ மிகவும் விரும்புகிறார் என்றும் ஜனார்த்தனராவ் விமர்சித்திருந்தார். பர்ர சேஷகிரிராவ் ஸ்ரீஸ்ரீயை 'அவர் ஒரு பேய்க்காற்றுக் கவிஞர்' என்று

அழைத்தார். 'தன்கா' என்னும் பத்திரிகை, 'ஸ்ரீஸ்ரீ வானொலி நிலையத்துக்கு விலைபோய் விட்டார்' என்று குற்றம் சாட்டியது. அப்போதைய அரசியல் தொண்டர்களாக உருவாகியிருந்த ஸ்ரீஸ்ரீயின் நண்பர்கள் வட்டட்டி சீதா ராம ஆஞ்சனேயலு, தென்னட்டி விஸ்வநாதன் ஆகியோர் 'சத்தியாக்கிரகத்தில்' ஈடுபடுமாறு ஸ்ரீஸ்ரீயைக் கேட்டுக் கொண்டார்கள். ஈடுபடாத ஸ்ரீஸ்ரீ, 'என்னிடத்தில் இருந்த கோழைத்தனம் என்னைச் சத்தியாக்கிரகம் செய்ய அனுமதிக்கவில்லை' என்று வெளிப்படையாகத் தெரிவித்துள்ளார். ரஜாக்கர் எதிர்ப்பு இயக்கம் மிகவும் உச்சக்கட்டத்தில் இருந்த போது, நிஜாம் அரசு நடத்திய கொடுமைகளை எதிர்த்து, தனது தனிப்பட்ட பாதுகாப்புக் கருதி, ஸ்ரீஸ்ரீ எதுவும் சொல்லாமல் பிடிவாதமாக மௌனம் சாதித்து விட்டார் என்று ஸ்ரீஸ்ரீ குற்றம் சாட்டப்பட்டார். பொதுவுடைமை இயக்கத்துக்கும் அதனுடைய ஆயுதம் தாங்கிய புரட்சிக்கும் கூட அவர் ஆதரவாகச் செயல்படவில்லை; ஒரே ஒரு வரிகூட எழுதவும் இல்லை. அதற்குக் காரணம், ஸ்ரீஸ்ரீ அப்போது நிஜாம் அரசின் கீழ் பணிபுரிந்து கொண்டிருந்தார். தனது பாதுகாப்புக்கு எவ்விதமான பாதகமும் இல்லை என்று உணர்ந்த பிறகு, நக்ஸலைட்டுகளுக்குத் தேவையான ஆயுதங்கள் வாங்குவதற்கான நிதிதிரட்டும் திட்டத்தில் ஸ்ரீஸ்ரீ, தரிமெல நாகிரெட்டியுடன் சேர்ந்து, ஸ்ரீ காகுலம் மாவட்டம் முழுவதும் மிக விரிவாகச் சுற்றுப் பயணம் மேற் கொண்டார். அப்படியிருந்தும் கூட, அவரே வாக்குறுதியளித்தபடி, புரட்சியாளர்களுக்கு ஸ்ரீஸ்ரீ தனது ஆதரவைத் தர இசைந்து முன்வரவில்லை. அப்படியெல்லாம் ஒரு வாக்குறுதியைத் தான் தரவில்லை என்று மறுத்துரைத்த ஸ்ரீஸ்ரீ, தனது ஆர்வலர்கள்தான், நான் அப்படி ஒரு வாக்குறுதியைத் தந்ததாகவும், பின்னர் மீறி விட்டதாகவும் தவறாகப் புரிந்துகொண்டு தன்மீது குற்றம் சுமத்துகிறார்கள் என்றும் சொன்னார். ''ஸ்ரீஸ்ரீ என்னுடைய பெயரையும் சேர்த்து இருவருடைய பெயரிலும் ஒரு 'ஜாயிண்ட் லெட்டர்' திருட்டுத்தனமாக எழுதி ஒரு பத்திரிகையில் வெளியிட்டு விட்டார்''- என்று முதலாவது உலகத் தெலுங்கு மாநாட்டின் போது விஸ்வநாதா எழுதினார். ஆனால், ஸ்ரீஸ்ரீ இதை மறுத்துச் சவால் விட்டார்; அது நிருபிக்கப்பட்டால், தான் தூக்கில் தொங்குவதாக அறிவித்திருந்தார். 1955-ஆம் ஆண்டின்போது நிலைமைகள் மாறி, ஸ்ரீஸ்ரீ மட்டும் தன்னந்தனியாய் யாருடைய உதவியும் இன்றி நின்றார். ஸ்ரீஸ்ரீயின் ஆர்வலர்கள், பின்பற்று பவர்கள், ஆருத்ரா உட்பட, உடன் இருந்தோர் அனைவரும் விலகி நின்று, ஸ்ரீஸ்ரீ கம்யூனிஸ்டுகளுக்கு ஆதரவு தருகிறார் என்பதற்காக அவர்மீது ஈவு இரக்கமற்ற தாக்குதலைத் தொடுத்தனர். இந்த நேரத்தில் ஸ்ரீஸ்ரீக்கு ஆதரவாக இருந்த ஒரே ஒரு தனி நபர் நர்ல சிரஞ்சீவி (1925-1971) மட்டுமே ஆவார். கவிதை, அரசியல் மற்றும் தனிப்பட்ட உறவுகள்

ஆகிய அனைத்திலும் ஸ்ரீஸ்ரீ கொண்டிருந்த நிலைபாடுகளை, ஸ்ரீஸ்ரீயின் வழிகாட்டியான அபூரி, 'கவிதா' இதழில், அவர் எழுதி வெளியாகியிருந்த கவிதை ஒன்றில், மிகவும் ஏளனம் செய்திருந்தார். ஆனால், ஸ்ரீஸ்ரீ அனைத்தையும் எதிர்த்து நின்றார். 'ஆந்திர பத்திரிகா' என்ற புகழ்பெற்ற பத்திரிகை, ஸ்ரீஸ்ரீயின் பகைமையாளர்களுக்கு மிகவும் அதிகமான இடம் தந்தது; தந்து ஸ்ரீஸ்ரீயின் மேல் விஷத்தைக் கக்கியது. ஸ்ரீஸ்ரீயும் பதிலுக்குப் பதில் சொன்னார். 'இது ஒரு விஷப் பத்திரிகை' என்று அப்பத்திரிகையை அழைத்தார்; முதலாளித் துவத்தையும் வெறும் கற்பனா வாதத்தையும் கொண்ட பத்திரிகை என்று சாடினார். ஸ்ரீஸ்ரீயே நிறுவுநர் தலைவராக இருந்து உருவாக்கிய 'புரட்சிகர எழுத்தாளர் சங்கம்' மூன்று முறை ஸ்ரீஸ்ரீயை அமைப்பிலிருந்து விலக்கி வைத்தது. ஆனால், அமைப்பின் தலைவராகவும், சாதாரண உறுப்பினராகவும் இருமுறை மறுபடியும் ஸ்ரீஸ்ரீயைச் சேர்த்துக் கொண்டது. ஸ்ரீஸ்ரீ அரசியல் முதிர்ச்சி யில்லாதவர், தனது பொறுப்புக்களை விடவும் தனது நலம் தனது பாதுகாப்பு ஆகியவற்றில் மட்டுமே அக்கறை செலுத்துபவர், மனிதர்களில் குள்ளத்தனமானவர், ஒரு சந்தர்ப்பவாதி, குழப்பவாதி, ஒரு குட்டி பூர்ஷ்வாவின் தேசிய, சிறுவட்ட அணுகுமுறைகளின் மீது ஆர்வம் கொண்டவர், மந்தமான போக்குடையவர், பழைமைவாதி - என்றெல்லாம் எழுத்தாளர் அமைப்பு ஸ்ரீஸ்ரீபற்றி கணித்து வைத்திருந்தது. இதில் வியப்புக்குரிய விஷயம் என்னவென்றால், எந்தப் புரட்சிகர எழுத்தாளர் சங்கம் மேலே கண்டவாறு ஸ்ரீஸ்ரீயைக் கணித்து வைத்திருந்ததோ, அதே சங்கம், ஸ்ரீஸ்ரீயின் இமாலய ஆளுமையைக் கண்டு அவருக்குப் புகழாஞ்சலியும் செலுத்தியது; அவருடைய குறைபாடுகளையெல்லாம் மன்னித்தது; அவருடைய படைப்புக்கள் அனைத்தையும் பல தொகுதிகளாக வெளியிடவும் செய்தது. ஸ்ரீஸ்ரீயின் மறைவுக்காக நடந்த அஞ்சலிக் கூட்டத்தில், சிறுகதைப் படைப்பாளரும் புகழ்பெற்ற நாவலாசிரியருமான ரவிசாஸ்திரி, ஸ்ரீஸ்ரீயின் மதுபானப் பழக்கத்தையும், ஒழுக்கமற்ற வாழ்க்கை முறையையும் வெளிப்படையாகவே ஆதரித்துப் பேசினார். காளிபட்ணம் ராமராவ் ('காரா') என்ற இன்னொரு எழுத்தாளர், ஸ்ரீஸ்ரீ பற்றிச் சொல்லப்பட்ட இந்தக் குறைபாடுகள் எல்லாம், ஸ்ரீஸ்ரீ என்ற தனிமனிதனுடைய குறைபாடுகள் என எடுத்துக் கொள்ளக்கூடாது, அவையெல்லாம் ஒரு கவிஞன் என்பவனோடு சம்பந்தப்பட்டவை என்று பேசினார். டாக்டர் எம்.வி. ரமணரெட்டி ஸ்ரீஸ்ரீக்கு எழுதிய 'திறந்த மடலில்' ஸ்ரீஸ்ரீயை ஒரு கோழை மனிதர் என்றும் தன்னைப் பற்றித் தானே சிலாகித்துக் கொண்டிருந்த தன்னலக்காரர் என்றும் பெயரும் புகழும் வேண்டும் என்று எப்போதும் அரிப்புக் கொண்டிருந்த மனிதர் என்றும் குற்றம் சாட்டினார். தெலுங்கு இலக்கிய உலகில் 'சலம்' உள்ளிட்டு வேறு

எந்த எழுத்தாளரும் வாழுங்காலத்திலேயே இந்த அளவுக்குக் கடுமையாக விமர்சிக்கப்பட்டதில்லை - என்றே சொல்லலாம். ஸ்ரீஸ்ரீதான் மிகவும் கடுமையாகச் சுட்டிக் காட்டப்பட்டு எதிர்க்கப் பட்டார்; தனிப்பட்ட முறையிலும் தாக்கப்பட்டார்; தனிமனிதப் பண்புகளும் கூடக் கொச்சைப்படுத்தப்பட்டன. ஆனாலும் ஸ்ரீஸ்ரீ அனைத்தையும் எதிர்கொண்டார். இன்றளவும் தெலுங்கு இலக்கிய உலகில் நிலைபெற்றிருக்கிறார்; மிகவும் உயர்ந்த இலக்கியப் படைப்பாளி என்று மதிக்கப்படுகிறார். ஸ்ரீஸ்ரீ தனக்குத் தானே தண்டனை கொடுத்துக் கொண்டார்; பிறர் தன்னைக் க்ண்டனம் செய்வதற்கு அனுமதித்தார்; 'மன்னியுங்கள்' என்றெல்லாம் கேட்டுக் கொள்ளாமல், தனது குறைபாடுகளுக்குத் தானே பொறுப்பேற்றுக் கொண்டார். இதுதான் ஸ்ரீஸ்ரீயின் பண்பு நலனுக்கும் நையாண்டிக் குணாம்சத்துக்கும் வலிமை சேர்த்தது.

பிறரைப் பற்றி

இந்தப் பகுதியில், பிற எழுத்தாளர் பற்றியும், குறிப்பிட்ட சில நிகழ்ச்சிகள் பற்றியும், சில நேரங்களில் ஆதரித்தும், சில நேரங்களில் எதிர்த்தும், அவமதித்தும், கேலி செய்தும் ஸ்ரீஸ்ரீ என்ன என்ன சொன்னார் என்பனவற்றை முதலில் பார்ப்போம். அதன் பின்னர், ஸ்ரீஸ்ரீயைப் பற்றி வேறு பிறர் மேலும் என்ன சொன்னார்கள் என்பது பற்றியும் பார்ப்போம். ஸ்ரீஸ்ரீயின் கருத்தோட்டங்களில் ஏகப்பட்ட வேறுபாடுகள் காணப்பட்டன. அவை அவருடைய மறு சிந்தனை களின் விளைவு எனக் கொள்ளலாம். ஆனாலும், எல்லா நேரங் களிலும் அவ்வாறு அமையவும் இல்லை. நல்ல, உயர்ந்த ஒரு நூலைப் படிக்க நேர்ந்த போதெல்லாம் ஸ்ரீஸ்ரீ உடனே அந்த நூலின் ஆசிரியரைத் தனது 'குரு'வாகக் கருதிக் கொண்டு விடுவார். பல நூல்களைப் படிக்கும் நேரத்தில் அந்த நூலாசிரியர்களைப் பல்வேறு பிரிவுகளாகப் பகுத்துப் பார்க்கும் பழக்கம் உடையவராகவும் ஸ்ரீஸ்ரீ இருந்தார். அந்த ஆசிரியர்கள் மீது, தான் கொண்டிருந்த தனிப்பட்ட மரியாதை அன்பு, ஆர்வம் ஆகியவற்றின் பல்வேறு கோணங் களையும், அவற்றுக்கான காரண காரியங்களையும் அவரவரின் தகுதி வரிசைப்படி எடுத்துச் சொல்லவும் செய்தார். இவ்வாறு விருப்பங் களையும் வெறுப்புக்களையும் வெளியிடுவதில் இயல்புத் தன்மையை மீறிய ஒரு போக்கு அவரிடம் இருந்தது; அதுவே அவருடைய குணாம்சமாகவும் அமைந்திருந்தது. ஸ்ரீஸ்ரீ எப்போதும் மழுப்பிப் பேசியதில்லை; தனது உணர்ச்சிகளை மறைத்துக் கொண்டதில்லை; புதிய அனுபவங்களினால் தெளிவு ஏற்படும்போது தனது பழைய கருத்துக்களை மாற்றிக் கொள்ளவும் அவர் அஞ்சியதில்லை. ஆனால்

ஸ்ரீஸ்ரீயைப் பற்றிய ஒரு விஷயம் மிகவும் உறுதியானது. புதியது எதுவானாலும் அதை வரவேற்கும் குணம் உடையவராக அவர் இருந்தார். (அவ்வாறு அவர் வரவேற்பதற்கான நியாயம் சரியான அடிப்படையில் எழுந்ததா இல்லையா என்பது வேறு விஷயம்) அதே போல, பழைய மரபுகளை எதிர்ப்பவராகவும் இருந்தார். இடதுசாரி இயக்கங்களின் நலன்களுக்கு எதிராக ஒருவரி கூட அவர் எழுதியதில்லை. எழுத்தாளர்களை, இவர் இந்தியர், இவர் வெளி நாட்டார், இவர் தெலுங்கர், அல்லது தெலுங்கர் அல்லாதார், இவர் இடதுசாரி, அல்லது இடதுசாரி அல்லாத பிறர் என்றெல்லாம் எப்போதும் ஸ்ரீஸ்ரீ பிரித்துப் பார்த்ததில்லை.

தொடக்க காலத்தில் அவருக்கு 'குருமார்'களாக அமைந்தவர் களுக்கும் தந்தைக்கும் அபூரிக்கும் ஸ்ரீஸ்ரீ அளித்த மதிப்பு ஒப்புயர்வற்றதாகும். இருந்தாலும், தன் தந்தையை 'ஒரு சூதாடி' என்று ஒருமுறை குற்றம் சாட்டிப் பேசிவிட்டார். ஆனால், ஸ்ரீஸ்ரீயை மார்க்சிய ஞானத்திற்கு அறிமுகம் செய்துவைத்த அபூரி, ஸ்ரீஸ்ரீயின் மார்க்சிய ஞானத்தையும், அதன்மீது ஸ்ரீஸ்ரீ கொண்டிருந்த உறவையும் ஏளனம் செய்து மிகக் கடுமையாக எழுதிய போதும் கூட, ஸ்ரீஸ்ரீ அபூரியை எதிர்த்து ஒரு வார்த்தை பேசியதில்லை. விஸ்வநாதாவையும், தேவுல பள்ளியையும் பத்தாண்டுக் காலம் ஸ்ரீஸ்ரீ மிக உன்னிப்பாகப் பாராட்டியும் பின்பற்றியும் வந்தார். பொதுக்கூட்டம் ஒன்றில் விஸ்வநாதா ஸ்ரீஸ்ரீயை அப்படியே கட்டித் தழுவிக் கொண்டார்; ஸ்ரீஸ்ரீயின் கவித்துவம் பற்றி ஒரு வீரகாவியமே பாடி வெளியிடவும் எண்ணினார். ஆனால், பழமைப் போக்குடைய விஸ்வநாதாவும், அதற்கு. மாறுபட்ட புதுமைப் போக்குடைய ஸ்ரீஸ்ரீயும் இணைந்து போக முடியவில்லை. அதற்காக, அவர்களுக் கிடையே உறவு முறிந்து போய் விடவில்லை. இருவரும் உயிர் வாழ்ந்திருந்த காலம் வரை, விருப்பும் வெறுப்பும் கலந்த ஓர் உறவு அவர்களிடையே நிலவத்தான் செய்தது. முதலாவது உலகத் தெலுங்கு மாநாடு நடைபெறத் தயாராக இருந்த நேரம். மாநாட்டுக் கொண்டாட்டங்களுக்கு மறுப்புத் தெரிவிக்கும் விஷயத்தில் விஸ்வநாதாவுக்கும் ஸ்ரீஸ்ரீக்கும் இடையில் இருந்த உறவு வெளிப் படையாய் உரக்கவே தெரியலாயிற்று. கடற்கரை ஆந்திராவுக்குத் தனி மாநிலம் தரப்பட வேண்டும் என்ற கோரிக்கையை முன் வைத்து விஸ்வநாதா தனது 'அரசவைக் கவிஞர்' பட்டத்தைத் துறந்தார்; ஆனால் மாநாட்டில் கலந்து கொண்டார். ஸ்ரீஸ்ரீ மாநாட்டுக் கொண்டாட்டத்தை எதிர்த்தார். அதன் காரணமாகக் கைது செய்யப்பட்டு, ஹைதராபாத் போலாரம் காவல் நிலையத்தில் ஒருநாள் இரவு அடைத்து வைக்கப்பட்டுப் பின்னர் விடுதலை செய்யப்பட்டார். சிறிது காலத்திற்கு முன்வரை இருவரும் ஒருவரை

ஒருவர் குற்றம் சுமத்திக் கொண்டிருந்தனர். தன்னுடைய பெயரையும் இணைத்துச் சேர்த்து ஸ்ரீஸ்ரீ திருட்டுத் தனமாக ஒரு 'ஜாயிண்ட் லெட்டர்' எழுதிவிட்டார் என்று விஸ்வநாதா ஸ்ரீஸ்ரீமீது குற்றம் சாட்டியிருந்தார். இந்த விஷயம் அப்போதே முடிந்துவிட்டது. 'ஸ்ரீமத் ராமாயண கல்ப விருஷம்' என்பது விஸ்வநாதாவின் காவியப் படைப்பு. ஆசிரியராகிய அவருக்கு இது மிகவும் பிடித்த படைப்பாக இருந்தது. ஆனால் ஸ்ரீஸ்ரீக்கோ இது நகைப்புக்கு இடமாகிய படைப்பாக இருந்தது. யாராவது ஒரே ஒரு ஆள் இந்தப் படைப்பை எப்போதாவது உண்மையாகவே படித்ததாகச் சொல்லிவிட்டால் போதும், விஸ்வநாதா அப்படியே உணர்ச்சியில் ஆழ்ந்து விடுவார் என்றும் ஸ்ரீஸ்ரீ சொன்னார். இவ்வாறு கருத்துரைத்த ஸ்ரீஸ்ரீ, விஸவ. தாவின் 'கின்னெரசானி பதலு' (கின்னெரசானிச் சிற்றாறு பற்றிய பாடல்கள்), 'கோகிலம்மா பெள்ளி' (குயிலின் திருமணம்) ஆகிய தொடக்க காலக் கவிதைப் படைப்புக்களைச் சிறந்த படைப்புக்கள் என்று ஸ்ரீஸ்ரீ பாராட்டினார். அந்தப் பாராட்டுரையைத் தொடர்ந்தும் சொல்லிவந்தார். 'வேயிபடகலு' (ஆயிரம் தலை நாகங்கள்) என்ற நாவலுக்காக விஸ்வநாதா ஞானபீட விருது பெற்ற போது, ''பி. கோபால ரெட்டி உத்தரப் பிரதேசத்தின் கவர்னராக இல்லாதிருந்தால் விஸ்வநாதா அந்த விருதைப் பெற்றிருக்க மாட்டார்'' என்று ஸ்ரீஸ்ரீ குறிப்பிட்டார். அந்தப் பரிசு பற்றி மேலும் குறிப்பிடும்போது, ஸ்ரீஸ்ரீ, அது ஒரு லாட்டரி சீட்டுப் பரிசு போன்றது என்றும் சொன்னார். ஒருமுறை விஸ்வநாதா, ''என்னைப் போன்ற கவிஞர் ஆயிரம் வருடத்திற்கு இடையில் பிறந்திருக்கமாட்டார்'' என்று பெருமைப்பட்டுக் கொண்டபோது, ஸ்ரீஸ்ரீ மிகவும் சொற் சாதுர்யத்தோடு, ''உண்மையிலேயே விஸ்வநாதா ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னதாகவே பிறந்திருக்க வேண்டியவர்தான்; இப்போது பிறந்து விட்டார்; அதுதான் தெலுங்கு இலக்கியத்துக்கு ஒரு துக்ககரமான விஷயம்'' என்றும் குறிப்பிட்டார். விஸ்வநாதா பற்றி மேலும் குறிப்பிடும்போது, ''தெலுங்கு இலக்கியத்தில், முதல் பெருங்கவிஞர் என்று போற்றப்படுகிற நன்னய்யா நினைக்கப்படும் காலம் வரைக்கும் விஸ்வநாதாவும் நினைக்கப்படுவார்; ஆனால் தெலுங்குக் கவிதையின் மும்மூர்த்திகள் என்றும், புதிய அலைகளை உருவாக்கியவர் என்றும் போற்றப்படுகின்ற திக்கண்ணா, வேமனா, குரஜாடா ஆகியோர் வரிசையில் வைத்து விஸ்வநாதா மதிக்கப்பட மாட்டார்'' என்றும் ஸ்ரீஸ்ரீ சொன்னார்.

விஸ்வநாதாவின் வடமொழிப் புலமையைக் கண்டு ஸ்ரீஸ்ரீ பொறாமைப்பட்டார் என்றே தெரிகிறது. சில நேரங்களில் அவருடைய வடமொழிப் புலமையைத் திட்டமிட்டே ஸ்ரீஸ்ரீ

குறைத்து மதிப்பிட முயன்றார். விஸ்வநாதாவை விட சேஷேந்திர சர்மாதான் மிகவும் நன்றாகப் புலமை பெற்றவர்; தான் படைத்த 'மகா பிரஸ்தானம்' ('நீண்ட பயணம்') நூலை, வட மொழியில் மொழி பெயர்க்க வேறு எவரையும் விட மிகுந்த ஆற்றல் பெற்றவர் சேஷேந்திர சர்மா என்றெல்லாம் ஸ்ரீஸ்ரீ சான்றளிக்க முன்வந்தார். ஒரு நேர்முகப் பேட்டியின்போது, 'விஸ்வநாதா இருபதாம் நூற்றாண்டின் நன்னய்யா' என்றும், ''அவருடை 'கின்னெரசானி பதலு' என்னும் படைப்பை நான் மிகவும் விரும்புகிறேன்'' என்றும், ''அவருடைய ராமாயண கல்ப விருஷம் படைப்பை நேசிக்க முடியாது, அதை ஒரு நாவல் என்றுதான் சொல்வேன்'' என்றும் ஸ்ரீஸ்ரீ குறிப்பிட்டார். அரசியல், இலக்கியக் கொள்கை, கோட்பாடுகளிலும் கூட ஸ்ரீஸ்ரீயும் விஸ்வநாதாவும் இரு துருவங்களாகவே நின்றனர். விஸ்வநாதா ஒரு தன்னுணர்ச்சிக் கவிஞராகவே தனது இலக்கியப் பணியைத் தொடங்கினார்; பின்னர், புதுமையான, யாப்பமைதி சார்ந்த, மரபல்லாத காதல் கவிதைகளிலும், பாடல்களிலும் நாட்டம் செலுத்தினார்; பின்னர் தேசிய மறுமலர்ச்சி என்னும் நிலைபாட்டுக்கு மாறினார்; இறுதியாக, உரைநடையிலும் கவிதையிலும் நவீனத்துவ உயர்தனிச் செம்மை என்ற நிலைக்கு வந்து சேர்ந்தார். 'ராமராஜ்ஜிய பரிஷத்' என்ற அமைப்பின் வேட்பாளராகப் பாராளுமன்றத் தேர்தல்களில் போட்டியிட்ட விஸ்வநாதா 'டெபாஸிட்' தொகையையும் இழந்து தோல்வியடைந்தார். அவர் அடைந்த இந்தத் தோல்விகள், மத அடிப்படையிலான புத்துயிர்ப்பு என்னும் பாதையில் அவருக்கு இருந்த நம்பிக்கையை வறட்சி அடையச் செய்துவிட்டன; மேலும் இலக்கியப் பணியிலும் ஒரு முடிவைத் தந்துவிட்டன. இத்தகைய விசுவநாதாவைப் பாராட்டுபவராகவும், அவரைப் பின்பற்றுபவராகவும் தான் ஸ்ரீஸ்ரீ தனது இலக்கியப் பணியைத் தொடங்கினார். ஒரு பத்தாண்டுக் காலத்திற்கு இலக்கிய வடிவம், இலக்கிய உள்ளடக்கம் ஆகிய விஷயங்களில் ஸ்ரீஸ்ரீ விசுவநாதாவையே பின்பற்றி, அப்படியே 'இமிடேட்' செய்து வந்தார்; விசுவநாதாவைப் பின்பற்றி அவருடைய ஆடம்பர மொழிநடையை அப்படியே அமைத்துக் கொண்டார். புதிய ஆகுபெயராக்கங்கள், வசன கவிதைகள், மீமெய்மையியல் பரிசோதனைகள் மற்றும் இவைபோன்ற பிற என ஸ்ரீஸ்ரீ அலைந்து திரிந்தார். ஸ்ரீஸ்ரீயின் இந்த நிலை, கவிகொண்டல, பசவராஜு, நந்தூரி முதலியோர் மீது காதல் கொள்கிற வரைக்கும்தான் நீடித்தது. இவர்களின் வழியே ஸ்ரீஸ்ரீ குரஜாடாவைக் கண்டறிந்து கொண்டார்; அதன் பிறகு நிலைப்பாடு மாறிவிட்டது. குரஜாடா மூலம் அகில உலகப் பார்வைக்கு வந்துவிட்டார் ஸ்ரீஸ்ரீ; வந்து, உலக இலக்கியங்களின் நவீனத்துவப் போக்குகளுடன் தன்னைத் தொடர்பு படுத்திக் கொள்ளும் அளவுக்கு ஸ்ரீஸ்ரீ மாறினார்; அபூரி, ரோனன்கி

ஆகியோரின் பாதிப்பால் அரசியல் சித்தாந்தங்களுடன் தொடர்பும் ஏற்படுத்திக் கொண்டார்; குறிப்பிடத் தக்க யாப்புச் சுதந்திரத்தோடும், எழுத்து ஆளுமையோடும் புதிய ஆகு பெயராக்கங்களில், வசன கவிதைகளில் புரட்சிகர, கற்பனை மிகுந்த காதல் உணர்வுகளை ஸ்ரீஸ்ரீ எடுத்து முழங்கினார்; இறுதியாக, மார்க்சியத்தின் மீது ஒரு தீர்க்கமான நம்பிக்கை கொள்பவராக ஆனார்; எந்தவிதமாக இருந்தாலும்,சொல்பவர் யாராக இருந்தாலும் அது ஏதோ ஒரு வகையில் புதுமையாக இருக்குமானால் அதை வரவேற்பவராகவும் ஸ்ரீஸ்ரீ ஆனார். இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் ஆதரவு பெற்ற சுயேட்சை வேட்பாளராகப் பாராளுமன்றத் தொகுதியில் ஹரீந்திரநாத் சட்டோபாத்யாயா போட்டியிட்டார். ஸ்ரீஸ்ரீயின் முதல் முன்னோடியும் களத்தில் நின்றார். ஸ்ரீஸ்ரீ ஹரீந்திரநாத் சட்டோபாத்யாயாவுக்காக வாக்குச் சேகரித்தார். அந்த நேரத்தில் இருவரும் (ஸ்ரீஸ்ரீயும் விஸ்வநாதாவும் - தமிழ் மொழி பெயர்ப்பாளர்) ஒருவரையொருவர் பாராட்டிக் கொண்டனர்; ஓர் எல்லைக்கு உட்பட்டு இருவரும் அடுத்தவருடைய கவித்துவத் திறனைப் போற்றிக் கொண்டனர்; இருவரும் அவரவருடைய அரசியல், சமுதாயச் சித்தாந்தங்களுக்குக் கட்டுப்பட்டுப் பரஸ்பரம் பாராட்டிக் கொண்டனர்.

சிறிது சிறிதாக உருவாகி வந்த காலத்தில், ஸ்ரீஸ்ரீ தனது அடுத்த முன்னோடியான தேவுல பள்ளியையும் விமர்சனம் செய்யலானார்; ஆனால் அவ்வளவு கடுமையாகச் செய்யவில்லை; மிகவும் எளிமையான, லகுவான விமர்சனமாகவே செய்தார். இதற்கான காரணங்கள் வித்தியாசமானவை. தேவுலபள்ளி அவருடைய போக்கில் ஒரு போராளி ஆவார். மிகக் கடுமையான வார்த்தை களாலும் மிகக் கூர்மையான புலமையாலும் அக்கிராஜு உமாகாந்தம் தன்னுணர்ச்சிக் கவிதையைப் பழித்துப் பேசிய நேரத்தில், தேவுலபள்ளிதான் முன்வந்து, தன்னையும், தன்னுணர்ச்சிக் கவிதைச் சிந்தனைக் குழுவினரையும் ஆதரித்து நூற்றுக் கணக்கான இலக்கியப் பொதுமேடைகளில் பதில் சொன்னார். தன்னுணர்ச்சிக் கவிதைச் சிந்தனைக் குழுவின் தந்தை என அழைக்கப் பட்டவரான ராயப் ரோலுவோ அல்லது அந்தக் குழுவைச் சேர்ந்த யாரோ ஒரு கவிஞரோ, அக்கிராஜு தொடுத்த இலக்கியத் தாக்குதலுக்குப் பதில் சொல்லு வதற்குத் தைரியமாக முன் வரவில்லை. தேவுல பள்ளிதான் முன் வந்து பதிலளித்தார். தேவுல பள்ளியின் இந்தத் துணிச்சல்தான் இளைஞரான ஸ்ரீஸ்ரீயை மிகவும் ஈர்த்து விட்டது எனலாம். அடவிபாப்பிராஜு ஸ்ரீஸ்ரீயின் பாடல்களைப் பாடுவதுபோலவே, தேவுல பள்ளியும், தனது போராட்ட வாழ்க்கையின் போது ஸ்ரீஸ்ரீயின் கவிதைகளைப் பாடுவார். தனது பாடல்களைப் பாடுகிறார் என்ற நன்றியுணர்ச்சியின் காரணமாகவும் ஸ்ரீஸ்ரீ தேவுல பள்ளியை

அங்கீகரித்திருக்க வேண்டும். ஸ்ரீஸ்ரீக்குச் சிறிது காலம் முன்னதாகவே திரைப்பட உலகில் இருந்த தேவுல பள்ளி பின்னர், அவருக்குச் சமகாலத்தவர் எனவும் விளங்கினார். அப்போதெல்லாம் இவர்கள் இருவரும் எதிராளிகளாக இருக்கவில்லை. விஸ்வநாதாவைப் போலன்றி மிகவும் விமர்சனப் பாங்குடையதாக இருந்தாலும், தீவிரமான கருத்துடையதாக இருந்தாலும், மிகவும் அற்பமான பொருள் பற்றியதாக இருந்தாலும், தேவுல பள்ளி உடனுக்குடன் மிகவும் இலகுவாக, கவிபாடும் திறன் உடைய ஆசுகவி எனப் புகழ் பெற்றிருந்தார். 'கார்ட்டூன்' கவிதைகள் எழுதுவதிலும், தனிச் சுற்றுக்காக ஆசுகவிகள் எழுதுவதிலும் ஸ்ரீஸ்ரீ தேவுலபள்ளியைத் தான் அப்படியே பின்பற்றிக் கொண்டார். தேவுலபள்ளி, ஸ்ரீஸ்ரீ இருவரும் அவர்களது வாழ்க்கை முறையில் கற்பனா வாதிகளாகவும் இருந்தார்கள். அவர்கள் இருவரும் அகில இந்திய வானொலி நிலையத்தில் பணியாற்றியபோது, சில அம்சங்களில் ஒத்த தன்மை உடையவர்களாகவே இருந்தார்கள்; இந்த ஒத்த தன்மையானது ஒரே சீராக இல்லாமல் இருந்திருக்கலாம். இவ்விருவரும் இளைய தலைமுறையினருக்கு இசைவானவர்களாக இருந்தார்கள். ஆனால் விஸ்வநாதா அவ்வாறில்லை. தேவுலபள்ளி பற்றி ஒருமுறை, ''கவிதை யாப்பில் இவர் ஒரு முடி சூடா மன்னர்'' என்று ஸ்ரீஸ்ரீ கருத்துரைத்தார். நேரத்திற்கு வருவது 'சாஸ்திரியம்' (விஞ்ஞான பூர்வமானது); தாமதமாக வருவது கிருஷ்ண சாஸ்திரியம்; கிருஷ்ண சாஸ்திரியம்தான் தேவுல பள்ளிக்கு வாடிக்கை என்று ஒருமுறை ஸ்ரீஸ்ரீ சாதுர்யமாகச் சொல்லாடினார். தேவுலபள்ளி மீதான இச்சொல்லாடலை, ஒரு வசைபாடல் என்றோ, விருப்பமில்லாத தன்மை என்றோ, தீவிரமான தன்மை என்றோ, வெறுப்பு என்றோ சொல்ல முடியாது.

ஸ்ரீரங்கம் நாராயண பாபு ஸ்ரீஸ்ரீக்கு ஒன்றுவிட்ட சகோதர உறவுக்காரர்; பிள்ளைப் பிராயத்து நண்பரும் ஆவார். தொடக்க நாள்களில் இருவரும் மிகவும் நெருக்கமாக இருந்தார்கள்; ஒருவர் மீது ஒருவர் ஆழமான ஆர்வம் கொண்டிருந்தார்கள். நாராயண பாபுவின் சோதனைத் தன்மை மிக்கதும் மீமெய்மையியல் தன்மை மிக்கதுமான கவிதையையும், அவருக்குள்ளிருந்த இசைத் திறனையும் ஸ்ரீஸ்ரீ மிகவும் பாராட்டினார். நாராயண பாபுவும் அவ்வாறே நட்புணர்வு கொண்டவராக இருந்தார். இந்தப் பரஸ்பர ஆர்வம் ஒரு சங்கடமான நிகழ்ச்சிவரைதான் நீடித்தது. அபூரி, தனது 'நடலி' என்னும் நாடகக் குழுவுக்காக செக்காவின் 'செர்ரித் தோட்டம்' என்னும் நாடகத்தை மொழி பெயர்த்துத் தருமாறு ஒரு திட்டத்தைத் தன்னுடைய மகன் வரதராஜேஸ்வர ராவிடமும் ஸ்ரீஸ்ரீ, நாராயண பாபு ஆகியோரிடமும் ஒப்படைத்தார். இதிலேதான் அந்தச் சங்கடமான நிகழ்ச்சி

நிகழ்ந்துவிட்டது. நாராயண பாபுவின் மொழிபெயர்ப்பை அபூரி நிராகரித்துவிட்டார். இதற்குக் காரணம் ஸ்ரீஸ்ரீயின் நாசவேலைதான் என்று ஸ்ரீஸ்ரீ பழிசுமத்தப்பட்டார். ஸ்ரீஸ்ரீ மறுத்துச் சொன்னார். ஸ்ரீஸ்ரீ சொன்னதுதான் உண்மை என்று வரதா சான்றளித்த போதிலும் நாராயண பாபு ஒப்புக் கொள்ளவில்லை. நாடக மொழிபெயர்ப்பில் பெரும்பான்மையான பகுதி தன்னுடைய மகனாலும், ஸ்ரீஸ்ரீ யாலுமே செய்யப்பட்டது; மூன்றாவது நபரான நாராயண பாபு இப்பணியில் தோற்றுத்தான் போனார் என்று அபூரி குறிப்பிட்டார். ஸ்ரீஸ்ரீயின் கடைசி நாட்களின் போதும், அவருடைய மறைவுக்குப் பிறகும், செக்காவின் நாடக மொழிபெயர்ப்பு விவகாரத்தில், ஸ்ரீஸ்ரீயைச் சம்பந்தப்படுத்தி, நாராயணபாபு ஆங்கிலத்தில் புலமை பெற்றவர், கெட்டிக்காரர் என்று நாராயண பாபுவுக்கு ஆதரவாக ஸ்ரீஸ்ரீயின் இன்னொரு உறவினரான ஆருத்ராவும் கிசுகிசுத்தார்; சினம் கொண்டும் கருத்துரைத்தார். இந்த மொழிபெயர்ப்பு விவகாரத்தில் பல ஆண்டுகளுக்கு முன்பு நடந்த உண்மை எதுவாகவேனும் இருக்கட்டும், நாராயண பாபுவின் ஆங்கிலப் புலமைக்கு ஆதரவாக அதிகமான சான்றுகள் எவையும் இல்லை. ஆனால், வம்சா வழியாய் வந்தமைந்த நாராயணபாபுவுடனான இந்த இழுபறி உறவு ஸ்ரீஸ்ரீயை மிகவும் சினம் கொள்ளச் செய்துவிட்டது. எப்பொழுதும் 'இமிடேட்' செய்து கொண்டு, அதற்குமேல் வளர்ச்சியடையாமலும் கவிதையில் தனக்கென்று ஒரு பாணியை உருவாக்கிக் கொள்ள முடியாமலும் இருந்த நாராயண பாபுவை ஸ்ரீஸ்ரீ ''அவர் ஒரு செயற்கைக் கவிஞர்'' என்றே குறிப்பிட்டார். இந்த மொழி பெயர்ப்பு விவகாரத்தால் மேலும் சினம் கொண்ட ஸ்ரீஸ்ரீ, நாராயண பாபுவின் மீது மிகக் கடுமையான விமர்சனங்களை வைத்தார். ''நாராயண பாபு அடிப்படையில் ஒரு குழப்பவாதி; சரியான சந்தர்ப்பவாதியும் கூட'' என்றும் ஸ்ரீஸ்ரீ விமர்சித்தார்.

ஸ்ரீஸ்ரீக்கு ஆருத்ரா மருமகன் முறை உறவு; ஆருத்ரா மீது ஸ்ரீஸ்ரீ மிகவும் செல்லமும் சலுகையும் காட்டினார். ஆருத்ரா எழுதிய ''த்வமேவாகம்'' என்ற குறியீட்டுக் கவிதைப் படைப்புக்கு, ஸ்ரீஸ்ரீ முன்னுரை எழுதினார். அந்த முன்னுரையில், நிஜாம் எதிர்ப்புக்குத் தனது ஆதரவைத் தெரிவித்திருந்தார். கம்யூனிஸ்டுக் கட்சி தொடங்கியிருந்த ரசாக்கர் இயக்க எதிர்ப்புக்கும் ஸ்ரீஸ்ரீ தனது ஆதரவைத் தெரிவித்திருந்தார்; தெலுங்கானா ஆயுதம் தாங்கிய புரட்சிக்கும் தனது ஆதரவைத் தெரிவித்திருந்தார். இந்த ஆதரவுக் குரலை ஸ்ரீஸ்ரீ மிக உச்சநிலை வார்த்தைப் பிரயோகங்கள் வழியே தெரிவித்திருந்தார். இதுபற்றி இலக்கிய வட்டாரங்களிலிருந்து சிறிதளவு கோபக் கிளர்ச்சி கிளம்பியபோது ஸ்ரீஸ்ரீ தெலுங்கு 'சுதந்திரா' இதழில் ஒரு நீண்ட கட்டுரை எழுதினார். அந்தக்

கட்டுரையில், தான் முன்னர் கூறியிருந்த கருத்துக்கள் சரியானவையே என்று வலியுறுத்தி, அவற்றை மறுபடியும் எடுத்துக் கூறினார். ஆருத்ரா திரைப்பட உலகிற்குள் நுழைவதற்கும் கூட ஸ்ரீஸ்ரீதான் உதவியிருக்க வேண்டும். ஒரு வேளை இக்கருத்து இப்போது மறுக்கப்படலாம். கொஞ்சம் காலம் கடந்து சென்ற பின்னர், இலக்கியவாதிகள் ஒரு சந்தர்ப்பத்தில், ஸ்ரீஸ்ரீயும் ஆருத்ராவும் 'குருவும் சிஷ்யரும்' போன்றவர்கள் என்றே நம்பத் தொடங்கினார்கள். ஆனால், அந்தஸ்தில் உயர்ந்துவிட்ட நிலையில் 'குரு-சிஷ்யன்' என்று சொல்லப்படுவதை ஆருத்ரா விரும்பவில்லை என்பது வெளிப்படையாகவே தெரிந்தது. அவர்களுக்கிடையில் சிறிது குடும்பப் பகை இருந்திருக்கலாம்; அது வெளிப்படையாகத் தெரியாமல் இருந்திருக்கக் கூடும். காலப் போக்கில், அவர்கள் இருவரும் ஒருவருக்கொருவர் பரஸ்பரம் வெளிப்படையாகவே வெறுப்பை வளர்த்துக் கொண்டனர்; ''ஷாக்'' அடிக்கப்பட்டுப் பாதிக்கப்பட்டிருந்த ஸ்ரீஸ்ரீயை மருத்துவத்திற்காகச் சென்னைக்கு அழைத்துவருவதில் ஆருத்ரா உதவிகள் செய்தார் என்ற விவரங்களும் முறைகளும் கூட கருத்து வேறுபாடுகளுக்கு உட்பட்டவையாகவே இருக்கின்றன. ஒரு சந்தர்ப்பத்தில், ''ஆருத்ரா தொடர்ந்து கவிஞராகவே இருப்பாரேயானால், நான் எதையும் எழுதத் தேவையில்லை''- என்று ஸ்ரீஸ்ரீ கூறினார். ''ஆருத்ரா எனது எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றவில்லை; அவருடைய மனைவியின் பாதிப்பின் காரணத்தால் வழிதவறிச் சுற்றித் திரிந்துவிட்டார் போலும்''- என்றும் ஒரு சமயம் ஸ்ரீஸ்ரீ வருந்தினார். நாராயண பாபு வெறும் 'இமிடேஷனோடு' நின்று போனதைப் போலவே ஆருத்ராவும் நின்று விட்டார். ஸ்ரீஸ்ரீயும் ஆருத்ராவும் ஆசிரியரும் மாணவரும் போலத்தானே? என்று ஒருவர் ஸ்ரீஸ்ரீயிடம் கேட்டார். இந்தக் கேள்விக்கு பதிலளித்த ஸ்ரீஸ்ரீ, ''ஆருத்ரா என்னுடைய சீடர் என்பதை அவர் ஒப்புக்கொள்ளமாட்டார்; ஆருத்ரா எனது தலைசிறந்த சீடர் என்று சொல்வதை நானும் ஒப்புக் கொள்ள மாட்டேன்; ஆருத்ரா உண்மைபோலத் தோற்றமளிக்கும் பொய்களைப் பேசுவதிலும், எழுதுவதிலும் மிகவும் கெட்டிக்காரர்; அவரது இந்தத் தன்மையைக் கருதி, அவரைப் பாராட்டி, ''அசத்யா (பொய்மை) என்று ஒரு பட்டத்தைக் கொடுத்திருக்கிறேனே'' என்று சொன்னார். பூரிபந்தாவை மாஸ்கோ போகவிடாமல் தடுத்தவர் ஸ்ரீஸ்ரீதான் என்று ஆருத்ரா மறைமுகமாகக் குற்றம் சாட்டியபோது, ஸ்ரீஸ்ரீ, ''ஆருத்ரா எதையும் பெயர் குறிப்பிட்டுச் சொல்வதில்லை; அல்லது எதையும் தெளிவுபடவும் சொல்வதில்லை; அவர் எதையும் சுற்றி வளைத்துப் பேசுவதில் வல்லவர்; பெரிய கண்டுபிடிப்பாளர்; பெரிய ஆராய்ச்சிப் பணியாளர்; அதனால், அவரால் எண்ணற்ற சாட்சியங்களைத் தரமுடியும்; அதனால் நான் அவரை ''ராமப்

பந்தலு'' (குரஜாடாவின் 'கன்யா சுல்கம்' நாடகத்தில் இடம்பெறும் ஒரு வில்லன் பாத்திரம்; புத்திசாலித்தனமான வழக்காடும் பாத்திரம்) என்று அழைக்கிறேன்''- என்று விளக்கம் தந்தார். விசாகையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஸ்ரீஸ்ரீயின் சஷ்டியப்த பூர்த்தி நிகழ்ச்சியின்போதும், ஸ்ரீஸ்ரீ காலமாகி, சென்னையில் நடந்த இறுதி ஊர்வல நிகழ்ச்சியின் போதும், அவரிடமிருந்து எதிர்பார்க்கப்பட்ட அளவுக்கு ஆருத்ரா அன்புடையவராக நடந்து கொள்ளவில்லை. ஒரு பொது நிகழ்ச்சியில் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்ற மிகக் குறைந்த மரியாதை கூட அவரிடம் காணப்படவில்லை. இந்தச் சிறிய அளவு நூலில், இவைபோன்ற துரதிர்ஷ்டவசமான செய்திகளை எழுதுவது என்பது அதிகபட்சமான செயலே; என்றாலும் இவற்றையெல்லாம் நினைத்துப் பார்ப்பது இலக்கிய உலகில் ஜாம்பவானாக இருந்த ஸ்ரீஸ்ரீயின் புகழுக்கு எந்த வகையிலும் இழுக்கைத் தருவதாகவும் ஆகாது; மாற்றுக் கட்சிக்காரரை உயர்த்தி ஸ்ரீஸ்ரீயைத் தாழ்த்துவதாகவும் ஆகாது. ஆனால் ஒரு விஷயம் உறுதியானது. அதாவது, ஸ்ரீஸ்ரீ தனது வாழ்க்கையின் பிந்திய காலக்கட்டங்கள் முழுவதிலும், மனம் நொந்துபோன உணர்வுடனேயே இருந்தார். ஸ்ரீஸ்ரீக்கு எத்தனையோ பல வெளிப்படையான பகைவர்கள் எனப்பட்டவர்கள் இருந்தார்கள்; அவர்களில் ஒருவரால் கூட இந்த அளவுக்குத் தீங்கு ஸ்ரீஸ்ரீக்கு நிகழ்ந்துவிடவில்லை.

உருவப் பரிசோதனையில், 'சிஷ்ட்லா' தன்னை விஞ்சி விட்டதாக ஸ்ரீஸ்ரீ ஒப்புக் கொண்டார். பாலகங்காதர திலக் நேர்த்தியான கவிஞர் என்றும் அவர் ஒளிமயமான உச்சத்தை அடைந்தவர் என்றும், அந்த அளவு புகழ் உச்சியை நாராயண பாபு போன்ற சின்னக் கவிஞர்கள் அடையமுடியாது என்றும் ஸ்ரீஸ்ரீ சொன்னார். கவிதைத் துறையில் தாசரதிக்கு (கிருஷ்ணமாச்சார்யலு) 'ஒரு நல்ல இடத்தை' அளிப்பதை விடவும் குந்துர்தி ஆஞ்சநேயலுவுக்குத்தான் 'நல்ல இடத்தை'த் தன்னால் தர முடியும் என்றார் ஸ்ரீஸ்ரீ. 'சினேர்' (சிங்கிரெட்டி (சத்யா) நாராயண ரெட்டி) வெளிப்பார்வைக்கு எப்படிப்பட்டவராக இருந்த போதிலும், ஒரு சிறிய கடைக்காரராகவும், திரைப்படத் துறையில் எதற்காகவும் தன்னைத் தாழ்த்தி வளைந்து கொள்பவராகவும் அவர் இருந்தபோதிலும் உள்ளத்தளவில் அவர் தன்னுணர்ச்சிக் கவிஞராகவே இருந்தார். நாராயண பாபு சிஷ்ட்லாவின் சீடராக இருந்தார்; ஆருத்ராவின் குருவாக விளங்கினார். ''த்வமேவாகம்'' (பரமாத்மாவும் நானும் ஒன்றே) என்ற ஆருத்ராவின் படைப்பு நம்பிக்கையின்மைப் போக்குடையது, ஆனால் நெருப்பை உமிழக் கூடியது. காலோஜி நாராயணராவ் (பி.1914) இன்று நம்மிடையே வாழும் வேமனா ஆவார். இன்று

நமக்கு இருக்கின்ற அத்தனை வகையான சிக்கல்களும் அவருக்கும் உரியவையே. சி.ஆர். ரெட்டி (1880-1951) நவீன விமர்சனத்தின் ஒளிகாட்டி, முன்னோடி ஆவார்; புதுமையான கருத்துருவாக்கங்கள் பலவற்றை வெளிப் படுத்தியவர். புட்டபர்த்தி நாராயணா சார்யலு (1914-89) 'அறிஞர்களுக்குள் ஒரு கவிஞர், கவிஞர்களுக்குள் ஓர் அறிஞர்' என விளங்கியவர். ராயலசீமை நமக்குக் கொடையாக வழங்கிய 'வைரம்' என்றே அவரைச் சொல்லலாம். ராயப்புரோலு சுப்பாராவ் (1892-1984) மறந்து போயிருந்த தெலுங்கியம் என்பதை நம் அனைவரின் கவனத்துக்கும் கொண்டு வந்தவர்; தன்னுணர்ச்சிக் கவிதையில் முதுபெரும் பாட்டனார் ஆவார். பீனாதேவி (1924-90), முப்பாலரெங்க நாயகம்மா, வாசிரெட்டி சீதாதேவி (பி.1933) ஆகியோர் ''கொள்கைக்காகத் தம்மை அர்ப்பணித்துக் கொண்ட படைப்பாளர்கள்; வேறு யாருக்கும் குறைவானவர்கள் அல்லர்''

குண்டூரி சேஷேந்திர சர்மா பற்றிப் பல சந்தர்ப்பங்களில் சொல்வதற்குப் பல விஷயங்கள் ஸ்ரீஸ்ரீயிடம் இருந்தன. தனது கவிதையில் ஒரு புதிய கொள்கை உருவாகி வந்தது என்றும், சேஷேந்திர சர்மா மட்டும்தான் தனது 'நீண்ட பயணம்' படைப்பை மிகச் சிறப்பாக வடமொழிக்கு மொழியாக்கம் செய்யக் கூடியவர் என்றும் ஸ்ரீஸ்ரீ சான்றளித்துச் சொன்னார். அதனால்தான், மொழியாக்கப் பணியை நிறைவேற்றுவதற்கு, எஸ்.வி. பல்கலைக் கழகத்திற்கு சர்மாவின் பெயரைத் தான் பரிந்துரைத்ததாகவும் ஸ்ரீஸ்ரீ குறிப்பிட்டார். சர்மா மட்டும்தான் 'கம்யூனிஸம்' என்னும் திசை நோக்கி அணிவகுத்துச் செல்ல நினைக்கும் ஒரு மனிதராக இருந்தார். ஆனால் அவர் ஓர் உண்மையான புரட்சிக்காரராக இல்லை. மதில்மேல் பூனை என்று சொல்வோமே, அதுமாதிரி 'மதில் மேல் ஒரு குயில்' ஆக இருந்தார். சர்மாவுக்குச் செவ்வியல் இலக்கியத்தில் பயிற்சி மிக விரிவாக அமைந்திருந்தது. விஸ்வநாதாவை விடவும் சர்மாதான் வடமொழியில் சிறந்த புலமை பெற்றவர் என்று ஸ்ரீஸ்ரீ நம்பினார். அவருடைய ''மண்டே சூர்யுடு'' (எரியும் சூரியன்) என்னும் கவிதை, புரட்சிக் கருத்துக்களுக்கு ஆதரவான படைப்பாகும். அவருடையன வற்றை 'புதிய செவ்வியலிசம்' என்றே சொல்லிவிடலாம். அவரது படைப்புக்களில் செவ்வியல் நடைதான் மேலோங்கியிருந்தது. அவருடைய 'கவிசேனை' (கவிஞர்களும் இலக்கியவாதிகளும் அடங்கிய சேனை; இவ்வமைப்பை சர்மா தொடங்கினார்) என்னும் அமைப்பு பிற்போக்குத் தன்மை உடைய இயக்கமாகும். இலக்கிய மாகட்டும், அல்லது அரசியலாகட்டும் பிற்போக்குத் தன்மையானது தொல்லை தருவதாகத்தான் அமையும். சர்மா சிறந்த வடமொழி அறிஞர் என்று எப்போதும் தான் ஒப்புக் கொள்வதாகவும், ஆனால் தாசரதியோடு ஒப்பிடும்போது சர்மா குள்ளமாகிப் போனவர்,

ஆதலால் அவரை ஒரு கவிஞர் என்ற அந்தஸ்தில் தான், ஒப்புக் கொள்வது சந்தேகம்தான் என்றும் ஸ்ரீஸ்ரீ சொன்னார்.

தன்னுடைய படைப்புக்கள் பற்றியும், மற்றவர்கள் படைத்த நாடறிந்த படைப்புக்கள் பற்றியும் வெளிப்படுத்தத் தக்கவையும், குறிப்பிடத்தக்கவையுமான பல கருத்துக்கைள ஸ்ரீஸ்ரீ வைத்திருந்தார். இந்த நூற்றாண்டில், தனது பெயர், 'பொருள் பொதுளிய' பெயர் என்றும், 'கவிதா சிருஷ்டியில் ஓர் ஆய்வு மையம்' என்றும் ஸ்ரீஸ்ரீ கருதினார்; தான் படைத்த 'நீண்ட பயணம்' என்னும் படைப்பு, மக்கள் வாழ்க்கையின் நிழற்படம் போலவே இன்றுவரை விளங்குகிறது என்றும் கருதினார். வெங்கடபர்வதீஸ்வர கவுலு பாலந்த்ரபு வெங்கடராவ் (1881-1972) ஓலேட்டி பர்வதிஸம் (1882-1955) என்ற இரட்டைப் புலவர்கள் எழுதிய 'ஏகாந்த சேவா' என்ற நாவல் ஸ்ரீஸ்ரீக்கு 'ஒரு கவிதை அருவி' போலவே இருந்தது. ராயப்ரோலு படைத்த 'கஷ்ட கமல' படைப்பை, ஸ்ரீஸ்ரீ 'கவிதையில் அமைந்த ஒரு சிறுகதையாகவே' கருதினார். நந்தூரி சுப்பாராவ் எழுதிய 'என்கி பாடலு' என்னும் படைப்பை, ஸ்ரீஸ்ரீ 'துயரப்பட்டவர்களின் தன்னுணர்ச்சிக் கவிதை' எனவே கருதினார். ஆவஞ்சசோமசுந்தர் (பி. 1924) எழுதிய 'வஜ்ராயுதம்' என்னும் கவிதையை ஸ்ரீஸ்ரீ 'தெலுங்கானா ஆயுதப் புரட்சி மீதான ஓர் உரை விளக்கம்' என்றே கருதினார். ஸ்ரீஸ்ரீயின் சொந்தப் படைப்பான 'கட்க சிருஷ்டி', நீதியின் அழிவை எடுத்துரைப்பதாகக் கருதினார்; குரஜாடாவின் 'முத்யால சராலு' என்னும் படைப்பை தன்னுணர்ச்சிக் கவிதைக்கு வழிகாட்டும் ஒரு கைகாட்டி எனக் கருதினார். எனவே, ஸ்ரீஸ்ரீ இக்கால இலக்கியத்தில் 'ஸ்ரீஸ்ரீயின் காலம்' என்று ஒரு பகுதி ஒதுக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தினார். வேறு பிற எழுத்தாளர்களின் தனிப்பட்ட சிறப்புக்களைக் கூறுதல், சில நேரங்களில் பிறரோடு ஒப்பிட்டுக் கூறுதல் என்றவாறு, ஸ்ரீஸ்ரீக்குச் சில கருத்துக்கள் இருந்தன. ''லதா (தென்னட்டி ஹேமலதா, பி.1932) முப்பளரெங்க நாயகம்மாவை விடவும் குறைந்த மதிப்புடைய எழுத்தாளர்'', ''புரட்சிகரக் கவிஞரான வரவரராவ் மிகவும் விலை உயர்ந்த வைரம் போன்றவர்'', 'யெண்ட மூரி வீரேந்திரநாத் 'சுடச்சுடக்' கிடைக்கும் எளிய தோசை போன்றவர்' என்றெல்லாம் ஸ்ரீஸ்ரீ கருத்துக்கள் வைத்திருந்தார். கஜெல்ல மல்லரெட்டி மிகக் குறுகிய காலத்தில் 'அங்கதப் படைப்பாளர்' என்னும் பெருமையைப் பெற்று அதை நீண்ட காலம் தக்க வைத்துக் கொண்டிருந்தார். ஸ்ரீஸ்ரீ அவரையும் பாராட்டினார். 'அங்கதம்' என்னும் படைப்புத் துறையில் அவரே தனக்கு வாரிசு என்று கூட ஒரு காலக் கட்டத்தில் ஸ்ரீஸ்ரீ அவரை அழைத்தார். ஆனால் மல்லரெட்டி புரட்சிகரக் கவிஞர்களை மிகவும் மோசமாக விமர்சனம் செய்த நேரத்தில்,

ரெட்டியின் எழுத்துக்கள், அரசம் அமைப்பின் முதுகெலும்பையும், அவருடைய முதுகெலும்பையும் சேர்த்து முறித்துவிடக் கூடியனவாக இருக்கின்றன என்று ஸ்ரீஸ்ரீ ரெட்டியை எச்சரிக்கவும் செய்தார். ''திகம்பர கவிகள்தான் உண்மையான கவிஞர்கள்'' என்று சான்றளித்த ஸ்ரீஸ்ரீ, ''அவர்கள் தங்களது கவித்துவ ஆற்றலை முறையாகப் பயன்படுத்த இயலாதவர்களாக இருக்கிறார்கள்; அவர்களுடைய சஞ்சலப் போக்கு நன்மைக்குப் பயன்படுத்தப் படவேண்டும்'' என்றும் சொன்னார். முன்னதாக, ஒரு சந்தர்ப்பத்தில், திகம்பர கவிகள் கவிதைக்குப் புதிய நம்பிக்கை தருகிறவர்கள்; ''அவர்களுடைய கவிதைகள் தான் 'திகம்பரமாக' உள்ளனவே தவிர, கவிஞர்களாகிய அவர்கள் அல்ல'' என்றும் ஸ்ரீஸ்ரீ சொன்னார். உரைத்துப் பார்க்கும் போது, திகம்பர கவிகளின் கவிதைகளில் ஆபாசம்தான் இருக்கிறது என்று அவர்கள் குற்றம் சாட்டப் பெற்றபோது, ஸ்ரீஸ்ரீ திகம்பர கவிகளுக்குத் தனது ஆதரவைத் தெரிவித்தார்; ''பாலியல் என்பது ஆபாசமாக இருக்க முடியாது'' என்றும் சொன்னார்; அவர்களுடைய கவிதைகளை ஆங்கிலத்திலும் மொழிபெயர்த்து வெளியிட்டார். ''ராரா'' (ராகமல்லு ராமச்சந்திர ரெட்டி, 1922-88), 'சம்வேதனா' இதழின் ஆசிரியர்) விமர்சனத்தில் மிகவும் கடுமையாக இருக்கிறார் என்று குற்றம் சாட்டப்பட்டபோது, ''அன்பில்லாத விமர்சகராக 'ராரா' இருக்கலாம், ஆனால் அவர் மார்க்சிய விமர்சகர்களுள் ஒருவர்'' என்று ஸ்ரீஸ்ரீ சுட்டிக் காட்டினார்; எனினும், 'ராரா' அந்த அளவுக்குக் கடுமையாகவும் இருக்கத் தேவையில்லை என்றும் ஸ்ரீஸ்ரீ சொன்னார். ஸ்ரீஸ்ரீயும், பத்திரிகை ஆசிரியரான நரல வேங்கடேஸ்வர ராவும் (1908-1985) 'ஆந்திர பிரபா' பத்திரிகையில் இணைந்து பணியாற்றியவர்கள்; சிறிது காலம் பக்கத்து வீட்டுக்காரர்களாகவும் இருந்தவர்கள்; அரசியலில் மறுக்க முடியாத அளவுக்கு வேறுபட்டவர்கள்; ஒருவர் ராயைப் பின் பற்றுபவர்; இன்னொருவர் பொதுவுடைமை வாதி. நரல எழுதிய தலையங்கங்களை (கம்யூனிஸ்டுகளை எதிர்த்து எழுதப்பட்டவை) ஸ்ரீஸ்ரீ ஏளனம் செய்தார். இவ்வாறு இவர்கள் வழியே வந்த எழுத்துக்களும் ஏளனங்களும் இவ்விருவரின் வெளிப்பாடுகளாக அமையலாயின. ஸ்ரீஸ்ரீயின் கவிதையாக்க நிலைபாடானது தலைகீழ் நிலையாக அமையலாயிற்று.

தெலுங்கு அல்லாத பிறமொழி எழுத்தாளர்கள் சிலர் குறித்தும், இந்தியத் தலைவர்கள் குறித்தும் வித்தியாசமான ஒப்பீடுகள் மூலமும், தனக்குத் தானே மாறுபட்டும், சில விநோதமான கருத்துக்களைப் பல நேரங்களில் ஸ்ரீஸ்ரீ தெரிவித்தார். அரசியல் தத்துவார்த்தம், அல்லது சமுதாய அறமுறை என்ற அடிப்படையில் காந்தியத்தின் மீது ஸ்ரீஸ்ரீ எந்த மரியாதையும் காட்டியதே இல்லை. இதே பார்வையில் ஸ்ரீஸ்ரீ

பல அங்கதங்களையும் எழுதினார். ஆனால் 'காந்தியடிகள்' என்னும் மனிதர் மீது ஸ்ரீஸ்ரீ கொண்டிருந்த மரியாதை முற்றிலும் வேறுபட்டு அமைந்திருந்தது.

"அவருக்கே உரிய அவருடைய பாதையில் காந்தியடிகள் ஒரு புரட்சிக்காரர்தான்; அவர் இந்த தேசத்தை ஒருங்கிணைத்து விட்டவர்" என்று ஸ்ரீஸ்ரீ எழுதினார். இரவீந்திரநாத் தாகூரின் படைப்புக்களை வாசிக்கும் போது ஒரு கவிதையை இரண்டு முறை வாசிக்க வேண்டும்; அந்தக் கவிதையின் ஓசை நயத்தைக் கற்றுக் கொள்வதற்காக ஒரு முறையும், கவிதை கூறும் உரிப் பொருளைப் புரிந்து கொள்வதற்காக ஒரு முறையும் ஆக இரண்டு முறை வாசிக்க வேண்டும். இப்படி ஒரு பழக்கத்தை ஏற்படுத்திக் கொண்டதாக ஸ்ரீஸ்ரீ எழுதினார். ஆனால், பின்னர் ஸ்ரீஸ்ரீ தனது மனப் போக்கை மாற்றிக் கொண்டு விட்டார். "தாகூரின் படைப்புக்களில், மேற்பரப்பில் பொங்கிப் பரவும் தத்துவார்த்தமான கருத்துக்கள், சோடாத் தண்ணீரில் பொங்கிவரும் 'கார்பன்-டை-ஆக்ஸைடு' மாதிரித்தான்; சிலர் அதைத் தவறுதலாகக் கவிதையே என்று கருதி விடுகிறார்கள்" என்றும் ஸ்ரீஸ்ரீ கருத்துரைத்தார். சார்லஸ் டிக்கன்சும் மக்சிம் கார்க்கியும், மூன்ஷி பிரேம் சந்த், சரத் பாபு ஆகியோரை விடப் பெரியவர்களே என்று கூறிய ஸ்ரீஸ்ரீ அதற்கான விளக்கத்தைத் தரவில்லை. மூன்று விஷயங்கள் ஸ்ரீஸ்ரீயின் மீது நிரந்தரமான செல்வாக்கைச் செலுத்தி யிருந்தன. அவை ஜேம்ஸ் ஜாய்ஸ் எழுதிய 'யூலிசிஸ்'; மயகாவ்ஸ்கி எழுதிய 'லெனின்'; குரஜாடா எழுதிய அனைத்துப் படைப்புக்களும் என்ற மூன்றும் ஆகும். குழந்தைப் பருவத்தில் ஸ்ரீஸ்ரீ மாப்பசானைப் பாராட்டினார்; அதன் பிறகு செக்காவைப் பாராட்டினார்; பின்னர், ஹரீந்திரநாத் சட்டோபாத்யாயர் ஸ்ரீஸ்ரீக்குத் 'தூண்டுகோலாக' அமைந்தார். சார்லஸ் படேலேர் (*1821-67*), மாப்பசான் (*1850-93*), எட்கர் ஆலன் போ (*1809-49*) முதலிய மூவருமே ஸ்ரீஸ்ரீக்கு வாய்த்த "மும் மூர்த்திகள்" எனலாம். ஸ்ரீஸ்ரீ மிகவும் விரும்பிய கவிஞர்கள் சேக்ஷ்பியர், ஷெல்லி, காளிதாசர், திக்கண்ணா ஸ்ரீ நாதா முதலியோர் ஆவர். ஸ்வின்பர்ன் ஸ்ரீஸ்ரீக்குக் குருவாகவே இருந்தார். மாப்பசானை ஒரு பெரிய எழுத்தாளர் என்பதை விடவும் அவர் ஒரு பெரிய கவிஞர் என்றே ஸ்ரீஸ்ரீ அழைத்தார். ஷெல்லி, தாகூர், தேவுலபள்ளி (தேவுல பள்ளி காரணமாக வேதுல, நாயனி, நந்தூரி) முதலியவர்களையும் நல்ல கவிஞர் என்று கருதி விரும்பியதாகவும் ஸ்ரீஸ்ரீ சொன்னார். நஸ்ருல் இஸ்லாமும் ஸ்ரீஸ்ரீக்குத் தூண்டுகோலாக அமைந்தார். இளமைக்காலத்தில் ஸ்ரீஸ்ரீக்கு விஸ்வநாதா மிக உயர்ந்த சக்திவாய்ந்த கவர்ச்சியாக இருந்தார். அபூரி செல்லப் பில்லாவிடம் மரியாதை காட்டினார் என்பதற்காக, ஸ்ரீஸ்ரீ செல்லப் பில்லாவிடம் மரியாதை காட்டினார். அதேபோல, அபூரி, ஸ்ரீ பாதாவை (கிருஷ்ணமூர்த்தி

சாஸ்திரி) வெறுத்தார் என்பதற்காக ஸ்ரீ பாதாவை ஸ்ரீஸ்ரீ வெறுத்தார். (செல்லப்பில்லா ஸ்ரீ பாதாவின் (1866-1960) சீடராகச் சிலகாலம் இருந்தார். ஒருங்கிணைந்த சென்னை மாகாணத்தில், குருவுக்கு முந்தியே தெலுங்கு அரசவைக் கவிஞர் ஆகிவிட்டார்) இவர்களைப் பற்றியெல்லாம் பல்வேறு சந்தர்ப்பங்களில் ஸ்ரீஸ்ரீ தெரிவித்த பல்வேறு கருத்துக்கள் ஏராளமாய் உள்ளன.

ஒருமுறை, 'அரசவைக் கவிஞர்' பதவியை, 'அரசவைக் கோமாளி'ப் பதவிக்கு இணையானது என்று ஸ்ரீஸ்ரீ ஒப்பிட்டுப் பேசினார். முற்போக்குக் கவிதை என்பது வேறொன்றுமல்ல, "CPI - கவிதையே" முற்போக்குக் கவிதை; அதே நேரத்தில் புரட்சிக் கவிதை என்பது "CPI(M) கவிதை ஆகும்" என்று ஸ்ரீஸ்ரீ சொன்னார். முன்னது ஒரு சந்தர்ப்பத்தில் புரட்சிகரமாகவே இருந்தது; தன்னுணர்ச்சிக் கவிதையை எதிர்த்துப் பெரிய புரட்சியே செய்தது. பின்னது 'முற்போக்குக் கவிதை' எனப்படுவதிலிருந்து வளர்ச்சி பெற்ற ஒன்று. மேலும் ஸ்ரீஸ்ரீ பின்வருமாறு சொன்னார்:

நமக்கு 'அரசம்' (முற்போக்கு எழுத்தாளர் சங்கம்) தேவை யில்லை; அல்லது விரசமும் (புரட்சிகர எழுத்தாளர் சங்கம்) தேவை யில்லை; இப்போது அவைகளுக்குப் பதில் நமக்குத் தேவையானது "லாவாரசம்"தான் (எரிமலைக் குழம்பு எனப் பொருள்படும் இந்தச் சொல்லை ஸ்ரீஸ்ரீ லா (ஷானிகா) வா (தா) ர (ஸய்டலா) ச (ங்கம்) என்னும் சொற்களிலிருந்து எடுத்து அமைத்து விரித்துக் கொள்கிறார்.) அல்லது அவைகளுக்குப் பதிலாக நமக்குப் பேச்சாற்றல் மிகுந்த எழுத்தாளர் அமைப்புத்தான் தேவை. புதிதாக உருவாகியிருந்த 'நவீன செவ்வியலிஸம்' என்பதை ஏளனம் செய்தும் ஸ்ரீஸ்ரீ இவ்வாறு கூறியிருக்கலாம். முன்னாள் கம்யூனிஸ்டுகள் மீது ஸ்ரீஸ்ரீ அன்புடையவராக இல்லை. "நேற்றைய கம்யூனிஸ்டு கள் இன்றைய 'பெரிய மனிதர்களாக' ஆகிவிட்டார்கள்; பெரிய கொடையாளிகள் ஆகிவிட்டார்கள்; செல்வந்தர்களாக ஆகிவிட்டார்கள்; வியாபாரத்திலேயே அக்கறை கொண்டவர்கள் ஆகிவிட்டார்கள்; தியாகம் என்னும் பழைய நிலையிலிருந்து அவர்கள் விலகிப் போய் விட்டார்கள்" என்றும் ஸ்ரீஸ்ரீ சொன்னார். இவ்வாறு அவர் தன்னைப் புரட்சிக்காரர்களோடு சேர்த்து அடையாளப்படுத்திக் கொண்டார்; என்றாலும், இதற்கு மாறாக, இந்திரா காந்தி கொண்டு வந்த 'இருபது அம்சத் திட்டத்தை' ஆதரித்தார்; என்.டி. ராமாராவ் அரசியலுக்கு வந்ததையும் ஆதரித்தார்; அவசரகால ஆட்சியை "பாட்டாளிகளின் அறம்சார்ந்த அதிகாரம்" என்றே ஸ்ரீஸ்ரீ அழைத்தார். 'தெலுங்கு தேசம்' கட்சியைத் தான் ஆதரித்ததற்குக் காரணம், ஏற்கனவே உருவாகியிருந்த "நிறுவனச் செல்வாக்கு" என்னும் நிலையை

எதிர்க்கும் நடவடிக்கையே தவிர வேறல்ல என்றும் தெரிவித்தார். அவரோடு மிக நெருங்கிய சகாக்களோடும் கூட, அவர்களுக்கு மிகவும் சிரமங்களை ஏற்படுத்தி விடக் கூடிய பல கருத்துக்களை ஸ்ரீஸ்ரீ சொல்லிவந்தார். சகாக்களை உணர்ச்சி கொள்ளச் செய்வது மாதிரியான கருத்துக்களைச் சொல்வதிலிருந்து ஸ்ரீஸ்ரீ தன்னை விலக்கிக் கொள்ளவேயில்லை. இதுதான் ஸ்ரீஸ்ரீ யுடைய குணாம்சமாக இருந்தது.

ஸ்ரீஸ்ரீ சக எழுத்தாளர்களால் மிக ஆழமாக விரும்பப்பட்டார்; அதே நேரத்தில் மிகக் கடுமையாக வெறுக்கவும் பட்டார். அவருடைய சமுதாய - அரசியல் பார்வைகள் பலரால் விரும்பப்படவில்லை யென்றாலும் பலரால் ஸ்ரீஸ்ரீ பொறுத்துக் கொள்ளப்பட்டார்; பாராட்டப்பட்டார்; மரியாதைக்குரிய இலக்கியப் பதவிகளுக்குப் பரிந்துரைக்கப்பட்டார். ஆந்திரப் பிரதேச சாகித்திய அகாதெமி ஸ்ரீஸ்ரீயைத் தனது ஆட்சி உறுப்பினராகத் தேர்ந்தெடுத்துக் கொண்டது. ஸ்ரீஸ்ரீக்கு முன்னோடியாக விளங்கிய சிந்தாதீக்ஷிதுலு அப்போது மிகவும் புகழ் பெற்றிருந்த 'கிருஷ்ண பத்ரிகா' இதழில், அன்றைய ஒருங்கிணைந்த சென்னை மாகாணத்திற்கு, செல்லப் பில்லா வேங்கட சாஸ்திரியின் மரணத்துக்குப் பிறகு, அரசவைக் கவிஞராக ஸ்ரீஸ்ரீயை நியமனம் செய்ய வேண்டும் என்று வாதாடி ஒரு கட்டுரையே எழுதினார். ஸ்ரீஸ்ரீ சென்னை ராஜதானியின் மேலவை (M.L.C.) உறுப்பினராக இருந்தார்.

டெல்லியில், சாகித்திய அகாதெமி நடத்திய 'லெனின் நூற்றாண்டு' விழாக்களில் பங்கேற்பதற்கு கொடவடிகண்டி குடும்பராவுடன் ஸ்ரீஸ்ரீயும் அழைக்கப்பட்டார். 'கவிதா! ஓ! கவிதா!' என்ற தனது கவிதையை, தானே ஆங்கிலத்தில் மொழி பெயர்த்த ஸ்ரீஸ்ரீ, அதை, ஞானபீடத்தின் அன்றைய செயலாளர் ஸ்ரீ ஜெயின் அவர்களிடம் வாசித்துக் காண்பித்தார். கவிதையைக் கேட்ட ஸ்ரீ ஜெயின் என்ன சொன்னார் என்பதைக் கொடவடிகண்டி பின்வருமாறு தெரிவிக் கிறார்: ''மொழிபெயர்ப்பிலேயே இந்தக் கவிதை இந்த அளவுக்கு ஈர்க்கிறதே, அப்படியானால், இது மூல மொழியில் எவ்வளவு அழகுடையதாக இருக்க வேண்டும் என்று ஸ்ரீ ஜெயின் சிலாகித்து உரைத்தார்'' ஸ்ரீஸ்ரீ விருது பெறப்போவது நிச்சயம் என்றும் ஸ்ரீ ஜெயின் சொன்னார். 1982ஆம் ஆண்டிற்கான (ஞானபீட) விருது, ஏறத்தாழ மேலும் ஒரு நாற்பது நாட்களுக்கு ஸ்ரீஸ்ரீ உயிரோடு இருந்திருப்பாரானால் விருது ஸ்ரீஸ்ரீக்கே வழங்கப்பட்டிருக்கும் என அறிஞர் ஒருவர் எழுதினார். விருது விஷயமாக உண்மை எதுவாகவேனும் இருக்கட்டும், அப்போதைய

(ஞானபீட) விருதுக்கு ஸ்ரீஸ்ரீயின் பெயர் பட்டியலில் சேர்க்கப்பட்டுப் பரிசீலிக்கப் பட்டிருந்தது.

இத்தகைய பாராட்டுக்களுக்கெல்லாம் அப்பால், இரண்டு அல்லது மூன்று கருத்துக்கள் மிகவும் புகழ்பெற்று நிற்கின்றன. பூரிபந்தா மிகவும் சரியாக ஊகித்திருந்தபடியே, முற்போக்கு இலக்கியத்தின் காலத்தை வென்ற ஒரு தலைவராகவே ஸ்ரீஸ்ரீ தொடர்ந்து இருந்துவருகிறார். மரியாதைக்குரிய விமர்சகரும் ஆந்திர ஜோதி நாளிதழின் ஆசிரியருமான நந்தூரி ராம மோகனராவ், ஸ்ரீஸ்ரீ பற்றிக் குறிப்பிடும்போது, ''ஸ்ரீஸ்ரீ தெலுங்கு இலக்கியத்துக்கு ஒரு பேரிழப்பை உருவாக்கிவிட்டார்! அதாவது அவருக்குப் பிறகு யாரும் அவரைப் போல, அவ்வளவு வித்தியாசமாக எழுத முடியாதவாறு, எழுதிப் பின்தொடர முடியாதவாறு, ஸ்ரீஸ்ரீ மிகவும் ஈடு இணையில்லாத உச்ச நிலையில் படைத்து விட்டார்!'' - என்று எழுதினார். எல்லாவற்றுக்கும் மேலாக, விஸ்வநாதா சொன்ன கருத்து ஒன்று உண்டு: ''ஸ்ரீஸ்ரீ இலக்கிய உலகத்திற்கு வந்தார்; வந்து ஒவ்வொருவரையும் கவிதை எழுதுமாறு ஊக்குவித்து விட்டார்'' என்று விஸ்வநாதா முத்தாய்ப்பாகக் குறிப்பிட்டார். விஸ்வநாதாவின் இக்கருத்து முற்றிலும் சரியான கருத்தாகும். ஸ்ரீஸ்ரீயைப் பின்பற்றி, அவரைப் போலவே 'இமிடேட்' செய்யவும், அவரை அப்படியே 'காபி' செய்யவும், அவரிடமிருந்து ஏராளமாய்க் கடன் வாங்கிக் கொள்ளவும், விருப்பம் கொண்டிருக்கிற இளைஞர்களும், முதியவர் களுமான நூற்றுக்கணக்கான, ஆயிரக்கணக்கான படைப்பாளர் களுக்கு ஸ்ரீஸ்ரீ 'ஒரு முன் மாதிரி'யாக இப்போதும் திகழ்கிறார். சுருக்கமாகச் சொல்வதென்றால், கொடவடிகண்டியின் வார்த்தை களை மேற்கோளாகச் சொல்வதுதான் பொருத்தமாக இருக்கும். அவர் பின்வருமாறு கருத்துரைத்தார்: ''ஸ்ரீஸ்ரீ தன்னுடைய வாசகர்களுடன் கொண்டிருந்த உணர்ச்சிகரமான உறவு மிகவும் உயர்ந்தது; மகோன்னதமானது! அதிலும், கவிதையைப் பொறுத்த அளவில், அவர் பெற்றிருந்த வாசகர் உறவு என்பது வேறு எவராலும் அடையவே முடியாத ஒன்றாகும்!''

6. ஸ்ரீஸ்ரீ என்னும் மனிதர்

''மெழுகுத் திரியின் இருபுற முனையிலும்
சுடரை ஏற்றினேன்,
அழல் ஒளி காண்றது ஸ்ரீஸ்ரீயைப் போல''

- 'இன்குலாப்' பில் பூரிபந்தா

யாரேனும் ஒருவர், சிறிய நேரமோ, நீண்ட நேரமோ ஸ்ரீஸ்ரீயுடன் நேரடியாகத் தொடர்பு கொண்டு விடுவாரானால், அவர் ஸ்ரீஸ்ரீயை ஒரு 'வளர்ச்சியடைந்த குழந்தை' என்பதை ஒப்புக் கொண்டு விடுவார். அது மட்டுமா? ஸ்ரீஸ்ரீ மாசில்லாத வெகுளி; அதே நேரத்தில் அறிவாளி; தன் முனைப்பு மிக்கவர்; அதே நேரத்தில் பணிவானவர்; தேர்ந்து ஆராய்வு செய்பவர், அதே நேரத்தில் தட்டிக் கழிப்பவர்; கவர்ச்சியானவர், அதே நேரத்தில் சிறுகுறும்புக்காரர் என்பதையும் ஒப்புக் கொள்வர். ஸ்ரீஸ்ரீ அவருடைய சில கருத்துக்களில் மிகவும் பிடிவாதமாக இருப்பார். விளையாட்டுத்தனமாக இருக்கும் நேரங்களில் தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்ள அவரால் இயலாது; மிக விரிந்த, அறிவு பூர்வமான நேரங்களில் தன்னை ஒழுங்கு படுத்திக் கொள்ளவும் அவரால் இயலாது. நம் மனத்தில் பதிகிற ஒரு முக்கியமான விஷயம் அவருடைய ஒளிவு மறைவற்ற, வெளிப் படையான மனமும் குணச்சித்திரமும்தான். ஸ்ரீஸ்ரீயிடம் வார்த்தை களில்தான் வேகம் இருக்கும்; மற்றபடி, அவர் எப்போதும் சண்டைக் காரராக இருந்ததில்லை. அவரது இயல்பான வாழ்க்கையில், ஸ்ரீஸ்ரீ அனைத்து மரபுகளுக்கும் தன்னை இணக்கப்படுத்திக் கொண்டிருந்தார்; ஆனாலும், தனது தீவிரமான பார்வைகளைக் கொண்டு, மரபுகளை எதிர்க்கவும் செய்தார். சில நேரங்களில் அவர் அனுமானிக்க முடியாதவராகவும் காணப்படுவார்; ஆனாலும், அடுத்த சில நிமிடங்களில் ஆழ்ந்த அமைதியில் ஆழ்ந்து விடுவார்; அல்லது சோர்ந்து கிடந்து விடுவார். ஸ்ரீஸ்ரீ எதிர்மறைகள் குவிந்து கிடந்த ஒரு

மனிதர். ஸ்ரீஸ்ரீயின் வாழ்க்கையில் நிலவுகின்ற இத்தனை முரண்பாடு களையும் காண்கிற ஒருவர், அவற்றுக்கான காரணங்களையும் ஸ்ரீஸ்ரீயின் சொந்த வாழ்க்கைக்குள்ளேயே கண்டு கொள்ளவும் முடியும். இவற்றுக்கெல்லாம் காரணம், ஒரு காலக் கட்டத்தில் ஸ்ரீஸ்ரீக்கு அமைந்த சூழ்நிலைகளும், பொருளாதாரத் தொல்லை களுமே ஆகும்.

மிகவும் ஆரம்பகால வயதிலேயே, அதாவது ஸ்ரீஸ்ரீக்கு ஒன்றரை வயது இருக்கும்போதே, ஸ்ரீஸ்ரீயின் தாயார் காலமாகி விட்டார். தாயை இழந்த பிறகு ஸ்ரீஸ்ரீ தந்தையுடன் இருந்தார்; மிக வித்தியாசமான அன்பும் ஆதரவும் காட்டுகிற சிற்றன்னையிடமும் இருந்தார். ஆனாலும், ஸ்ரீஸ்ரீ ஒருவித வெறுமை உணர்ச்சியால் பாதிக்கப் பட்டிருக்க வேண்டும். ஸ்ரீ ரங்கம் குடும்பம் ஒன்றுக்கு அவர் வளர்ப்பு மகனாகக் கொடுக்கப்பட்டிருந்தபோதிலும், ஸ்ரீஸ்ரீ 'பூடிபெட்டி' குடும்பத்தில் தனது சொந்த அப்பாவுடனேயே இருந்தார். ஸ்ரீஸ்ரீயின் தந்தை மகனுடைய நிலைமைக்காக மிகவும் இரக்கப்பட்டார்; குழந்தைக் காலப் பருவத்தில் ஸ்ரீஸ்ரீக்கு மிகவும் அதிகமான செல்லம் கொடுத்தார். மிகுந்த கண்காணிப்பும் பாதுகாப்பும் நிறைந்த சூழ்நிலையில்தான் குழந்தை ஸ்ரீஸ்ரீ வளர்ந்தார். இத்தகைய வளர்ப்புச் சூழ்நிலையானது, ஏதாவது ஒரு வகையில், தன்னைச் சுற்றியுள்ள ஒவ்வொரு மனிதரோடும், சார்ந்து கொள்ளும் படியாய்க் குழந்தைக்கு அமைந்துவிட்டது. சிற்றன்னையின் மீது ஸ்ரீஸ்ரீ கொண்டிருந்த பற்று மிகவும் உணர்ச்சிகரமானது. ஸ்ரீஸ்ரீ தனது சிறந்த நூல்களில் முதல் நூலான 'பிரபவா' படைப்பை, ஆழ்ந்த நன்றியுணர்ச்சியுடன் சிற்றன்னைக்குச் சமர்ப்பணம் செய்துள்ளார். ஸ்ரீஸ்ரீ அருந்தி வளர்ந்த அன்புப் பாலானது, சிறு பிராயத்தில், அவருடைய ஒன்றுவிட்ட சகோதரர் நாராயண பாபுவுடனும், மருமகன் ஆருத்ராவுடனும் விலகிவிட முடியாதபடி நட்புத் தளையை வளர்த்துக் கொள்ளுமாறு செய்துவிட்டது. ஏதோ ஒரு காரணத்தை முன்னிட்டு, நாராயண பாபுவும், ஆருத்ராவும் ஒருவர் பின் ஒருவராய் ஸ்ரீஸ்ரீயைவிட்டு, மாறுபட்டும் அல்லது பகை கொண்டும் விலகி நிற்க நேர்ந்த போது, ஸ்ரீஸ்ரீ மிகவும் மனம் உடைந்து போனார். அவர்கள் மீது ஸ்ரீஸ்ரீ கொண்டிருந்த ஆழமான அன்பானது காலப்போக்கில் மாற்றமடைந்து ஆழமான வெறுப்பாகவே ஆகிவிட்டது. அவர்களை அவர் மன்னிக்க முடியாததற்கு அதுதான் காரணமாயிற்று. அவர்களுக்கு எதிர்ப்பாக, கடுமையாக ஏதும் சொல்லி விடக்கூடாது என்று தன்னடக்கமாகவும் ஸ்ரீஸ்ரீ இருந்து கொண்டார்.

ஸ்ரீஸ்ரீ எல்லாருடனும் நட்புக் கொண்டிருந்தார். மிகவும் வளர்ந்து, புகழ், செல்வாக்கு ஆகியவற்றின் உச்சத்திற்கு வந்துவிட்ட

நிலையிலும் கூட, ஸ்ரீஸ்ரீ குழந்தைக்கால நண்பர்களை மறக்கவில்லை. பூரிபந்த அப்பல சுவாமிதான் ஸ்ரீஸ்ரீயின் குழந்தைமைக் கால விநோதங்களையெல்லாம் அறிந்திருந்தவர்; அத்தோடு அவர், சிறுவயதில் ஸ்ரீஸ்ரீ எழுதிய கதைகளையும், தன்னுடைய இலக்கியப் பத்திரிகையில் வெளியிடவும் செய்தார். தனது அந்திமக் காலம் வரைக்கும், பூரிபந்த அப்பல சுவாமி, ஸ்ரீஸ்ரீக்கு நண்பராய், மெய்யுணர்வாளராய், வழிகாட்டியாய் விளங்கினார். பூரிபந்தாதான் ஸ்ரீஸ்ரீயை லண்டனுக்கு எடுத்துச் சென்றவர்; அதாவது ஸ்ரீஸ்ரீயின் குரலையும், கையெழுத்துப் படிகளையும் பதிவு செய்து லண்டனுக்கு அனுப்பிவைத்தார்; அவற்றை குடல கிருஷ்ணமூர்த்தி வெளியிட்டார். ஸ்ரீஸ்ரீயும் பூரிபந்தாவும் அரசியல் சித்தாந்தங்களில் வெளிப்படையாகவே எதிராளிகளாக இருந்தார்கள். இருந்த போதிலும், ஸ்ரீஸ்ரீ பூரிபந்தாவின் கவிதைகளை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து வெளியிட்டும், இறுதிக்காலம் வரை பூரிபந்தாவுக்கு நண்பராகவும், ஆர்வலராகவும் இருந்து தனது நன்றியுணர்ச்சியைப் புலப்படுத்திக் காட்டினார். பூரிபந்தா காந்தியவாதியாகவும், ஒரு காங்கிரஸ்காரராகவுமே வாழ்ந்து இறந்தார். மார்க்சியம், சோஷலிசம் ஆகிய கொள்கைகளைக் கேள்விப்பட்ட அந்த நேரத்திலிருந்தே ஸ்ரீஸ்ரீ ‘நிறுவனச் செல்வாக்கு’ என்பதை எதிர்ப்பவராக ஆகிவிட்டார். அரசியல் வேறுபாடு காரணமாக, பூரிபந்தா - ஸ்ரீஸ்ரீ இருவருக்கும் இடையே இருந்த உறவு எப்போதும் தேய்மானம் அடைந்துவிட வில்லை. பூரிபந்தா மதுவை அறவே விலக்கியவர்; எந்தவிதக் குறைபாடுகளும் இல்லாதவர்; ஆனால், ஸ்ரீஸ்ரீயோ, அத்தனை குறைபாடுகளும் உடையவர்; பூரிபந்தா இந்தக் குறைபாடுகளை எப்போதும் மன்னித்ததே இல்லை. புரட்சிக் கவிஞரான நஸ்ருல் இஸ்லாம், புதுமைக் கவிஞரும், இசைக் கவிஞரும் நாடக ஆசிரியருமான ஹரீந்திரநாத் சட்டோபாத்யாயா, விசாகையில் கம்யூனிஸ்டுக் கட்சியின் கிளையைத் தோற்றுவித்த அபூரி முதலியோரை ஸ்ரீஸ்ரீக்கு, பூரிபந்தாதான் அறிமுகம் செய்து வைத்தார். காந்தியக் கொள்கைக்குத் தன்னை அர்ப்பணித்துக் கொண்டவரும், பெரிய எழுத்தாளருமாகிய பூரிபந்தா, எதையும் எளிதில் ஏற்றுக் கொள்ளுகிற, புதியது எதுவானாலும் மிக எளிமையாக ஈர்க்கப்படக் கூடிய, வாழ்க்கை முறையை எளிமையாக மாற்றிக் கொள்ளக் கூடிய சிறுவயதுப் பையனுக்கு இவ்வாறெல்லாம் அறிமுகம் செய்திருக்கக் கூடாதுதான்; என்றாலும் அதற்காக பூரிபந்தா வருத்தப்பட்டதில்லை. ஸ்ரீஸ்ரீ தனது பங்காக, தன்னுணர்ச்சிப் படைப்பு என்னும் உயரத்திலிருந்து, வசன கவிதை என்ற நிலைக்கும், காப்பியங்களைப் பிரபல்யப்படுத்துதல் என்ற நிலைக்கும் பூரிபந்தாவைக் கீழே கொண்டு வந்தார். கவிதைக்காக அல்லாமல், உயிர்த்துடிப்பு மிகுந்த வசனத்தில் அமைந்த

அவருடைய 'மகாபாரதம்' என்னும் படைப்பினால்தான் பூரிபந்தா மிகுந்த புகழ்பெற்றார். சகிப்புத் தன்மையும், பரஸ்பர மரியாதைக் குணமும் ஆகிய பண்புகளே இவர்கள் இருவரையும் நெருக்கமாகக் கொண்டு சேர்த்திருந்தன. சமகாலத்திய எழுத்தாளர்கள் குறித்து ஸ்ரீஸ்ரீ மிகவும் கடுமையான குறிப்புக்களைச் சொல்லியுள்ளார் என்று முன் அத்தியாயங்களில் பார்த்திருக்கிறோம்; ஆனால், பூரிபந்தா அல்லது அபூரி முதலியோருக்கு எதிராக ஸ்ரீஸ்ரீ எதுவும் சொன்னதில்லை. ஸ்ரீஸ்ரீ மிகவும் உணர்ச்சி வசப்படுபவர்; குழந்தைப் பருவ நண்பர்கள், சிறுபையனாய்ச் சுற்றியலைந்த இடங்கள் ஆகியவற்றை நினைத்து நினைத்து நாட்டம் கொள்பவர். 'அனந்தம்' என்னும் அவருடைய படைப்பிலும் வேறு பிற இடங்களிலும், ஸ்ரீஸ்ரீ விவரிக்கும் அவருடைய அன்பிற்கினிய நினைவலைகள் இத்தகைய அவர்தம் குணச்சித்திரத்தை உறுதிப்படுத்துவனவாகவே உள்ளன. இவற்றின் அடிப்படையில் பார்த்தால், நாராயண பாபு, ஆருத்ரா முதலியோர் குறித்து (வாழ்வின் கடைசிக் காலத்தில் ரோனன்கி, அப்பலசுவாமி மீதும் கூட) ஸ்ரீஸ்ரீ விடுத்த மட்டுமீறிய கருத்துக்கள் எதைக் காட்டுகின்றன என்றால், ''தான் வஞ்சிக்கப்பட்டோம், தாழ்த்தப்பட்டோம், மிக மோசமாகத் தாக்கப்பட்டோம்'' என்ற உணர்வில் ஸ்ரீஸ்ரீ இருந்தார் என்பதையே எடுத்துக் காட்டுகின்றன எனலாம். ஸ்ரீஸ்ரீ விடுத்த கடுமையான சொற் பிரயோகங்கள் எல்லாம் திருப்பித் தாக்குதல், திருப்பிப் பதிலளித்தல் அல்லது இதுபோன்ற வேறு ஒரு சூழ்நிலையில் சொல்லப்பட்ட கடுமையான விமர்சனங் களே அல்லாமல், கெட்ட எண்ணங்களால் விடுக்கப்பட்டவை அல்ல.

குழந்தைப் பருவ வாழ்க்கை ஸ்ரீஸ்ரீக்கு மிகவும் நன்றாக நினைவில் இருந்தது. ஸ்ரீஸ்ரீ சுவர்களிலெல்லாம் படங்கள் கிறுக்கிப் பாழடிக்கும் அளவுக்கு அவரது தந்தை சுதந்திரம் கொடுத்திருந்தார். தந்தை ஆசிரியராகவும் இருந்ததால், அவர் ஸ்ரீஸ்ரீக்கு ஒரு கரும்பலகை யும், தேய்ப்புப் பஞ்சு வைத்த 'டஸ்டரும்' கொடுத்து, ஸ்ரீஸ்ரீ தனது கருத்துக்களையெல்லாம் எழுதி வெளியிடுவதற்கு அனுமதி தந்திருந்தார். பெரும்பாலான பெற்றோர்கள் செய்வதற்கு முன்வராத ஓர் அருமையான ஏற்பாடு இது! சக ஆசிரியரின் மகனான ஸ்ரீஸ்ரீயைப் பிற ஆசிரியர்களும் மிகவும் சீராட்டிக் கொண்டனர்; விளையாட்டுப் போக்கிலேயே ஸ்ரீஸ்ரீக்குப் பல விஷயங்களைக் கற்றுக் கொடுத்தனர். சிறுபையன் ஸ்ரீஸ்ரீ அப்படித்தான் இலக்கணப் பாடத்தின் அடிப்படைகளைக் கற்றறிந்தான். ஸ்ரீஸ்ரீயின் வியத்தகு குழந்தைப் பருவம், அதனுடைய எட்டு வயது இளம் பருவத்திலேயே, யாப்பிலக்கணத்தோடு விளையாட ஆரம்பித்து, கவிதைக் கலையில் ஒரு பக்குவத்தையும் பெற்றுவிட்டது. இளைய நடிகர்களோடு பழகுவதற்கும், பள்ளி நாடகங்களில் சிறிய சிறிய பாத்திரங்கள் ஏற்று

நடிக்கவும் ஸ்ரீஸ்ரீ அனுமதிக்கப்பட்டார். அநதக் காலத்தில் பெரும் பாலான குழந்தைகளுக்குக் கிடைத்திராத அரிய வாய்ப்பு இது! இளைய நடிகராக இருந்தாலும் சரி, அன்றைய சமூதாயத்தில் அந்த நாட்களில் நடிகர் ஒருவர் சாதியிலிருந்து விலக்கி வைக்கப்பட்ட வராகவே கருதப்பட்டார். காந்தியடிகள் கைது செய்யப்பட்டதற்கு எதிர்ப்புத் தெரிவித்து, மாணவர்கள் செய்த வேலை நிறுத்தத்தில் ஸ்ரீஸ்ரீயும் பிற மாணவர்களுடன் சேர்ந்து பங்கேற்றபோது, ஸ்ரீஸ்ரீயின் தந்தை இதை அறிந்து, உடனடியாய் மகனுக்கு இரண்டு உள்ளங்கைகளிலும் நல்ல பிரம்படி கொடுத்தார்; ஆனால் அன்று மாலையே அவருக்குக் கோபமெல்லாம் தணிந்து விட்டது; மகனை அழைத்து ஓர் 'ஒரு ரூபாய்' நாணயத்தைப் பரிசாகக் கொடுத்தார். இந்த நூற்றாண்டின் இருபதுகளின்போது 'ஒரு ரூபாய் நாணயம்' என்பது மிகப் பெரிய பரிசு ஆகும். சமஸ்கிருதத்தின் தொடக்கக் கல்விக்காக, கேதவரப்பு வெங்கட சாஸ்திரியிடம் பையன் ஸ்ரீஸ்ரீயை அனுப்பினார்கள். அவரிடம் 'சப்த மஞ்சரி' அளவில் சமஸ்கிருதக் கல்வியை முடித்துக் கொண்ட ஸ்ரீஸ்ரீ, பிறகு படிப்பை நிறுத்திக் கொண்டு விட்டான். அதற்காக அவன் மன்னிக்கப்பட்டான். தனது சுயசரிதையான 'அனந்தம்' நூலில் ஸ்ரீஸ்ரீ தன்னுடைய சமஸ்கிருத அறிவு அந்த அளவிலேயே நின்றுவிட்டது என்று குறிப்பிட்டி ருந்தாலும், அவ்வாறு அவர் குறிப்பிட்டது தன்னடக்கம் காரணமாக இருக்கலாம்; அல்லது அறிவாளிகளின் தாக்குதலிலிருந்து தன்னைப் பாதுகாத்துக் கொள்ளுவதற்காகவும் இருக்கலாம்! விதிவிலக்காகச் சில நிகழ்ச்சிகளை விட்டு விட்டுப் பார்த்தால், பல்பொருள் குறித்த, மிக நீளமான சமஸ்கிருதப் படைப்புக்களை அவர் படைத்துள்ள முறையைப் பார்க்கும்போது, அவருடைய சமஸ்கிருதமொழி அறிவாற்றலை, மொழியின் மீதான ஆளுமையைச் சந்தேகப்படு வதற்குச் சிறிதும் இடமில்லை என்பது தெரியும். சமஸ்கிருத மொழியின் இலக்கணச் சிக்கல்கள், நுணுக்கங்கள் சிலவற்றை ஸ்ரீஸ்ரீ ஒரு வேளை தெரிந்து கொள்ளாமல் இருந்திருக்கலாம்; இந்த இலக்கணச் சிக்கல், இலக்கணப் பலவீனம் பெரும்பாலான பெரிய எழுத்தாளர்களிடமெல்லாம் இருக்கும் பலவீனம்தானே!

ஸ்ரீஸ்ரீ கேரம், சதுரங்கம், கால்பந்து போன்ற விளையாட்டுக்கள் விளையாடுவார். அவற்றில் வெற்றி பெற்று உள்ளூர் அளவில் பல பதக்கங்களும் பரிசும் பெற்றிருக்கிறார். வறுமை மிகுந்த முப்பது களின் போது, அந்தப் பதக்கங்களையும் பரிசுகளையும் வயிற்றுச் சாப்பாட்டுக்காக விலைக்கு விற்க வேண்டி வந்தது. பரிசுப் பொருள் களையெல்லாம் இழக்க நேர்ந்தது கூட அவரைத் துன்புறுத்த வில்லை; காணற்கரிய பரிசுப் பொருள்களையெல்லாம், அவசரத் தேவைகருதி, காசுகளாக மாற்ற வேண்டி வந்துவிட்டதே என்றுதான்

ஸ்ரீஸ்ரீ மிகவும் கவலைப்பட்டார். இவ்வாறு, பரிசுப் பொருள்களை யெல்லாம், காசுகளாக மாற்றிக் கொண்ட செயல், தான் செய்ய நேர்ந்த "பரத்தமைத் தொழில்" என்று ஸ்ரீஸ்ரீ மனம் நொந்து எழுதினார். இதனால் ஏற்பட்ட புண் ஆறாத வடுவாய் வாழ்நாள் முழுவதும் நின்றது. உயர் நிலைப் பள்ளியில் மாணவர் என்ற பருவத்திலேயே ஸ்ரீஸ்ரீ 'பெரும் வாசிப்புக்காரராக' இருந்தார்; கைக்குக் கிடைத்ததை யெல்லாம் வாசித்து, அதை அப்படியே பசியோடு விழுங்கினார். இந்தத் தீவிரமான வாசிப்புக் காலத்தின் போதுதான், இலக்கியத்தில் அவரைப் பாதித்தவைகளையெல்லாம், மொழி பெயர்க்க வேண்டும் அல்லது தழுவி எழுத வேண்டும் என்ற பேரார்வத்தை ஸ்ரீஸ்ரீ பெற்றார். மொழிபெயர்ப்புச் செய்தல் என்பது அடிக்கடி செய்யும் வழக்கமாகவே அவருக்கு ஆகிவிட்டது. இந்தப் பழக்கம், திரைப்படத் துறையில் பணியாற்றிய பின்னாளில், அவருக்கு, மிகவும் உதவி கரமாக அமைந்தது. ஹரீந்திரநாத் சட்டோபாத்யாயா மற்றும் அவரைப் போன்ற எழுத்தாளர்களின் கருத்துக்களைத் தெலுங்கில் தழுவி எழுதியபோது ஸ்ரீஸ்ரீ வெறும் கல்லூரி மாணவர்தான். விஸ்வநாதா வையும், தேவுலபள்ளியையும் ஸ்ரீஸ்ரீ 'இமிடேட்' செய்து நவீன செவ்வியல் மொழியிலும் அதன் நடையிலும் இலக்கியம் படைக்கத் தொடங்கினார். அதே நேரத்தில், மொழியின் சீர்திருத்தக்காரர் தலைவராக விளங்கிய கிடுகு வெங்கட ராமமூர்த்திக்கு (1862-1940) ஸ்ரீஸ்ரீ ஒரு பக்தராகவும் ஆகியிருந்தார். அதற்கும் கூட ஒரு காரணம் இருந்தது. பூரிபந்தா வாழ்நாள் முழுவதும் இந்தத் துறையில் ஒரு போராட்டக்காரராக இருந்ததால், ஸ்ரீஸ்ரீயும் அவ்வாறு பக்தராக ஆகிவிட்டார் எனலாம். இதற்கு மேலும் சில காரணங்கள் இருந்தன. ஸ்ரீஸ்ரீயின் ஆசிரியர்களுள் ஒருவரும் முதல்வருமான பி.டி. ஸ்ரீனிவாச ஐயங்கார், ஸ்ரீஸ்ரீயினால் பாராட்டப்பட்டவரும் நகைச்சுவை எழுத்தாளருமான செட்டி லட்சுமி நரசிம்மம் ஆகியோருடைய நேரடிப் பங்களிப்பும் இத்துறை யில் இருந்தன. நகைச்சுவை உணர்வு என்பது ஸ்ரீஸ்ரீக்கு கருவிலேயே அமைந்த திருவாக இருந்தது. செட்டி மாஸ்டருவின் தொடர்பு இந்த நகைச்சுவை உணர்வை மேலும் ஊக்கப்படுத்தி வளர்த்தது எனலாம். பின்னாளில் ஆபாசமான கருத்துக்களை ஜனரஞ்சகமாக ஸ்ரீஸ்ரீ கவிதையாக்கம் செய்தது கூட, இந்தத் தொடர்பினால் கால் கொண்டதுதான் எனலாம்.

சென்னையில் வாழ்ந்த நாட்களின்போது, எழுத்தாளர்கள், சாதனையாளர்கள் பலரோடு ஸ்ரீஸ்ரீக்குத் தொடர்பு கிடைத்தது. அவர்கள் அனைவரும் அடிப்படையிலேயே வேறு வேறு குணாம்சம் கொண்டவர்களாக இருந்தனர். ஈடு இணையற்ற அங்கதப் படைப்பாளர் ஜலசூத்ரம் ருக்மிணி நாத சாஸ்திரி ஒரு முனையிலும், தீவிரச் சிந்தனையாளரும் மரபு வழி அறிஞருமான கொம்பல்லெ

ஜனார்த்தனராவ் இன்னொரு முனையிலுமாக இருந்து, சரிசமமான ஈர்ப்புத் தன்மையோடு ஸ்ரீஸ்ரீயைத் தம்பக்கம் ஈர்த்தனர். தெலுங்கு வரலாற்றாசிரியர்கள், கல்வெட்டு அறிஞர்கள் ஆகியோர்களுக்குள் மூத்த அறிஞரான மூல்லம்பள்ளி, தெலுங்கு இலக்கியத்தின் நாட்டுப் புறத் தன்னுணர்ச்சிப் பாடல்களின் தந்தையான நந்தூரி ஆகியோரும் ஸ்ரீஸ்ரீயுடன் தொடர்பு பெற்றிருந்தனர். இவர்களைப் போலவே, இன்னும் பலரும் ஸ்ரீஸ்ரீயின் பால் அக்கறை கொண்டிருந்தனர். இலக்கியத்தின் மீதான தாகத்தின் காரணமாக, ஸ்ரீஸ்ரீயின் மனம் அமைதியின்றி அலைபாய்ந்து கொண்டிருந்தது; அத்தோடு அவர் தன் விஞ்ஞானக் கல்வியையும் தொடர வேண்டியிருந்தது. அவர் படிக்க வேண்டியிருந்த விஞ்ஞானப் பாடம் விலங்கியல் பாடம்; அந்தப் பாடத்தின் மீது அவருக்கு விருப்பமோ, ஆர்வமோ, மரியாதையோ சிறிதும் இல்லை. தனது சுய சரிதையில் இது பற்றிக் குறிப்பிடும்போது, 'விலங்கியல் பாடத்தை' எனக்கு நானே 'கற்பித்துக் கொள்ள நான்' 'கப்பல மாஸ்டராக' (தவளை வாத்தியாராக) ஆக வேண்டியிருந்தது என்று கேலியாகக் குறிப்பிடு கிறார். சென்னையிலிருந்து அவர் திரும்பிவந்தபோது, அவருடைய குடும்பம் கடனில் மூழ்கித் 'திவால்' நிலையை நோக்கிப் போய்க் கொண்டிருப்பதை ஸ்ரீஸ்ரீ கண்டறிந்தார். விசாகப்பட்டினத்தில் இருந்த வீட்டை விற்க வேண்டியதாயிற்று; கூடுதல் வருமானம் வேண்டும் என்பதற்காக உயர்நிலைப் பள்ளி மாணவர்களுக்கு ஆங்கில இலக்கணம் கற்றுக் கொடுக்கும் பணியில் ஸ்ரீஸ்ரீ தன்னை ஈடுபடுத்திக் கொண்டார். வீட்டில், ஸ்ரீஸ்ரீயின் ஆதரவை நம்பி மனைவி இருந்தார். அவரோடு, பணியிலிருந்து ஓய்வு பெற்ற வயதான தந்தையும் இருந்தார். ஸ்ரீஸ்ரீ குறுகுறு நடைபயின்ற பிள்ளைப் பருவத்தின் போதே அவருடைய தாயார் இறந்து விட்டார். அவரது இடத்திற்கு வந்து சேர்ந்த சிற்றன்னையும் காலமாகிவிட்டார். மிகவும் உணர்ச்சி வசப்படும் இயல்புடைய ஸ்ரீஸ்ரீக்கு இவ்விரு நிகழ்ச்சிகளும் கடுமையான அதிர்ச்சி தருவனவாக அமைந்தன. அரசனின் தலைக்கு மேல் தொங்கிக் கொண்டிருக்கும் வாள்போல, ஸ்ரீஸ்ரீயின் தலைக்கு மேல் வறுமை தொங்கிப் பயமுறுத்தியது. போரினால் பாழ்படுத்தப் பட்டிருந்த உலகத்தைப் பொருளாதார அழுத்தம் துன்புறுத்திய நிலைமை, எந்தப் பொருளாதாரத் திட்டத்தையும் மிக இயல்பாகவே அழித்து ஒழிக்க வல்லதும், காலனி ஆதிக்க அரசாங்கம் எதிர்கொள்ள நேர்வதுமான அரசியல் உள் முரண்பாடுகள், குடும்பத்தின் ஒரே ஒரு உறுப்பினர் மட்டும், உடல் உழைப்பால் அல்லாமல், அலுவலகத்தில் வேலை பார்த்து, அதன் மூலம் குடும்பத்து உறுப்பினர்கள் அனைவரும் பிழைப்பு நடத்தி நாசூக்காக வாழ விரும்புகிற ஒரு நடுத்தர வர்க்கக் குடும்பத்தின் பலவீனம் - ஆகிய இவை அனைத்தும் ஸ்ரீஸ்ரீயைத் தொல்லைப்படுத்தின. இதனால் ஸ்ரீஸ்ரீ தெளிவிழந்து குழப்ப

மடைந்தார். ஸ்ரீஸ்ரீயின் ஆரம்பகால வளர்ப்புமுறை, தொடக்க கால வாய்ப்புக்கள் எல்லாம், அவருடைய விருப்பப்படியே செலவு செய்து கொள்ளும் நிலையில் இருந்தன. ஆனால், இப்போதைய அவரது பொருளாதார நிலைமை, ஒரே ஒரு பைசாவைச் சம்பாதிப்பதும் கூட மிகுந்த சிரமமான நிலை என்றாகிவிட்டது. வாழ்க்கையின் அடிப்படை ஆதாரத்திற்குக் கூட ஸ்ரீஸ்ரீ ஒரு வேலையைத் தேடிக் கொண்டுதான் ஆகவேண்டும் என்ற சூழ்நிலை ஆகியது. எனினும் இரண்டு காரணங்களுக்காக அப்படி ஒரு வேலையைத் தேடிக்கொள்ள ஸ்ரீஸ்ரீ விரும்பவில்லை. ஒன்று, ஓரிடத்தில் வேலைக்காரராக அமர்ந்து வேலை செய்வதை ஸ்ரீஸ்ரீ மனத்தளவில் நினைத்துக் கூடப் பார்க்க விரும்பவில்லை. அடுத்து, அவரது மனநிலை வாழ்க்கையின் நிதரிசனங்களோடு சமரசப்பட்டு இணங்கிப் போவதாக இல்லை. ஒரு கவிஞராகவோ அல்லது ஓர் எழுத்தாளராகவோ இலக்கியத் துறையில் இருந்து பணியாற்றித் திறமையால் ஏதேனும் ஒரு திசையிலிருந்து தாராளமாகப் பணம் சம்பாதித்து வாழ்ந்து விட முடியும் என்று விரும்பும் பகல்கனவு காண்பவராக ஸ்ரீஸ்ரீ இருந்தார். அதுதான் ஸ்ரீஸ்ரீ செய்த மிகப்பெரிய தவறாகும். அந்தத் தவற்றின் காரணமாக, அவர் வாழ்நாள் முழுவதும் துன்பப்பட்டார். இந்தியாவின் நிலைமையில் இலக்கியவாதி ஒருவர், அப்படியெல்லாம் வாழ்ந்து விட முடியாது என்பதை கடுமையான அதிர்ச்சி அனுபவங்களைப் பெற்ற பிறகும் கூட, ஸ்ரீஸ்ரீ உணர வில்லை. மகாராஜா ஒருவர் அரசவைக் கவிஞராக ஸ்ரீஸ்ரீயை அமர்த்தியிருந்தாலும், தன் மனநிலையின் காரணமாக, கொள்கையின் காரணமாக, அந்தப் பதவியில் ஸ்ரீஸ்ரீ நிச்சயமாக நீடித்திருக்க மாட்டார். ஸ்ரீஸ்ரீ தொலைநோக்குப் பார்வை இல்லாத தன்னம்பிக்கையாளர். புத்தகங்களுக்குள்ளேயும் கொள்கைக்குள்ளேயுமே அவர் வாழ்ந்து விட்டார். தன்னைச் சுற்றியிருந்த அத்தனை துன்பங்களையும் ஸ்ரீஸ்ரீ பார்த்துக் கொண்டுதான் இருந்தார்; ஆனால் கவிஞன் ஒருவன் கவிஞனாக மட்டுமே இருந்து வாழ்க்கையை வாழ்ந்து காட்ட முடியாது என்பதை அவரால் நம்ப முடியவில்லை. எழுதுவது என்பது எப்போதாவது சில வேளைகளில் செய்யும் பணியாகத்தான் இருக்க முடியுமே தவிர, பணம் ஈட்டுவதற்குரிய ஒரு வழியாக அது இருக்க முடியாது. சென்னை அல்லது டெல்லி அல்லது லக்னோ அல்லது அவரது சொந்த ஊரான விசாகை ஆகிய எந்த ஊரில் அவர் பதவியில் நியமிக்கப்பட்ட போதிலும் அந்தப் பதவியிலிருந்து நீக்கப்படும் வரை ஸ்ரீஸ்ரீ அமைதியில்லாமலே இருந்தார்; நீக்கப்படு வாரேயானால், அதன் பிறகு நீக்கப்பட்டது கருதி அமைதியில்லாமல் இருந்தார். இவ்வாறாக 'அமைதியின்மை' என்ற நிலை அவருக்குத் தொடர்ந்து இருந்து வந்தது. லக்னோவில், இராணுவப் படைப்

பிரிவில் இருந்தபோது, ஒருவர் ஸ்ரீஸ்ரீக்கு சாராயத்தை, மலேரியாவைக் குணப்படுத்தும் மருந்து என்று சொல்லி அறிமுகப்படுத்தி விட்டார். அதன்பிறகு ஸ்ரீஸ்ரீ பல நேரங்களில் அது 'மருந்துதான்' என்று உறுதிப் படுத்தலானார்.

தனது வாழ்நாளை வெற்றிகரமாக நடத்துவதற்காக, கடுமையான மொழிநடையைப் பயன்படுத்தி எதையும் எடுத்துச் சொல்லும் ஆற்றலை மட்டுமே ஸ்ரீஸ்ரீ பெற்றிருந்தார். பலநூறு சந்தர்ப்பங்களில் மிகச்சிறிய அற்பமான தொகைக்காகவும் கூட அவர் ஏதாவது எழுதினார். கையில் இருக்கும் தொகை செலவழிந்து முடிகிற வரைக்கும் ஸ்ரீஸ்ரீ ஒரு மகாராஜாவைப் போலவே வாழ்வார். துன்பம் வரும்போது யாருக்கும் தெரியாமல் மிக அமைதியாக இருந்து விடுவார்; வாழ்க்கைப் போராட்டத்துடன் நகராட்சிக் குழாய்த் தண்ணீரை மட்டுமே அருந்திக் கொள்வார்; தரையில் புரண்டு கிடப்பார்; யாராவது நண்பர் ஒருவர் வலிய வந்து, வற்புறுத்தி இணங்கச் செய்து, உதவி செய்து, சிரமத்திலிருந்து விடுவிப்பது வரைக்கும் ஸ்ரீஸ்ரீ இப்படித்தான் கிடப்பார். அடுத்துவரும் நிமிடத்தில் தனக்கு என்ன தேவைப்படும் என்றெல்லாம் கவலைப்படாமல், எந்த நேரத்தில், எவ்வளவு சிறிய தொகை கையில் இருந்தாலும் அதை உடனே யாருக்காவது பகிர்ந்து கொடுத்து விடுவது என்னும் விசித்திரமான பழக்கத்தை ஸ்ரீஸ்ரீ வளர்த்துக் கொண்டிருந்தார். ஸ்ரீஸ்ரீ தன்னிரக்கத்தால் அடிக்கடி நகைச்சுவையாய்ப் பின் வருமாறு சொல்லிக் கொள்வார்: ''இது ஒரு பிச்சைக்காரனின் சிறப்புரிமை''. ''ஒரு பிச்சைக்காரன் மட்டும் தானே இன்னொரு பிச்சைக்காரனின் பிரச்னைகளை அறிய முடியும்'' இந்தப் பழக்கத்தின் விளைவாக, ஆயிரக்கணக்கான நண்பர்களுக்கும், தொடர்பு உடையவர்களுக்கும், ஏன், போய்வரும் வழிப் போக்கர்களுக்கும் கூட, ஸ்ரீஸ்ரீ தன்னைப் பிரியமுள்ளவராக ஆக்கிக் கொண்டுவிட்டார். உண்மையிலேயே, சார்லிசாப்ளின் வழியில் இடுக்கண் வரும்போது சிரித்து வாழும் வகையை ஸ்ரீஸ்ரீ உருவாக்கிக் கொண்டார். கொஞ்சம் கூட வெட்க உணர்ச்சி இல்லாமல், யாராக இருந்தாலும் அவரிடம் ஸ்ரீஸ்ரீ கடன் வாங்குவார். அப்படிக் கடன் வாங்குவதில் ஒரு 'கொள்கை'யை அவர் கடைப்பிடித்து வந்தார். அதாவது, தனது தேவைக்குமேல் ஒரு தூசு கூட அதிகமாகக் கடன் வாங்குவதில்லை என்னும் 'கொள்கை'. அவர்மீது நல்லெண்ணம் கொண்டவர்கள், தன்னார்வத் தொண்டர்கள், அவர் கேட்பதற்கு மேல் ஆயிரம் மடங்கு அதிகம் அளிப்பதற்கு முன்வரும் நேரத்திலும் கூட ஸ்ரீஸ்ரீ தனது 'கடன் கொள்கை'யிலிருந்து மாறமாட்டார்; தன்னுடைய தேவைக்கு மேல் வாங்க மறுத்துவிடுவார். ஸ்ரீஸ்ரீ துன்பம்தான் பட்டார்; ஆனால், நிஜாம் மன்னரைப் பாராட்டி எழுதி, அதற்குக் கைம்மாறாக எதையும் நிஜாம்

அரசிடமிருந்து பெற்றுக் கொள்ள ஸ்ரீஸ்ரீ இசையவில்லை. அந்த நாட்களில் ஸ்ரீஸ்ரீ செய்தது எல்லாம் ஆயுதம் தாங்கி நடந்த நிஜாம் எதிர்ப்புப் புரட்சியை, எதிர்த்து ஒரு வரி கூட எழுதாமல், தனக்குத்தானே சமரசம் செய்து கொண்டதுதான்! அப்போது ஸ்ரீஸ்ரீ கொடிய, இக்கட்டான வறுமை நிலையில் இருந்தார்; இறுதியில் நிஜாம் அரசின் பதவியிலிருந்தும் ஸ்ரீஸ்ரீ விலகிக் கொள்ளும்படி ஆயிற்று.

திரைப்படத் துறைக்குள் நுழைந்ததற்குப் பிறகு ஸ்ரீஸ்ரீ பணம் ஈட்டத் தொடங்கினார்; வீடு கட்டினார்; ஒரு காரும் வாங்கினார். வளமான வாழ்வுக்காலம் என்று சொல்லப்பட்ட அந்தக் காலம் முழுவதிலும், முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் இலக்கியப் பத்திரிகையான 'அப்யுதய' இதழுக்குப் பொருளாதார ஆதரவளித்து வந்தார்; நண்பர்களுக்கு உதவினார்; தன்னுடைய படைப்புக்களை வெளியிட்டார். வயதான காலத்தில் ஸ்ரீஸ்ரீக்கு மீண்டும் துன்பம் வந்தது. துன்பம் வந்த அந்த நேரத்தில் உடலும் நோயுற்றது. கடன்களைத் தீர்க்க முடியாத காரணத்தால், வீடு ஏலத்திற்கு வந்து விட்டது! தன்னுடைய வருவாயின் அளவறிந்து வாழாத வாழ்க்கையினால், வாழ்க்கை உள்ளது போலக் கெட்டது; அந்தத் துன்பத்தை அவர் அனுபவிக்க வேண்டியதாயிற்று! இக்கட்டான இந்த சந்தர்ப்பத்தில் ஸ்ரீஸ்ரீயின் நண்பர்கள், ஆர்வலர்கள் முன்வந்து, நன்கொடை திரட்டினார்கள். சட்டரீதியான சிக்கல்களில் ஸ்ரீஸ்ரீக்காகப் போராடினார்கள்; ஸ்ரீஸ்ரீயைக் கடன் பிடியிலிருந்து மீட்டெடுத்தார்கள். இந்தியாவில் ஆயுதம் தாங்கிய புரட்சி வெற்றி பெறப் போவதைத் தன் கண்களால் காண்பதற்காகவே தான் உயிர் வாழ்வதாகவும், ஸ்ரீஸ்ரீ பிரகடனம் செய்து, தன்னை நக்சல்பாரி இயக்கத்துடன் இணைத்துக் கொண்ட நேரத்தில் இவையெல்லாம் நிகழ்ந்தன. ஸ்ரீகாகுலம் மாவட்டத்தில், புரட்சிகர இயக்கத் தலைவர் தரிமல நாகிரெட்டியுடன் சேர்ந்து மிக விரிவான சுற்றுப் பயணம் ஒன்றைச் செய்த பிறகு நிகழ்ந்தன. ஆனாலும் ஸ்ரீஸ்ரீக்குக் கட்சி இவ்வாறு முன்வந்து உதவி செய்யவில்லை. திரைப்படத் துறையில் யார்யாரையெல்லாம் அடிக்கடி முதலாளிகள் என்றோ குட்டி பூர்ஷ்வாக்கள் என்றோ ஸ்ரீஸ்ரீ அழைத்து வந்தாரோ, அந்த ஆர்வலர்களும், யாரை இழிவு படுத்தி அவமதித்தாரோ அவர்களும் சேர்ந்து இந்த உதவியை ஸ்ரீஸ்ரீக்குச் செய்தார்கள். இது எதைக் காட்டுகிறது? ஸ்ரீஸ்ரீயின் தனிப்பட்ட செல்வாக்கும் கவர்ச்சியும் அந்த அளவுக்கு இருந்தன என்பதையே காட்டுகிறது. ஸ்ரீஸ்ரீ எந்தத் தனிப்பட்ட நபராலும் வெறுக்கப்பட வில்லை; அன்பு காட்டப்பட்டார், பாராட்டப்பட்டார் என்பதையும் எடுத்துக் காட்டுகிறது. ஆயிரத்துத் தொள்ளாயிரத்து முப்பதுகளின் போது, ஸ்ரீஸ்ரீ தனது 'நீண்ட பயணம்' நூலை எழுதிய போது, 'மார்க்சியம்' என்னும் சொல் தீண்டத்தகாததாகத் தள்ளி வைக்கப்

பட்டிருந்த சொல்லாகவே இருந்தது. ஏன், சோஷலிஸம் என்னும் வார்த்தையும் அப்படித்தான் அருவருப்பான சொல்லாகவே கருதப் பட்டது. இங்கு மட்டுமல்லாது உலகம் முழுவதும் இதே நிலைதான். பிறகுதான், காலப்போக்கில், இந்த வார்த்தைகள் நடைமுறைப் புழக்கத்திற்கு வந்தன. ஸ்ரீஸ்ரீயின் கவிதைத் தொகுதிகள், வசதிமிக்க குடும்பங்களின் அலமாரிகளில் காட்சிப் பொருளாக வைக்கப்பட்டது போல, இந்த வார்த்தைகளும் புழக்கத்திற்கு வந்தன. ஸ்ரீஸ்ரீயிலிருந்து மேற்கொள் காட்டுவது சமுதாயத்தில் அன்றாட நிகழ்ச்சியாகி விட்டது. எந்த ஒரு நபரும் ஸ்ரீஸ்ரீக்கு எதிராகத் தனது சுண்டு விரலைக் கூட அசைக்க முடியாத அளவுக்கு ஸ்ரீஸ்ரீயின் புகழ் அளவு கடந்து வளர்ந்து விட்டது. ஸ்ரீஸ்ரீயின் தோல்விகளைக் கூட யாரும் சுட்டிக் காட்டி மீண்டு விட முடியாது என்ற அளவுக்கு அவருடைய புகழ் வளர்ந்தோங்கியிருந்தது. எந்த வர்க்கத்தைச் சேர்ந்தவர் என்ற வேறுபாடுகளையெல்லாம் கடந்து, இளைய தலைமுறையின் இளைஞர்களிடமிருந்தும் ஸ்ரீஸ்ரீக்கு மிகுந்த புகழ் கூடியிருந்தது. ஸ்ரீஸ்ரீக்கு இத்தகைய புகழ்பூத்த சூழ்நிலை உருவாவதற்கான முக்கியக் காரணம் ஒரு புதிய கருத்துடன், வடிவம் எதுவாக இருந்தாலும், ஒரு புதிய விளக்கத்துடன் கூடிய ஒரு கவிதையுடன், ஒருவர் வந்து விட்டால், அவர் எந்தத் திசையிலிருந்து வந்தவராக இருந்தாலும், அவரை ஸ்ரீஸ்ரீக்குப் பிடிக்கிறதோ பிடிக்கவில்லையோ எந்தவிதத் தயக்கமும் இல்லாமல், மனம் திறந்து, ஸ்ரீஸ்ரீ எப்போதும் வரவேற்பவராக இருந்தார் என்பதே ஆகும். இந்த வகையில் ஸ்ரீஸ்ரீ கொண்டிருந்த 'சகிப்புத் தன்மை' தனிச்சிறப்புக்கு உரியதாகும். இது அவரிடமிருந்த- வேரூன்றியிருந்த, ஓர் ஆற்றலாகவே விளங்கியது. அறிவு ஜீவிகளோடும், மக்கள் கூட்டத்தோடும், அவரைப் பற்றியோ அல்லது அவருடைய கவிதையைப் பற்றியோ தெரிந்து கொண்டிருந்த தனியொரு நபரோடும், ஸ்ரீஸ்ரீ ஆழமான, உணர்ச்சிமயமான ஆன்ம அளவிலான நேயம் கொண்டிருந்தார். ஸ்ரீஸ்ரீயின் இலக்கியத் தளத்துப் பகைவர்களும் கூட இதை ஒப்புக் கொள்ள வேண்டியவர் களாகவே இருந்தார்கள்; அதன்படி கடைப்பிடித்து வாழ வேண்டிய வர்களாகவும் இருந்தார்கள். இதுதான் ஸ்ரீஸ்ரீ பெற்றிருந்த ''ஆளுமைத் திறம்'' என்பது.

மன ஓட்டத்தின் பாற்பட்டு, ஒரு குறிப்பிட்ட விஷயத்தின் பாற்பட்டு, திடீரென்று உணர்ச்சிக்கு ஆளாகி, ஸ்ரீஸ்ரீ பல கருத்துக் களைக் கூறிவிடுவது உண்டு. அவற்றில் பல முரண்பாடுகளைக் கொண்டவையாக இருககும். அத்தகைய முரண்பாடுகள் பலவற்றுக்கு அவர் விளக்கங்கள் சொல்வதும் உண்டு. அவ்வாறு விளக்கங்கள் சொல்லி நியாயப்படுத்த இயலாத நேரங்களில், ஒரு சிறு குழந்தையைப் போல், அது தன்னுடைய அறியாமை என்று ஒப்புக்

கொண்டு பேசுவார்; அல்லது சில நேரங்களில் அது தன்னுடைய 'இயல்பான கோமாளிக் குணம்' என்று சொல்லிவிடுவார். ஆனால், உண்மையில் அவர் ஒரு வெறும் சாதாரணமான 'ஜோக்கர்' பேர்வழி அல்ல. கவனமாக ஆய்வு செய்து பார்த்தால், ஒருவர் ஸ்ரீஸ்ரீயின் கோமாளித் தனத்தை பாசாவின் 'அவிமாரகம்' படைப்பில் வரும் பாத்திரத்தோடு இணைத்து வைத்து அறிய முடியும்.

''கோஸ்திசு ஹாஸ்ய சமரேசு யோதா
சோகே குரு சாகசிகா பரேஷு।
மஹோத்ஸவேமே ஹ்ருதி கிம் பிரலாபை
த்வீதா விபாக்தம் கலுமே சரீரம்'' ॥

அவிமாரகா, தனது அரசவை விதூஷகனின் பண்புகளைப் பின்வருமாறு விவரிக்கிறார். அந்தக் கோமாளி சம்பாஷணையில் வேடிக்கையாகப் பேசக் கூடியவன்; போர்க்களத்தில் படைவீரனாக இருப்பான்; துயர்ப்படும் நேரங்களில் ஆறுதல் அளிப்பவன்; மாற்றாரைச் சந்திக்கும்போது தைரியசாலியாக விளங்குபவன்; விழாக் காலங்களின்போது, தனது உடம்பு இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கப் படுவதாகவும் அதன் ஒரு பகுதி கோமாளிக்கு பகிர்ந்தளிக்கப் படுவதாகவும் அவிமாரகா உணர்ந்தார். ஸ்ரீஸ்ரீ எப்போதும் ஓய்வின்றிப் பேசிக் கொண்டிருக்கும் சம்பாஷணைக்காரர். 1955 தேர்தலின் போது, ஸ்ரீஸ்ரீயின் போராடும் ஆற்றல் மிக உச்சத்தில் இருந்தது. தேர்தலில் தனது முன்னாள் சீடர்கள் அவர்களுடைய அரசியல் ஆதரவாளர்கள் அனைவரையும் கிட்டத்தட்ட தன்னந் தனியாய் நின்று ஸ்ரீஸ்ரீ எதிர்த்துப் போட்டியிட்டார். ஸ்ரீஸ்ரீக்குப் பின்னணிப் படையாய் நர்ல சிரஞ்சீவி மட்டுமே இருந்து செயல் பட்டார். தேர்தல் போட்டி என்பதால் சண்டை வார்த்தைப் பிரயோக அளவில்தான் என்றாலும் போட்டி மிகவும் கடுமையாக இருந்தது. ஸ்ரீஸ்ரீ போட்டியில் தோற்றுத்தான் போனார்; ஆனால் புகழின் உச்சியில் இருந்தார்; துயரத்தில் இருந்த எத்தனையோ பல நண்பர்களுக்கு ஆறுதல் சொன்னார்; தானும் ஆறுதல் பட்டுக் கொண்டார்; ஸ்ரீஸ்ரீமனம் தளர்ந்து விடவில்லை; தனது வேடிக்கைப் பேச்சையும் இழந்துவிடவில்லை.

ஆண்டுகள் கழிந்தன; ஸ்ரீஸ்ரீக்கு முதுமை வந்தது; இந்த நிலையில் ஸ்ரீஸ்ரீ மிகவும் சினம் கொள்பவர் ஆனார். யார் யாரெல்லாம் ஸ்ரீஸ்ரீயின் ஆதரவைப் பெற்றார்களோ, அவர்கள் திட்டமிட்டு ஸ்ரீஸ்ரீயை இழிவுபடுத்திய நேரத்திலும், வாழ்க்கையின் வெற்றி ஏணியில் மேலே ஏறி நின்று, பொருளாதார நிலையில் மிகவும் வசதியான இடத்தில் இருந்து கொண்டு, ஸ்ரீஸ்ரீயை ஒரு மாதிரியாகப்

பார்த்த நேரத்திலும், ஸ்ரீஸ்ரீ சீற்றம் அடைந்தார். அவர்களுக்குப் பதில் சொல்லி அவர்களை வசை பாடுவதற்காக ஸ்ரீஸ்ரீ ஒரு படி கீழே இறங்கினார். அவ்வாறு இறங்கி அவர் பாடிய வசைகள் எல்லாம் ஒரு வகையில் கலை வடிவங்களாகவே இருந்தன என்று அவரே கருதினார். என்றாலும், அந்த வசைப் பாடல்களில், ஸ்ரீஸ்ரீக்கு இருந்த யாப்பின் மீதான இறுக்கம் தளர்ந்துதான் போயிற்று; மொழியின் மீதான அவருக்கிருந்த ஆளுமையும் தளர்ந்துதான் போயிற்று. சமாதானமான அமைதி நேரங்களில் தான், வழக்கமான அசல் ஸ்ரீஸ்ரீயாக அவர் இருந்தார்; அவரது அறிவாற்றல் சிற்சில நேரங்களில் மட்டுமே வெளிப்படும் நிலைக்கு வந்துவிட்டது. இந்த நிலைமாற்றத்துக்குக் குறைந்தது இரண்டு தெளிவான காரணங்கள் இருந்தன. 'விரசம்' அமைப்பின் நிறுவனத் தலைவராக அவர் ஆன பிறகு, கோஷங்களை உருவாக்கித் தருதல் என்பது ஒரு வெறி உணர்ச்சியாகவே அவரிடம் அமைந்துவிட்டது. அதே நேரத்தில், 'விரசம்' அமைப்பில் இருந்த பிற தோழர்கள் ஆயுதம் தாங்கிகளாக இருந்தார்கள்; ஆழமான அரசியல் அர்ப்பணிப்புக் கொண்டவர்களாக இருந்தார்கள்; ஆயுதம் தாங்கிய புரட்சியில் முழு நம்பிக்கை கொண்டவர்களாகவும் இருந்தார்கள். ஸ்ரீஸ்ரீயின் மார்க்சிய ஞானம் ஆழமற்றதாய் இருந்தது. துப்பாக்கி முனை வழியே அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றுதல் என்பது ஸ்ரீஸ்ரீயைப் பொறுத்தவரையில் ஒரு கோஷம் என்பதாகவே இருந்தது. ஸ்ரீஸ்ரீ அமைப்புக்குரிய ஓர் உரிமைப் பொருள் என்ற அளவிலேயே அமைப்பு அவரை வைத்திருந்தது. அவரது சிந்தனை உரிமை கட்டுப்படுத்தப்பட்டிருந்தது. கவிதையாக்கத்திற்குப் பின்பற்ற வேண்டுமென்று, ஸ்ரீஸ்ரீ அதுவரையிலும் நினைத்தும் பார்த்திராத, மதித்தும் இராத, சில கடுமையான விதி முறைகளையும், கட்டளைகளையும் அவர் அங்கே பயன்படுத்த வேண்டியிருந்தது. இந்த நிலை, இயல்பாகவே அவருடைய கவிதைப் படைப்புரிமையை வெட்டிக் குறைப்பதாகவே இருந்தது; அவருடைய நடையழகை முடமாக்கியது. இரண்டாவதாக, கவிதைச் சொல்லாட்சியிலும், கவிதைக் கட்டுமானத்திலும் கூட, தான் முன்னர் பின்பற்றி வந்த அணுகு முறையிலிருந்து மாறுபட்டு, ஒரு வித்தியாசமான அணுகு முறையைப் பின்பற்ற வேண்டியவராக ஸ்ரீஸ்ரீ இருந்தார். இளைய கவிஞர்கள் தமது இலக்கியக் களத்தில் ஆற்றியிருந்த செயல் பாடுகளிலிருந்து ஸ்ரீஸ்ரீ ஒரு விஷயத்தைப் புரிந்து கொண்டிருந்தார்; அல்லது அந்த விஷயத்தை நோக்கி ஈர்க்கப்பட்டார். இவ்வாறு புரிந்து ஈர்க்கப்பட்ட ஸ்ரீஸ்ரீ, தனது மனத்தை மாற்றிக் கொண்டு, ஒரு நம்பிக்கைக்கு வந்தார். அதாவது கவிதையின் மொழியும் நடையும், ஸ்ரீஸ்ரீ இதுவரை பழகி வந்திருந்த, இதுவரை கருதி வந்திருந்த

நிலையிலிருந்து வெகுவாக மாறி எளிமைப்பட்டாக வேண்டும்; அவருடைய கருத்துக்களும் கொள்கைகளும் கல்வி அறிவில்லாத மக்களுக்கும் சென்றடைய வேண்டும் என்றால், இந்த மாற்றம் கவிதையில் நிகழ வேண்டும் என்று ஸ்ரீஸ்ரீ ஒரு நம்பிக்கைக்கு வந்தார். ஒரு நேர்முகப் பேட்டியின் போது, உண்மையாகவே தனது குற்றத்தை ஒப்புக் கொண்டு பேசினார் ஸ்ரீஸ்ரீ. தனது கவிதை, மக்கள் தொகையில் எழுபது சதவிகிதம் பேர்களைச் சென்று சேரவில்லை என்று சொன்னார். எனவே இப்போதிருந்து, தனது கவிதை பாட்டாளி மக்களின் பேச்சு நடையிலும், நாட்டுப் புற இலக்கிய வடிவங்களிலும் அமைய வேண்டும் என்றும் ஒப்புக் கொண்டார். ஆனால், இந்தப் புதிய எல்லைகளில் ஸ்ரீஸ்ரீ செய்து பார்த்த பரிசோதனைகள் தோல்வியடைந்தன. கட்டர், வங்கபந்து ஆகியோரின் பாடல்களும், கவிதைகளும் அடித்தட்டு மக்களுக்கு உத்வேகம் தரும் இலக்கியமாக இருப்பதால்தான் அவர்கள் இருவரும் சிறந்த கவிஞர்களாக இருக்கிறார்கள் என்பதையும் ஸ்ரீஸ்ரீ ஒப்புக் கொண்டார். ஸ்ரீஸ்ரீயிடம் ஏற்பட்ட இந்த மனமாறுதல், பின்னாளில் அவருடைய கவிதைகளின் உருவத்திலும், உள்ளடக்கத்திலும் பெரிய மாறுதலை ஏற்படுத்தியது. உள்ளார்ந்து உணர்ந்து பார்த்து, தீவிரமான யோசனைக்குப் பிறகு, சிறிது முயற்சி செய்து, ''உத்தி'', ''செய் நேர்த்தி'' என்பவைகளுக்கு விடை கொடுத்து விடுவது என்று ஸ்ரீஸ்ரீ முடிவு செய்துவிட்டார். ஸ்ரீஸ்ரீயைச் சூழ்ந்திருந்த இளைஞர்கள் அவரை 'மகாகவி' என்றே அழைத்தார்கள்; அவரைப் பற்றி விளக்கிச் சொல்லும்போது ''புதுப் பாதை காட்டியவர்'' என்றே விளக்கினார்கள். அடிக்கடியும் தொடர்ந்தும் இவ்வாறு சொல்லப்பட்ட வஞ்சப் புகழ்ச்சி வாக்கு மூலங்கள் காலப் போக்கில் ஸ்ரீஸ்ரீயின் அடிமனத்தின் ஆழத்தில் சென்று தங்கி விட்டன. குரஜாடாவுக்கு மேலே, தான் முன்னேறி விட்டதாகவும், அந்தக் காலக் கட்டம் தன் கைக்குள் இருக்கிறது என்றும் ஸ்ரீஸ்ரீ சொல்லிக் கொள்ளத் தொடங்கினார். ஸ்ரீஸ்ரீ இளைஞராக இருந்தபோது, அவருக்கு மேலைநாட்டுக் கவிதையை அதன் மூல வடிவத்திலேயே அறிமுகம் செய்து வைத்தவரும், பத்தாண்டுகளுக்கு முன்பு வழிகாட்டிகளுள் ஒருவருமாக இருந்தவருமான, ரோணங்கி அப்பல சுவாமியின் கண்டனத்துக்கு ஸ்ரீஸ்ரீ ஆளானார். ஸ்ரீஸ்ரீ அளவுக்கு மீறிய குடிப்பழக்கம் உடையவராக இருக்கிறார் என்பதற்காகவும் எப்போதும் தன்னையே முன்னிலைப் படுத்திக் கொள்கிறார் என்பதற்காகவும் ரோணங்கி ஸ்ரீஸ்ரீயைக் கடிந்து கொண்டார். ரோணங்கிக்கு உடனடியாகப் பதில் சொல்ல நேர்ந்த போது, ஸ்ரீஸ்ரீ மிகவும் இரக்கமின்றி கடுமையாகவே நடந்து கொண்டார். ஆசிரியராகப் பணியாற்றி ஓய்வு பெற்றிருந்த அவரைப் பார்த்து

''நீங்கள் உங்கள் கடைசி நாட்களைப் பள்ளிப் பிள்ளைகளுக்கு ஏதாவது சொல்லிக் கொடுத்துக் கழிக்கலாம், இலக்கிய விஷயங்களை மற்றவர்களுக்கு விட்டுவிடலாம், அவர்கள் விவாதித்து முடிவெடுத்துக் கொள்வார்கள்'' என்று ஸ்ரீஸ்ரீ கேட்டுக் கொண்டார். அவரது வளர்ச்சிப் பயணத்தில், அடிதாவிச் செல்லுகையில், சிறிய விஷயங்களையும், எதிர்க் குற்றச்சாட்டுப் பதில் உரைகளையும் ஏற்றுத் தாங்கிக் கொள்ள இயலாத ஒரு நிலைக்கு ஸ்ரீஸ்ரீ வந்து விட்டதால், அவரது வளர்ச்சியில் ஒரு முனை அடைக்கப்பட்டு விட்ட நிலையை ஸ்ரீஸ்ரீ அடைந்து விட்டார்.

ஸ்ரீஸ்ரீயின் வாழ்க்கையில், இறுதிப் பத்தாண்டுக் காலம் அமைதியில்லாத உலைவுக் காலமாக அமைந்து விட்டது. அதனால் அவர் மிகவும் துன்புற்றார். இதற்குச் சில பிரத்தியேகமான காரணங்கள் இருந்தன. ஸ்ரீஸ்ரீ உடலளவில் மிகவும் பலவீனம் அடைந்துவிட்டார். இயல்பான வளர்ச்சி மாற்றங்களை அவரால் வரவேற்க முடியவில்லை. அவற்றை ஏற்று, அவற்றோடு இணங்கி அவரால் வாழ முடியவில்லை. அவருடைய வருமானம் குறைய லாயிற்று. குடும்பப் பொறுப்புக்கள் வளர்ந்து கொண்டே இருந்தன. ஸ்ரீஸ்ரீயின் இரண்டாவது மனைவி, ஸ்ரீஸ்ரீயை விடவும் முப்பது வயது இளையவர்; ஸ்ரீஸ்ரீக்குப் பிறகு தனக்குப் பாதுகாப்பு இல்லாமல் போய்விடக் கூடுமோ என்ற மனநிலையால் அவர் மிகவும் துன்புற்றார். தனக்கும் தன் குழந்தைக்கும் இந்த உலகியல் வாழ்க்கைக்கு ஆறுதலாக ஏதாவது செய்து தருமாறு வற்புறுத்தினார். மனைவியின் வேண்டுகோளைத் திருப்திப் படுத்தும் நிலையில் ஸ்ரீஸ்ரீ இல்லை; தனது பிரிவுக்குப் பிறகு அவர்களின் பாதுகாப்புக்குரிய உத்தரவாதத்தை அவரால் செய்ய முடியவில்லை. இது எந்த ஒரு குடும்பத்திலும் நிகழக் கூடிய இயற்கையான சூழ்நிலைதான். ஆனால் அது தந்த அழுத்தம், அவரை வாழ்க்கைச் சூழ்நிலை களுக்குள் தள்ளி நிலைகுலைய வைத்துவிட்டது. இந்த நிலையில், இலக்கியத் துறையில், ஸ்ரீஸ்ரீ சம்பந்தப்பட்ட, வேறு ஒரு விநோதமான விஷயம் வளரத் தொடங்கியது. அந்த விஷயம் ஸ்ரீஸ்ரீக்குச் சினம் ஊட்டுவதற்குப் பதிலாக, சிரிப்பைத்தான் ஊட்டியிருக்க வேண்டும். ஸ்ரீஸ்ரீக்குப் பின், அவருடைய சிம்மாசனத்தின் அடுத்த வாரிசாக யார் வருவது என்னும் விஷயம்தான் அது. அரசியல் துறையில் ஜவகர்லால் நேருவுக்குப் பிறகு யார்? அல்லது இந்திரா காந்திக்குப் பிறகு யார்? என்று விவாதிக்கப்பட்டது போலவே, தெலுங்கு இலக்கியத் துறையில், ஸ்ரீஸ்ரீக்குப் பிறகு, 'மகாகவி'யாக வரப்போகிற தகுதி வாய்ந்த வாரிசு யார் என்ற விவாதத்தை இலக்கியவாதிகள் ஆரம்பித்திருந்தனர். பலருடைய பெயர்கள் யோசிக்கப்பட்டன; விவாதத்திற்குப் பிறகு அவை கைவிடப்பட்டன. பலவீனம்

அடைந்துவிட்ட அந்த மூதிய மனிதர், யாரோ ஒருவரை தனது இலக்கிய வாரிசாக நியமனம் செய்ய இருப்பதாக சொல்லியிருப்பதாகவும் அல்லது எழுதியிருப்பதாகவும் சிலர் அடிக்கடி மேற்கோள் காட்டிக் கொண்டிருந்தார்கள். இந்த விஷயங்கள் ஸ்ரீஸ்ரீயை இயல்பாகவே நிலைகுலைய வைத்து விட்டன. ஏன் என்றால், ஸ்ரீஸ்ரீ ஏதோ ஒரு சமயத்தில் யாரோ ஒருவரைத் தனது அடுத்த வாரிசாக அறிவித்தது உண்மைதான்; ஆனால், பிறகு தனது அறிவிப்பை அவரே நீக்கிவிட்டார். நிகழ்கின்ற ஒவ்வொன்றுக்கும் விளக்கம் கொடுத்துக் கொண்டிருக்கும் நிலையிலும் ஸ்ரீஸ்ரீ இல்லை; அல்லது வெற்றிடம் ஒன்றில் யாரோ ஒருவரைப் பிடித்து வைக்கும் மனநிலையிலும் அவர் இல்லை. இலக்கிய உலகம் என்பது யாரோ தனி ஒருவருக்குரிய தனிச் சொத்து அல்ல என்பதையும், அந்த வகையில், அது தனக்குரிய தனிச் சொத்தாக இருக்க முடியாது என்பதையும் ஸ்ரீஸ்ரீ அறிவார். எனவே இப்போது தனக்குரியதாக உள்ள 'கிரீடத்தை' இனிமேல் வரப் போகும் ஒருவனுக்குத் தான் அணிவித்தல் என்னும் பொருத்தமற்ற வேலையைத் தான் செய்ய முடியாது என்பதையும் ஸ்ரீஸ்ரீ அறிவார். வாரிசு உரிமைக்கு, உயிரோடு இருக்கும் பலர் உரிமை கொண்டாடு கிறார்கள்; இவர்கள் அனைவரின் பெயரையும் சொல்லுவது உசிதமாகாது; பொருத்தமும் அற்றது. எல்லாரையும் விட்டுவிட்டு, அவர்களுக்கு எதிராக யாராவது ஒருவரின் பெயரைச் சொன்னாலும் சிக்கல்தான்; சொன்னவர் மீது எதிர்த் தாக்குதலில் இறங்கி விடுவார்கள். ஆனால், அன்றைய இலக்கியவாதிகளின் உள்ளத்தில் நிலவிய, ஸ்ரீஸ்ரீயின் இலக்கிய அதிகாரம் பற்றிய ஆழ்ந்த நம்பிக்கை ஒரு விஷயத்தை உணர்த்தியது. அதாவது: ''தெலுங்கு இலக்கியத்தில் இந்த நூற்றாண்டின் மிகப் பெருங் கவிஞராக ஸ்ரீஸ்ரீ கருதப்பட்டார்; இதற்கு அப்பால் வேறு ஒன்றுமில்லை''

ஸ்ரீஸ்ரீக்குச் சில பற்றுக்கோள்கள் இருந்தன. வாழ்நாள் முழுவதி லும் அவற்றில் ஸ்ரீஸ்ரீ மிகவும் பிடிப்புடன் இருந்தார்; தன்னை, புதிய தலைமுறைக் கவிஞர்களுக்காகத் தோன்றிய 'மீட்பர்' என்று நம்பினார். ஆதலால், தனக்கும் தன் கவிதைக்கும் மட்டுமே தான் கட்டுப்பட்டிருக்க முடியும், வேறு யாருக்கும் எதற்கும் கட்டுப்பட முடியாது என்றும் நம்பினார். தனி ஆந்திர மாநிலம் வேண்டும் என்று நடந்த அரசியல் கிளர்ச்சியை ஸ்ரீஸ்ரீ தன் குழந்தைப் பருவ காலத்தி லிருந்தே நேரில் கண்டவர். ஸ்ரீஸ்ரீ 1910-ஆம் ஆண்டில் பிறந்தவர்; இந்தக் கிளர்ச்சி 1913-ஆம் ஆண்டு, பபட்லா காங்கிரசின் போது தொடங்கியது. எனவே, ஸ்ரீஸ்ரீ அந்தக் கிளர்ச்சியோடு சேர்ந்தே வளர்ந்தார் எனலாம். கம்யூனிஸ்ட் தலைவர் புச்சலபல்லி சுந்தரய்யா 'விசால ஆந்திரா' அல்லது 'அகண்ட ஆந்திரம்' கேட்டபோது

ஸ்ரீஸ்ரீயும் அவரோடு சேர்ந்து கொண்டார். 1956-இல் விரிவான தனி ஆந்திர மாநிலம் உருவாக்கப்பட்ட போது, ஸ்ரீஸ்ரீ சென்னையில் வாழ்ந்து கொண்டிருந்தாலும், தனது குழந்தைக் காலக்கனவு நனவாகியதே என்று மிகவும் மகிழ்ச்சியடைந்தார். ஆனால், ஸ்ரீஸ்ரீக்குரிய 'விரசம்' அமைப்பு தனித் தெலுங்கானா மாநிலம் கேட்பதென முடிவு செய்தபோது, அந்த முடிவை ஸ்ரீஸ்ரீ ஏற்றுக் கொள்ளாமல், 'விரசம்' அமைப்பிலிருந்து ராஜினாமா செய்து விட்டார். நம்பிக்கை அடிப்படையிலேதான், தன்னை ஒரு 'இடதுசாரி' என்று கருதிக்கொண்ட ஸ்ரீஸ்ரீ, இடதுசாரிப் போக்குக்கு எதிராக ஒரு வரி கூட எழுதியதில்லை. ஆனால், அதே நேரத்தல், இடதுசாரிப் போக்கை எப்போதும் ஆதரிப்பவராகவும் அவர் இருந்ததில்லை. (ஏற்கனவே சுட்டிக் காட்டியது போல).

ஒரு மனிதர் என்ற அளவில் ஸ்ரீஸ்ரீயிடம் பலமும் இருந்தது; பலவீனமும் இருந்தது. அவருடைய திரைப் படத்துறை வாழ்க்கையில் பல மேடு பள்ளங்கள் இருக்கவே செய்தன; ஆனால், மேற்கொண்ட கடமை என்ற அடிப்படையில், அவர் எப்போதுமே பாராட்டப்பட்டார். 'அரசம்' அமைப்பிலிருந்து விலகிய சிலர், விலகிய பிறகு, ஆந்திரப் பிரதேச சாகித்திய அகாடமியும் மாநில அரசாங்கமும் தங்களை அங்கீகரிக்க வேண்டும் என்பதற்காக ஆரவாரித்துத் திரிந்தனர். ஆனால், ஸ்ரீஸ்ரீ அவர்களைப் போலல்லாமல், இலக்கியம், அரசியல் தொடர்பான இடதுசாரி இயக்கங்களிலிருந்து எப்போதுமே தன்னை விலக்கிக் கொண்டதில்லை. ஸ்ரீஸ்ரீக்கு சாகித்திய அகாடமி விருது அறிவிக்கப்பட்ட போது, பூரிபந்தா போன்ற நல்லெண்ண நண்பர்கள் விருதை ஏற்றுக் கொள்ளுமாறு ஸ்ரீஸ்ரீயை வற்புறுத்தினார் கள். ஆனால், 'விரசம்' அமைப்பு விருதை மறுக்குமாறு வற்புறுத்தியது. வழக்கம்போலவே மிகவும் கடுமையான பொருளாதாரச் சிரமத்தில் இருந்த ஸ்ரீஸ்ரீக்கு அகாடமியின் விருது மூலமாகக் கிடைக்கும் பணம் மிகவும் தேவைப்படுவதாகவே இருந்தது. ஆனால், 'விரசம்' அமைப்பின் கொள்கை குறுக்கே நின்றது. உடனடியாக விருதை ஏற்றுக் கொள்ள அவரால் இயலவில்லை. 'விரசம்' அமைப்பின் தலைவராகவும் அவர் இருந்த காரணத்தால், அமைப்பின் கொள்கை முறைகளை அவரால் மீறமுடியாத சூழ்நிலை. இந்தத் தர்ம சங்கடமான நிலையை வேறு விதமாகச் சரிசெய்ய ஸ்ரீஸ்ரீ விரும்பினார். அகாடமி தரும் விருதுப் பரிசளிப்புத் தொகையை ஸ்ரீஸ்ரீ பெற்றுக் கொள்வது என்றும், பெற்ற உடனேயே, அந்தத் தொகையை ஸ்ரீஸ்ரீ 'விரசம்' அமைப்புக்கு நன்கொடையாக அளித்து விடுவது என்றும், அந்தத் தொகையால், 'விரசம்' அமைப்பு தனக்கென்று சொந்தமாக அச்சகம் ஒன்றை வாங்கிக் கொள்ளலாம் என்றும் ஒரு கருத்தை ஸ்ரீஸ்ரீ முன் வைத்தார். ஸ்ரீஸ்ரீயின் இந்தக் கருத்தை 'விரசம்' அமைப்பு ஏற்றுக்

கொள்ளவில்லை. சிறிய தயக்கத்திற்கும் ஒரு சிறிய நாடகத்திற்கும் பிறகு, ஸ்ரீஸ்ரீ அகாடமி விழாவில், பலருக்கும் முன்னால் விருதுத் தொகையைப் பெறாமல், அந்த விருதுத்தொகை, காசோலையாகப் பதிவு அஞ்சல் வழியே அனுப்பப்பட்டபோது, பெற்றுக் கொள்வது என்ற நிலைப்பாட்டுக்கு வந்து, காசோலையை ஸ்ரீஸ்ரீ பெற்றுக் கொண்டார். இந்தத் தவறுக்காக ஸ்ரீஸ்ரீ தண்டனைக்கு உள்ளானார். இந்த விஷயம் இத்தோடு முற்றுப் பெற்றது.

பூரிபந்தாவுடன் சேர்ந்து ஸ்ரீஸ்ரீ லண்டனுக்குப் போனார். அங்கே 'நீண்ட பயணம்' கவிதைகளை வெளியிட்டுத் தனது குரலையும், கையெழுத்தையும் பதிவு செய்தார்; அங்கே எழுத்தாளர் பலரைச் சந்தித்தார்; அதனால் மிகவும் மகிழ்ச்சியடைந்தார். ஸ்ரீஸ்ரீ அமெரிக்காவுக்கும் சென்றார். மிகச் சிறந்த அறிஞரும், ஸ்ரீஸ்ரீயால் மிகவும் பாராட்டப் படுபவருமான பஞ்சகுணால ஆதிநாராயண சாஸ்திரிக்கு (1890-1951) சமர்ப்பணம் செய்யப்பட்டு, ஸ்ரீஸ்ரீயின் கையெழுத்தாலேயே எழுதப்பட்ட 'சிப்ராலி' கவிதைத் தொகுப்பை ஸ்ரீஸ்ரீ அமெரிக்காவில் வெளியிட்டார். வெளிநாட்டுப் பயணங்கள் ஸ்ரீஸ்ரீயின் கண்களைத் திறந்தன. அவருக்கு இருந்த ஆங்கில அறிவு, ஆழம் இவற்றின் மீது அவர் கொண்டிருந்த நம்பிக்கை ஆகியவற்றை அதிர்ச்சிக்கு உள்ளாக்குவதாகவும் வெளிநாட்டுப் பயணங்கள் அமைந்துவிட்டன. பயணத்துக்குப் பிறகு, தாய்நாடு திரும்பிய ஸ்ரீஸ்ரீ, தனது ஆங்கில மொழியறிவு வெறும் 'ஏட்டுப் படிப்புத்தான்' என்றும், உயிர்த்துடிப்பான நடைமுறை ஆங்கிலம் தனக்குத் தெரிய வில்லை என்றும், தனது ஆங்கில அறிவின் ஆற்றலைக் கொண்டு, தனது வெளிநாட்டு வாசகர்களின் நெஞ்சைத் தொட்டுப் பேசத் தன்னால் முடியவில்லை என்றும் ஸ்ரீஸ்ரீ வெளிப்படையாகவே ஒப்புக் கொண்டார். அவருடைய தனிப்பட்ட மரியாதைக்கும் புகழுக்கும் சேதம் விளைவிக்கக் கூடிய விஷயம் என்றாலும் கூட, அதை மறைத்துப் பேசும் பழக்கம் ஸ்ரீஸ்ரீயிடம் இருந்ததே இல்லை. ஸ்ரீஸ்ரீயிடம் இருந்த இத்தகைய 'முதிர்ச்சி பெற்ற குழந்தைத் தன்மைதான்' அவரோடு தொடர்பு கொண்டிருந்த எல்லாரையும் அவர்மீது மிகவும் பிரியம் கொள்ளுமாறு செய்துவிட்டது!

7. இலக்கியத்தில் வகிக்கும் இடம்

ஏறத்தாழ ஓராயிரம் ஆண்டுக்காலப் பழைமையுடைய தெலுங்கு இலக்கிய வரலாற்றில், அடுத்து வரும் தலைமுறையினர் மீது குறிப்பிடத் தக்க அடையாளங்களைப் பதித்துச் சென்றுள்ள எத்தனையோ பல கவிஞர்கள் எழுத்தாளர்கள் இருந்திருக்கிறார்கள். அத்தகைய கவிஞர்கள்-எழுத்தாளர்கள், ஆண்களோ, பெண்களோ, ''சிறப்புக்கு உரியவர்கள்'' என்று கொண்டாடப்பட்ட காலம், அவரவருடைய சிறப்புத் தன்மைக்கு ஏற்றவாறு, சிறிது கூடுதலாகவும், குறைவாகவும் வித்தியாசப் பட்டிருக்கலாம். இவர்களுடைய பெரும்பாலான இலக்கியப் படைப்புக்கள் பற்றி, நாம் அறிந்து கொள்ள முடிகிறது. ஆனால் இவர்களில் சிலருடைய தனிப்பட்ட வாழ்க்கை பற்றிய விவரங்கள் தெளிவாகத் தெரிய வருகின்றன; பலருடைய விவரங்களைத் தெளிவாகத் தெரிந்து கொள்ள முடியவில்லை. இன்றளவும் கூட, குழந்தைப் பருவ நிலையிலேயே இருக்கிற, நாட்டுப்புற இலக்கியங்களின் வழியேதான், சில செய்திகளை அறிய முடிகின்றது. மற்றபடி, இவர்களைச் சுற்றியிருந்த சமுதாயம், அது இவர்கள் மீது செலுத்திய பாதிப்பு இவர்களது படைப்புக்களின் மீது, இவர்களது சொந்த ஆளுமை பதித்திருந்த பாதிப்பு ஆகியவை பற்றிய விவரங்களைத் தெளிவாக அறிய முடியவில்லை. இவ்வளவு நீண்டகால இடைவெளியில், பதிவு செய்யப்பட்ட சான்றாதாரங்கள் எவையும் இல்லாத நிலையில், இவர்களோடு இணைந்து, சமகாலத்தவர்களாக வாழும் வாய்ப்பு நாம் பெற்றிராத நிலையில், இவர்களில் ஒரு சிலரைத் தவிர, பெரும் பாலானோரின் உண்மையான வாழ்க்கை பற்றிய அரிய செய்திகளை மிகக் குறைந்த அளவிலேயே, நாம் அறிந்து கொள்ள முடிகிறது. ஸ்ரீஸ்ரீ விஷயம் அவ்வாறில்லை. ஸ்ரீஸ்ரீ 1983-ஆம் ஆண்டின் நடுப்பகுதிவரை உயிரும் உடம்புமாய் வாழ்ந்திருந்தவர். ஸ்ரீஸ்ரீயைப் பற்றிய, தனிப்பட்ட வாழ்க்கை குறித்த, ஒவ்வொரு விவரம் பற்றியும்,

அவர் சொன்ன ஒவ்வொரு வார்த்தை பற்றியும், எழுதிய ஒவ்வொரு எழுத்து பற்றியும், நமக்கு ஆதார பூர்வமாகத் தரக் கூடிய, ஸ்ரீஸ்ரீக்கு நெருக்கமான நண்பர்கள், ஆர்வலர்கள் பலர் இருக்கிறார்கள். ஸ்ரீஸ்ரீயை, அவருடைய அறிவாற்றலை, அவரது படைப்பாற்றலை, முழுவதும் புறவயமாக நின்று எடைபோட்டு, ஸ்ரீஸ்ரீயின் (இலக்கியம் தொடர்பான) வாழ்க்கை வரலாற்றை எழுத நினைக்கும் ஒருவருக்கு, அகவயச் செய்திகளே நிறையக் கிடைப்பதும் ஒருவகையில் சிரமத்தையே தருவதாகும். மேலும் ஸ்ரீஸ்ரீ தன்னை ''அக உணர்வுக் கவிஞர்'' என்று தானே எடைபோட்டு அறிவிக்கவும் செய்தார். அவரே, இவ்வாறு தன்னைப் பற்றி உரிமை கொண்டாடி அறிவிப்பது, அவரைப் பற்றி எழுத நினைக்கும் வாழ்க்கை வரலாற்று ஆசிரியர்களுக்கு மேலும் சிக்கல்களைத் தருவதாகவே அமைந்தது. இருந்தபோதிலும், அவரது உண்மை வாழ்க்கைதான் குழப்பமாக இருந்ததே தவிர, அவருடைய கவிதைகள் குழப்பமாக இல்லை என்று நாம் எச்சரிக்கையாகச் சொல்லிக் கொள்ளலாம். ஆனாலும், ஒரு விஷயம்; அவரது வாழ்க்கையானது (யதார்த்தத்தைப் பிரதிபலிப்பதைக் காட்டிலும்) (கம்யூனிஸ-சோஷலிஸ) கட்டற்ற கற்பனை இயல்பு களையே பிரதிபலித்தது எனலாம்.

வரலாற்றுப் போக்கில் மரபுகளுக்கு எதிரான கிளர்ச்சிகள் எழுந்தன; இக்கிளர்ச்சிகள், சமுதாய, இலக்கிய முக்கியத்துவம் உடையவை. நன்னய்யாவின் (கி.பி. 11-ஆம் நூற்றாண்டு) மிகப் பெரிய முதலாவது படைப்பு, சொல்லாட்சியிலும், யாப்பிலும், சமஸ்கிருத மயமாக்கப் பட்டிருந்த ஆரம்ப காலக் கன்னட மொழியின் படைப்புக்களின் மொழிக்கும், மொழி நடைக்கும், மிக நெருக்கமான மொழிநடையிலேயே உருவாக்கப் பட்டிருந்தது. கன்னட மொழிப் படைப்புக்கள் ஜைனம் சார்ந்தவையாக இருந்தன; ஆனால் முழுமை செய்யப்படாத நன்னய்யாவின் மகாபாரதம் வேதகால மரபைச் சார்ந்ததாகவே அமைந்திருந்தது. வீரசைவக் கவிஞர்களாகிய நன்னிசோடா, பால்குர்கி சோமநாதா போன்றோர் அடுத்த நூற்றாண்டில் வந்தவர்கள். இவர்கள் தங்களுடைய படைப்புக்கள் வழியே, வேதகாலக் கலாச்சாரத்தை எதிர்த்து நெருப்பைக் கிளப்பினார்கள்; சாதிகள் இல்லாத சமுதாயம் வேண்டும் என்றார்கள். சோமநாதா தன் கவிதைப் படைப்புக்களுக்குச் சொந்த மொழி யாப்பையே பயன்படுத்தினார்; வைதிகம் அல்லாத, புராணிகமல்லாத பொருளையே பாடுபொருளாக அமைத்துக் கொண்டார். வைஷ்ணவக் கவிஞர்கள், இவரையே மிகவும் வெற்றிகரமாக 'இமிடேட்' செய்து, சொந்த மொழியாப்பில், 'ரெங்கநாத இராமாயணம்' படைத்தார்கள். ஆனால், மொழியும் நடையும்

மிகவும் சாதாரணமாகவே அமைந்திருந்தன. இந்த வைஷ்ணவக் கவிஞர்கள் திக்கண்ணா (13-ஆம் நூற்றாண்டு) வரும் வரைக்கும், ஒரு குறுகிய கால எல்லைதான் என்றாலும், மிகவும் புகழ் பெற்றிருந்தார் கள். திக்கண்ணா வருகை தந்து, பதினெட்டுப் பருவங்கள் கொண்ட மகாபாரதத்தை, பதினைந்து பருவங்களாக்கி நிறைவு செய்து படைத்தார். திக்கண்ணா மொழிநடையில் எளிமையான, சொந்த மொழிநடை மரபையே தேர்ந்தெடுத்துக் கொண்டார். ஆனால் யாப்பு மரபு வழியாப்பாக இருந்தது; வைதிக மரபுகளையே ஆதரித்தார். இந்தக் காலக் கட்டம் தொடங்கி, தெலுங்கு இலக்கியத்தில், பெரும்பான்மை நன்னய்யா மரபு என்றும் ஓரளவு திக்கண்ணா நடை என்றும் இரண்டு மாறுபட்ட மொழிநடையில் இலக்கியப் படைப்புக் கள் தோன்றலாயின. இதில் புதிரான ஒரு விஷயம் என்னவென்றால், சர்.சி.ஆர். ரெட்டி காலத்திலிருந்து வந்த நவீன காலத் திறனாய்வாளர்கள், மொழியிலும் மொழி நடையிலும் யாரெல்லாம் திக்கண்ணாவைப் பின்பற்றி எழுதினார்களோ அவர்களைத்தான் 'பெரிய எழுத்தாளர்கள்' என்று அடையாளம் காட்டினார்கள். சி.ஆர். ரெட்டியின் கருத்துப்படி 'திக்கண்ணா- பிங்களி சூரணா- வேமனா' ஆகிய மூவரும்தான் 'மும் மூர்த்திகள்' ஆவர். ஆனால் ''திக்கண்ணா - வேமனா-குரஜாடா'' ஆகிய மூவரையே 'மும் மூர்த்திகள்' எனக் கணக்கிட்டார் ஸ்ரீஸ்ரீ. இந்த 'மும்மூர்த்திகள்' உருவாக்க விஷயத்தில் ஸ்ரீஸ்ரீ குரஜாடாவைச் சேர்த்ததும் கூடச் சிறிது தாமதமாகவே நிகழ்ந்தது. அதாவது, விஸ்வநாதா, தேவுலபள்ளி ஆகிய இருவர் தன்மீது செலுத்தியிருந்த பாதிப்பை ஸ்ரீஸ்ரீ உதறித் தள்ளிவிட்ட பிறகே 'மும்மூர்த்திகள்' வரிசையில் ஸ்ரீஸ்ரீ குரஜாடாவைச் சேர்க்க முன் வந்தார். நவீனச் செவ்வியலிஸம், தன்னுணர்ச்சிக் கவிதை வட்டம் ஆகியவற்றின் ஆளுகைக்குள் ஆட்பட்டிருந்த ஸ்ரீஸ்ரீ, 'பிரபவ' 'சுப்தாஸ்திகலு' போன்ற படைப்புக்களின் ஆசிரியராக இருந்த ஸ்ரீஸ்ரீ, சமஸ்கிருத மயமாதல், கவிதைச் சொல்லாட்சி, மரபு வழி யாப்பில் கவிதை படைத்தல் என்ற அடிப்படைகளில் முழுவதும் நன்னய்யா மரபைப் பின்பற்றுபவராகவே இருந்தார். தனக்குரிய சொந்தமான கருத்து எது என்று கண்டுணர்ந்த பிறகும், கவி கொண்டல, பசவராஜு, நந்தூரி போன்றோரால் பாதிப்பு அடைந்த பிறகும், மீமெய்யியல், வசன கவிதை, ஓசையமைப்புக்கள் இன்னும் பலவற்றில், புதிய பரிசோதனைகளையெல்லாம் கடந்து வந்த பிறகும், குரஜாடாவின் புகழ் பெற்ற நாடகம், கவிதை ஆகியவற்றின் வசீகரத்திற்குத் தன்னை அறிமுகப்படுத்திக் கொண்ட பிறகும், சமஸ்கிருத மயமான சொல்லாட்சி அலங்காரத்திலிருந்தும், நடையழகிலிருந்தும், ஸ்ரீஸ்ரீ விலகி வர முடியவில்லை. இதற்கு விதிவிலக்காக அமைந்தவை என்று, 'நீண்டபயணம்' நூலில் உள்ள மிகச்சில கவிதைகளைத்தான் குறிப்பிடலாம். நாடு முழுவதும் பரவிக்

கிடந்த கவி தாகூர், அகில உலகத்தையும் கவர்ந்திருந்த ஸ்வின்பர்ன் ஆகியோரின் பாதிப்பு, கருத்தை ஒதுக்கிவிட்டு இசைலயத் தன்மைக்கே ஒரு நிலையான கரிசனம் காட்டுகிற நிலைமைக்கு ஸ்ரீஸ்ரீயை ஆளாக்கியது. ஸ்ரீஸ்ரீ தன்னிடம் இருந்த சொல் விளையாட்டு, இரட்டுற மொழியும் சிலேடைப் போக்கு ஆகியவற்றை ஒப்புக் கொண்டார். அவருடைய உரைநடையில் இந்த இசைமோகம் பெரும்பாலும் இல்லை என்றே சொல்லலாம்; ஆனால், அவருடைய வானொலி நாடகங்களில், கவிதைகளில் அமைந்துள்ளது போலவே, இசைமோகம் பிரதிபலிப்பதைக் காணலாம்.

கிடுகு வேங்கட ராமமூர்த்தியின் மொழியியல் கொள்கைகளை ஸ்ரீஸ்ரீ வெளிப்படையாகவே ஆதரித்தார். படைப்பிலக்கியங் களிலும், அறிவியல் படைப்புக்களிலும் நடப்புக் காலப் பேச்சு வழக்கு வடிவங்களைப் பயன்படுத்துவதற்குத் தனது ஆதரவையும் ஸ்ரீஸ்ரீ தந்தார். செவ்விலக்கியக் காரர்களுக்கும், நவீன இலக்கியக் காரர்களுக்கும் இடையே நடைபெற்று வந்த போராட்டத்தில், ஸ்ரீஸ்ரீ எப்போதும் முன்னணியில் இருந்ததில்லை. (முறையே, 'க்ராந்திக', 'வ்யாவஹாரிக' என அழைக்கப்பட்ட சிந்தனைக் குழுக்கள்) இந்த நூற்றாண்டின் முதல் பத்து - இருபதுகளின் போது நடைபெற்ற மிகப் பெரிய விவாதங்களின் போது, தீவரமாகப் பங்கேற்க இயல்பாகவே இவரால் முடிந்திருக்காது. காரணம், அப்போது ஸ்ரீஸ்ரீ மிகவும் இளையவராக இருந்தார். ஆனால் 1940-இன் போது, விவாதங்களில் தன்னை ஈடுபடுத்தி, அக்கறை கொள்ளுவதற்கு இயலாத அளவுக்கு ஸ்ரீஸ்ரீ இலக்கியப் புகழ் அடைந்து, அந்தப் பணிகளிலேயே கவனம் கொள்பவராக இருந்துவிட்டார். பூரிபந்தாவுடன் ஸ்ரீஸ்ரீ கொண்டிருந்த தொடர்பும், பி.டி. ஸ்ரீனிவாச அய்யங்காருடன் கல்லூரியில் மாணவராகக் கொண்டிருந்த தொடர்பும், ஸ்ரீஸ்ரீயை நவீனத்துவச் சிந்தனைக்கு மாற்றிக் கொண்டு வந்திருந்தன. ஆனாலும் உள்ளபடியே நடைமுறையில் பார்த்தால், ஸ்ரீஸ்ரீயின் கவிதையில் பேச்சுமொழி வழக்கு என்பது ஸ்ரீஸ்ரீயைப் பொறுத்தவரையில், வேற்றுமை உருபுகளை அவை எவ்வாறு பேசப்படுகின்றனவோ, அந்த வடிவத்திலேயே பயன்படுத்துவது என்ற வரையறைக்குள் மட்டுமே அமைந்திருந்தது. மேலும் ஸ்ரீஸ்ரீ வழக்கிழந்த சொற்களையும் பயன்படுத்தினார். உதாரணமாக 'க்ரொத்த' என்ற சொல்லைக் குறிப்பிடலாம். (புதியது என்ற பொருள் தரும் 'கொத்த' என்ற புதிய சொல்லுக்குப் பதிலாக) விசாகையின் கிளைமொழிகளை இங்கும் அங்குமாகப் பயன்படுத்தும் நேரங்களில் அவற்றுடன் சேர்த்துத்தான் ஸ்ரீஸ்ரீ இவ்வாறு பயன்படுத்தி வந்தார். குரஜாடாவின் மொழி நடையில் காணப்படும் தெளிவு, எளிமைஆகிய பண்புகளால்

ஈர்க்கப்பட்டேன் என்று ஸ்ரீஸ்ரீ உரிமை கொண்டாடிக் கொண்ட போதிலும், மொழிநடையில் அந்தத் தெளிவு, அந்த எளிமை என்ற இலக்கை ஸ்ரீஸ்ரீ ஒருபோதும் எட்டிப் பிடிக்கவில்லை. மொழிநடையிலும், படிம உருவாக்கத்திலும், யாப்பிலும், குரஜாடா புத்தொளி மிக்க, நவீனத்துவத்தை எட்டியிருந்தார். ஆனால், ஸ்ரீஸ்ரீ அந்த அளவுக்கு நவீனத்துவம் அடைந்தவராக இல்லை. குரஜாடாவின் இலக்கியப் பரப்பு என்பது மிகவும் விரிந்து பரந்திருந்தது; அவருடைய நாடகங்களில் மட்டுமல்லாமல், அவருடைய கவிதைகளிலும், சிறுகதைகளிலும் அவர் படைத்தளித்துள்ள ஏராளமான பாத்திரங்கள் அனைத்தும் முன்மாதிரிப் பாத்திரங்கள்; அவை பன்முகம் கொண்டவை; உயிர்ப்புடையவை; மண்ணில் கண்ணுக்குக் கண்ணாக நிலவிக் கொண்டிருப்பவை. இந்த அடிப்படையில் ஸ்ரீஸ்ரீயை, குரஜாடாவுடன் ஒப்பிட்டுப் பார்த்தால், ஸ்ரீஸ்ரீ எதிரில் நிற்கவும் முடியாதவர் ஆவார். தன்னுடைய 'கரமராத்ரி கதலு' என்ற கவிதைகள் ஒருமுக உருவமே உடையவை என்றும், தான் கதை சொல்லும் எழுத்தாளன் இல்லை என்றும் ஸ்ரீஸ்ரீயே ஒப்புக் கொண்டார். ஆனாலும், சமஸ்கிருதம் அல்லாத பிற மொழிகளிலிருந்து, முதன்மையாக ஆங்கில மொழியிலிருந்து, ஸ்ரீஸ்ரீ மிகவும் சரளமாகச் சொற்களைக் கடன் பெற்றுக் கொண்டார். 'ஃபஸ்டோபர்' - என்பது போன்ற போலி வார்த்தைகளை ஸ்ரீஸ்ரீ உருவாக்கிப் பயன்படுத்தினார். ('ஃபஸ்டோர்' என்பது 'அக்டோபர் முதலாம் நாள்' என்பதன் சுருக்கம்; தொலைநோக்காடி நிலையத்தார் பயன்படுத்துவது) ஸ்ரீஸ்ரீயின் கவிதையில், பெரும்பான்மையான பகுதி மரபார்ந்த சொல்லாட்சியில்தான் அமைந்திருந்தது. அந்தச் சொல்லாட்சியும் புராதன, புராணப் பாத்திரங்கள் உருக்காட்சிகள் ஆகியவற்றின் வழிவந்தவையாக இருந்தன. இவற்றின் வழியே ஸ்ரீஸ்ரீ ஆற்றல் மிகுந்த, நவீனத்துவ விஷயங்களையும், தீவிரமானவையும் வித்தியாச மானவையுமான செய்திகளையும் தெரிவித்து வந்தார். தன்னிடமிருந்த செவ்விலக்கிய அனுபவ வளத்திலிருந்து, தனக்கே உரிய புதிய மரபுச் சொற்களையும், சொல் தொடர்களையும் உருவாக்கிக் கொள்ள அவரால் முடிந்தது. மரபார்ந்த யாப்பிலக்கணம், மரபார்ந்த பொது இலக்கணம் என்ற தடைச் சங்கிலிகளிலிருந்து விலகி முறித்துக் கொள்ளவே தான் விரும்புவதாக அவர் சொல்லியிருக்கிறார். ஆனால் அவ்வாறு இருக்க அவரால் முடியவில்லை. தன்னுடைய கருத்துக்களை மிகவும் அழுத்தமாகச் சொல்ல வேண்டிய சூழ்நிலைகளின்போது, அவர் திடீரென்று பழைய மரபார்ந்த வடிவங்களுக்கு மாறிக் கொள்வார். இப்படி ஒரு பழக்கத்தைக் குரஜாடா மீது சாட்டிக் கூற முடியாது. ஸ்ரீஸ்ரீயின் படைப்புக்களை முனைவர் (டாக்டர்) பட்ட ஆய்வுக்காக எடுத்துக் கொண்டு ஆராய்ச்சி செய்தவர்களுள்

மிரியல ராமகிருஷ்ணாவும் ஒருவர். ஸ்ரீஸ்ரீ எழுதிய ஒவ்வொரு வரியையும் இந்த ஆய்வாளர் ஒவ்வொரு கூறாகப் பிரித்துப் பிரித்து, இலக்கணங்களைக் கண்டறிந்து ஆராய்ந்தார். அவர் தனது ஆராய்ச்சியில், ஸ்ரீஸ்ரீயின் படைப்புக்களில் மரபு வழிப்பட்ட யாப்பிலக்கணக் கூறுகள் தொடர்ச்சியாக இல்லையென்றாலும், விட்டு விட்டு, ஆங்காங்கே, இடம் பெற்றிருந்தன எனக் கண்டறிந்து வெளிப்படுத்தினார். ஸ்ரீஸ்ரீயின் ஒவ்வொரு வரியிலும் 'வ்ருத்த காந்தி கத்ய' என்று சொல்லப்படும் நடை (கவிதை மணம் கமழும் உரை நடை) காணப்படுகிறது என்று மிரியல தனது ஆய்வின் வழியே நிறுவிக் காட்டியுள்ளார்.

ஸ்ரீஸ்ரீயின் சொல்லாட்சித் திறம் காலந்தோறும் கனிந்து முதிர்ந்து கொண்டே வந்தது என்பதே உண்மையாகும். ஸ்ரீஸ்ரீ வளர்ந்து முதுமையடைந்து அனுபவமும் பெற்றவராக ஆன பிறகு, கருத்துக் களுக்கும், உருக்காட்சிகளுக்கும் குறியீடு அமைப்பதில் அவரது வேட்கை கவர்ச்சிகரமாக இல்லை; அது போலவே அவருடைய உவமைகளும் உருவகங்களும் கூட கவர்ச்சி குறைந்து போகலாயின. அதற்கான காரணங்கள் எளிதில் சொல்லிவிடக் கூடியவையே. அவர் தொடர்ந்து எளிமையாக எழுதவே முயன்றார்; நேரடியாகச் சிந்திக்கவே முயன்றார்; வாசகர்களை மிகவும் விரைவாக எட்டி விடவே முயன்றார். ஆனால் அவருடைய வாசகர்கள் வாங்கிக் கொள்கிற நிலையில் இல்லை. பழந்தெலுங்கு, சமஸ்கிருதம், ஆங்கிலம் ஆகிய மொழிகளின் கவிதைகளைக் கற்றுக் கொள்வதில், அவர்கள் முந்தைய வாசகர்களைவிடவும் விருப்பம் இல்லாத துரதிர்ஷ்டசாலிகளாகவே இருந்தார்கள். ஸ்ரீஸ்ரீயின் சொல்லாட்சித் திறம் மங்கிப் போதல் என்னும் வியத்தகு நிகழ்ச்சி முதன் முதலில் எதனால் நிகழ்ந்தது என்றால், அவரது சொல்லாட்சித் திறத்தில் 'ஒரிஜினாலிட்டி' குறைந்து விட்டதால்தான் என்று சொல்லிவிட முடியாது; மாறாக, ஸ்ரீஸ்ரீயைப் பின்பற்றி, அவரைப்போலவே 'இமிடேட்' செய்த ஏராளமான பேர்கள், ஸ்ரீஸ்ரீயின் சொல்லாட்சியின் புதுமைத் திறத்தை 'ஒரு வெறும் கோஷம்' என்ற அளவுக்குக் குறைத்துத் தொடர்ந்து பயன்படுத்தி வந்ததே காரணம் ஆகும். ஸ்ரீஸ்ரீயை அப்படியே பின்பற்றி ''போலச் செய்து கொள்ளுதல்'', அவரிடமிருந்து அப்படியே கடன் வாங்கிக் கொள்ளுதல் ஆகிய ஒட்டுமொத்தப் போக்கு மேலும் அளவில் மிகவும் பெருகியதால், தெலுங்கு இலக்கியத்திற்கு முதன் முதலாக மிகவும் புதியது என்று ஸ்ரீஸ்ரீ என்ன கொடுத்தாரோ அது அழிக்கப்பட்டு விட்டது. ஸ்ரீஸ்ரீக்குத் தகுதிவாய்ந்த ஆர்வலர்கள் அமையாத காரணத்தால் ஏற்பட்ட எதிர்மறைப் பங்களிப்பு ஆகும் இது.

மரபுசார்ந்த, பழம் புனிதமான விளக்கங்களையெல்லாம் தமது படைப்புக்களில் ஸ்ரீஸ்ரீ பயன்படுத்தி வந்ததை எதிர்த்து ஒரு விமர்சனம் எழுந்தது; ஒரு புரட்சிகரப் படைப்பாளி, இவ்வாறு பயன்படுத்தி, தான் சார்ந்திருந்த அரசியல் தத்துவார்த்தத்திற்குப் பெரும் தீங்கு விளைத்துவிட்டார் என்றனர். ஸ்ரீஸ்ரீ தனது கவிதைப் படைப்பின் உள்ளடக்கத்திற்குப் பொருந்துகிற மாதிரி, ஒரு புதிய புரட்சிகரமான அல்லது தீவிரமான சொல்லாட்சித் திறத்தை உருவாக்கித் தந்திருக்க வேண்டும் என்று அவரைப் பின்பற்று கிறவர்கள் விரும்பினார்கள். (அன்றைய) சோவியத்து ஒன்றியத்தில் கேப்டன் மார், அவருடைய மொழியியல் பண்டிதர் குழு எல்லாரும் ஒரு குரல் எழுப்பினார்களே அதைத்தான் இது நினைவு படுத்துகிறது. 'கடவுள்' என்பது போன்ற வார்த்தைகளைப் பயன்படுத்துவதை இவர்கள் எதிர்த்தார்கள். பொதுவுடைமை அல்லாத, மார்க்சியம் அல்லாத, நிலப்பிரபுத்துவ, பிற்போக்கான வார்த்தைகள் அனைத்தை யும் ரஷ்யன் மொழியிலிருந்து நீக்கி விட வேண்டும் என்றும், அத்தகைய வார்த்தைகளுக்குப் பதிலாக, இருளடர்ந்த கடந்த கால மக்களை நினைவுபடுத்தாத, புத்தம் புதிய சொற்களையே பயன்படுத்த வேண்டும் என்றும் அவர்கள் கோரிக்கை வைத்தார்கள். இந்த விவாதத்தில் ஜே.வி. ஸ்டாலின் குறுக்கிடவேண்டியதாயிற்று. ஒரு மார்க்சிய மொழியியலாளர் என்ன செய்வாரோ அந்தப் பங்கை ஸ்டாலின் செலுத்தினார். மொழி என்பது ஒரு கருவி மட்டுமே; தங்களது கருத்துக்களையும் உணர்வுகளையும் தெரிவிப்பதற்கு அந்தக் கருவி மக்களால் பயன்படுத்தப் படுகிறது. அவ்வாறு பயன்படுத்துகிறவர்களின் சக்தியே மொழியின் ஆற்றலைத் தீர்மானிக்கும் என்றும் ஸ்டாலின் சுட்டிக் காட்டினார். கடந்த காலத்தில் வழங்கப்பட்ட வார்த்தைகள், நிகழ்காலத்து மக்களின் விருப்பங் களுக்கு ஏற்ப, குறிப்புப் பொருள், சுட்டுப் பொருள் ஆகிய பொருள் களைச் சொல்லும் வகையில் வித்தியாசமாகப் பயன்படுத்த முடியும்; ஆதலால், இது மாதிரியான முட்டாள்தனமான விவாதம் நிறுத்தப்பட வேண்டும் என்றும் ஸ்டாலின் வலியுறுத்தினார். அதிர்ஷ்டவசமோ அல்லது துரதிர்ஷ்டவசமோ இப்படியான அர்த்தமில்லாத விவாதங் களை நிறுத்தி வைக்கவும், அரைகுறை விமர்சகர்களின் தாக்குதல் களிலிருந்து ஸ்ரீஸ்ரீ போன்றவர்களைக் காப்பாற்றவும் ஒரு ஸ்டாலின் தேவைப்படும் நிலை நம் நாட்டில் இல்லை. ஊக்கப்படுத்தி விடுவதற்கு யாரும் இல்லாத காரணத்தால், இதுமாதிரியான விவாதங்கள் இயற்கையாகவே செத்தொழிந்து விட்டன.

ஸ்ரீஸ்ரீயின் மரணத்துக்குப் பிறகு, ஒரு வேடிக்கையான ஆய்வாளர் வேடிக்கையான ஒரு வெளியீட்டைக் கொண்டு வந்தார். அந்த வெளியீட்டில் 'நீண்ட பயணம்' நூலின் கவிதைகள் இரண்டு

அர்த்தங்கள் கொண்டுள்ளன என்றும், அவற்றுள் உள்ளே மறைந்து கிடக்கும் இன்னொரு பொருள் யோக சாஸ்திரக் கொள்கைகளால் அரண் செய்யப்பட்ட 'அத்வைதம்' (ஒரு பொருண்மை வாதம்) என்றும் அவர் விவாதித்தார். அவர் (அவர் பெயரை இங்கே சொல்லக் கூடாது, சொன்னால் அவருக்குத் தேவையில்லாத முக்கியத்துவம் கொடுத்ததாக ஆகிவிடும்) மேலும், தன்னுடைய மாயாவாதக் கருத்துக்களுக்கு ஆதரவாக, வேதங்களிலிருந்தும், சாஸ்திரங்களி லிருந்தும், பெரிய அசுர முயற்சியாக, வரிகளையும், பத்திகளையும் முழு அளவில் மேற்கோள்களாகக் காட்டியுமிருந்தார். ஏதாவது ஒரு வகையில், ஸ்ரீஸ்ரீயைத் தமது பிடிப்புக்குள் வைத்துக் கொள்ள வேண்டும் என்று நினைக்கிறவர்கள், அவரைச் சரியாகவும் புரிந்து கொள்ளாத நிலையில், வாசகர்களைக் கவர வேண்டும் என்ற நோக்கில், ஸ்ரீஸ்ரீயை எப்படி எப்படியெல்லாமோ புகழ்ந்து தள்ளிக் கொண்டிருந்தார்கள் என்பதற்கு, இந்த மாதிரியான முயற்சிகள் நடந்தன என்று போகிற போக்கிலாவது எடுத்துக் காட்ட வேண்டித் தான் உள்ளது. ஸ்ரீஸ்ரீ எந்த அளவுக்குச் செல்வாக்குப் பெற்றிருந்தார் என்பதை இது எடுத்துக் காட்டுவதாகவும் அமைகிறது. இவ்வாறெல்லாம் வியாக்யானம் செய்து கொண்டிருந்தவர்கள் ''நீண்ட பயணம்'' நூலை ஒரு 'நவீன பகவத் கீதை' என்றும் மதிப்பிட்டார்கள். எத்தனை கோணங்களில், எத்தனை பக்தர்கள் அந்த நூலுக்கு இருந்தார்களோ, அத்தனை பக்தர்களாலும், அத்தனை கோணங்களில் 'நீண்ட பயணம்' நூல் வியாக்யானம் செய்யப்பட வேண்டிய நூல் என்றும் கருதினார்கள். இன்னொரு, நடைமுறைக்குப் பொருந்தாத பழக்கமும் நிலவியது; அதாவது ஒரு குறிப்பிடத்தக்க எண்ணிக்கையிலான தெலுங்கு எழுத்தாளர்கள், தங்களுடைய புனை பெயர்களோடு 'ஸ்ரீ' என்பதையும் இணைத்து வைத்துக் கொள்ளும் பழக்கமும் உருவாகியிருந்தது. ஸ்ரீஸ்ரீ இவ்வாறெல்லாம் அவர்களால் இறவாப் புகழ் நிலைக்குள் வைக்கப்பட்டார்.

ஸ்ரீஸ்ரீ மிகுந்த பேரோசையைக் கிளப்பிக் கொண்டுதான் இலக்கிய உலகிற்குள் நுழைந்தார். மரபில் தேர்ச்சி பெற்ற, மிகவும் சரளமான, இசைநயம் வாய்ந்த, ஒரு நவீன தன்னுணர்ச்சிக் கவிஞரை அவருடைய 'பிரபவா' படைப்பு உலகத்திற்குப் பெற்றுத் தந்தது. தெலுங்கு இலக்கிய உலகில் ஒரு மரியாதை மிகுந்த இடத்தை வகித்துவந்த விஸ்வநாதா, தேவுலபள்ளி ஆகியோருடன் சரியாசனத்தை ஸ்ரீஸ்ரீ உடனடியாகவே பெற்றுவிட்டார். வெறுக்கத் தக்க பாடுபொருளை உடையதாக இருந்தபோதிலும், ''சுப்தாஸ்தி கலு'', தன் வித்தியாசமான, மிக நவீனத்துவமான அணுகுமுறையால் சாதாரணமான வாசகர்களைத் திகைப்படையச் செய்தது. உள்ள படியே சொல்வதானால், நவீனத் தெலுங்கு இலக்கியத்தில், அது ஒரு

புதிய மரபு வகை என்றே சொல்லலாம். இதைத் தொடர்ந்து, அடுத்து வந்தது ஸ்ரீஸ்ரீயின 'நீண்ட பயணம்' கவிதை; இக்கவிதை ஸ்ரீஸ்ரீக்கு இணையானவரான அடவி பாப்பிராஜு போன்றவர்களால், பாராட்டுடனும், மதிப்புடனும் வரவேற்கப்பட்டது; முத்துகிருஷ்ணா என்ற புகழ்பெற்ற பத்திரிகையாளரால் வெளியிடப் பட்டது. 'நீண்ட பயணம்' கவிதை பொருள் புதிதாய், புதிய யாப்பினதாய், புதிய செய்நோத்தியினதாய் அமைந்திருந்தது. இந்தப் புதுமை இதுவரை கேள்விப்படாததாகும்; அதேபோல எதிர்பாராததும் ஆகும். பாப்பிராஜூம் கிருஷ்ண சாஸ்திரியும் பொதுக் கூட்டங்களில் அந்தப் பாடல்களைப் பாடினார்கள்; பாடிக் கூட்டத்தைக் கவர்ந்து இழுத்தார்கள். விஸ்வநாதா அவரது வாழ்க்கையில், முதன் முதலாகவும், இறுதியாகவும் பாராட்டியுரைத்தார் என்றால் அது, ஸ்ரீஸ்ரீயின் 'கவிதா! ஓ கவிதா!' என்னும் கவிதையைத்தான் எனலாம். அந்தக் கவிதையை அதனுடைய சொல்லாட்சித் திறனுக்காகவும், அதுதரும் உணர்ச்சிக்காகவும், அதில் பயின்றுவரும் உருக்காட்சிக்கா கவும், எல்லாவற்றுககும் மேலாக, அந்தப் பாடலைக் காதால் கேட்டார் பிணித்து, அவர்தம் உள்ளத்துக்குள் அது உருவாக்கிய சூழலுக்கா கவும் விஸ்வநாதா வெளிப்படையாகவே பாராட்டினார். இயல்பாகவே ஒரு சில கவிஞர்கள் அந்தக் கவிதையைப் போல 'இமிடேட்' செய்து பார்த்தார்கள். பொதுவுடைமைவாதிகள் இந்தக் கவிதையின் புகழ் பரப்பினார்கள்; ஸ்ரீஸ்ரீ நவீனத் தெலுங்கு இலக்கியத்தில் ஒரு சகாப்தத்தை உருவாக்கியவர், புதிய அலையைத் தோற்றுவித்தவா என்றெல்லாம் பாராட்டி, குரஜாடாவுக்கு இணையாக அவர் அருகில் ஸ்ரீஸ்ரீயை அமர்த்தி வைத்தனர். ஆனால், இவையெல்லாம் ஸ்ரீஸ்ரீக்குப் பெருமை சேர்த்துவிடவில்லை. அவரிடம் இருந்த அடக்கம், தெருவிலே திரியும் ஒரு சாதாரண மனிதனின் நன்மையே கருதும் அன்பு ஆகிய பண்புகளே அவரை ஒரு மக்கள் கவிஞனாக உயர்த்தின எனலாம். மாபெரும் கவிதையை, அதன் மகோன்னதப் பண்பை எடைபோடக் கூடியவர்கள் யாரோ, அதன் விளைவை உணர்ந்தறியக் கூடியவர்கள் யாரோ, அவர்கள் எல்லாரும் ஸ்ரீஸ்ரீயை 'மகாகவி' என்று அழைத்தார்கள். இந்தத் தொகுப்பில் இருக்கும் ஸ்ரீஸ்ரீயின் கவிதைகள், இலக்கியத்தின் போக்கையே மாற்றுவதாக அமைந்தி ருந்தன. இத்தகைய நிகழ்வு இதற்கு முன்பு நிகழ்ந்ததில்லை. விஸ்வநாதா குறைபட்டுக் கொண்டபடி இன்னொன்றும் நிகழ்ந்தது. ஸ்ரீஸ்ரீயின் காரணமாக நாட்டில் ஒவ்வொரு ஆளும் ஒரு பேனாவை யும் பேப்பரையும் கையில் ஏந்திக் கொணடு, உணர்வுகளை எழுதுகிறேன் என்ற விருப்பத்தோடு, என்னவெல்லாம் கிறுக்க முடியுமோ அவ்வளவு கிறுக்கிவிட்டு அவற்றைக் கவிதை என்றும் சொல்லலானார்கள். சிற்சிலருக்கு, ஏன் பலருக்கும் இது களிப்புக்குரிய விஷயமாக இருந்தது; ஏற்கனவே கவிதைத் துறையில் இருந்தவர்

களுக்கு இது கவலைக்குரிய விஷயமாக இருந்தது. இதற்கெல்லாம் காரணம் ஸ்ரீஸ்ரீதான் என விஸ்வநாதா குறைபட்டுக் கொண்டார். கவிதை படைப்பது என்பது சிலபேருக்கு மட்டுமே சிறப்புரிமை எனத் தேங்கிக் கிடந்த நிலைமையில், கவிதை படைப்பதை, புகழ் பெற்ற ஒரு போட்டி விளையாட்டைப் போல ஆக்கிய பெருமைக்கு உரியவர் ஸ்ரீஸ்ரீயே ஆவார்.

குந்துர்தி ஆஞ்சநேயலு (1922-1982) முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தைச் சேர்ந்தவர்களுள் ஒருவர்; 'தெலுங்கானா' என்னும் நீண்ட வசன கவிதைப் படைப்பை அளித்தவர்; அவர் 'புதுக்கவிதை முன்னணி' என்ற அமைப்பை உருவாக்கினார். அவருடன், இந்த அமைப்பில் இளைய எழுத்தாளர்கள் ஏராளமாகச் சேர்ந்தார்கள். இந்த அமைப்பு உருவாவதை ஸ்ரீஸ்ரீ வரவேற்றார். இந்த அமைப்பைச் சார்ந்தவர்களுள் சிலர், அரசியல் தத்துவார்த்தத்தில், வேறுபாடு கொண்டு தங்களை 'திகம்பர கவிகள்' (நிர்வாணக் கவிஞர்கள்) என்று 1965-இன்போது அழைத்துக் கொண்டார்கள். வானக்கூரையின் கீழே, இந்த மண்ணில், எல்லாப் பொருள்களிலும் ஆபாசக் குப்பையே இருக்கிறது என்று எடுத்துக் காட்டி, வசன கவிதைகள் படைத்தார்கள்; வெகு சீக்கிரத்திலேயே இங்கே ஒரு புரட்சி நடைபெற வேண்டும் என்று விரும்பினார்கள். ஸ்ரீஸ்ரீ அவர்களையும் வரவேற்றார். மேலும், ஸ்ரீஸ்ரீ அவர்களுடைய கவிதைகளை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து, அவை வெளியிடப்படுவதற்கான ஏற்பாடுகளை யும் செய்தார். நாட்டின் அளவிலும், உலகின் எந்த ஒரு மூலை முடுக்கிலும், பழைய மரபை உடைத்து, மீறிச் செயல்படுகிற ஒவ்வொருவரையும் ஸ்ரீஸ்ரீ வரவேற்றார். 'நிறுவன எதிர்ப்பு உணர்ச்சி' என்பது ஸ்ரீஸ்ரீக்கு நாடிநரம்பெல்லாம் ஊறிக்கிடந்தது. 1970-இல், நக்சல்பாரி இயக்கத்தை ஆதரித்த எழுத்தாளர்கள் பிரிந்து சென்று வேறு ஒரு இலக்கிய அமைப்பை அமைத்தார்கள். ஸ்ரீஸ்ரீ முற்போக்கு எழுத்தாளர் சங்கத்திலிருந்து விலகி, புரட்சிகர எழுத்தாளர் அமைப்பான 'விரசம்' அமைப்பிற்கு, நிறுவுநர் தலைவராகவே ஆகிவிட்டார். புரட்சிகர அமைப்புக்கு வரவேற்புத் தருவது என்பதற்கும் மேலான செயலாகும் இது. இந்த அமைப்பு ஹன்ஸ்ராஜ் ராபர் என்பவரை இணைத் தலைவராக்கி, அமைப்பை, ஓர் அகில இந்திய அமைப்பாக விரிவாக்கம் செய்வதற்கு ஸ்ரீஸ்ரீ முயன்றார். அவரை மிகவும் ஆழமாகப் பிரபல்யப் படுத்துகிற, எந்த ஒரு அமைப்புக்கும் எந்த ஒரு புதிய கருத்துக்கும் இப்படி ஊக்கம் தருவதுதான் ஸ்ரீஸ்ரீயின் தனி அம்சமாக இருந்தது. 'மகாகவி' என்ற பட்டப்பெயர், அவருக்கே உரிய பெயராக - அவரைக் குறிக்கும் மாற்றுப் பெயராக அமைந்ததை யாரும் எப்போதும் மறுத்ததில்லை; அல்லது யாரும் கேள்விக்குரியதாக்கியதுமில்லை. ''ஸ்ரீரங்கம்

ஸ்ரீநிவாசராவ்'' என்னும் அவருடைய பெயர், 1940-இன் போது ''ஸ்ரீஸ்ரீ'' என வழங்கப்படுவதாயிற்று; அதன் பின்னர், சில ஆண்டுகளிலேயே, 'மகாகவி' என்ற பெயரும் அமைந்து விட்டது.

ஸ்ரீஸ்ரீ 'கார்ட்டூன்' கவிதை எழுதினார். இந்தத் துறையில் ஸ்ரீஸ்ரீயைத் தகுதிமிக்க பின்பற்றுபவர்களாக, ஆருத்ராவும் கஜெல்ல மல்லரெட்டியும் விளங்கினார்கள். ஸ்ரீஸ்ரீயின் கவித்துவ விளக்கம் திலக்கின் படைப்புக்களோடு இணையாக வைத்து எண்ணப்படக் கூடியதாக இருந்தது. ஸ்ரீஸ்ரீக்கு இருந்த வார்த்தை ஜால மோகம் ஆருத்ராவிடமும், பட்டாபியிடமும் எதிரொலித்தது. ஸ்ரீஸ்ரீயின் மீமெய்ம்மையியல், உருக்காட்சி ஆகியவை தொடக்கத்தில் நாராயண பாபுவினாலும், பின்னர் அஜந்தாவினாலும் இமிடேட் செய்யப்பட்டன. ஸ்ரீஸ்ரீ வகித்த 'சிம்மாசன' பீடத்துக்கு உரிமை கொண்டாடுபவர்கள் பலராக இருந்தார்கள். ஸ்ரீஸ்ரீ, அவருடைய இடத்துக்கு வாரிசாக, யாராவது ஒருவரை 'நியமனம்' செய்து அறிவிப்பார் என நம்பப்பட்டார். முதலாளிகள் ஸ்ரீஸ்ரீயின் அறிவையும், ஆற்றலையும் பாராட்டிப் புகழ்ந்துரைத்தார்கள். புரட்சிக்காரர்கள் ஸ்ரீஸ்ரீயின் பக்தர்களாகவே ஆனார்கள். மரபுவாதிகள், ஸ்ரீஸ்ரீயின் யாப்பிலக்கணப் புலமையையும், மொழியின் மீதான ஆளுமைத் திறமையையும் ஒப்புக் கொள்ள வேண்டியவர்களாக இருந்தார்கள். சமுதாயத்தின் நாகரிக மேட்டுக் குடிமக்கள், தங்களுடைய சமுதாய அந்தஸ்துக்கும் கவிதைமீதான தங்களது அன்புக்கும் ஓர் அடையாளம் போல, ஸ்ரீஸ்ரீயின் படைப்புக்களையும், ஒலி நாடாக்களையும், வீடுகளின் வரவேற்பு அறைகளில் கண்ணாடிப் பேழைக்குள் வைத்திருந்தார்கள். தான் வாழ்ந்த சமுதாயத்திடமிருந்து அதுவும் தான் உயிரோடு வாழ்ந்திருந்த காலக் கட்டத்திலேயே, கவிஞர் ஒருவர் இதைவிடவும் அதிகமாக வேறு எதைத்தான் எதிர்பார்க்க முடியும்? சுருக்கமாகச் சொன்னால், ஸ்ரீஸ்ரீ, இலக்கிய உலகத்தில் மட்டு மல்லாமல், சமுதாயப் பொது வாழ்க்கை உலகிலும், மக்களால் முழுதும் வியப்புக் கொள்கிற 'நடமாடும் புராண நாயகனாகவே' விளங்கினார் எனலாம்.

8. ஸ்ரீஸ்ரீ – முன்னும் பின்னும்

தெலுங்கு இலக்கிய வரலாற்றில் 1910-ஆம் ஆண்டு மிகவும் முக்கியத்துவம் பெற்ற ஆண்டு ஆகும். ஒரு புதிய யாப்பமைதியையும், சமுதாய பூர்வமான அர்த்தமுள்ள நாடகத்தையும், சிறுகதையையும், பாடலையும், சமகாலத்துப் பாணியிலான உயிர்த்துடிப்பு மிக்க உரைநடையையும் அந்தக் காலத்துக்கு அளித்ததன் மூலம் குரஜாடா சூரியக் கதிர் போலப் பேரொளியாகத் திகழ்ந்தார். வசன கவிதையின் தந்தை எனப்பட்டவரும், கவிதையின் உருவ-உள்ளடக்கங்களைப் புரட்சிகரப்படுத்தியவரும், மேற்கு நாட்டின் சிந்தனை மற்றும் கலையின் பெருவாரியான வகை மாதிரிகளை உரைநடையில் கவிதை எழுதும் கவிஞர்களுக்கு அறிமுகப் படுத்திய வருமான ஸ்ரீஸ்ரீ இந்த வருடத்தில்தான் பிறந்தார். ஸ்ரீஸ்ரீ தனது பிறந்தநாள் பற்றிக் குறிப்பிட்ட தேதியானது உண்மை அல்ல என்று தள்ளப்பட்ட நிலையில், அவரது பிறந்த நாள் பற்றிப் பஞ்சாங்கம் குறிப்பிடும் தேதி, நகராட்சிப் பதிவேடுகள் குறிப்பிடும் தேதி ஆகிய இரண்டு தேதிகளுள் எது சரியானது? என்று யாராலும் அவ்வளவு எளிதாக உறுதி செய்ய முடியவில்லை. இது எப்படி இருந்தாலும், தெலுங்கு இலக்கிய வரலாற்றின் போக்கைத் தீவிரமாக மாற்றுவதற்காக ஸ்ரீஸ்ரீ பிறந்தார், அந்த மாற்றம் தன் வாழ்நாளின் போதே நிகழ்ந்ததை அவர் கண்கூடாகக் கண்டார்; இது இந்த மண்ணில் நிகழ்ந்தது என்பதில் எந்த வித ஐயப்பாடும் இல்லை.

ஸ்ரீஸ்ரீ மரபுக்கு மதிப்பளித்த ஒரு குடும்பத்தில் பிறந்தார்; மரபுத் தெலுங்குக் கவிதையிலும், மரபான பழக்க வழக்கங்களிலும் ஈடுபாடு கொண்டவராகவும் அவர் இருந்தார். அவருடைய சமஸ்கிருத, ஆங்கில அறிவுக்கு, பல்கலைக் கழகம் அவருக்கு வழங்கிய பட்டங்கள் எந்த அளவுக்குச் சான்றுகளாக உள்ளன என்று தெரியவில்லை; ஆனால், அவருடைய இலக்கியப் படைப்புக்கள்

எந்தவித ஐயப்பாட்டுக்கும் இடமின்றி, அவருடைய சமஸ்கிருத, ஆங்கில அறிவாற்றலை உறுதி செய்வதாய் அமைகின்றன. அவரது குழந்தைப் பருவத்திலிருந்தே, ஸ்ரீஸ்ரீ எந்த மொழி இலக்கிய மானாலும், எந்த வகைப்பட்ட இலக்கியமானாலும், அதன் மீது ஒரு விருப்பத்தை ஏற்படுத்திக் கொண்டார். அது மட்டுமல்லாமல், தன்னைப் பாதித்த எந்த ஒரு இலக்கியப் பகுதியையும், உடனே தெலுங்கு மொழிக்கு மொழி பெயர்த்துவிடும் பழக்கத்தையும் அவர் வளர்த்துக் கொண்டிருந்தார். அவ்வாறு, தன்னால் மொழி பெயர்க்க இயலாமல் போகும் சூழ்நிலையில், அந்த இலக்கியத்தின் உட்பொருளைத் தழுவித் தெலுங்கிற்குக் கொண்டு வந்துவிடுவார். அவருடைய தாயார் இறந்து போனார் என்னும் ஒன்றைத் தவிர, மற்றபடி ஸ்ரீஸ்ரீயின் குழந்தைப் பருவம் மிகவும் அமைதியாகவும், விளையாட்டு மிகுந்த நாட்களாகவும் கழிந்து சென்றது. ஸ்ரீஸ்ரீ தன் தந்தையுடன் வாழ்ந்தார். ஆசிரியராகவும் இருந்த தந்தை, ஸ்ரீஸ்ரீ தனது விருப்பத்திற்கு ஏற்றவாறெல்லாம் தன் திறமைகளை வளர்த்துக் கொள்வதற்கு ஒவ்வொரு உரிமையையும் வழங்கினார். தன் சொந்த ஊரிலும், விஜய நகரத்தின் அருகிலும் வாழ்ந்து வந்த அனைத்து இலக்கிய வாதிகளுடனும், ஸ்ரீஸ்ரீ தொடர்பு கொண்டிருந்தார். அவர்கள் அனைவருமே அந்தக் காலக் கட்டத்தின் கவனத்துக்குரிய பெருமக்களாக இருந்தனர். ஸ்ரீஸ்ரீ அவர்களிடமிருந்து ஏதாவது, ஒரு விஷயத்தைக் கற்றுக் கொண்டார்; அல்லது தனது வளர்ச்சிக்குப் பொருத்தமான ஒன்றைக் கற்றுக் கொண்டார்; அல்லது இலக்கிய உலகின் வளர்ச்சிபற்றித் தெரிந்து கொண்டார். குழந்தைப் பருவத்திலிருந்தே ஸ்ரீஸ்ரீ கவிதை புனைந்தார்; நாடகங்களில் நடித்தார்; விளையாட்டுக்கள் விளையாடினார்; ஏன், துப்பறியும் அல்லது கற்பனை கலந்த குறுநாவல்களும் படைத்தார். உயர்நிலைப் பள்ளிப் படிப்பை முடித்து வெளியேறும் அந்த இளைய பருவத்தின் போதே திருமணமும் செய்து கொண்டார். தன்னுணர்ச்சிப் படைப்பாகிய ‘பிரபவா’ ஸ்ரீஸ்ரீயினுடைய ஆரம்பகாலப் படைப்பு. இதன் மூலம் அவர் கற்பனைக் காதல் உணர்வுப் படைப்பாளராகவே இருந்தார். இந்தப் படைப்பை ஸ்ரீஸ்ரீ, விஸ்வநாதா, தேவுல பள்ளி இருவரால் ஏற்பட்ட ஆழமான பாதிப்பின் காரணமாகவே படைத்தார். இதனை, அவர் தன் சிற்றன்னையின் நினைவுக்குச் சமர்ப்பணம் செய்தார். அந்தக் காலக் கட்டத்தில் அவர் ‘இண்டர்மீடியட்’ படிப்பை நிறைவு செய்திருந்தார். பின்னர் பட்டப்படிப்புக்காகச் சென்னைக்கு மாறி வந்தார். நம்பிக்கைக்குரிய கவிஞர் என்ற அங்கீகாரத்தையும் அன்றைய நவீனக் குழுவினரிடம் ஸ்ரீஸ்ரீ பெற்று விட்டார். சென்னையில் பல்வேறுதுறை வல்லுநர்களோடு ஸ்ரீஸ்ரீ பெற்றிருந்த தொடர்பு, அவருக்கு இருந்த இலக்கிய தாகத்தைத் தணித்துக்

கொள்ளும் வழியாக அடையாறு, கன்னிமாரா பொது நூலகங்கள் மூலம் அவருக்குக் கிடைத்த நூல்கள் ஆகிய இவைஎல்லாம் சேர்ந்து, உலக இலக்கியம் நோக்கி அவருடைய கண்களைத் திறந்து விட்டன. விஞ்ஞானம் படிப்பதற்குத் தகுதி பெற்றிருந்த அவர் விஞ்ஞானம் படித்தார்; அந்த வழியில் தொடர்ந்து, 'எம்.எஸ்ஸி' பட்டமும் பெறவேண்டும் என்றும், எல்.எல்.பி. பட்டமும் பெற வேண்டும் என்றும் ஸ்ரீஸ்ரீ விரும்பினார். குடும்பத்தில் ஏற்பட்ட பொருளாதாரச் சிக்கல்களின் காரணமாக, அந்த விருப்பம் முளையிலேயே கிள்ளியெறியப் பட்டுவிட்டது. போரினால் பாழ்பட்டுக் கிடந்த அகில உலகம் முழுவதும் பொருளாதார அழுத்தத்தாலும், நிச்சயமற்ற அரசியல் தன்மையாலும் சமுதாயக் குழப்பத்தாலும் துன்பப்பட்டுக் கிடந்த அந்தக் காலக் கட்டத்தில், ஸ்ரீஸ்ரீ தன்னையும், தன் குடும்பத்தாரையும் காப்பாற்றிக் கொள்வதற்காக, ஒரு வேலை தேடி அலைய வேண்டியதாயிற்று. பசியும் பட்டினியும் மிகுந்த முப்பதுகளின்போது, இந்திய அரசியல் அரங்கிற்குள் வருகை தந்த 'கம்யூனிசம்' ஸ்ரீஸ்ரீயின் வறுமை, அந்தக் காலக் கட்டத்தில் அவர் பயிலத் தொடங்கியிருந்த இலக்கிய வகைகள் ஆகிய அனைத்துமாகச் சேர்ந்து, பஞ்சமும் பசியும் இல்லாத ஒரு புதிய உலகத்தை உருவாக்கி விட முடியும் என்ற கற்பனை ஆர்வ நம்பிக்கை ஊட்டப்பட்டுக் கிடந்த ஸ்ரீஸ்ரீயின் மனத்தில், பழைய மரபு வழியிலிருந்து மாறி, புரட்சிகரமான கவிதைகளைப் படைக்க வேண்டும் என்ற கொழுந்து விட்டு எரியும் ஆசையை உருவாக்கின. இத்தகைய ஒரு விழிப்புணர்ச்சி அவருக்குள் ஏற்பட்டது. இளைஞர்களை ஆதர்சப் படுத்தியதும், முதியவர்களை மதிப்பச்சம் கொள்ளச் செய்ததுமான 'நீண்ட பயணம்' என்னும் போர் முழக்கக் கவிதை இப்படித்தான் அவரிடமிருந்து வெளி வரலாயிற்று. ஸ்ரீஸ்ரீ இவ்வாறு ஒரு புதுப் பாதை அமைத்துப் புத்தொளி தந்தார். அந்தப் புத்தொளியானது உரைநடையில் கவிதை எழுதும் கவிஞர்களை உந்திச் செயலுக்குத் தூண்டுவதாக அமைந்தது. ஸ்ரீஸ்ரீயின் முன்னோடியாக அமைந்த அடவி பாபிராஜு, ஸ்ரீஸ்ரீயின் முன்னாள் வழிகாட்டியாக அமைந்த தேவுலபள்ளி ஆகியோர் ஸ்ரீஸ்ரீயின் கவிதைகளை அப்படியே பொது நிகழ்ச்சிகளில் மனப்பாடமாக ஒப்புவிப்பதன் மூலம் ஸ்ரீஸ்ரீயின் புகழ் பரப்பத் தொடங்கினார்கள். அந்தக் காலக் கட்டத்தின் கலகக்காரர் எனக் கருதப்பட்ட குடிபாடி வெங்கடாசலம் ஸ்ரீஸ்ரீயை இருகரம் நீட்டி வரவேற்றார். ஸ்ரீஸ்ரீயின் ஆரம்ப கால முன்மாதிரி எனக் கருதப்படும் விஸ்வநாதா, ஓர் இலக்கிய விழா அரங்கிலேயே, கூட்டத்தின் முன்பாக, ஸ்ரீஸ்ரீயை அப்படியே கட்டித் தழுவுகிற அளவுக்குப் பெருமையால் திகைத்துப் போயிருந்தார். இன்றுவரை வாழ்ந்து கொண்டிருக்கும் ஒரு 'மகாகவி' இப்படித்தான் தோன்றினார்!

ஸ்ரீஸ்ரீ ஓர் ஏழை மனிதராகவே தொடர்ந்து வாழ்ந்தார்; இன்னும் சரியாகச் சொல்வதானால், வறுமையில்தான் அவர் வளர்ந்தார் என்றே சொல்ல வேண்டும். கவிதையில் ஓர் உன்னத நிலையை அடைவதற்கும், கற்பனைத் திறம், உருக்காட்சித் திறம், சொல்லாட்சித் திறம், தன்னியல்பான புகழ்வாழ்வு ஆகிய நிலைகளை அடைவதற்கும் வறுமையோடு கூடிய வளர்ச்சியே காரணம் எனலாம். தற்காலிகமான ஒரு வேலைக்காக, இங்கும் அங்குமாக அவர் தேடி அலைய வேண்டியதாயிற்று. அப்படித் தேடி அலைந்து பிடித்த எந்த ஒரு வேலையிலும், எந்த ஒரு குறிப்பிட்ட காலம் வரைக்கும் கூட நிலையாய் இருந்து அமர்ந்து பணி செய்வதற்கு அவரது மனநிலை இடம் தரவில்லை. அவரது வாழ்க்கை துன்பமயமானதாகவே இருந்தது; தேவைகளோ அதிகம் இருந்தன. உடம்பு அடிக்கடி சுகவீனம் அடைந்தது; உடல்நிலை, அவர் பெற்றிருந்த இலக்கிய உலகத்து வெற்றிகளுக்கு எதிர்த்திசையில் செல்வதாக அமைந்தது. தனது வாழ்க்கைப் பிழைப்புக் கருதி, சின்னச் சின்ன வருமானத்திற்காக, ஸ்ரீஸ்ரீ அவர் காலத்தில் வந்து கொண்டிருந்த ஒவ்வொரு பத்திரிகைக்கும் ஏதாவது எழுதுவது என ஆரம்பித்தார். இந்தச் சமுதாயத்தில், தான் ஒரு கவிஞராகவோ அல்லது ஓர் எழுத்தாளராகவோ மட்டுமாக இருந்து வாழ்ந்து விட முடியும் என்று ஸ்ரீஸ்ரீ மிகவும் தீவிரமான முடிவுக்கு வந்தார்; வந்து, அவ்வாறே வாழ்ந்து காட்ட வேட்கையும் கொண்டார். அவரது இந்தத் தீர்மானமானது ஒரு வகையில் முழுவதும் சரியானது; ஒரு வகையில் முழுவதும் தவறானது! ஸ்ரீஸ்ரீயின், அறிவுக்குப் பொருத்தமற்ற, கற்பனாவாத இந்த முடிவை அவர்காலச் சமூகம் வரவேற்கவில்லை; அவருக்குப் பொருள் வழங்கி வாழ வைக்கவும் தயாராக இல்லை. தெலுங்கு இலக்கியத்தில் 'கட்டில்லாக் கவிதை' என்று சொல்லப்படுகிற வசன கவிதையை ஸ்ரீஸ்ரீ தோற்றுவித்தார்; 'தாதாயிசக் கவிதை', 'சர்ரியலிஸக் கவிதை' (மீமெய்ம்மையியல்) ஆகியவற்றைச் சோதனை முயற்சியாகச் செய்தார்; கதைப் படைப்பிலக்கியத்தில் 'நனவோடை உத்தி' என்னும் கருத்தை அறிமுகம் செய்து வைத்தார்; இலக்கியப் படைப்பில் ஒரு புதிய செய் நேர்த்தியை உருவாக்குவதற்காக அனைத்து வகையான இலக்கிய உத்திகளையும் ஸ்ரீஸ்ரீ ஒரு விளையாட்டுப் போக்கில் செய்து பார்த்தார்; ஒருவருடைய சமுதாய-அரசியல் பற்றுக்களுக்கு அப்பால் நின்று அவருடைய தூய கவிதையைப் பாராட்ட வேண்டும் என்ற ஒரு புதிய பாதையையும் வகுத்துக் கொடுத்தார். ஒருவர் கவிதை எழுதுதலைத் தனக்குத்தானே பயிற்சிப் படுத்திக் கொள்ள முடியும் என்றும் ஸ்ரீஸ்ரீ விளக்கினார். ஸ்ரீஸ்ரீ தனது வாழ்க்கைப் பாடு கருதி, பத்திரிகைகளுக்கு விடுகதைப் புதிர்களும் கூட எழுதிக் கொடுத்தார். இத்தகைய முயற்சி தெலுங்கில் முதல் முயற்சியாகும். ஸ்ரீஸ்ரீ இலக்கிய இதழ்களிலும் வேறு பிற

இதழ்களிலும் பணியாற்றினார். சில இதழ்களில் சட்டப்படியில்லாத (ஆனால் நடப்பின்படி உண்மையான) ஆசிரியராகவும், வேறு சில இதழ்களில் செய்தியாளர் மற்றும் ஆசிரியராகவும் பல நேரங்களில் அவர் பணியாற்றினார். ஆனால், எந்த இடத்திலும் தொடர்ச்சியாக நீண்ட காலத்திற்கு அவர் பணி புரியவில்லை. மிக முக்கியமான இலக்கிய மாநாடுகள் அனைத்திலும் ஸ்ரீஸ்ரீ பங்கேற்றார். ஏறத்தாழ அனைத்து இலக்கிய சங்கங்களிலும் அவர் உறுப்பினராக ஆனார். வளர்ந்து கொண்டே வந்த அவருடைய வறுமையுடன் சேர்ந்தே, ஓர் இலக்கியப் பேராசான் என்ற அவருடைய புகழும் எப்போதும் வளர்முகமாகவே உயர்ந்து கொண்டு வந்தது. ஸ்ரீஸ்ரீ நல்ல மேடைப் பேச்சாளர் இல்லை; ஆனால் அவர் கவர்ந்து ஈர்க்கவல்ல சம்பாஷணைக்காரர் என்று பெயர் பெற்றிருந்தார். அவரே, அவரைப் பற்றிச் சொல்லியிருந்ததுபோல, ஸ்ரீஸ்ரீ ''மகிழ்ச்சியாய் இருக்கும் துரதிர்ஷ்டசாலி'' ஆவார். அவருக்கும் பகைவர் சிலர் இருந்தார்கள். இளம் எழுத்தாளர்களுக்கு ஸ்ரீஸ்ரீ எப்போதும் 'காட்சிக்கு எளியவராக'வே இருந்தார்; எந்தவிதத் தயக்கமும் ஒளிவு மறைவும் இல்லாமல் ஸ்ரீஸ்ரீ இளைஞர்களுக்கு ஊக்கம் கொடுத்து வந்தார். ஒரு நிலையான வருமானத்துக்கு உறுதி செய்யும் நோக்கத்தோடு ஸ்ரீஸ்ரீ திரைப்பட உலகத்திற்குள் நுழைந்த நேரத்தில், ஸ்ரீஸ்ரீ மிகப்பெரிய சமுதாயப் பொது மனிதராக உருவாகிவிட்டார்.

எந்தவித மனக்காழ்ப்பு இல்லாததும், நகைச்சுவையும், மொழியின் மீதான ஆளுமையும் மிக்க, வெளிப்படையான தனது பேச்சின் மூலமாக, ஸ்ரீஸ்ரீ திரைப்படத் துறையின் முதலாளிகளை மயக்கித் தன் வசப்படுத்தியிருந்தார். அவருடைய புரட்சிகரமான வெடிப்புப் பேச்சுக்கள் முதலாளிகளைத் துன்புறுத்தியதில்லை. ஸ்ரீஸ்ரீ கலைஞர்களின் அன்புக்குரியவர் ஆகிவிட்டார். அவருடைய வெளிப்படையான, ஒளிவுமறைவில்லாத பண்புதான் அவரை இவ்வாறு விருப்பத்துக்கு உரியவராக ஆக்கியது. இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சியையும் (C.P.I.), முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தையும், பிரஜா நாட்டிய மண்டலியையும் ஸ்ரீஸ்ரீ வெளிப்படையாகவே ஆதரித்தார். திரைப்படத் துறையின் முதலீட்டாளர்களோடு, தனது வாழ்க்கையையும் மனப்போக்கையும் சமரசப்படுத்தி வைத்துக் கொள்வதில், ஸ்ரீஸ்ரீயின் இந்த வெளிப்படையான ஆதரவுகள் குறுக்கீடாக நிற்கவில்லை. ஆரம்பகாலத்தில் அவரிடமிருந்த பற்பல குறைபாடுகள் பின்னர் நாடறிந்தவை ஆயின. ஸ்ரீஸ்ரீயினுடைய கூடா ஒழுக்கம், குதிரைப் பந்தய ஈடுபாடு, குடிப்பழக்கம் ஆகியவை அனைத்தும் அவரைத்தான் துன்புறுத்தினவே தவிர, வேறு பிறரைச் சங்கடப்படுத்தவில்லை. தன்னிடத்தில் பலவீனங்கள் இருந்தன என்னும் உண்மையை, ஸ்ரீஸ்ரீ எந்த

நேரத்திலும் மறைத்து வைக்க முனைந்ததில்லை. மிகப்பெரிய வியப்புக்குரிய விஷயம் என்ன என்றால், அவருடைய சமுதாய வாழ்விலான அத்தனை குறைபாடுகளும் மன்னிக்கப்பட்டன என்பதுதான். உயிர்ப்புத் தன்மைக்காகவும், வெளிப்படைத் தன்மைக்காகவும், அறிவுடைமைக்காகவும், நகைச்சுவைக்காகவும் அவருடைய உறவு எல்லாராலும் மகிழ்ந்து அனுபவிக்கப்பட்டது. அவருடைய இலக்கியத் திறமைகள் அவருடைய தோல்விகளை மேகமிட்டு மூடி மறைத்துவிட்டன. காலப்போக்கில், ஸ்ரீஸ்ரீ ஒரு சமுதாயப் பெரிய மனிதராக உருவாகி, அதன்பிறகு, 1953-ஆம் ஆண்டில், சென்னை மாகாணத்தின் மேலவை உறுப்பினராகவும் ஆகிவிட்டார். அதன்பிறகு, ஸ்ரீஸ்ரீ சீனதேசத்திற்கு அழைக்கப் பட்டார்; அழைப்பை ஏற்று சீனப் பயணத்தை அவரால் மேற் கொள்ள இயலவில்லை; காரணம், ராஜாஜியின் அரசாங்கம் ஸ்ரீஸ்ரீக்கு அனுமதி தருவதிலும், பயண இசைவுச் சீட்டு வழங்குவதிலும் தாமதம் ஏற்படுத்திவிட்டதுதான்!

வேறுபட்ட பல அமைப்புக்களிலிருந்தும், பல பரிசுகளையும், விருது களையும், புகழாரங்களையும் ஸ்ரீஸ்ரீ பெற்றார். 'சாகித்தியாச்சார்யா' என்னும் பட்டத்தை, ஹைதராபாத் தக்ஷிண பாரத் இந்தி பிரச்சார சபையிலிருந்து ஸ்ரீஸ்ரீ பெற்றார். கோகக், பி.வி. ராஜமன்னார் இருவரும் இந்தப் பட்டத்தை ஏற்கனவே பெற்றிருந்த இருவர் ஆவர். அவர்களுக்குப் பிறகு இந்தப் பட்டத்தைப் பெற்ற மூன்றாமவர் என்னும் பெருமைக்குரியவர் ஸ்ரீஸ்ரீ. அதே ஆண்டில் ''சோவியத்து நாடு நேரு விருது'' பெற்றார் ஸ்ரீஸ்ரீ. அத்துடன் ரொக்கப் பரிசாக ரூ.8000/-மும், அரசாங்க விருந்தினராக சோவியத்து நாட்டுக்கு வருமாறு விடுக்கப்பட்ட அழைப்பும் அளிக்கப் பெற்றார். 1970-ஆம் ஆண்டில், ஆந்திரப் பிரதேசத்து சாகித்திய அகாதெமியின் ஆட்சி உறுப்பினராக ஸ்ரீஸ்ரீ தேர்ந்தெடுக்கப்பட்டார். 1973-ஆம் ஆண்டில், சாகித்திய அகாதெமியின் விருதை ஸ்ரீஸ்ரீ பெற்றார். 1979-இல் ரூ.10,000/- ஆகிய ராஜலெட்சுமி ரொக்கப்பரிசு விருதையும் ஸ்ரீஸ்ரீ பெற்றார். இந்த விருதைப் பெற்ற முதலாவது அறிஞர் ஸ்ரீஸ்ரீதான். இதே ஆண்டில், 'ஆந்திர ஜோதி' (வார இதழ்) ''ஆந்திரப் பிரதேசத்தின் சிறந்த மனிதர்'' என்று ஸ்ரீஸ்ரீயைத் தேர்வு செய்தது. ஸ்ரீஸ்ரீ பெறுவதற்கு மிக விருப்பம் கொண்டிருந்த, 1982-ஆம் ஆண்டின் 'ஞான பீட விருது', மேலும் ஒரு நாற்பது நாள்கள் அவர் உயிரோடு இல்லாமல் போய்விட்ட காரணத்தால், அவருக்குக் கிடைக்காமல் போய்விட்டது என்று சொல்லப்பட்டது. ஹைதராபாத் அணைகரையின் மீது, 1986-இல், ஆந்திரப்பிரதேச அரசு ஸ்ரீஸ்ரீக்குச் சிலை நிறுவியது. மிகப்பெரிய ஆரவாரத்தோடும், எக்காள முழக்கத்தோடும், 1970, பிப்ரவரி, 1-ஆம் தேதி விசாகையில்.

ஸ்ரீஸ்ரீயின் 'சஷ்டியப்த பூர்த்தி' விழா கொண்டாடப்பட்டது. விழாவுக்காக முதலில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கலையரங்க இடம், மக்கள் திரள் பெருகி வழிந்த நெருக்கடியின் காரணமாக, போதாது என்றுணர்ந்த நூற்றுக்கணக்கான எழுத்தாளர்கள் நகரின் தெருக்களில் அணிவகுத்து, நகராட்சி அரங்கம் நோக்கிச் சென்று அங்கே கூடினர். 1980, மார்ச்சு, 3-ஆம் தேதியன்று, காக்கிநாடாவில், ஸ்ரீஸ்ரீயின் எழுபதாம் ஆண்டு பிறந்தநாள் கொண்டாடப்பட்டது. அந்த நாளில், அவருக்கு ரூ.5000/- ரொக்கம் பரிசாக அளிக்கப் பட்டது. இவ்விரு கொண்டாட்டங்களின் போதும், ஸ்ரீஸ்ரீயின் படைப்புக்கள் மறுபதிப்பு செய்யப்பட்டு விற்பனைக்கும் வைக்கப் பட்டன. விழா நினைவு மலர்த் தொகுதிகளும் வெளியிடப்பட்டன. 15-ஆம் நூற்றாண்டுக் காலத்தவரான, ஸ்ரீநாதாவுக்குப் பிறகு, அடுத்து வந்த நூற்றாண்டுகளில், ஸ்ரீஸ்ரீ பெற்ற அளவுக்கு அன்பு, மரியாதை, பாராட்டு ஆகியவற்றை வேறு எந்தத் தெலுங்குக் கவிஞரும் எப்போதும் பெறவில்லை.

ஸ்ரீஸ்ரீ வெளிநாட்டுப் பயணங்கள் பல முறை மேற்கொண்டார். 1954-ஆம் ஆண்டில், ஸ்டாக் ஹோம் நகரில் நடைபெற்ற உலக சமாதான மாநாட்டில், இந்தியாவின் பேராளராக ஸ்ரீஸ்ரீ பங்கேற்றார். 1959-ஆம் ஆண்டில், உலக சமாதான மாநாட்டின் பிரதிநிதியாக சோவியத் நாட்டுக்கு ஸ்ரீஸ்ரீ சென்றார். மாநாட்டுக்குப் போய் வரும் பயணச் செலவை அவரே ஏற்றுக் கொள்ள வேண்டியிருந்தது. ஸ்ரீஸ்ரீ தனது காரை அடகு வைத்து விட்டுத்தான் சென்றார்! 1967-இல் 'சோவியத்து நாடு நேரு விருது' பெறுவதற்காக ஸ்ரீஸ்ரீ சோவியத்து நாடு சென்றார்; இது அவரது இரண்டாவது பயணம். இதற்குரிய செலவை சோவியத்து நாட்டு அரசு ஏற்றுக் கொண்டிருந்தது. டாக்டர் கோட்னிஸ் நினைவுக் குழு வேண்டிக் கொண்டதற்கிணங்க, ஸ்ரீஸ்ரீ மூன்று வாரகாலம், 1976-ஆம் ஆண்டு மக்கள் சீனக் குடியரசில் தங்கியிருந்தார். "1890 சங்கம்" என்னும் அமைப்பை லண்டனில் உருவாக்கிய நிறுவுநர் குடல கிருஷ்ண மூர்த்தியின் விருந்தினராக, 1980-81ஆம் ஆண்டின்போது ஸ்ரீஸ்ரீ பூரிபந்தாவுடன் இங்கிலாந்து நாட்டுக்குச் சென்றார். ஸ்ரீஸ்ரீ இங்கிலாந்தில் நான்கரை மாதங்கள் தங்கியிருந்தார். அப்போது அவர் ஜார்ஜ் பார்க்கர், ஜொனாதன் க்ரிஃபின், ராபர்ட் பூத், மாடம் அன்னிஸ்மித், மார்ட்டின் காஃப், பெர்ரிக் ஸ்டேட் ஃபோர்டு முதலிய எழுத்தாளர்களையும், லாங்ஃபோர்டின் பெருமாட்டி திருமதி எலிசபெத், பேராசிரியர் பி.எச். கிருஷ்ண மூர்த்தியுடன் நவீனத் தெலுங்கு இலக்கணப் பயிற்சி நூலின் இணை ஆசிரியராக இருந்தவரும், பின்னாளில், ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழக வெளியீட்டகத்திற்குத் தெலுங்கு - ஆங்கில அகராதியைத் தொகுத்து அளித்தவருமான, முன்னாள்

ஐ.சி.எஸ். காரருமான ஜே.பி.எல். க்வைன் ஆகியோரையும் ஸ்ரீஸ்ரீ சந்தித்தார். ஸ்ரீஸ்ரீ லண்டனில் தங்கியிருந்த அந்த நேரத்தில்தான் நீண்ட பயணம் கவிதையை, அவர் வாய்மொழியாய் ஒப்புவிக்க, அவர் குரலிலேயே அது பதிவு செய்யப்பட்டது; அவரது கையெழுத்திலும் அது அப்படியே பதிவு செய்யப்பட்டது; ஒலி, ஒளி நாடாக்களாகவும் வெளியிடப் பட்டது. *1981*, மே மாதம் *23, 24*-ஆம் தேதிகளில், சிகாக்கோ நகரில் நடந்த மூன்றாவது வடஅமெரிக்கத் தெலுங்கு மாநாட்டில் ஸ்ரீஸ்ரீ கலந்து கொண்டார். *1981*, சூன் மாதம் ஸ்ரீஸ்ரீ தன் மனைவியுடன் அமெரிக்காவுக்கு இரண்டாம் தடவையாகச் சென்றார். ஸ்ரீஸ்ரீ, தன் கையால் எழுதப்பட்ட தன் கவிதைகள் அடங்கிய 'சிப்ராலி' என்ற தலைப்புடைய ஒரு பிரதியை ஹவுஸ்டானில் வெளியிட்டார். டி.ஏ.ஏ.எஸ். நாராயணராவ் போன்ற வெளி நாட்டு ஆர்வலர்கள் ஸ்ரீஸ்ரீயினுடைய இந்த வெளிநாட்டுப் பயணங்கள் நிறைவேறுவதற்கு ஆவன செய்தார்கள்.

இவ்வாறாக நாட்கள் ஒருபுறம் சென்று கொண்டிருக்க, ஆய்வாளர்கள் ஸ்ரீஸ்ரீயைச் சும்மா விட்டு வைக்கவில்லை. மிரியல ராமகிருஷ்ணா ''ஸ்ரீஸ்ரீ கவித்வம்'' (வாஸ்துவு-சம்விதானம்) என்ற தலைப்பிலான தன் முனைவர் பட்டத்து ஆய்வேட்டை *1980*-இல் வெளியிட்டார். காக்கிநாடாவில் நிகழ்ந்த ஸ்ரீஸ்ரீயின் *70*-ஆம் ஆண்டு பிறந்த நாள் விழாக் கொண்டாட்டங்களின் போது இந்த ஆய்வேட்டைத் திருத்தியும் புதுப்பித்தும் மக்களுக்குக் கிடைக்குமாறு வெளியிட்டார். மைக்கிலினேனி சுசீலா என்பவர் ''மார்க்சியப் பார்வையில் நீண்ட பயணம்'' என்ற தலைப்பில் 'எம்.பில்.' பட்டத்திற்கு ஆய்வு செய்தார். 'விரசம்' அமைப்பின் வெளியீடான கே.வி.ரமண ரெட்டி எழுதிய 'ஜெகந்நாத ரதச் சக்கரங்கள்' (*1986*) போன்ற, இன்னும் ஏராளமான கட்டுரைகளும் தொகுப்புக்களும் ஸ்ரீஸ்ரீயின் படைப்புக்கள் பற்றி வெளிவந்தன. இலக்கியப் படைப்புக்களும், ஆளுமையும் படைத்தவரின் வாழ்நாளின்போதே ஆராயப்பட்டும் ஒப்பிட்டுக் காட்டப்பட்டும், பேசப்பட்டதுமான பெருமை ஒரு சிலருக்கே வாய்த்தது; அந்த ஒரு சிலருள் ஒருவராக ஸ்ரீஸ்ரீ விளங்கினார். ஸ்ரீஸ்ரீ மறைந்தபோது தெலுங்கு நாளிதழ்கள் தலையங்கள் எழுதி அவருக்கு அஞ்சலி செலுத்தின. அஞ்சலி செலுத்தும் பாங்கில், சமுதாய, அரசியல் பின்னணியில் மாறுபட்ட கொள்கைகள் கொண்ட பல்வேறு இலக்கிய அமைப்புக்களும் பல சிறப்பு வெளியீடுகளைப் பிரசுரித்தன. மேலே சொல்லப்பட்டவை அனைத்தையும் சுருக்கிச் சொல்வதென்றால், ஸ்ரீஸ்ரீ எந்தத் தெலுங்கு எழுத்தாளருக்கும் இல்லாத 'ஈடு இணையற்ற பெருமையை' வகித்தவர், தெலுங்கு உலகத்தில் அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட விதிமுறை வகுப்பாளர் ஆவார் எனலாம்.

ஸ்ரீஸ்ரீ சில சமயங்களில் வாங்கிக் கட்டிக்கொள்ள நேர்ந்ததும் உண்டு. அவர் பல நேரங்களில் மெச்சிப் புகழப்பட்டது போலவே, பல நேரங்களில் பழிப்புக்கு ஆளானதும் உண்டு. இதில் வருத்தப் படுவதற்குரிய விஷயம் என்ன என்றால், ஸ்ரீஸ்ரீ யார் மீது மிகவும் அன்பு செலுத்தினாரோ, யாரையெல்லாம் பேணிப் பாதுகாத்தாரோ, சிலநேரங்களில், எந்தத் தடையுமின்றி யாருக்கெல்லாம் ஊக்கமும் உதவியும் அளித்தாரோ, அவர்களாலேயே ஸ்ரீஸ்ரீ மிகவும் துன்பப் படவேண்டி இருந்தது என்பதுதான்! அறிவாளிகள் என்று ஸ்ரீஸ்ரீயால் ஏற்று அறிவிக்கப்பட்ட, அவருடைய உறவுக்காரர்களான நாராயண பாபுவும் ஆருத்ராவும் ஸ்ரீஸ்ரீயை மிக மோசமாக அவமானப் படுத்தினார்கள். முன்னாள் பிரஜா நாட்டிய மண்டலியின் பெரும் பகுதியினர் திரைப்படத் துறைக்குள் இடம் பெயர்ந்து புகுந்த நேரத்திலும், முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் புகழ் பெற்ற எழுத்தாளர் பலர் சங்கத்தை விட்டு வெளியேறிய நேரத்திலும், அவ்வாறு வெளியேறி ஆந்திரப் பிரதேச சாகித்திய அகாதெமியில் புகலிடம் தேடிய நேரத்திலும், கம்யூனிஸ்டுக் கட்சி, எழுத்தாளர்கள், பத்திரிகை ஆசிரியர்கள், பத்திரிகைகள் ஆகியோர் சேர்ந்த வலிமையான குழுவினரால் ஸ்ரீஸ்ரீ மிகக் கடுமையான சொற்களால் பழிதூற்றப்பட்டு அவமானப்படுத்தப்பட்டார். அவர்களை எதிர்த்துத் தற்காப்புக்காக ஸ்ரீஸ்ரீ எவ்வாறெல்லாம் போராடினார் என்பது தனிக்கதை! தன்னுடைய வழிகாட்டியாகவும், 'துரோணாச்சாரி'யாராகவும் ஸ்ரீஸ்ரீ ஏற்று மதித்திருந்த அபூரி 1956-இல் ஒரு கவிதை எழுதினார். ஸ்ரீஸ்ரீயின் 'நீண்ட பயணம்' கவிதையைப் போலவே 'இமிடேட்' செய்து அந்தக் கவிதையை அமைத்திருந்த அபூரி, ஸ்ரீஸ்ரீயின் 'நீண்ட பயணத்'தையும், அவருடைய கொள்கையையும் கண்டனம் செய்திருந்தார். ஸ்ரீஸ்ரீயின் 'சஷ்டியப்த பூர்த்தி' விழாவின் போது, அபூரி, ஸ்ரீஸ்ரீக்கு 'சூரி லேகா' (நண்பனின் கடிதம்) என்ற கவிதையை அனுப்பியிருந்தார். அந்தக் கவிதையிலும் அவர், தனது வசைபாடும் தன்மையோடு, ஸ்ரீஸ்ரீ தான் கனவு கண்டது போல, ஒரு சமதர்ம அரசை உருவாக்க முடியாமல் தோல்வியடைந்துவிட்டார் என்று பழித்துரைத்திருந்தார். ஒரு புரட்சியை இங்கே கொண்டு வருவதில் ஸ்ரீஸ்ரீ தோல்வியுற்றார் என்றால், கொண்டு வருவதற்கான காரணங்கள் ஸ்ரீஸ்ரீயினுடைய கைகளுக்குள்ளா இருந்தன? நிலைமை இவ்வாறு இருக்கும் போது, தனது சீடரான ஸ்ரீஸ்ரீயை மன்னித்துக் கொள்ள முடியாத அந்த அபூரி, 1936-ஆம் ஆண்டுக்குப் பிறகு ராயைப் பின்பற்றுபவராகவும், தீவிரமான மனிதாபிமானியாகவும் தான் இருந்தார். 1970-ஆம் ஆண்டு தொடங்கி, ஸ்ரீஸ்ரீ 'விரசம்' அமைப்பின் குறிக்கோள்களுக்காகவும் கொள்கைகளுக்காகவும் தன்னை அர்ப்பணித்துக் கொண்டார். ஆந்திரப் பிரதேசத்தைத் தனி ஒரு பிரிவாகப் பிரித்துப் பார்க்கும் கொள்கையை அவரால் செறித்துக்

கொள்ள முடியவில்லை. தன்னுடைய தனிப்பட்ட அணுகுமுறைகளை மாற்றியமைத்து, 'விரசம்' அமைப்புக்கு ஏற்றவாறு அவற்றை இசைவித்துக் கொள்ள அவரால் முடியவில்லை. ஸ்ரீஸ்ரீயைத் தலைமைப் பீடத்தில் அமர்த்தி வைத்திருந்த 'விரசம்' அமைப்பினர், அவரை இரண்டு முறை பீடத்திலிருந்து நீக்கவும் செய்தனர். இறுதி முயற்சியாக, ஹைதராபாத்தில் 1980, ஜூன், 1-ஆம் தேதி ஸ்ரீஸ்ரீயைச் சுற்றி 'கெரோ' செய்தார்கள். இன்னொரு பக்கம், ஸ்ரீஸ்ரீக்கு அறிவூட்டியவர்களுள் ஒருவரும், மேற்கத்திய இலக்கியப் பரப்பை நோக்கி ஸ்ரீஸ்ரீயைக் கொண்டு செலுத்தியவருமான ரோணன்கி அப்பலசாமி, ஸ்ரீஸ்ரீயின் மீது அன்பின்றி நடந்து கொண்டார். வேகுந்த மோகன பிரசாத் என்பவர் சில தெலுங்குக் கவிதைகளை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துத் தொகுத்து ''இந்த உணர்ச்சி மிகு காலம்'' என்னும் தலைப்பில் வெளியிட்டார். ஒரு பொது நிகழ்ச்சியில், அந்தத் தொகுப்பின் முதலாவது பிரதியை ஸ்ரீஸ்ரீயிடம் வழங்கிவிட்டு, ஸ்ரீஸ்ரீயை ''நவீனக் கவிதையின் தந்தை'' என்று பாராட்டி விட்டார். இந்தப் பாராட்டுரையைப் பத்திரிகை வழியே பார்த்த ரோணன்கி மறுத்துரைத்தார்; ஸ்ரீஸ்ரீ, தன் மனமாரத் திட்டமிட்டு, குரஜாடா வகிக்கும் இலக்கிய சிம்மாசனத்தைக் கைப்பற்றப் பார்க்கிறார் என்றும் மறுப்புரை விடுத்தார். ரோணன்கிக்கு எதிர்மறுப்பு விடுக்கும் நோக்கத்தில், ஸ்ரீஸ்ரீ பதில் சொல்ல இது, இவ்வாறு ஒருவருக்கொருவர் விவாதங்களை ஏவி விடுவதில் போய் நின்றது. விவாதங்கள் மிகவும் மோசமான நிலையில் நடந்தன. இந்த விவாதத்தைப் பொறுத்த வரையில், ஸ்ரீஸ்ரீ எப்போதும் இருப்பதுபோல் இருக்கவில்லை. இது மாதிரியான இலக்கியச் சர்ச்சைக்குரிய விடை காலத்தின் கையிலும், சமுதாயத்தின் கையிலும்தான் இருக்கிறதே தவிர, சண்டை போட்டுக் கொள்ளும் அறிவாளிகளின் கைகளில் இல்லை. உண்மை இவ்வாறிருக்க, ஸ்ரீஸ்ரீ இப்பிரச்னையில் மிகவும் கூடுதலாகவே உணர்ச்சி வசப்பட்டு விட்டார்; தன் நெஞ்சறி பிரச்னையாய், தன்மானப் பிரச்னையாய் இதனை எடுத்துக் கொண்டு விட்டார். அவர், இப்போது மிக முக்கியமான ஓர் இலக்கியப் பேராசானாக வளர்ந்து விட்டார் என்பதையும், அவருடைய தனிப்பட்ட வார்த்தைகளும் கூட நண்பர்களாலும் பகைவர்களாலும் கவனித்துக் கேட்கப்பட்டு, மதிப்பீடு செய்யப்படுகின்றன, விளக்கம் அளிக்கப்படுகின்றன, விமர்சிக்கப்படுகின்றன என்பதையும் ஸ்ரீஸ்ரீ உணர்ந்தவராக இல்லை.

சமுதாய, அரசியல் தவறுகள் பலவற்றைச் செய்தவர் ஸ்ரீஸ்ரீ என்று குற்றம் சாட்டப்பட்டார். ஸ்ரீஸ்ரீ பலமுறை தன்னை நாத்திகர் என்று உரிமை கொண்டாடிக் கொண்டுள்ளார். **ஆனால் தன்** மகனுக்கு, திருப்பதி மலையில், அனைத்து **மதாச்சாரச் சடங்கு**களுடன் 'உபநயனம்' செய்து வைத்தார். **டெல்லியில், கன்னட**

சாகித்திய பரிஷத்தின் சார்பாக, முரளிகிருஷ்ணர் சந்தனச் சிலை ஸ்ரீஸ்ரீக்கு அளிக்கப்பட்டபோது, அவசரம் அவசரமாகச் சிலை இருந்த சிமிழைத் திறந்து, சிலைக்கு வணக்கம் செலுத்தினார் ஸ்ரீஸ்ரீ. இது முன்னுக்குப் பின் மாறுபட்ட சமூதாய முரண்பாடு. ஆந்திரப் பிரதேசத்து சமூக உரிமைக் குழுவின் தலைவராக ஸ்ரீஸ்ரீ இருந்தார். ஆனால் பிற எழுத்தாளர் எல்லாரும், நெருக்கடி நிலைப் பிரகடனத்தை நீக்க வேண்டும் என்று கோரி, கையெழுத்துக்கள் இட்ட போது, ஸ்ரீஸ்ரீ கையெழுத்து இடவில்லை. இது ஒருவேளை, 1977-ஆம் ஆண்டு, அல்லது அதையொட்டிய காலத்தின் அவரது நிலைபாடாக இருக்கலாம். என்றாலும் அதற்கு முந்திய காலங்களிலும் ஸ்ரீஸ்ரீ அவ்வாறே இருந்திருக்கிறார். 1971 - காலக்கட்டத்தில் 'விரசம்' அமைப்பு தேர்தல்களைப் புறக்கணிக்க விரும்பியபோது, ஸ்ரீஸ்ரீ இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் (CPI) வேட்பாளராகத் தேர்தலில் நிற்பதற்கு முயன்றார் என்று குற்றம் சாட்டப்பட்டார். 1977-இல் இந்திரா காந்தியை ஆதரித்தார்; இந்திராகாந்தி மறுதேர்தலில் நின்று வெற்றிபெறத் தனது ஆதரவை ஸ்ரீஸ்ரீ அளித்தார். இந்திரா காந்தியின் ஆட்சியை ''பாட்டாளிகளின் சர்வாதிகாரம்'' என்றும் ஸ்ரீஸ்ரீ அழைக்கலானார். 1983-இல் என்.டி. ராமாராவையும், அவருடைய தெலுங்கு தேசம் கட்சியையும் ஸ்ரீஸ்ரீ ஆதரித்தார்; காங்கிரஸ் அரசாங்கம் வீழ வேண்டும் என்றும் விரும்பினார். இத்தகைய தனது செயல்பாடுகளுக்கெல்லாம், ஸ்ரீஸ்ரீ தனக்கே உரிய சில விளக்கங்கள் வைத்திருந்தார். ஸ்ரீஸ்ரீயின் இந்தச் செயல்பாடு களையெல்லாம் 'விரசம்' அமைப்புத்தான் மிக முக்கியமானவையாக எடுத்துக் கொண்டது. இலக்கியத் துறையில் அல்லது அரசியல் துறையில் வேறு யாரும் அவ்வளவு முக்கியமானவைகளாக எடுத்துக் கொள்ளவில்லை. தீராத விளையாட்டுத்தனங்களுக்கும், கள்ளமில்லாத அரசியல் கருத்துரைகளுக்கும், எதிர்பார்க்க இயலாத புத்திசாலித் தனமான வேடிக்கைப் பேச்சுகளுக்கும், இவைபோன்ற இன்னும் பலவற்றுக்கும் உரியவர்தான் இந்த 'மகாகவி' என்பது எல்லாருக்கும் தெரிந்த விஷயம் தான். மிக முக்கியமாக, ஸ்ரீஸ்ரீ வாழும் தெலுங்குக் கவிஞர்களுக்குள் மிகவும் உயர்ந்தவர்; இதயத்தால் பச்சைக் குழந்தை; பழக்க வழக்கத்தால் விளையாட்டுப் பிள்ளை. எந்த உள்நோக்கமும் இன்றி, பொதுமக்கள் ஸ்ரீஸ்ரீயின் ஆளுமை பற்றி இவ்வாறு உணர்ந்தும் எடைபோட்டும் வைத்திருந்தார்களே, அந்த நிலைதான் ஸ்ரீஸ்ரீயைக் காப்பாற்றிய கருணைத் திறம் ஆகும். அவருடைய வாழ்க்கையில், ஒழுக்கத்திலும், சமுதாயப் பொறுப்புக்களிலும், அரசியல் சிந்தனைகளிலும், செயல்களிலும் ஸ்ரீஸ்ரீக்கு ஏற்பட்ட தனிப்பட்ட தோல்விகள், இனிவரும் எதிர் காலத்தில் யாராலும் நினைத்துப் பார்க்கப்படப் போவதில்லை. உயிர்ப்புள்ள, வியப்பும் புதுமையுணர்வும் மிக்க, அவருடைய இலக்கியப் பல்துறைத்

திறமையானது, ஸ்ரீஸ்ரீயினுடைய தவறுகள், குறைபாடுகள், அவ்வப்போது நடந்த நெறி பிறழ்ந்த நடவடிக்கைகள் அனைத்தையும் அடக்கி மறைத்துவிட்டது.

முழுவதும் புற்றுநோய் வாய்ப்பட்ட அந்த நிலையிலேயே தனது உடல், தன் மரணத்துக்குப் பின், விசாகை ஜார்ஜ் மன்னர் மருத்துவமனைக்கு அளிக்கப்பட்டு விடவேண்டும் என்று ஸ்ரீஸ்ரீ விரும்பினார்; தனது விருப்பத்தை ஓர் உயிலாகவும் எழுதி வெளியிட்டிருந்தார். ஆனால், அவரது மரணத்தின்போது அவருடைய குடும்பம் வேறு விதமாக விரும்பியது. அதனால் ஸ்ரீஸ்ரீயினுடைய சடலம் பாரம்பரியமான முழுச் சடங்குகளுடன் எரியூட்டப்பட்டது. அஸ்திச்சாம்பல் காசி நகருக்கு எடுத்துச் செல்லப் பட்டு, அங்கே கங்கை நீரில் கரைக்கப்பட்டது. ஆனால், அவரது சடலத்துக்கு ஈம நெருப்பு ஊட்டப்பட்ட அந்த நேரத்தில், யாரும் நினைத்துப் பார்த்திராத ஒரு நிகழ்ச்சியும் நடந்தது. அதாவது, புரட்சிகர எழுத்தாளர்கள் அங்கே கூடி, கோஷங்கள் முழங்கினார்கள்; நக்சல்பாரி இயக்கத்தின் தியாகிகளுடைய நன்மதிப்பைக் கூறி, எழுச்சியூட்டுவதற்காக எழுதப்பட்ட பாடல்களுள் ஒன்றான ''ஊகரா ஊகரா ஊரி கொய்ய பட்டுகுனி'' (ஊஞ்சலாடு, ஊஞ்சலாடு, தூக்கு மரம் வரை ஊஞ்சலாடு) என்ற தீவிர நவீனத்துவப் பாடலை ஒரே குரலில் இசைத்து முழங்கிப் பாடினார்கள். கவிதைக்காகவே, தான் பிறவி எடுத்ததாக ஸ்ரீஸ்ரீ நம்பினார்; கவிதைக்காகவே வாழ்ந்திருந்தார். காற்று மண்டலம் எங்கும் அவருடைய கவிதை எதிரொலித்துக் கொண்டிருக்க, அவர் எரியூட்டப்பட்டுச்சாம்பலானார். அவருடைய பூத உடல் 1989-இல் மறைந்து போயிருக்கலாம்; ஆனால் அவருடைய கவிதை பல்லாயிரம் ஆண்டுகளுக்கு வாழ்வாங்கு வாழ்ந்திருக்கும்! வாழ்நாளின்போதே ஸ்ரீஸ்ரீ வியப்புக்குரிய, புகழ் பெற்ற மனிதராகவே வாழ்ந்தார்; இறப்புக்குப் பிறகும் அதே நிலை தான் நீடிக்கிறது! கவிதை என்பது வாழும் வரை அவரும் வாழ்வார்! கவிதை என்பது உணரப்படும் காலம் வரை வாழ்வார்! கவிதை என்பது போற்றப்படும் காலம் வரை வாழ்வார்!

பின்னிணைப்புக்கள்

[1] ஸ்ரீஸ்ரீ ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து அளித்தவை

1. பழைய கவிதைக்கு : ஓர் உணர்ச்சிக் காவியம்

கவிதா, ஓ! கவிதா!
நீண்ட நெடிய
முன்னொரு காலத்தின்போது
நான் இளமையாய், பசுமையாய் இருந்தேன்
நம்பிக்கை என்னும் நறுமணத்திற்குள்
நான் ஆழ்ந்திருந்த காலம்;
அந்த நறுமணக் காலங்களின்போது
நீ எங்கே இருந்தாய்?
அடிவானத்தின் வெகுதொலைவில்
என் கனவுலகில்
வண்ணத்தேரில் உன்னைப் பார்த்தேன்
என் கண்களுக்குள்ளும்
கைகளுக்குள்ளும்
அகப்படாமல் இருந்த நீ
எவ்வளவு அழகாக இருந்தாய்!

என் வாழ்க்கையை
உனக்காகவே உனக்காகவே உனக்காகவே
அர்ப்பணம் செய்துவிட்டு
தனிமையாய் அலைந்து திரிந்தேன்

நான் யார்? என் உள்ளம் யார்?
என்பதை மறந்து
சிரித்துச் சிரித்துக் காலம் கழித்து
உன்னைத்தான்
தேடினேன், தேடினேன், தேடினேன்
எது என்றும் தெரியாமல்
ஏன் என்றும் தெரியாமல்
என்மனக் கிளர்ச்சிப் பொழுதுகள்
முடிவில்லாத வேதனைகளில் கழிந்தன!

ஐந்து விரல்கள் தீட்டிய அதிசயம் நீ
ஆதர்சத்தின் மறுபதிப்பு நீ
அணி இலக்கணத் திரையழகு நீ
முக்கூற்று விதிகளும்
அவற்றின் மாறுபாடுகளும் நீ
அதுவரையிலும்
உனது ரூபம் என்ன என்பதை
அறியாமலிருந்தேன்.

சொகுசின் நளினம் என
ஆளுமை வேகம் என
செப்பல் ஓசை என
அமைதியின் இருப்பிடம் என
வானுலகத்துக் கற்பனையின்
வாகான சிலை என
நான் உன்னை அறியலானேன்!
அது சரிதானே?

தனியாய், தன்னந்தனியாய்
தனியறையில் நான்
காத்துக் கிடந்தேன்
வாடிக் கிடந்தேன்
அந்த நாட்கள்
போயின, போயின
போயே போயின!

எனது கனவுகளின்
ஓசை ஒலிகளுக்குள் மூழ்கினேன்
எதிர்பார்த்தது மாதிரியே
எனது ஒழுங்குமுறைகள் பதனமழிந்தன
எனது உறுதிப்பாடுகள் இறுகிப்போயின

என் மூளையின் பின்பகுதியில்
கனல் தெறிக்கும் இசைப்பா எழுந்தது!
ஓ! ஓ! என இறைஞ்சிய போது
படைப்பின் வாசல் திறக்கலானது

இப்படித்தான் நான்
என் சுவாசத் துடிப்போடு காத்திருந்தேன்
உணர்வின் முழக்கங்கள்
காம வெளிப்பாடுகள்
பொருந்தாத கற்பனைகள்
இணைவிசைகளின் எதிர்முகப் போக்குக்கள்
எனப்படும் எல்லாமுமாய்
என்தலை மீது
மெல்லிய ஒலியென இடித்தன
என்கவிதை எப்படி உயிர்த்தது?

இப்படித்தான்
நான் என்ன பார்த்தேனோ
நான் என்னவாய் இருந்தேனோ
அவையெல்லாம் சேர்ந்து
என் கவிதையாய் உயிர்த்தன!

என்ன இது?
நடுநிசி வானம் பிளந்து கொண்டதா?
நெடிய செங்குத்தான மழை நீர்த்தாரை
சொர்க்கமே கீழிறங்கியது போலக்
கொட்டுகிறதே!

சமுத்திரத்தின் வான்கிழிக்கும் புயல்முழக்கம்
சங்கநாதம்போல் ஒலிக்கிறதே!
தகர்க்கும் முரசொலியாய் கேட்கிறதே!
அந்த ராத்திரி வேளையில்
அடர்ந்து கிடக்கும் கானகத்தின் ஊடே
ரூபம் இல்லாததும் ஆனால் பொருளுடையதுமான
பசி ஓசைகளும் பாலுணர்வுக் குரல்களும்
சிங்கத்தின் கர்ஜனையும்
புலியின் உறுமலும்
இரைதேடும் நரியின் ஊளையிடலும்
கேட்டேன் நான்

இவை மட்டுமா, இன்னும்....
பூமிப்பந்தின் இனிய இசையும்
வானத்துச் சுடர்களின் கூட்டு இசையும்
பூகம்பம் இடும் இறுதி எச்சரிக்கையும்
சாம்ராஜ்ஜிய அழிவுறு ஓசையும்
அரசுகள் வீழ்ச்சி ஓசையும்
கேட்டேன்...

இவைமட்டுமா, இன்னும்...
ஊழித்தீயின் உயர்வெப்ப அலையும்
போரும் புரட்சியும் கேட்டேன்.
எப்போதும் எல்லா இடத்திலும்
உடனுக்குடனாய், உடனடி நிகழ்வாய்
நீயே இருந்திடக் கண்டேன்

இப்படியெல்லாம் இருக்கிற உன்னை
எப்படி நானும் கணக்கிட்டுப் பார்ப்பது?
கேள்வியில் உணர்ந்ததைப்
பார்க்கவும் செய்தேன்
ஆனால் உன்னை
உய்த்து உணர்வது எப்படி?
ஆழ்ந்த சிந்தனையில்
இறைஞ்சிய வாறே
ஒலியில் ஓசையில் அவைதரும் காட்சியில்
உன்னைக் காண்கிறேன்:

நெருப்புக் குளத்தின் பேரொளி வைரம்
பறந்து செல்லும் உலோகப் பறவை
பீரங்கிகளில் இசையை ஏற்றும்
மிருதங்க கீதம்... இவற்றிலும் காண்கிறேன்...

இவைகளில் மட்டுமா?
பார்த்த காட்சிகளில், கேட்ட ஒலிகளில்
இன்னும், இன்னும், இன்னும்...
நடுநிசி இரவில் பிரசவ அறையில்
பெற்ற சேயைத்
தாயவள் அணைக்கும் அன்பில்
அந்தநேரம் அவள் காணும் கனவில்
குழந்தை கொள்ளும் நித்திரைதன்னில்...
இவற்றிலும் காண்கிறேன்...

மயங்கிய நோயாளி
வாழ்வா சாவா என்றே மங்கித்
துடிக்கும் நரம்புத் துடிப்பைக் கேட்டேன்
ரத்த நாளத் துடிப்பும் கேட்டேன்
கால்வாய் ஒன்றில் கவிழ்ந்து விழுந்து
அசைதல் இன்றிக் குரலும் நடுங்கக்
குடிகாரன் ஒருவன் குழம்பி நின்று
வான மீனுக்கும் வழிதிரி நாய்க்கும்
அடிமன ஆழப் பகுதியிலிருந்து
பதிலாய் உரைக்கும் நீண்ட உரைகளும்
கேட்டேன், கேட்டேன், மீண்டும் கேட்டேன்

வயிற்றுப் பசியொடு கணிகைப் பெண்ணாள்
கண்கள் பாதியாய் மூடிய நிலையில்
வேதனை பெருக விடுகிற பல்லவி
தலைமைக் குருவின் திருச்சபைப்பாடு
ஒருவேளைச் சோற்றுக்காய்
சிற்றின்பச் சூனியக் காதல் போலிகள்

இவைமட்டும்தானா, இன்னும் கேட்டேன்
தூக்கில் தொங்கிய தலைசொல் ரகசியம்
ஆந்தை அலறல், தவளைச் சத்தம்
பித்த மனிதரின் அறிவு மாறாட்டம்
போராடும் உழைப்பாளியின் போர்க்குரல் முழக்கம்
அவர்தம் மனைவியர் மக்கள் அனைவரும்
பசியில் சினத்தில் கொந்தளிக்கும் குரல்கள்

லட்சம் விண்மீன் படுகிற வேதனை
கோடி அருவிகள் கொட்டும் ஓசை
நூற்றுக் கோடி அலைகள் எழுப்பும்
நுண்ணிசைப் பாடல்...
இவையும் பிறவும் கேட்டேன்...

கேட்டதைப் பார்த்ததைச்
சொல்லில் வடிக்க முயலும்போது
வார்த்தைக் கூட்டம் சரிந்து பொடிந்து
அகராதி எனுமோர் படுகுழி விட்டு
இலக்கண விதிகளை இற்றிடச் செய்து
யாப்பெனும் ஆடலைப் புறமே தள்ளி,

வெகுவாய் விரைந்து விடுதலை பெற்று,
வந்தென் நெஞ்சில் வாசம் கொண்டன
ஓ! அந்தப் பேரருள் நிலையில்
இலக்கிய அணியெனும் அனலின் காற்று
தங்கிக் கொண்டது; குழப்பங்கள் என்பன
குளிர்ந்து போயின;
எந்தப் பாதையில் எப்படி அடைந்தேன்?
அறியேன் நானும்.

எதுதான் என்னுடைய மகிழ்ச்சி?
அறியேன் நானும்
பின்னர் நானும் படைத்த இசையில்
பாவங்கள் போயின
உன் பொருட்டாகச் சிலிர்த்து எழுந்தன
என் சீரிய பொறிகள்

இது இரவா பகலா ?
இயம்பிட என்னால் இயலவே இல்லை
நான் எழுதிய எல்லாம்
நான் செய்தவை எல்லாம்
'நிர்வாணம்' என்னும் நிலையே தானா?
சலனம் இல்லா அறிதுயில் நிலையா?
விண்மீன் பெண்ணாள் தழுவிக் கொள்ள
பாடல் ஒன்று பிறந்தது அன்று.

அந்தப் பாடல் என்னுடைய நரம்பில்
நல்லுணர்வை ஏற்றி வைத்தன
என்னுடை வாழ்வுக்குச் சிறகு முளைத்தது
இன்பம் - துன்பம் என்ற இருநிலை
கடந்து மேலே, மேலே
அழிவே இல்லா ஆழ்மனம் கடந்த
தனித்த நிலைக்குப் பறந்து சென்றது

அப்பால், அப்பாலுக்கும் அப்பால்
கால நுட்பம் நிலைபேறு அளித்தது!
உளதாம் வாழ்வே உண்மை என்னும்
புதிதாம் அனுபவம் உருக்கியது உள்ளம்
நெடிய காலமாய்
கருவறைக் காலம் தொடங்கிய போதே
எனக்குள் இருந்த 'நான்' எனும் அகந்தையை

''நான் உனக்குப் பசியையும் தாகத்தையும் தருகிறேன்,
நான் உனக்குக் காதலையும் காமத்தையும் தருகிறேன்,
நான் உனக்கு வானத்தையும் வசையையும் தருகிறேன்,
மேலே ஏறு, புதிதாய்ப் பிற'' என்றே உரைத்து
அழித்துப் போட்டாய்!
நான் பிறந்தேன்!
அன்றிலிருந்து நான்
அலைந்தேன் தனியாய்!
அற்ப மகிழ்வும் அளவிலாத் துக்கமும்
சேர்ந்தன என்னிடம்.

அனைத்தையும் பணிவாய் ஏற்றுக் கொண்டேன்.
அத்தனை பேருக்கும் நட்பாய் இருந்தால்
யாருக்கும் பகைஎன ஆகிட மாட்டோம்
எல்லையில்லா உன்னுடை வாழ்த்தை
பெற்ற பிறகு இப்போது நானும்
தனியன் அல்ல...
புனிதமானவள் நீ என்பதாலே
'முழுமனிதன்' நான் என ஆனேன்!

இந்தநாள் தொடங்கிப்
பின்வருமாறு கருதலானேன்:
என்னுடைக் கற்பனைக் குதிரையோட்டம்
இதயப் பெருமூச்சாய் ஆகிடுமாக!
என் இரு தோளில் இனிதே தங்குக!

எனக்கு மூப்பு வரினும் வருக
அதுபற்றிக் கவலை எனக்கில்லை
தனிப்பட நிகழ்ந்த என்னுடைத் தோல்விகள்
ஏற்கப்பட்டாலும் எதிர்க்கப்பட்டாலும்
நான் ஒரு பாடல் இசைத்திடும் போது
உலக மானுடம் அவ்விசைப் பற்றி
உரத்த ஒலியில் முழங்கிட வேண்டும்
இதுதான் எனது ஒரேஒரு ஆசை!

என்னுள் இருக்கும் இந்த விருப்பம்
பன்மணி செய்யும் ஒலிகள் எழுப்பிப்
பிரபஞ்ச எல்லைக்குச் சென்றிட வேண்டும்
வானின் உச்சிக்குச் சென்றிட வேண்டும்

பக்கத்தில் வந்தது மானுடமோ என
வானகம் கண்டு உறுதிகொள வேண்டும்

நான் சொல்வதெல்லாம் இதுதான்:
''எல்லாமும் எல்லார்க்கும், அதுவும்
சரிசமமாய் எல்லார்க்கும்;
இணைந்தே இரு;
நான் எழுதும் காதல் கீதங்கள்
காற்றில் கலந்து காலம் முழுவதும்
நின்னைச் சூழ்ந்து கொள்வதாக!
அதுவே நீ தங்கும் இருப்பிடம் ஆகுக!
ஒரு தெய்வாம்ச அர்ப்பணிப்பாக
ஒரு மென்காற்றின் மலராக
எனது மாயம் நிறைந்த மந்திரச் சொற்களை
உனது பாதார விந்தங்களில்
சமர்ப்பணம் செய்கிறேன்...

கவிதா, ஓ, உன்னை நான் வாழ்த்துகிறேன்.
ஓ பெருங்களிப்பு பிரவாகமே
வாழ்க்கையின் தொலைநோக்கை முழக்குகிறவளே
இனிவரும் தலைமுறையின் தாயே!
மானுடத்தின் எதிர்கால வாழ்விடமே!
கவிதா, ஓ கவிதா!''

(மூலம்: கவிதா ஓ கவிதா.
ஸ்ரீஸ்ரீயே ஆங்கிலத்தில் மொழியாக்கம் செய்தது)

2. கவிதைகள் [போன்றவை]

நாய்க்குட்டி
தீக்குச்சி
சோப்புத்துண்டு -
இப்படி ஒடுங்கியதும் உரத்ததுமான
எல்லாமே இங்கு கவிதைக்குரியன!

குடிசை விளக்குகள்
தபால் தலைகள்
கனவுகள், வான்வீதிகள், சிறியோர், பெரியோர்
எல்லாருமே கவிதை தேசத்தை ஆள்கிறவர்களே!
எல்லாக் கலையும் பெரியதே!
எல்லாக் கலையும் தூயதே!

ஒரு ரொட்டித் துண்டு
ஒரு விறகுக்குச்சி
ஒன்றுக்கும் ஆகாத அழுகிய வாழைப்பழம்
இவை ஒவ்வொன்றும் உற்றுப் பார்க்கிறது உன்னை!
மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொள்கிறது உன்னோடு!

அழகிருக்கும் இடமெல்லாம் அருள் இருக்கிறது!
எங்கெங்கு காணினும் இருப்பவை இவைதான்!
விரிகடலாலும் விருட்சத்தாலும்
காண்பவை அனைத்தினாலும்
பேசுபவை அனைத்தினாலும்
ஆதர்சம் பெறு!

இந்தப் பிரபஞ்சம் புரியாத பத்மவியூகம்
கவித்துவம் என்பது தணியாத பெருந்தாகம்!

(மூலம் : 'ருக்குலு'
மூலத்தின் ஆசிரியரான் ஸ்ரீஸ்ரீயே
ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தது)

3. தேசபக்தி

சகோதரனே,
உன்பக்தி என்பது தேச பக்தியாக ஆகட்டும்!
அந்தப் பக்தியை மேலும் மேலும் வளர்த்திடு!
ஓய்தல் ஒழி!
பிளவுக்கு ஆட்பட்டு விடாதே
மகத்தான காரியங்களே
இப்போது தேவை!

வயலிலும் ஆலையிலும்
கடுமையாக உழை, தொடர்ந்து உழை!
தேசம் பாலிலும் தேனிலும் திளைக்கட்டும்!
உணவே உன்னதம்!
உடலையும் குருதியையும் உறுதி செய்!
உடம்பார் இல்லையெனில்
உன்னத மனிதனும் இல்லை
மனிதனே மையம்!

புல்லாய், புழுவாய் மனிதன் இருத்தல் வெட்கம்!
அவர்களால் நாட்டின் புகழ் நலிவே அடையும்!
வினை செய், வினை செய், விரைந்து வினை செய்!
கலையில் தேர்ச்சி கொள்!

சுதேசிப் பொருளால் தேசத்தை நிரப்பு!
உன்னால் உருவான ஒண்பொருள்
உலகெலாம் பரவட்டும்!
சுதேசிப் பொருளே எங்கும் இலங்குக!
பொருளாம் செல்வம் போற்றிச்
செய்யா மனிதன் சீக்கு மனிதனே!
சீக்கு மனிதன் எதனைப் பெறுவான்?
அவனுக்குப் பொன்னும் இல்லை, புகழும் இல்லை!

இறந்த காலத்தில் இருந்த நன்மை சிறிது;
தீமையோ பெரிது!
எனவே கடந்த காலத்தில் கண்பதிக்க வேண்டாம்!
பழமை போற்றும் சோம்பல் வேண்டாம்
முன்னோக்கிக் காலை முன்வை!
இப்போது பின்னடைவு எனில் எப்போதும் பின்னடைவே!

அறிவுப் பரிவர்த்தனையா,
அதிலே போட்டியிடு!
பொருள் பரிவர்த்தனையா
போட்டியிடு அதிலும்!
பூசல் வேண்டாம், அது நல்லதல்ல,
முளைவிடும் போதே முறித்துவிடு அதனை!
வாளை எறிந்துவிடு
வாளைத் தூக்கினால் வருவது நட்டமே!

நீ தேசாபிமானிதானே?
அதனை யார்க்கும்
ஆகுலத்தோடு அறைதல் வேண்டாம்!
தன்னைப் புகழ்தல் தருமோ நன்மை?
அதற்குப் பதிலாய்
செயலில் காட்டு!
பார்க்கட்டும் மக்கள்!
செயல்கள்தானே தீர்மானிக்கும்!

அந்தோ,
பேய்த்தனமான பொறாமையும்
பிசாசுத்தனமான அவநம்பிக்கையும்
தேசத்து எலும்பையும் உறிஞ்சிவிட்டனவே!
ஓ! சகோதரனே!
அடுத்தவர் மகிழ்ச்சியில் நீயும் மகிழ்ச்சி கொள்!
மேம்படுதல் வேண்டுமெனில்
ஒற்றுமையே வழி, உணர்வாய்!

அடுத்தவன் வளத்தைப் பார்த்து
நாள் முழுதும் அழுது புலம்பும் ஈனப்பாவி
எப்படி அடைவான் மகிழ்ச்சி?
அடுத்தவன் மகிழ்ச்சியே
தனது மகிழ்ச்சியென
வாழ்கிறவனே எப்போதும் மகிழ்ந்திருப்பான்!

ஆதலால், நண்பனே!
தன்னலம் பற்றிச் சிந்திக்காதே!
அடுத்த வீட்டுக்காரனுக்குக் கைகொடு
சிறியன சிந்திக்காதே!
மண்ணிலும் மணலிலுமா மனம் படிவது?
மக்கள்! மக்கள்! அவர்கள்தானே தேசம்!

நட்புரிமையில் கைகள் இணையட்டும், ஒன்று சேரட்டும்!
இணைந்த கைகளுடன் மக்கள் இணைந்து நடக்கட்டும்!
அந்தச் சகோதரத்துவத்தில்தான்
அனைத்துக் கோட்பாடுகளும் குருதி வகைகளும்
வாழும், வளரும், நேசிக்கும், சிரிக்கும்!
நம்பிக்கை உணர்ச்சிகள் நானாவிதம்தான்!
இருக்கட்டுமே!
மனசுகள் ஒன்றினால் அங்கே மானுடம் ஒன்றாகும்!

என்றாவது ஒருநாள்
உலக மானுடத்தின் உயர் ஆன்மா
உயரும்! வளரும்! ஒளிரும்!
ஒரு விருட்சத்தைப் போலவே ஒரு தேசமும்
அன்பென்னும் மலர்களைப் பூக்கும், அளிக்கும்!
விருட்சம் வளர்ந்து விளைவு தந்திட
தேசத்துப் பாட்டாளி மக்கள்
தம் வியர்வை அலையை
விருட்சத்தின் வேரில் சொரியட்டும்!

விருட்சத்தின் இலைகளுக்கிடையில்
மறைவிடத்திலிருந்து
பறவைபாடுவது போல்
ஒரு கீதம் இசைக்கப்படுவதாக!
அதன் மறுமொழியாய்
எல்லா இதயங்களிலிருந்தும்
ஒரு தேசபக்த கீதம் எழுவதாக!

(மூலம்: குரஜாடா எழுதிய *'தேசபக்தி'* என்னும் கவிதை;
ஆங்கில மொழியாக்கம்: ஸ்ரீஸ்ரீ)

[2] ஸ்ரீஸ்ரீ ஆங்கிலத்தில் எழுதிய கவிதை

என் தொப்பிக்குள் ஒரு கவிதை
[இந்திரா தேவி தன்ராஜ்கிருக்காக]

ஊமை நாடகக் கால நேரம்
உற்றது வந்து எண்பத்தோராம் முறையாய்!
வேண்டுதல் இன்றியே விளைகிறது பாடல்!
மாதும் மதுவும் வியப்புக்கே வியப்பாம்!
ஆள்வீர் எம்மை, என்றார்க்குது கூட்டம்!
கூர்மை செய்யெனக் குண்டூசி கேட்கிறது!
வறட்டு மணலைச் சிதறிக் காற்று
புரட்டிய நேரம் இவையெலாம் நடந்தன!
துணையாய் வா எனப் பெண்ணவள் அழைத்தாள்!
பாடலைப் பிரிந்த இசையோ அழுதது!
கண்வழி உணர்வுகள் கசிந்த வேளையில்
இறையெனக் காப்பீர்! இயம்பியது ஓர்புல்!
நிலவை வரைதல் தவறென்று எழுந்தன குரல்கள்!
காலவட்டம் மேல்கீழாய் இயங்குதல் இயற்கையே!

(ஆங்கில மூலத்தில் இக்கவிதை
ஸ்ரீஸ்ரீயால் 7.1.1969இல் எழுதப்பட்டது)

[3] ஸ்ரீஸ்ரீயின் மூலப்படைப்புக்களிலிருந்து சில பகுதிகள்

அ. மகாபிரஸ்தானம் [நீண்ட பயணம்] படைப்பிலிருந்து:

நினைத்தால் கவிதை
முழங்கினால் வாத்திய இசை
வேள்வித் தீ முன்னே ஆயுத அர்ப்பணம் (ஐ)
தளை அறியாதது
ஈடு இணை இல்லாதது என்பாதை (ஐ)

நானும் கூட
உலகத் தாமரையின்
வெள்ளை இதழாக மலர்ந்திருப்பேன்,
நானும் கூட
உலக வீணைக்குத்
தந்திக் கம்பிகளாகி இசை எழுப்புகிறேன்,
நானும் கூட
உலக மாளிகையின்
பதாகையாய் உயர்ந்து நிற்பேன் (ஜயபேரி)

உலகம் அனைத்துமே வலிமை பெற்றதாம்!
மனித இனத்துக்குப் புரட்சி மாற்றம்!
புதிய வாழ்வின் சுபவேளை! முன்னேற்றம்! (அப்யுதயம்)

பூமித்தாயின்
பிரசவ வேதனை
புதிய படைப்புக்கு வழி வகுத்தது! (அப்யுதயம்)

பவள மாலையாய்ச் செந்தீ படர்ந்தது
உலகம் நெடுகிலும் பரவிப் பாய்ந்து
சூரியக் குதிரைகள் வேகம் கொண்டன!
உலகுக்கு இன்றுதான் பிறந்தநாளாம்! (ஜ்வாலா தோரணம்)

சிந்தூரம் செம்மைச் சந்தனம்
புலரி அந்திச் சிவப்பு
புலி குதறிய மானின் ரத்தம்
பட்டொளி வீசும் செங்கொடி
எரியும் தீயின் செஞ்சுவாலை
கல்கத்தா காளியின் நாக்கு
வேண்டுமடா புதுக்கவிதைக்கு!

....

இயங்குவது இயக்குவது
மாறுவது மாற்றுவது
பாடுவது பாடச் செய்வது
நீண்ட உறக்கம் நீங்கச் செய்வது
முன்னே நோக்கி வழி நடத்துவது
முழுமையான வாழ்வை அளிப்பது
அனைத்தும் வேண்டுமடா புதுக்கவிதைக்கு! (நவகவிதா)

பிரபஞ்சம் ஒரு பத்மவியூகம்
கவிதை ஒரு தீராத வேட்கை! (ருக்குலு)

வயல்களை எல்லாம்
உழுது உழுது
மண்ணில் பொன்னை விளைவிக்க
ஓய்வென்பதே அறியாமல் உழைக்கும்
வலிமை முழுவதையும் நிலத்திற்கே அர்ப்பணிக்கும்

உழுபடை வீரர்தம் உடலில் துளிர்த்து
ஓடையாய்ப் பெருகும் வியர்வைக்கு
வியர்வைப் பெருக்குக்கு
தர்ம ஊற்றுக்கு
வியர்வை நீருக்கு விலையே இல்லை (பிரதிக்ஞா)

வாழ்க்கை நிழலாட்டம் கள்ளி, மாயை,
கவிதை வேப்பங்காயடா! (ச்சேது பாட்ட)

வானத்துப் பாலையில்
முறிந்த காலுடன்
தனித்த ஒட்டகமாய்த்
தெரிகிறது நிலா (ஒக ராத்ரி)

மனித இன வரலாறு எல்லாமே
மற்றவரைத் துன்புறுத்தி வாழ்ந்ததே!
தமக்குள் தாம் நடத்திய போர்களின்
வலிமையால் வரலாறு பிறந்தது!
நீண்டகாலமாய் நிகழ்ந்த மோசடிகள்
வலியோரின் அட்டூழியங்கள்
பணக்காரச் சதிகள்
இன்னுமா? இனி நடக்க முடியாது! (தேச சரித்ரலு)

குழப்பமே எங்கள் வாழ்க்கை
அலைக்கழிவே எங்கள் மூச்சு
புரட்சியே எங்கள் வேதாந்தம்! (வியத்யாசம்)

ஆ. 'கட்கசிருஷ்டி'யிலிருந்து

அகிம்சை ஒருவழிதான்
அதற்காக
ஆயுதம் எப்போதும் சரிவராது
அகிம்சா வழியில்
சாதிக்க முடியவில்லையென்றால்
ஆயுதம்தான்
அவசியம் ஆகிவிடுகிறது

...

ஆவேசம் தான்
நடைமுறையில் பலன்தரும்
கதைக்கு ஆகும்
...
ஆணவ சக்தியை விட
மனித சக்தியே பெரியது (கட்க சிருஷ்டி)

...

எல்லாருக்கும் எல்லாம் தெரியும்
இப்படி நினைப்பதுதான்
அஞ்ஞானம்

...

இன்றைய பொழுதைவிட
நாளையப் பொழுது
நன்றாக இருக்கும் (சரத் சந்திரிகா)

கடலுக்குள் நீந்த
எல்லாருக்கும் தெரிந்திருக்கிறது
ஆனால்
பாதிதொலைவு கூட
உள்ளே போகும் தைரியம் இல்லை (விசாதாந்த்ர)

சத்தியம் பிராணனுக்கு
உயிரூட்டும்;
அதுவே
தப்பு மனிதனுக்கு வேதனை

மனத்துக்குள் மரணபீதி
மடியில் துக்கானுபூதி (சத்-அசத்-சம்சயம்)

மனிதனே என் சங்கீதம்
மனிதனே என் சந்தோஷம் (மகா சங்கல்பம்)

...

நரகம்-சொர்க்கம் என
இரண்டு இருந்தாலும்
ஒரு நிலைக்கே இரண்டு பெயர்கள்
பார்க்கும் பார்வையே வித்தியாசம்
நிலை இரண்டுக்கும் ஒன்றே - (சாமான் யுனிகாமன)

நம்மை நாமே சுற்றிக் கொண்டிருக்கிறோம்!
எப்படி?
சூரியனைப் பூமி சுற்றிக் கொண்டிருப்பது போல!
ஆசையை ஆவேசங்கள் சுற்றுகின்றன! (பொம்ம லாந்தரு)

...

விதூஷகன் ஆத்மாவை
முடித்துக் கொண்டான்
பொதுவான பாரத வாக்கியம்
'இறப்பிலே பிறப்பு' என்கிறது! (விதூஷகனின் ஆத்ம ஹத்தி)

வாழ்க்கைப் பந்தங்களை
உதறிவிடு, விட்டுவிடு
அர்த்தம் அதுவா இதுவா
காட்டில் விட்டுவிடு
குறிக்கோளையும் இலக்கையும்
ஒன்றிணைத்துக் கொள்
எழுதுவோனாகிய ஸ்ரீநிவாசராவ்
சொல்கிறேன்...
என் உள்ளத்தில் உள்ளது
என் கீதத்திலே உள்ளது... (கொண்டேகோனாலா)

காலம் என்பது
ஏதோ ஒன்றினால்
செலுத்தப்பட்டுச்
செல்கிறது...
அது ஒருவனுக்கு
மலையைப் போல மருட்சி தந்து
தொடருது பின்னால்...
ஆனால் அது
இன்னொருவனுக்கு
சிகரம் போல...
(எ ஏ ஐ ஒ ஓ ஔ)

...

தனி ஒருவனுக்குக்
கூடி வாழ்வதே
சக்தி
(எ ஏ ஐ ஒ ஓ ஔ)

...

நமது பிரபஞ்சத்திற்கு
அழகான சொரூபம்
மொழி...
(ஒக்கட்டி படி)

(4) ஸ்ரீஸ்ரீயின் படைப்புக்கள்

1928 - பிரபவ, கவிதாசமிதி, விசாகப்பட்டினம்

1946 - வாரம் வாரம், பிரதிமா புக்ஸ், எலுரு

1947 - சம்பெங்க தோட்ட, (செக்காவின் செர்ரித் தோட்டத்தின் மொழி பெயர்ப்பு,) பிரஜா சாகித்திய பரிக்ஷத்து.

1950 - மகாபிரஸ்தானம், நளினிகுமார், மசூலிப் பட்டினம், (1952-1984-ஆம் ஆண்டுகளுக்கிடையில் ஏறத்தாழ 20-பதிப்புகள் வெளிவந்தன; வெளியீடு, விசாலாந்த்ர பப்ளிஷிங் ஹவுஸ், விஜயவாடா/ ஹைதராபாத்)

1952 - 'அம்ம' (காரல் செப்பெக் எழுதிய 'மதர்' நாடகத்தின் மொழி பெயர்ப்பு), அருணரேகா பிரசுரத்தார், நெல்லூர் (சோஷலிஸ்ட் பப்ளிகேஷன்ஸ் விஜயவாடா, 1967)

1954 - 'மேமே', த்ரிலிங்க பப்ளிஷர்ஸ், விஜயவாடா.

1956 - மரோ பிரபஞ்சம், (வானொலி நாடகங்கள்), அருணரேகா பிரசுரத்தார், நெல்லூர். (இதே நூல் '1+1=1' என்ற வேறு ஒரு தலைப்பில் விசாலாந்த்ர பப்ளிகேஷன்ஸ், விஜயவாடா மூலம் 1979, 1984ஆம் ஆண்டுகளில் வெளியிடப்பட்டது)

1956 - 'த்ரீ சியர்ஸ் ஃபார் மேன்', அப்யுத பிரசுரத்தார், சென்னை.

1957 - காமராத்திரி (கதைகள்), குப்தா பிரதர்ஸ், விசாகப் பட்டினம்.

1958 - மானவுடி பாட்டலு (மைக்கேல் ஷோலகோவ் எழுதிய நாவலின் மொழி பெயர்ப்பு), விசாலாந்த்ர பிரசுராலயம், விஜயவாடா.

1958 - சௌதாமினி, (பூரிபந்தா தெலுங்கில் எழுதிய கவிதைகளின் ஆங்கில மொழியாக்கம்), அட்டேபள்ளி & கோ, ராஜமுந்திரி.

1959 - குரஜாடா, மனசாகித்தி, ஹைதராபாத்

1964 - முது யாபாயிலு, விசாலாந்த்ர பிரசுரலாயம், விஜயவாடா.

1966 - கட்கசிருஷ்டி, விசாலாந்த்ர பிரசுரலாயம், விஜயவாடா. (1984 விலும்)

1969 - 'வ்யூலு, ரிவ்யூலு', மினர்வா பிரஸ், மசூலிப்பட்டினம்

1970 - ஸ்ரீ ஸ்ரீ சாகித்யம், ஐந்து தொகுதிகள், சஷ்டி பூர்த்தி சன்மான சங்கம், விசாகப்பட்டினம்.

1970 - ஸ்ரீஸ்ரீயின் பல்வகை (ஆங்கிலத் தொகுதி), சஷ்டி பூர்த்தி சன்மான சங்கம், விசாகப்பட்டினம்.

1971 - லெனின், (மயகாவ்ஸ்கி எழுதிய கவிதையின் மொழி பெயர்ப்பு), பிரகதி பிரசுராலயம், மாஸ்கோ.

1971 - ரெக்க விப்பின ரிவல்யூஷன், (முடிவின் தொடக்கம் என்பதன் மொழிபெயர்ப்பு), உத்யம சாகிதி, கறீம் நகர்.

1973 - 'வ்யாசக்ரீடலு', நவோதயா வெளியீடு, விஜயவாடா.

1974 - மரோ முடு யாபாயிலு, எமெஸ்கோ, செக்கந்திராபாத்.

1980 - கைனா யானம், ஸ்வாதி பிரசுரத்தார், விஜயவாடா.

1980 - மரோபிரஸ்தானம், விப்லவ ராகாயிதல சங்கம்.

1981 - மகாபிரஸ்தானம், ஸ்ரீஸ்ரீயின் சொந்தக் கையெழுத்திலும், குரலிலும், விதேசாந்திர பிரசுரத்தார், லண்டன்.

1981 - சிப்ராலி, ஸ்ரீஸ்ரீயின் சொந்தக் கையெழுத்தின் புகைப்பட நகலில், ஹூஸ்டன்.

1983 - பதவோயி பாரதீயுடா, ஸ்ரீஸ்ரீ பிரசுரத்தார், சென்னை.

1983 - ஸ்ரீஸ்ரீ வியாசாலு, விரசம்.

1983 - புதிய எல்லைகள், விரசம்.

1986 - அனந்தம்.

1990 - பிரஜா, விரசம் பப்ளிகேஷன்ஸ்*

---

* விரசம் வெளியீட்டாளர்கள் 20- தொகுதிகளில் ஸ்ரீஸ்ரீயின் அனைத்துப் படைப்புக்களையும் வெளியிட்டு வருகின்றனர்.

[5] தேர்வு செய்யப்பட்ட துணை நூல்கள்

1. அனந்த நாராயண, *Bh. (1988): தெலுங்கு சாகித்தியம்லோ கல்லோல ஷீயண தசாப்தாலு, (1965-88)*, விகாசினி வெளியீட்டகம், விசாகப்பட்டினம்.
2. சேதன சாகித்திய சம்ஸ்தா *(1983): சேதன: யுக கவி ஸ்ரீஸ்ரீ சம்ஸ் மரண சஞ்சிக*, பிலாய் நகர்.
3. சட்டர்ஜி சுனிதி குமார் *(1963): நவீன இந்தியாவின் மொழிகளும் இலக்கியங்களும்*, பிரகாஷ்பவன், கல்கத்தா.
4. நாகபூஷணம், பி. *(ப-ர்) (1983): ரஞ்சனி* (தொகுதி 20, எண் *12)*, ஏ.ஜி. அலுவலகம், *தெலுங்கு சாகித்தி சமிதி, ஹைதராபாத்*
5. ராமகிருஷ்ணா, எம். *(1980): ஸ்ரீஸ்ரீ கவித்வம்* (வாஸ்துவ சம்விதானம், *1926-47)*, சப்ததிபூர்த்தி மஹோத்சவ சமர்ப்பண, காக்கிநாடா.
6. *ராமமோகனராவ், ஏ. (1979): விமர்சவேதிகா*, பிரபாகர வெளியீட்டகம், காக்கிநாடா
7. *ரமணரெட்டி*, கே.வி. *(1986): ஜகன்னாத ரதச் சக்கராலு* (ஸ்ரீஸ்ரீ கவித்துவம் குறித்து, *1950-85)*, ஜன்ஜா வெளியீட்டகம், விஜயவாடா.
8. *சப்ததி பூர்த்தி மஹோத்சவ சஞ்சிகா (1980)*: காக்கிநாடா
9. சத்யநாராயண சாஸ்திரி, என். *(1990): ஸ்ரீஸ்ரீ வியாசப் பிரஸ்தானம்*, தெலுங்கு நாடு வெளியீட்டகம், ஹைதராபாத்.
10. ஸ்ரீஞான (14) *(1970): ஸ்ரீஸ்ரீ சாகித்திய சமாலோசன.*
11. *சுதர்ஸன், ஆர் (1991): ஸ்ரீஸ்ரீ பீட்டிகலு-பரிசீலன*, அனன்ய பிரசுராலயம், ஹைதராபாத்.

மற்றும் ஸ்ரீஸ்ரீயின் அனைத்துப் படைப்புக்களும்

தெலுங்கு மொழிக் கவிஞரான ஸ்ரீஸ்ரீ (ஸ்ரீரங்கம் ஸ்ரீநிவாசராவ், 1910-83) தன் கவிதைப் படைப்பு மூலம் தீவிரமான தேடுதலில் தொடர்ந்து ஈடுபட்ட போராளி ஆவார்; அந்தத் தேடுதலின் விளைவாக 'நீண்ட பயணம்' என்னும் போர் முழக்கக் கவிதை நூலையும், 'அனந்தம்' என்னும் சுயசரிதை நூலையும் படைத்தார்; அபூரி ராமகிருஷ்ணா மூலம் மார்க்சியத்தையும், குரஜாடா மூலம் அகில உலகப் பார்வையையும் பெற்றிருந்த ஸ்ரீஸ்ரீ, தெலுங்குக் கவிதை இலக்கியத்தில் புதிய உத்திகளைச் சோதனைப் படுத்திப் பார்த்தவர்; 'விரசம்' அமைப்பின் தலைவராகவும் இருந்து இளைஞர்களை நெறிப்படுத்தியவர். *'மக்கள் கவிஞர்'* என்றும் *'மகாகவி'* என்றும் மக்களால் போற்றப்பட்ட இவருடைய கவிதைமுத்திரை தெலுங்கு இலக்கியத்தில் நிலைத்த இடத்தை வகிக்கின்றது.

ஸ்ரீஸ்ரீ பற்றிய இந்த வாழ்க்கை வரலாற்று நூலை எழுதியவர் முனைவர் பூதராஜு ராதாகிருஷ்ணா (பி.1932) ஆவார். தெலுங்கு மொழி விரிவுரையாளராகவும், ஆய்வு அனுபவங்கள் மிக்கவராகவும் விளங்கும் இவர் 'சின்னய்ய சூரி' பற்றிய வாழ்க்கை வரலாற்று நூலை எழுதியவரும் ஆவார். ஸ்ரீஸ்ரீ பற்றிய இந்த நூல் ஸ்ரீஸ்ரீயின் கவித்துவம், பன்முக எழுத்தாற்றல், தனித்துவக் குணாம்சங்கள் என ஒரு முழுமையான பரிமாணத்தைத் திரட்டித் தருகிறது.

இந்த நூலை ஆங்கிலத்திலிருந்து தமிழாக்கம் செய்திருப்பவர் முனைவர் மு. பழனி இராகுலதாசன்; தேவகோட்டை ஸ்ரீ சேவுகன் - அண்ணாமலை கல்லூரித் தமிழ்த் துறைத் தலைவர்; மொழி பெயர்ப்புப் பணியில் ஈடுபாடு உடைய இவர் சிறுகதைப் படைப்பாளரும், திறனாய்வாளரும் ஆவார். அக்காதெமிக்காக 'கேசவதேவ்' நூலைத் தமிழாக்கம் செய்தவரும் ஆவார்.

Mahakavi SriSri (Tamil)
ISBN - 81-260-0897-0

Rs.25

இருபத்திரண்டு இந்திய மொழிகளில் நூல்கள் வெளியிடும் சாகித்திய அக்காதெமி உலகிலேயே மிகப்பெரிய வெளியீட்டகம்.